

கல்கி
இரண்டு புத்தகங்கள்!
KALKI
20.2.2000
ரூ. 5.00
இடைத் தேர்தல்:
வன்முறை வெல்லுமா?

அசப்பில் பார்த்தால் அச்சாக குஷ்பு. இனிமையாகவும் பருமனாகவும்.



எம்டிஆர் இன்ஸ்டன்ட் குலாப் ஜாமூன்கள். சுவையாகவும் மிருதுவாகவும் உள்ள இவை உங்கள் மேஜையில் ஒரு நட்சத்திரக் கவர்ச்சியே.



• ஜெ. வை வரவேற்கக் காத்திருக்கும் பெண்கள்...



• ஜெ. பிரசாரம்



• சண்முகம் : தி.மு.க. வேட்பாளர்



• வேலாயுதம் : அ.தி.மு.க. வேட்பாளர்

"அம்மாவுக்குத் தண்டனை பற்றி யாரும் பேசவில்லை!"

"ஊழல் வழக்கில் அம்மாவுக்கு ஒரு வருஷம் தண்டனை கொடுத்திருக்காங்க. தெரியுமா?"

"தெரியாதுங்க."

"தர்மபுரியிலே மூன்று மாணவிகள் தீயில் எரிஞ்சு போயிட்டாங்க. அதாவது தெரியுமா?"

"ஸார்... எங்களுக்கு நீங்க சொல்ற விஷய மெல்லாம் முழுமையாகத் தெரியாது. ஆனால் தேர்தல் வந்தால் ரெட்டை இலைக்குத்தான் வோட்டுப் போடுவோம். அவ்ளோதான்!" துண்டை உதறி தோளில் போட்டுக் கொண்டு போகிறார் கே.என். பேட்டையைச் சேர்ந்த சந்திரன். கடலூரிலிருந்து ஐந்து கி.மீ. தொலைவில் உள்ள கிராமம் இது.

நெல்லிக்குப்பம் இடைத்தேர்தலில் ஜெயலலிதா முதலில் பிரசாரத்தை துவக்கிய இடம்தான் கே.என். பேட்டை. மூன்று மணிக்கு வருவதாக ஏற்பாடு. ஆனால் ஜெயலலிதா வந்த போது ஆறு மணி. திருஷ்டி சுற்றிப் போட பெரிய பூசணிக் காயுடன் காத்திருந்தார்கள் நூற்றுக்கணக்கான பெண்கள். ஆண்களைப் பொறுத்தமட்டில் உள்ளூர்த் தலைகளை விட வெளியூர்ப் பிரமுகர்கள் அதிகம். ஜெ. வரும் வரை மூன்றாம்தர அ.தி.மு.க. பேச்சாளர்கள் மைக்கில் 'பொரிந்து' கட்டிக் கொண்டிருந்தார்கள். ஜெ வந்த டெம்போ டிராவலர் வேனைப் பார்த்தவுடன் கூட்டம் கொந்தளித்துப் போனது. எல்லோரும் வேனை நெருங்க முற்பட ஒரே தள்ளுமுள்ளு (மூவாயிரம் ரூபாய் வாட்சை

கல்கி இண்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com
ஈ மெயில் : kalkiweekly@vsnl.com

பழிகொடுத்தார் விருத்தாசலம் அ.தி.மு.க. பிரமுகர் சோழன்). ஜெ. பின்னால் உ.பி. சகோதரி செல்போனில் பிஸியாக இருந்தார். ஜெ.வுக்கு கொடுக்கலாம் என்று கொண்டு வந்த பொன்னாடைகளைக் கூட கொடுக்க முடியாமல் தடுமாறிப் போனார்கள் பட்டாபிராமன் போன்ற அ.தி.மு.க. புள்ளிகள்.

மூன்று மாதக் குழந்தையொன்று பல கைகள் மாறி பெயர் சூட்டுவதற்காக ஜெ.வை அடைந்தது. அந்தக் குழந்தைக்காக மட்டும் கண்ணாடிக் கதவு இறக்கப்பட்டது. பெரிய எழுத்தில் அச்சுக்கோத்திருந்த உரையை எடுத்துப் படித்தார் ஜெ. முத்தாய்ப்பாக இந்த இடைத் தேர்தல் முடிவால் கருணாநிதியை ஆட்சியிலிருந்து இறக்க முடியாது. ஆனால் வர இருக்கின்ற சட்டமன்ற பொதுத் தேர்தலில்



"எந்தக் காலத்திலும் நமக்குள்ள பிரச்னையே வரக்கூடாது குமார்."

"நான் வேணும்னா டைவர்ஸுக்கு சம்மதிச்சு இப்பவே கடிதம் கொடுத்துடவா டார்லிங்?"

– சீர்காழி வி. ரேவதி

மக்கள் விரோத கருணாநிதி ஆட்சியை அகற்றுவதற்குத் தக்க பாடம் புகட்டும் வகையில் வாக்காளர்களாகிய நீங்கள் உத்தரவாதம் தரவேண்டும்."

ஜெ.-வின் கான்வாய் அடுத்த ஊரான திருவந்திபுரத்தை நோக்கிப் பறக்கிறது. அன்று மட்டும் இருபதுக்கும் மேற்பட்ட கிராமங்களில் வேனை விட்டு இறங்காமலேயே பிரசாரம் செய்கிறார். கடைசியாக நடுவீரப்பட்டில் முடிக்கிறார். ஆனால் அங்கு பேசவில்லை. ஜெ. வேனுக்குப் பின்னால் மற்றொரு காரில் டி.டி.வி. தினகரன்!

தர்மபுரி சம்பவங்கள் பற்றித் தொடாமல் பேசுகிறார் ஜெ. ஆனால் பொய் வழக்கு, "பழி வாங்கல்" பற்றி மறக்காமல் குறிப்பிடுகிறார். "தர்மபுரி சம்பவம் பற்றி எதுக்காகச் சொல்லணும்? இந்த இடைத் தேர்தல்களில் எங்கள் வெற்றியை முறியடிக்க தி.மு.க. செய்த சதி அது. இந்தத் தொகுதியில் நான்கு அமைச்சர்கள் கேம்ப் போட்டுக் கொண்டு அதிகார துஷ்பிரயோகத்தைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறார்கள். கட்சிக் கொடி கட்டும் தொண்டனைத் தாக்குகிறார்கள். அம்மாவுக்குத் தண்டனை பற்றியெல்லாம் இங்கு யாரும் பேசறதில்லை. இப்போது கொடுக்கப்பட்டது முடிவான தண்டனையில்லை" என்று சொல்கிறார் அ.தி.மு.க.வின் முன்னாள் அமைச்சர் பட்டாபிராமன். இவரைத்தான் இந்தத் தொகுதிக்கு பொறுப்பாளராக நியமித்திருக்கிறார் ஜெ. கிராமங்கள் நெடுகக் கூடும் கூட்டத்தைக் கண்டு உற்சாகமாக இருக்கிறார்கள் அ.தி.மு.க. பிரமுகர்கள்.

அ.தி.மு.க. வேட்பாளரான வேலாயுதம் இ.ஐ.டி. பாரி கம்பெனியில் தொழிற்சங்கத் தலைவர். நெல்லிக்குப்பம் நகர அ.தி.மு.க. செயலாளர். "என்னை வேட்பாளராக அறிவித்தவுடன் அம்மாகிட்டே ஆசீர்வாதம் வாங்கப் போனேன். 'சென்னைக்கு எப்படி வந்தீங்க'ன்னு கேட்டாங்க. 'பஸ்லதாம்மா வந்தேன். அதிலேதாம்மா திரும்பப் போறேன்' என்றேன். என்னோட நிலைமை(?)யைப் புரிஞ்சிக்கிட்டுத்தான் தினகரனையும் இங்கே அனுப்பி வச்சிருக்காங்க" என்று வெளிப்படையாகவே சொல்கிறார் வேலாயுதம். பாரி கம்பெனியில் கட்டாய ஓய்வுத் திட்டத்திற்கு வேலாயுதம் கையெழுத்துப் போட்டதால் அதைப் பற்றி நெல்லிக்குப்பம் தொழிலாளர்கள் மத்தியில் வருத்தம் இருக்கிறது. "மாறி வரும் பொருளாதாரச் சூழலில் இதெல்லாம் தவிர்க்க முடியாது" என்கிறார் வேலாயுதம். இந்த பிரச்னையைத் தவிர அ.தி.மு.க. கோஷ்டிப் பூசலும் வேட்பாளரை ஆட்டிவைக்கிறது. வேட்பாளர் தேர்வில் ஏற்பட்ட உரசல் காரணமாக முன்னாள் அமைச்சரான தாமோதரன் மற்றும் ஜனார்த்தனன் ஆகியோர் இரு பிரிவுகளாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். "அம்மாதாங்க வேட்பாளர். கடல் போன்ற கட்சியில் கடுகு போன்ற பிரச்னை இது" என்கிறார் பட்டாபிராமன். ஜனார்த்தனனிடம் இதுபற்றிக் கேட்க நாம் முயன்ற போது, பிடிகொடுக்காமல் நழுவினார் அவர்.

தி.மு.க.வைப் பொறுத்தவரை மிக நம்பிக்கையுடன் எதிர்நோக்கி களத்தில் நிற்கிறது. மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் ஒரு நிமிடம் கூட ஓர் இடத்தில் நிற்காமல் பறந்து கொண்டிருக்கிறார். இவருக்கு உதவியாக பாண்டிச்சேரி முதல்வர் ஜானகிராமன், தமிழக அமைச்சர்களான வீரபாண்டி ஆறுமுகம்,



• பட்டாபிராமன்

• எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்



பிச்சாண்டி ஆகியோர் முகாம் போட்டிருக்கிறார்கள். "கிராமங்களில் ஏராளமாக வேலைகள் நடந்திருக்கு. வளர்ச்சித் திட்டங்கள் தொடர்ந்து நடந்து நிறைவு பெற, தி.மு.க. வேட்பாளர் வெற்றி பெற்றாக வேண்டும். அ.தி.மு.க. வெற்றி பெற வாய்ப்பே இல்லை. தினகரன் இங்கே வந்து வேலை செய்கிறாராம். அவரை யாருக்கும் தெரியாது. பேப்பர், தொலைக்காட்சி ஆகியவை மூலம் தெரிந்தவர்கள், 'தினகரன் வந்தாச்சா? அப்ப பணப் பெட்டி வந்தாச்சுன்னு!'தான் பேசிக் கொள்கிறார்கள்" என்கிறார் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம். "வெற்றிக் கனியை கலைஞர் காலடியில் சமர்ப்பிக்கும் வரை ஓய்வேயில்லை" என்கிறார்.

தி.மு.க. வேட்பாளர் சண்முகம் ஓய்வுபெற்ற ரசாயனப் பேராசிரியர். கிராமங்களில் என்.எஸ்.எஸ். கேம்ப் நடத்தியதன் மூலம் பரவலாக அறிமுகமாகி இருக்கிறார். "ஏராளமான திட்டங்கள் மூலம் கடந்த நான்காண்டுகளில் கிராமங்களில் நல்ல முன்னேற்றம் இருக்கு. பொதுத் தேர்தல் வெற்றிக்கு நல்ல தொடக்கமாக இந்த இடைத் தேர்தல் வெற்றி இருக்கும்" என்று உறுதிபடச் சொல்கிறார் சண்முகம். தி.மு.க. அ.தி.மு.கவைத் தவிர டாக்டர் கிருஷ்ணசாமியின் புதிய தமிழகமும் போட்டியிடுகிறது. "ஜெயலலிதாவின் ஊழல் விவகாரங்களைத்தான் பிரதானமாகப் பேசுவோம். எங்களின் நோக்கம் இந்தத் தொகுதியில் எங்கள் பலம் என்ன என்பதைத் தெரிந்து கொள்வதுதான். அதன் மூலம் அடுத்து வரும் சட்டமன்றத் தேர்தலின் போது, கூட்டணிக் கட்சிகளிடம், தொகுதியைக் கேட்கலாமே!" என்று சொல்கிறார் புதிய தமிழகத்தின் நெல்லிக்குப்பம் நகரத் தலைவர் பார்த்திபன்.

நெல்லிக்குப்பம் தொகுதியைப் பொறுத்தமட்டில் கடந்த தேர்தல்களில் வெற்றி பெற்ற, தோல்வியடைந்த கட்சிகள் பெற்ற வோட்டு விவரங்களை வைத்து தீர்மானித்து விட முடியாது. ஏனெனில் இந்த இடைத் தேர்தல் நடக்கும் சூழல் அப்படி என்கிறார்கள். வன்னியர்கள் மற்றும் தாழ்த்தப்பட்டவர்கள் சரிசமமாகப் பிரிந்து நின்று முடிவைத் தீர்மானிக்கும் சக்தியாக இருக்கிறார்கள். பா.ம.க. கூட்டணியில் இருப்பது தி.மு.க.வுக்கு ஒரு கூடுதலான பலம் என்பதில் சந்தேகமில்லை. என்றாலும் போட்டியிடுகிற தி.மு.க. - அ.தி.மு.க. ஆகிய இரு கட்சி வேட்பாளர்களுமே வன்னியர்கள் தான்.

புதிய தமிழகம் போட்டியிட்டாலும் தாழ்த்தப்பட்டவர்களிடையே பிரபலமாக இருப்பது திருமாவளவனின் விடுதலைச் சிறுத்தைகள் தான். சிறுத்தைகளின் ஒட்டுமொத்த ஆதரவு அ.தி.மு.க.வுக்குக் கிடைக்க இருப்பது ஜெ.வுக்கு ப்ளஸ் பாயின்ட். கரும்புக்கு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படவில்லையென்று கரும்பு விவசாயிகள் கொஞ்சம் கோபமாக இருக்கிறார்கள். பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற ஆதிசங்கர் (தி.மு.க.) நன்றி சொல்ல நெல்லிக்குப்பம் தொகுதிக்கு வரவில்லை என்ற வருத்தம் மக்களுக்கு இருக்கிறது. பஸ் கட்டண உயர்வு, ரேஷன் அரிசிப் பிரச்சனை, தாறுமாறான மின் விநியோகம் என்று பொதுவான பல பிரச்சனைகள் தி.மு.கவுக்கு எதிரான மனோபாவத்தை உண்டாக்கியிருக்கின்றன. இவற்றை விசிறி விட மூன்று கட்டமாக இங்கு பிரசாரம் செய்கிறார் ஜெ. நெல்லிக்குப்பம் நகரத்தில் பரவலாக உள்ள இஸ்லாமிய வோட்டுக்களும் அ.தி.மு.க.வுக்கு கிடைக்கக்கூடும்.

எனவே, கொஞ்சம் அசந்தாலும் வெற்றி நழுவி விடும் என்பது கழகத்தினருக்குப் புரிந்திருக்கிறது. அதனால் வெற்றிக் கனியை பறித்து விட வெறியாக வேலை செய்கிறார்கள் கழக உடன்பிறப்புகள். ஆளும் கட்சியாக இருப்பது அதற்குக் கூடுதலான தைரியத்தைக் கொடுக்கிறது.

மாறாக அ.தி.மு.க.வினர் பாரம்பரியமாக இருந்து வரும் எம்.ஜி.ஆர். ஆதரவையும், இரட்டை இலையின் மகிமையையும் நம்பி களத்தில் நிற்கிறார்கள். ஊழல், பஸ் எரிப்பு போன்றவற்றை இருதரப்புமே ஜாக்கிரதையுடன்தான் கையாளுகிறார்கள்.

— ப்ரியன்

படங்கள் : ராஜன்

திணறுகிறது திருச்சி-2

தி.மு.க.வும் அ.தி.மு.கவும் நேரடி மோதலில் இறங்கியுள்ள இரண்டு தொகுதிகளில் நட்சத்திர அந்தஸ்தைப் பெற்று விட்டது திருச்சி இரண்டாவது சட்டமன்றத் தொகுதி.

கடந்த காலத்தில் இரண்டு கட்சிகளுக்கிடையே இந்தத் தொகுதி மாறி மாறி வெற்றி வாய்ப்பைத் தந்திருப்பதால், வாக்குகள் சேகரிப்பதிலும் பிரசாரத்திலும் கடுமையாக ஈடுபட்டிருக்கின்றனர், தி.மு.க.வினரும் அ.தி.மு.க.வினரும். புதிய தமிழகம் கட்சியும் தனது வேட்பாளரை இங்கு நிறுத்தியுள்ளது என்றாலும் உண்மையான போட்டி இங்கு உதயசூரியனுக்கும் இரட்டை இலைக்கும் இடையேதான்.

தி.மு.க. வேட்பாளர் அன்பில் பெரியசாமி அரசியலுக்குப் புதியவர். தொகுதி மக்களுக்கு அவ்வளவாக பரிச்சயம் ஆகாதவர். ஆனால் அவரது குடும்பத்தின் அரசியல் பின்னணி அவரை அனைவருக்கும் சட்டென அடையாளம் காட்டி விடுகிறது.



• பிரசாரம் செய்கிறார் மு.க. ஸ்டாலின்

அ.தி.மு.க. வேட்பாளர் டி. ரத்தினவேல் திருவெறும்பூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர். இவரும் தொகுதி மக்களுக்கு அவ்வளவாக பரிச்சயம் ஆகாதவர்தான். இருப்பினும் முன்பு தேர்தலைச் சந்தித்துப் பார்த்த அனுபவங்கள் அவருக்கு வாக்காளர்களை அணுக துணை செய்கிறது.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மறைந்த அன்பில் பொய்யாமொழியின் துணைவியார், தமக்கு சீட் வேண்டாம் என்று சொல்லி விடவே, கழகத் தலைமை அன்பிலின் இளைய மகன் அன்பில் பெரியசாமியைத் தேர்வு செய்தது. தி.மு.க.வில் இவரைத் தவிர வேறு யாருக்கு சீட் கொடுத்திருந்தாலும் வெடிக்கும் உட்கட்சிப் பூசலில், அ.தி.மு.க. இத் தொகுதியைக் கைப்பற்ற வாய்ப்பாக அமைந்திருக்குமென அரசியல் பார்வையாளர்கள் கூறுகிறார்கள்.

வேட்புமனுத் தாக்கலின் போது நடைபெறும் பேரணிக்குத் தலைமைதாங்க திருச்சிக்கு வந்து விட்டார் மாநகரத் தந்தை மு.க. ஸ்டாலின்! வேட்புமனுவில் முதல் கையெழுத்துப் போட்டு வழிமொழிந்தார் ஸ்டாலின்.

தி.மு.க.வுக்கு ஆதரவாக மத்திய அமைச்சர்கள், மாநில அமைச்சர்கள் என்று ஒரு பெரிய பரிவாரமே தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கின்றது. எட்டுத் திக்கும் எதிரொலிக்கும் வண்ணமாக மாநில அமைச்சர்கள் எட்டுப் பேர் திருச்சியில் முகாமிட்டுள்ளனர். அந்தந்த அமைச்சர்களின்

சொந்த மாவட்ட, நகர அளவில் பொறுப்பில் உள்ள கட்சி நிர்வாகிகள் அனைவரும் இடம்பெயர்ந்து வந்துள்ளார்கள். உடன் பிறப்புகளும், ரத்தத்தின் ரத்தங்களுமாக கரை போட்ட வேட்டிகளுடன் திருச்சி நகரை ஒரு கலக்கு கலக்கிக் கொண்டிருக்கின்றனர்.

அ.தி.மு.க.வுக்கு ஆதரவாக வானளாவிய அதிகாரம் படைத்துள்ளதாக பிரகடனப்படுத்தியவரும், முன்னாள் சபாநாயகருமான பி.எச். பாண்டியன் திருச்சிக்குப் படையெடுத்து விட்டார். முன்னாள் மத்திய அமைச்சர் தம்பிதுரை, மாநில முன்னாள் அமைச்சர்கள் சத்திய மூர்த்தி, முகமது ஆசிப் போன்றோர் முகாம் போட்டு விட்டனர்.

இந்த இரண்டு அணிகளின் மேல்மட்டத் தலைவர்கள், அவர்களது கட்சிக்காரர்களின் வருகையினால் திருச்சியில் உள்ள உயர்தர மற்றும் நடுத்தர ஹோட்டல்களின் தங்கும் அறைகள் நிரம்பி வழிகின்றன. அரசியல் வாதிகளின் அம்பாசிடர்களும், டாடா சுமோக்களும் திருச்சி மாநகரின் குறுகிய சாலைகளில் பறந்து போய்க் கொண்டிருக்கின்றன. மொத்தத்தில் திருச்சி திணறிக் கொண்டிருக்கின்றது!

திருச்சி மாநகராட்சி எல்லைக்குள் இருபத்தியிரண்டு வார்டுகளைக் கொண்டது திருச்சி இரண்டாவது சட்டமன்றத் தொகுதி. முற்றிலும் நகர்ப்புறம். படித்தவர்கள், விவரமறிந்தவர்கள் நிறைந்த பகுதி.

உள்ளாட்சி அமைப்புகள் உயிர் பெற்ற பிறகு, திருச்சி மாநகரில் உள்ள சந்து பொந்து வீதிகளுக்கெல்லாம் சாலை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளதை குறிப்பிட்டுச் சொல்லும் நகர்ப்புற வாக்காளர்கள், பொது விநியோக முறையில் ரேஷன் கடைகளில் நடக்கும் அநியாயங்களுக்கு ஒரு முடிவு வராதா என்று அங்கலாய்க்கிறார்கள். இந்த அங்கலாய்ப்பு எந்த அளவிற்கு தி.மு.க. எதிர்ப்பு வோட்டாகத் திரும்பும் எனத் தெரியவில்லை.

சமத்துவபுரம், உழவர் சந்தை, வரும் முன் காப்போம் போன்ற அரசின் நலத் திட்டங்களைக் காட்டிலும் சமீபத்திய பஸ் கட்டண



• டி. ரத்தினவேல் (அ.தி.மு.க. வேட்பாளர்)



• அன்பில் பெரியசாமி (தி.மு.க. வேட்பாளர்)



• தி.மு.க. வேட்புமனு தாக்கலின் போது...

உயர்வு, மின் கட்டண உயர்வு, ரேஷனில் அரிசிக்கும் மண்ணெண்ணெய்க்கும் போராடுவது நடுத்தர குடும்பங்களைச் சார்ந்த நகர்ப்புற வாக்காளர்களை அதிகம் பாதித்துள்ளது. இவர்களது பாதிப்பு உணர்வுகளை அப்படியே இரட்டை இலைக்கு வாக்குகளாக மாற்றி விடலாம் என அ.தி.மு.க.வினர் போட்டிருந்த கணக்கு அவர்களது உணர்ச்சிவசப்பட்ட சாலை மறியல், கல் வீச்சு, பஸ் தீயிடல் என நீண்டு, தர்மபுரியில் நிகழ்ந்த சம்பவத்தால் பொய்க் கணக்காய்ப் போய் விட்டது என்று அரசியல் நோக்கர்கள் கருதுகிறார்கள்.

“தொகுதியில் மூவாயிரம் வாக்குகள் மட்டுமே வாங்கியிருக்கும் த.மா.கா.வின் ஆதரவு அ.தி.மு.க. பக்கம் சாய்ந்து போனதில் எங்களுக்கு ஒன்றும் மோசமில்லை!” என்கிறார்கள் தி.மு.க.வினர். ஊழலின் சின்னம் இரட்டை இலை என்று முன்பு குறிப்பிட்ட மூப்பனார் முகம் வரைந்து, அதனருகில் இரட்டை இலை படம் போட்டு 'வாக்களிப்பீர் இரட்டை இலைக்கே!' என எழுதப்பட்ட பேனர்கள் நகர் முழுவதும் காட்சியளிக்கின்றன.

முன்னாள் மத்திய அமைச்சர் ப. சிதம்பரம் அ.தி.மு.க.வினரால் தாக்கப்பட்ட வழக்கு இதே நாட்களில் திருச்சி கோர்ட்டில் நடைபெற்று வருகிறது. அதில் முதல் குற்றம்சாட்டப் பெற்றவராகச் சேர்க்கப்பட்டுள்ளவர்தான், இத் தொகுதியின் அ.தி.மு.க. வேட்பாளர். இப்பொழுது காங்கிரசின் அடைக்கலராஜ், அ.தி.மு.க.வின் ரத்தினவேல், த.மா.கா. பிரமுகர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து பிரசாரம் செய்து வருகிறார்கள். "இதெல்லாம் அரசியலில் சகஜமப்பா!" என்கிறார் த.மா.கா. பிரமுகர் ஒருவர்.

தி.மு.க. தரப்பில் திருச்சிக்கு வந்துள்ள கட்சித் தலைவர்களுக்கும் பஞ்சமில்லை. தொண்டர்களுக்கும் குறைவில்லை. ஆனால் அ.தி.மு.க. தரப்பில்தான் ஆரம்பத்தில் இருந்த பிரசார விறுவிறுப்பு உள்ளூர் தலைவர்களின் திடீர் சிறைவாசத்தால் சற்று மந்தமாகிப் போய் விட்டது. மறியலில் கைதாகி சிறைக்குப் போய் விட்டதால் கட்சியின் நகர பிரபலங்களைக் காணவில்லை.

திருநெல்வேலித் தமிழும் நெல்லை மாவட்டத்து முகங்களுமாக திருச்சி இரண்டாவது தொகுதியை வலம் வந்து கொண்டிருக்கின்றனர் அ.தி.மு.க.வினர்.

சிறையிலிருக்கும் அ.தி.மு.க. பிரமுகர்களை ஜாமீனில் எடுக்க வேண்டி கொடுத்த மனு விசாரணைக்கு வந்ததில், பி.எச். பாண்டியனே வழக்கறிஞராக ஆஜரானார்.

"சிறையில் அடைக்கப்பட்டுள்ள 76 பேரும் ஆளுக்கு ஆயிரம் வோட்டுகள் வீதம் 76,000 வோட்டுகள் பெற்றுத் தருபவர்கள். உள்ளூர்க்காரர்கள். இந்த 76 பேரும் இல்லையெனில் கள்ள வோட்டு போட்டு விடுவார்கள். கள்ள வோட்டை தடுக்க முடியாமல் போய்விடும். 76 வோட்டில் அ.தி.மு.க. தோற்றுப் போனால் யார் பொறுப்பு?" என்று விவாதத்தின் போது கோர்ட்டில் வினா எழுப்பினார் பி.எச். பாண்டியன்.

முதல்கட்டப் பிரசாரத்தை முடித்து விட்டனர் இரண்டு அணியின் வேட்பாளர்களும்.

"பெண்கள் மத்தியில் எங்களுக்கு மீண்டும் அமோக ஆதரவு இருக்கின்றது. எங்களது வெற்றி உறுதி!" என்கிறார் அ.தி.மு.க. வேட்பாளர் டி. ரத்தினவேல்.


"எனது சகோதரர் அன்பில் பொய்யாமொழியின் அணுகுமுறைகளையே அரசியலில் நானும் கடைப்பிடிக்கிறேன். அவர் சர்வ கட்சி நண்பராகவும், தொகுதி மக்களுக்குத் தோழனாகவும் இருந்தவர். உதய சூரியன் வெற்றி பெறுவது உறுதி!" என்று சொல்கிறார் தி.மு.க. வேட்பாளர் அன்பில் பெரியசாமி.

தன்னுயிர்த் தோழனின் தம்பியான அன்பில் பெரியசாமி வெற்றி பெற வேண்டி தொடர் பிரசாரத்திற்காக திருச்சியில் வந்து தங்கியுள்ளார் மு.க. ஸ்டாலின்.

அடுத்தடுத்து வரவிருக்கும் கலைஞர், மூப்பனார், ஜெயலலிதா போன்ற தலைவர்களின் சுற்றுப் பயணங்களால் சுறுசுறுப்பு அடைந்திருக்கிறார்கள் கட்சித் தொண்டர்கள்.

அரசியல் கட்சித் தலைவர்களின் முற்றுகையினால் திணறிக் கொண்டிருக்கிறது திருச்சி. யாருக்கு சாதகமாக தீர்ப்பளிப்பது என திகைத்துப் போயுள்ளனர் தொகுதி வாக்காளர்கள்.

— ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



"ஒரு ஸ்பீடு பிரேக்கர் இன்னொரு ஸ்பீடு பிரேக்கரிடம் என்ன சொன்னது?"

"வீ ஆர் 'மேடு' ஃபார் ஈச் அதர்!"

— ஆர். ஆர்.தமன்

பாதுகாப்பான முதலீட்டிற்கு

பவர்ஃபைனான்ஸ்

இது ஒரு தமிழக அரசு நிதி நிறுவனம்

13.14%

காலம்	ஆண்டு வட்டி	
	மாதமொரு முறை	மூன்று மாதங்களுக்கு ஒரு முறை
12 மாதங்கள் & 1 நாள்	-	12.12%
25 மாதங்கள்	-	12.63%
36 மாதங்கள், 48 மாதங்கள் & 60 மாதங்கள்	13%	13.14%

18.18%

60 மாதங்களுக்கு
(மாதாந்திர கூட்டுவட்டி
ஆண்டிற்கு 13%)

- இந்நிறுவனம் வங்கிப்பணி சாராத நிதி நிறுவனமாக ரிசர்வ் வங்கியில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் பதிவு எண் : 07.00389 ஆகும்.
- முழுமையான பாதுகாப்பிற்கு CRISIL வழங்கியுள்ள FA+ மதிப்பீடு.
- துவக்கத்திலிருந்து தொடர்ச்சியாக இலாபம் ஈட்டி வருகிறது.
- கடந்த மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து 20% ஈவுத்தொகை வழங்கி வருகிறது.

மேலும் விபரங்களுக்கு :

தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும்
அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (பவர்ஃபின்)

பதிவு அலுவலகம் : 84, டி.டி.கே. சாலை, ஆழ்வார்ப்பேட்டை, சென்னை - 600 018.
தொலைபேசி : 4997689, 4995648. தொலைநகலி : 044 - 4982894.
Visit us at : www.tnpowerfinance.com www.tninfrafinance.com

28-9-99 தேதியிட்ட 'எகனாமிக் டைம்ஸ்' இதழில் வெளியிடப்பட்ட முந்தைய விளம்பரத்தின் தொடர்ச்சியாக இந்த விளம்பரம் வெளியிடப்படுகிறது.

"Also available on the Internet" www.tn.gov.in / www.chennaionline.com / www.aaraamthinai.com

அறந்தாங்கியைக் கைப்பற்ற அரசியல் வேட்டை!

அறந்தாங்கி சட்டமன்றத் தொகுதியில் அறந்தாங்கி மட்டுமே சிறிய நகரம். மற்றவை அனைத்தும் கிராமங்கள்தான். அறந்தாங்கி நகராட்சி மற்றும் நான்கு (ஆவுடையார்கோயில், மணமேல்குடி, அறந்தாங்கி, அரிமளம் ஆகிய) ஒன்றியங்களை உள்ளடக்கியது இந்த சட்டமன்றத் தொகுதி.


எம்.ஜி.ஆர். அ.தி.மு.க.வின் தலைவரும், தொகுதியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான திருநாவுக்கரசு, புதுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதால் புகுத்தப்பட்ட இடைத்தேர்தல் இது.

'தென்னாட்டு ஜான்சி ராணியின் அன்புத்தம்பி ராஜா பரமசிவத்துக்கு இரட்டை இலையில் வாக்களியுங்கள்!' என்று ஆட்டோக்களில் ஸ்பீக்கர்கள் அலறிக்கொண்டிருக்கின்றன. சுலோசனா சம்பத் மற்றும் அ.தி.மு.க. முன்னணித் தலைவர்கள் அறந்தாங்கியில் முகாம் போட்டு தேர்தல் பிரசாரத்தை பல வழிகளிலும் முடுக்கி விட்டுள்ளனர். இந்த முறை எப்படியும் தொகுதியை திருநாவுக்கரசின் வசமிருந்து மீட்டு விட வேண்டும் என கடும் முயற்சியில் இறங்கியுள்ளது அ.தி.மு.க. இரண்டு நாள் சூறாவளி சுற்றுப்பயணம் செய்து வாக்குகளைக் கவர்ந்து வெற்றி பெற்றுக் காட்டிட வியூகங்கள் வகுத்துக் கொண்டிருக்கிறார் அ.தி.மு.க. கட்சித் தலைவி செல்வி ஜெயலலிதா. இதற்கிடையில் அறந்தாங்கி இசைத் தேர்தலில் (மன்னிக்கவும்!) இடைத்தேர்தலில் தொகுதியில் 'தனிக்கச்சேரி'யும் செய்து இரட்டை இலைக்கு ஆதரவு கேட்கிறார் த.மா.கா. தலைவர் மூப்பனார்.

பிரசாரத்தில் இரண்டாவது இடத்தில் இருக்கிறது டாக்டர் சேதுராமனைத் தலைவராகக் கொண்ட மூவேந்தர் முன்னேற்றக் கழகம், அகில இந்தியத் தேவர் பேரவை, முக்குலத்தோர் சங்கம் இணைந்து ஓர் அரசியல் கட்சியாக பெயர் மாற்றம் பெற்றுள்ளது. இதன் வேட்பாளர் அறிவழகன். 'தொகுதியின் மண்ணின் மைந்தருக்கே வாக்களியுங்கள்!'' என்பது இவர்களது கோஷமாக இருக்கின்றது.



• ராஜா பரமசிவம் (அ.தி.மு.க. வேட்பாளர்)



• அறிவழகன் (மூ.மு.க. வேட்பாளர்)

எம்.ஜி.ஆர். அ.தி.மு.க வேட்பாளர் சி. அன்பரசனும், அ.தி.மு.க. வேட்பாளர் ராஜா பரமசிவமும் தொகுதிக்கு வெளியூர்க் காரர்கள்.

ஆரவாரம் ஏதுமின்றி அறந்தாங்கி நகர் முழுக்க அமைதியாக நகரப் பெரியவர்கள், வணிகர்கள், அனைத்துக் கட்சித் தலைவர்கள் ஆகியோரின் இல்லம் தேடிச் சென்று வாக்குகள் சேகரித்து வருகிறார் எம்.ஜி.ஆர்.அ.தி.மு.க வேட்பாளர் சி. அன்பரசன். கட்சித் தலைவரும் புதுக்கோட்டை எம்.பி.யுமான திருநாவுக்கரசு வந்தவுடன் பிரசாரம் சூடு பிடிக்கும் என்கிறார்கள். தி.மு.க. சார்பில் கல்வி அமைச்சர் அன்பழகன் உட்பட சில அமைச்சர்களும் பிரசாரம் செய்து தேர்தல் வேலைகளை உற்சாகப்படுத்தி விட்டுச் சென்றுள்ளனர். "அறந்தாங்கியைப் பொறுத்தவரை எங்கள் தலைவர்

(திருநாவுக்கரசு) என்ன சின்னத்தில் வாக்குகள் கேட்கிறார் என்பதை மக்களுக்குத் தெரியப்படுத்த மட்டுமே எங்களது பிரசாரம் இங்கு தேவைப்படும்!" என்கிறார் கட்சியின் நகரப் பிரமுகர் ரவி கணேஷ்.



• சி. அன்பரசன் (எம்.ஜி.ஆர்.அ.தி.மு.க. வேட்பாளர்)

இவை ஒருபுறமிருக்க இந்த மூன்று வேட்பாளர்களும் ஒருவர் மீது ஒருவர் சுமத்தும் குற்றச்சாட்டுகள் விநோத மாக இருக்கின்றன!

புதிதாகத் தேர்தலில் குதித்திருக்கும் மூ.மு.க. வேட்பாளர்க்கு ஜெயலலிதா சகல வசதிகளையும் செய்து தருவதாகவும், மூ.மு.க. பெறும் வோட்டுகள் திருநாவுக்கரசு வாக்கு வங்கியிலிருந்து பிரியும் எனவும் அதன் மூலம் அறந்தாங்கியில் அ.தி.மு.க. வெற்றி பெற்று விடும் எனவும் அ.தி.மு.க. தலைமை கனவு காண்கிறது என்று எம்.ஜி.ஆர்.அ.தி.மு.க.வினர் கூறுகின்றனர். மேலும் "அறந்தாங்கி வேறு; திருநாவுக்கரசு வேறல்ல! இரண்டையும் எந்தப் பலத்தாலும் பிரிக்க முடியாது" என்று நம்மிடம் கூறுகிறார் இதன் வேட்பாளர் சி. அன்பரசன்.

"தமிழகத்தில் கணிசமான அளவு கள்ள வோட்டுகள் போடப்படும் தொகுதிகளில் அறந்தாங்கியும் ஒன்று. ஒவ்வொரு முறையும் திருநாவுக்கரசு வெற்றி பெற கள்ள வோட்டுகள் இங்கு மிக அதிகமாக போடப்பட்டு வருவதே முக்கிய காரணம். இந்தத் தேர்தலில் கள்ள வோட்டுகள் போட வருவோரை எங்கள் கட்சியினர் தடுத்து விடுவார்கள். அதனால் அறந்தாங்கியில் அ.தி.மு.க. வெற்றி பெறுவது உறுதி!" என்று அடித்துச் சொல்கிறார் அ.தி.மு.க. வேட்பாளர் ராஜா பரமசிவம்.

"பணமா... ஜெயலலிதாவிடமிருந்தா? அதெல்லாம் சுத்தப் பொய்ங்க! தொகுதிப் பங்கீட்டில இந்தத் தொகுதிய நாங்க கேட்டிருந்தோம். எங்கள மதிக்காம அவுங்க வேட்பாளர அறிவிச்சிட்டாங்க. நாங்க தனிச்சு நின்னாத்தானே எங்க பலம் என்னன்னு தெரியும்? இந்த முடிவை சமீபத்துல நடந்த எம்.பி. எலெக்ஷன்ல செயல்படுத்தியிருந்தா தென் மாவட்டங்கள்ல அ.தி.மு.க எம்.பிங்க இந்தளவு ஜெயிச்சிருக்க முடியாதுங்க!" என்று புதிய அரசியல் குண்டு ஒன்றை தூக்கிப் போடுகிறார்கள் மூ.மு.க.வினர்.

எல்லாம் சரி. வாக்களிக்கப் போகும் தொகுதி மக்களின் மனநிலை எப்படி இருக்கின்றது? அதிக வாக்குகள் வித்தியாசத்தில் திருநாவுக்கரசு வெற்றி பெறுமாறு தொடர்ந்து ஆறு முறை வோட்டுப் போட்டவர்கள் இவர்கள்.

"இத்தனை முறையும் ஒருத்தருக்கே வோட்டுப் போட்டு சலிச்சிப் போச்சிங்க... இப்ப புதுசா ஒருத்தருக்குப் போட்டா என்னங்க" எனும் சிந்தனை தொகுதியில் மிகக் குறைந்த அளவு சதவிகித வாக்காளர்கள் மத்தியில் தோன்றியிருக்கிறது. இதனை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறது இரட்டை இலை. "இப்ப திருநாவுக்கரசு இங்க நிக்கலை. இன்னொருத்தரை நிப்பாட்டிருக்கார். யோசிச்சித்தாங்க வோட்டுப் போடணும்!" என்கிற சிலரைப்

பார்த்து "சரி... யாருக்குத்தான் உங்க வோட்டு?" என்று கேட்டால் நம்மைப் பார்த்து மர்மமாய்ச் சிரித்து வைக்கிறார்கள். இந்த மர்மப் புன்னகையாளர்களின் வாக்குகள் இரட்டை இலைக்குச் செல்லும் வாய்ப்புகள் இருப்பது போல் தெரிகிறது. பலரிடமும் பேசிப் பார்த்த வகையில், சமீபத்திய தர்மபுரி சம்பவம் குறித்தான எவ்வித உணர்வு (ஜெ. எதிர்ப்பு அல்லது ஆதரவு போன்ற) வெளிப்பாடுகளும் இல்லாதது அ.தி.மு.க.விற்கு அறந்தாங்கியைப் பொறுத்த வரை ப்ளஸ் பாயின்ட்!

இதற்குள் குண்டகவயல் ஊராட்சிக்கு உட்பட்ட சனிக்காடு, நகைனேந்தல், ஆதித்தன்பட்டி மற்றும் தேங்குடி ஊராட்சிக்குட்பட்ட அத்தானி ஆகிய நான்கு கிராம மக்களும் தேர்தல் புறக்கணிப்புச் செய்ய இருக்கிறார்கள். அடிப்படை வசதிகள் எதுவும் இதுவரை தங்கள் கிராமங்களுக்கு வரவில்லை என்று சொல்லி வாக்களிக்க மாட்டோமென போஸ்டர்கள் ஒட்டி தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

தொகுதி முழுவதும் தொலை தூர மிகச் சிறிய குக்கிராமங்களுக்குக்கூட சாலை வசதிகள், துவக்கப் பள்ளிகள், அறந்தாங்கி நகரில் அரசு பாலிடெக்னிக் மற்றும் நாகுடியில் சர்க்கரை ஆலை கொண்டு வந்தது போன்றவை தொகுதிக்கு திருநாவுக்கரசு செய்துள்ள பணிகள் என்று தொகுதி வாசிகள் சொல்கிறார்கள்.

அறந்தாங்கி தொகுதியில் இருக்கும் துரையரசபுரம் கிராமத்தில் உள்ள கூட்டுறவு நூற்பாலை இப்பொழுதுதான் சன்னமாய் மூச்சு விடத் துவங்கியிருக்கின்றது. அழியாநிலை (இது ஆலங்குடி தொகுதிக்குள் வரும்) யில் இருக்கும் தனியார் நூற்பாலை இரண்டு வருடங்களாக இயங்காமல் முடங்கிப் போய்க் கிடக்கின்றது. இந்த நூற்பாலை திருநாவுக்கரசு மற்றும் அவரது சகோதரருக்குச் சொந்தமானது. தொகுதி மக்கள் இவற்றை எதுவும் ஒரு பொருட்டாக- குறையாக எடுத்துக் கொள்ளவில்லை. 'எங்களிடம் அவர் பழகும் விதம்... கிராமத்து வீடுகளில் நடக்கும் எந்தவொரு நல்லதுக்கும் சரி கெட்டதுக்கும் சரி வந்து பார்த்துவிட்டுப் போய்விடுவார். அதனால் எங்கள் ஆதரவு அவருக்கே!'' என்று சொல்கின்றனர் கிராமத்து மக்கள்.

"அவர்கிட்ட போயி நின்னா... எந்தக் கட்சி? எந்த ஜாதின்னு பாக்க மாட்டார்ங்க... அவுங்க பிரச்னையை காது கொடுத்துக் கேட்டு அதுக்கு ஆக வேண்டியத செஞ்சி அனுப்புவார்ங்க... இப்ப அவரு நின்னா என்ன? அவரோட ஆள் நின்னா என்னங்க? ரெண்டும் ஒண்ணுதானே?" என்கிற மனநிலை பலரிடமும் இருக்கிறது. "வேறு ஆள் தானே நிக்கிறார்... யோசிப்போம்!" என்கிற உணர்வும் சிலரிடம் இருக்கிறது. அந்தச் சிலர் அ.தி.மு.க.வுக்கு சாதகமாக அமையலாம்.

பரவலாக தொகுதியெங்கிலும் திருநாவுக்கரசுக்கென்று தனிப்பட்ட செல்வாக்கு இருப்பது தெரிகிறது. கடற்கரையோர கிராமங்களில் (மீமிசல், கோபாலபட்டினம் போன்றவை) அவரது வாக்கு வங்கிகள் சிதையாமல் இருக்கின்றது.

அறந்தாங்கி தொகுதியின் மார்க்கண்டேயக் கதாநாயகரிடமிருந்து இந்தக் கோட்டை எவர் கைக்கும் போய் விடாது என்றே தோன்றுகிறது.


— ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

ஸ்வீட் ஹோம் என்பது...

ராஜ்குமார் பாரதி:

இன்றைய நகர்ப்புற
வாழ்க்கை முறையின்
அடிப்படையில், என்
இனிய இல்லத்துக்கான
விளக்கம் இதுதான்:


இன்முகத்துடன்
குடும்பத்தை வழி
நடத்தும் மனைவி,
ஆசியுடன், அறிவார்ந்த
ஆலோசனைகள்
சொல்லும் பெற்றோர்,



அன்பில் தாலாட்ட குழந்தைகள்,
பாரதி கனவு கண்ட
கண்ணன் போல்
வீட்டில் பணி செய்ய
வேலைக்காரர்கள்,
பணிவும், சுதந்தரமும்
சரியான விகிதத்தில்
கலந்த அன்பான
சூழ்நிலை,
ஆண்டவனின்
பரிபூர்ண அருள்
இவையனைத்தும்
ஒருங்கே பெற்றதுதான்
இனிய இல்லம்.

பில்ராத் மருத்துவமனை

முதன்முதலில்
அதிநவீன லேசர் கருவியுடன்
லேப்ராஸ்கோப்பி
சிகிச்சை



வயிறு
சம்பந்தப்பட்ட அனைத்து
நோய்களுக்கும் ஓர் முழுமையான
தீர்வு

- அல்சர்
- அபண்டிஸைடிஸ்
- குடல் இறக்கம் (Hernia)
- பித்தப்பை கற்கள் (Gall Bladder Stones)
- கர்ப்பப்பை நோய்
- ஓவரியில் கட்டி எடுத்தல் (Ovarian Cyst Removal)
- குடும்பக் கட்டுப்பாடு சிகிச்சை

சிறப்பு அம்சங்கள்
- ரத்த இழப்பு இல்லை
- தழும்பு ஏற்படாது
- உடனே பழைய நிலைக்குத் திரும்பலாம்

♦♦♦

அறுவை இல்லா
மூல வியாதி
சிகிச்சை

சிறப்பு சிகிச்சை :

- லேசர் சிகிச்சை
- கிரையோ சிகிச்சை
- கதிர் வீச்சு சிகிச்சை

BILLROTH HOSPITAL
24 HOURS SERVICE

43, லட்சுமி டாக்கீஸ் சாலை, செனாய் நகர், சென்னை-600030. போன் : 6440020 / 6441777.

“இதுதான் எங்கள் ஆபீஸ்!”

வேலைக்குப் போகும் பெண்களிடத்தில் சமூதாயத்துக்குத் தனியான மரியாதை, அனுதாபம், பிரமிப்பு. 'இரட்டைக் குதிரை சவாரியில்லையா!' என்கிற உணர்வு!

நாங்கள் எள்ளளவும் சளைத்தவர்களல்ல என்கிறார்கள் 'வீட்டிலேயே இருக்கும்' குடும்பத் தலைவிகள்!

“ஒருநாள் வீட்டோடு இருந்து பாருங்கள். எங்களுடைய கஷ்டங்கள் என்னவென்று உங்களுக்குப் புரியும். வேலைக்குப் போகிற பெண்கள் வீட்டையும் பார்த்துக் கொண்டு, ஆபீஸிலும் வேலை செய்ய வேண்டியுள்ளது என்பது வாஸ்தவம்தான். ஆனால், வீட்டோடு இருக்கும் எங்களைப் போன்றவர்கள் வீட்டில் ரெஸ்ட் எடுத்துக் கொண்டு ஜாலியாக இருக்கலாம் என்பது அபத்தம். வேலைக்குப் போகிற பெண்கள் என்றால், வீட்டில் கணவனும் சரி, மற்றவர்களும் சரி, வீட்டு வேலைகளைப் பகிர்ந்து கொள்ளத் தயக்கம் காட்டுவதில்லை. ஆனால், வீட்டோடு இருக்கும் குடும்பத் தலைவிகளுக்குப் பெரும்பாலும் அந்த ஆதரவு கிடைக்காது. அவர்களே எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தாக வேண்டிய கட்டாயம்” என்கிறார் ஸ்ரீமதி சுவாமிநாதன்.

“காலை நேரத்தில் பேப்பர் பார்க்கவே ஆண்களுக்கு நேரம் சரியாய் இருக்கிறது. குழந்தைகளை எழுப்பி, பல் தேய்க்க வைப்பதில் தொடங்கி, குளிப்பாட்டி, சாப்பாடு கொடுத்து, லஞ்ச் ரெடி பண்ணி, பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி வைக்கிற வரை எக்ஸ்பிரஸ் ரயில் கதியில் செயல்பட



• ஸ்ரீமதி



• கீதா



• வித்யா

வேண்டியுள்ளது. அவர்களை அனுப்பி வைத்து விட்டால், உடனே கணவர் ஆபீசுக்கு ரெடியாகி விடுவார். மீண்டும் ஒரு முறை குழந்தைகளை அனுப்பி வைப்பதற்காகச் செய்த அத்தனையும் ஆக்ஷன் ரீப்ளே!

"அதன்பின்தான் வேலைக்காரி வருவார். நாலைந்து வீடுகளில் வேலை பார்க்கிற பெண்மணி அவர். வேலைக்குப் போகிற பெண்கள் இருக்கிற வீடுகளுக்குத்தான் முக்கியத்துவம் கொடுப்பார்! அத்தனை வீடுகளும் முடிந்து இங்கு வருவதற்குள் ஆய்ந்து ஓய்ந்திருப்பார். நாமும் கூடமாட செய்யாமலிருக்க மனம் கேட்குமா!" என்கிறார் மேற்கு மாம்பலத்தைச் சேர்ந்த குடும்பத் தலைவி சித்ரா.

"கணவனும் மனைவியும் வேலைக்குப் போகிறார்கள் என்றால், அவர்கள் வீட்டுக்கு வரும் உறவினர்களும், நண்பர்களும் கூட மாலை நேரங்களிலோ, வார விடுமுறை நாட்களிலோதான் வருவார்கள். வீட்டில் இருக்கிற குடும்பத் தலைவியென்றால், விருந்தினர் வருகை சற்று அதிகமாகவே இருக்கும். அவர்கள் வந்தால், அவர்களை வீட்டில் உபசரிப்பதுடன் நிற்குமா? வெளியில் கடைகளுக்குப் போய் ஏதாவது வாங்க வேண்டும் என்பார்கள். நீங்களே போய் வாருங்கள் என்று சொல்லி விட முடியாதே! கூடப் போய் வர வேண்டுமே!" என்கிறார் மைலாப்பூரைச் சேர்ந்த வித்யா.



• சித்ரா



மிஞ்சி மிஞ்சிப் போனால் வீட்டில் உள்ளவர்களுக்கு பிற்பகல் ஒரு மணி நேரம் ரெஸ்ட் கிடைக்கும். அது ரொம்ப ரொம்ப அவசியம்" என்கிறார் வித்யா.

"பெண்கள் வேலைக்குப் போகிற போது குடும்பத்துக்கு கணவன், மனைவி இரண்டு பேர் வருமானமும் வருகிறது என்பதால், இரண்டு பேருக்குமே பணத்தை தாராளமாகச் செலவழிக்கும் மனப்பான்மை ஏற்பட்டு விடுகிறது. இரட்டை இஞ்சின் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களை விட வீட்டில் இருக்கும் குடும்பத் தலைவிகளுக்கு, பொரு

ஸ்வீட் ஹோம் என்பது...

கார்டூனிஸ்ட் மதன் :



'ஸ்வீட் ஹோம்' ரொம்ப ஸ்வீட்டாக இருக்கக் கூடாது. இனிப்பு வகைகள் விஷயத்தில் வீடு கட்டுப்பாடு காட்டினால்தானே வீட்டிலுள்ளவர்களுக்கு சுகர், பி.பி. போன்ற தொல்லைகள் வராமல், ஆரோக்கியமாக இருக்க முடியும்?

இன்னொரு முக்கியமான விஷயம்; வீட்டில் எல்லோரும், கொஞ்சம் அரசியல்வாதிகளா மாறணும்! அதுக்காக, ஊழல் பண்ணணும்னு சொல்லலை! நிறைய பேசணும். இன்றைக்கு லைஃப் மெக்கானிகல் ஆகிவிட்டதால், கணவனும், மனைவியும், பெற்றோரும் குழந்தைகளும், மனம் விட்டு பேசிக்கொள்வதே ரொம்பக் குறைந்து போய் விட்டது. தினம் கால் மணி நேரம், அல்லது அரை மணி நேரம் அதற்கு என்று ஒதுக்கினால், குடும்பம் கலகலப்பாக இருக்கும்.

ளாதார சுதந்தரம் குறைவு. வீட்டிலிருக்கும் குடும்பத் தலைவி, குழந்தைகளின் படிப்பை தானே கவனிக்கிறாள் என்றால், வேலைக்குப் போகிற பெண்ணின் குடும்பத்தில், நேரம் இல்லை; பணம் இருக்கிறது. எனவே குழந்தைக்கு டியூஷன் வைக்கிறார்கள்'' என்கிறார் வங்கியில் பணிபுரியும் சீதா.

''இல்லத்தரசிகளுக்கு லீவ் ஏது?'' என்கிறார் ஸ்ரீமதி சுவாமிநாதன்.

''வாரம் ஆறு நாள் வேலைக்குச் செல்வோருக்கு ஒருநாள் விடுமுறை கிடைக்கிறபோது மாறுதல், ஓய்வு இரண்டும் கிடைக்கிறது. ஆனால் எங்கள் கதை அப்படியில்லை. இதுதான் எங்கள் ஆபீஸ். இது இருபத்து நாலு மணி நேரமும் 365 நாட்களும் இயங்குகிற ஆபீஸ். வெளியே செல்பவர்களின் பல பொறுப்புகளையும் சேர்த்து நாங்களல்லவா சுமக்கிறோம்...?'' என்று சுட்டிக்காட்டுகிறார்.

''சில மாதங்களுக்கு முன் டீ.வி.யில் ஜனநாயக மாதர் சங்கம் எடுத்த ஒரு சிறு கதையை ஒளிபரப்பினார்கள். ஒரு கணவனுக்கு, தன் மனைவி, வேலைக்குப் போகாதவள் என்பதால், வீட்டில் வெட்டிப் பொழுதுபோக்குகிறாள். தான் ஆபீஸ் போனவுடன் ஜாலியாய் படுத்துத் தூங்குகிறாள் என்ற எண்ணம். ஒரு நாள் ஒரு சுவாமிஜியிடம் வரம் பெற்று, எலியாக மாறி, தன் வீட்டுக்குள் ரகசியமாக நுழைந்து ஒளிந்திருந்து மனைவியை கவனிக்கிறான். அதிகாலை எழுந்து, பால் காய்ச்சுவது தொடங்கி, எல்லாரும் பள்ளி, ஆபீஸ் போகும் நேரத்துக்குப் பின், மொபைல் அயர்ன் ஆசாமி, காய்கறி வியாபாரி, சோப்புப் பவுடர் விற்கும் பெண், சர்வே எடுக்க வரும் இளைஞன் என்று ஏகப்பட்ட தொல்லைகள். அதற்குள் பையன் ஸ்கூல் விட்டு வருகிறான். அதன்பின் அடுத்த பெண் வருகிறாள். டிபன், ஹோம்-ஒர்க், படிப்பு... இப்படியே போய் எல்லா வேலைகளையும் அவள் முடித்து விட்டு அப்பாடா என்கிறபோது இரவு மணி பத்து! அட! இத்தனை வேலைகள், இடர்ப்பாடுகளா இவளுக்கு என்று மனைவி மீது பரிதாபம் வந்து விடுகிறது கணவனுக்கு. நான் மிகவும் ரசித்துப் பார்த்தேன் இந்தப் புரோகிராமை'' என்கிறார் வித்யா. ''வீட்டோடு இருப்பதில் என்ன கஷ்டம்? என்று கேட்கிறவர்கள் அந்த நிகழ்ச்சியைப் பார்க்க வேண்டும்!''

தொகுப்பு : **பாரதி**

படங்கள் : **வெங்கடேஷ்**

''சேலம் போற பஸ் எப்பங்க வரும்?''

''இடையிலே யாரும் கொளுத்தாம இருந்தா அஞ்சு மணிக்கு வந்துடும்!''

– தஞ்சை தாமு




''சென்னைல நடந்த உன் படத்தோட படப்பிடிப்பை மத அமைப்புகள் எதிர்த்துத் தடை பண்ணுச்சங்களா ஏன்?''

''படத்தோட பெயர் 'மெட்ரோ வாட்டர்'.''

– செந்தில்குமார்

A Holistic approach to Health Care





2000 பிப்ரவரி 20
பிரமாதி மாசி 8
மலர் : 58
இதழ் : 30

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



அஞ்சா நெஞ்சுடன் வோட்டுப் போடுங்கள்!

இடைத்தேர்தல் என்பது ஆளுங் கட்சியிடம் மக்களுக்கு உள்ள அதிருப்தியை வெளிப்படுத்துவதற்கு ஒரு சந்தர்ப்பம் என்பதை மறுப்பதற்கில்லை. அந்த அதிருப்திகள் என்னென்ன என்பதையும் 6.2.2000 இதழில் பட்டியலிட்டிருக்கிறோம்.


ஆனால், இன்றைய அரசியல் சூழ்நிலையில், வாக்களிப்பின் போக்கை நிர்ணயிக்கப் போவது தி.மு.க.விடமுள்ள அதிருப்தியா? அல்லது அ.தி.மு.க.விடமுள்ள அச்சமா? என்பதுதான் பெரிய கேள்வி!

அ.தி.மு.க.விடம் நமக்கு ஏற்பட்டுள்ள அதிர்ச்சியையும் அவநம்பிக்கையையும் ஒப்பு நோக்க, தி.மு.க.விடம் கொண்ட அதிருப்தி அல்லது ஏமாற்றம் என்பது மிகக் குறைவுதான்.

ஆட்சியில் இருப்பவர்கள் இன்றைய 'விரோத அரசியல்' சூழலில் நல்ல பெயர் எடுப்பதே மிகக் கடினம். சாதனைகள் புரியாமலிருந்தால் 'செயலற்ற அரசு' என்பார்கள். சவால்களை ஏற்று சாதனைகள் செய்யப் புகுந்தால் 'லஞ்ச - ஊழல்' என்று ஆதாரம் இல்லாவிட்டாலும் கூக்குரல் எழுப்புவார்கள். இந்தச் சூழலில் தி.மு.க அரசின் நல் நோக்கங்கள் சந்தேகத்துக்கப்பாற்பட்டவை.

ஆனால், அ.தி.மு.கவின் அரசியல் அணுகுமுறையே அதிர்ச்சியூட்டுவதாயிருக்கிறது.

கடந்த அ.தி.மு.க ஆட்சியின்போது நடந்த வளர்ப்பு மகன் திருமணத்தின் பகட்டும், பையனூர் பங்களா ஆடம்பரமும், முதல்வர் காலில் விழும் கலாசாரமும், விளம்பரப் பித்தும்,



உடன்பிறவா சகோதரி, வளர்ப்பு மகன் விவகாரங்களும் நீதி விசாரணைக்கோ சாட்சியத்துக்கோ அவசியமின்றி பொதுவாழ்க்கைப் பண்புகளின் வீழ்ச்சியைப் பறை சாற்றுகின்றன.

வாக்காளர்கள் இவற்றை இவ்வளவு சீக்கிரத்தில் மறந்திருக்க முடியாது.

போதாக்குறைக்கு வகை வகையான முறைகேடுகள், ஊழல்கள் அ.தி.மு.க ஆட்சியில் நடந்துள்ளன என்பது தெரியவர, நீதி விசாரணை நடந்து வருகிறது. இதற்கென தனி நீதிமன்றங்கள் நிறுவ வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது!


தமது பேரில் வீண் பழி சுமத்தப்படுகிறது; அரசியல் நோக்கில் பொய் வழக்குகள் ஜோடிக்கப்பட்டுள்ளன என்று ஒட்டுமொத்தமாகக் குற்றச்சாட்டுகளை மறுக்கிறார் ஜெயலலிதா. ஆனால் வழக்குகளைச் சந்தித்து, குற்றச்சாட்டுகள் பொய் என்ற தமது நிலையை நிரூபிக்க முனையாமல், வழக்குகளிலிருந்து விடுபடவும் தப்பவும்தான் விதவிதமான முயற்சிகள் மேற்கொள்கிறார்.

ஜெயலலிதாவின் தப்பித்தல் முயற்சிகளையும் மீறி ஒரு வழக்கில் அவருக்கு எதிராகத் தீர்ப்பு வெளியானாலோ, அடுத்த கணமே அ.தி.மு.க தொண்டர்களின் வெறியாட்டம் ஆரம்பிக்கிறது. தமிழகம் பற்றி எரிகிறது. எங்கும் வன்முறை. தர்மபுரியில் ஒரு பேருந்து கொளுத்தப்பட்டதில் மூன்று மாணவிகள் உயிரிழக்கின்றனர்.

தனி நீதிமன்ற வளாகத்திலேயே அ.தி.மு.க.வினர் தீர்ப்பை எதிர்த்து கோஷமிடுவதை தொலைக்காட்சி ஒளிபரப்புகிறது. தர்மபுரி சம்பவம் தொடர்பாக பல அ.தி.மு.க. உறுப்பினர்கள், காவல் துறையிடம் சரணடைந்துள்ளார்கள்.

இத்தனையும் நடந்த பிறகும் தமக்கு அவப் பெயர் ஏற்படுத்துவதற்கென தி.மு.க திட்டமிட்டுச் செய்த சதிதான் பஸ் எரிப்புக்குக் காரணம் என்று ஜெயலலிதா அறிக்கை தருகிறார்!

'வன்முறையில் ஈடுபடாதீர்கள்' என்றோ நடந்த பயங்கரத்துக்கு வருத்தம் தெரிவித்தோ அ.தி.மு.க. தலைவி இதுநாள் வரை எதுவுமே பேசவில்லை.



மாறாக, 'தலைவியை ஆராதிக்கும் தொண்டர்கள், அவருக்கு ஏதேனும் தீங்கு நேர்ந்ததாகக் கருதினால் உடனே உணர்ச்சி வசப்படுவார்கள், கொந்தளிப்பார்கள்' என்று தமது கட்சியைச் சேர்ந்தவர்களின் தீக்குளிப்பைக் கூட நியாயப்படுத்த முயற்சி செய்கிறார்.

இதெல்லாம் நடந்துகொண்டிருக்கையிலேயே, ஒரு ரூபாய் சம்பளம் பெற்ற ஜெயலலிதாவின் தங்க, வைர நகைகள் பெட்டி பெட்டியாக நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு மதிப்பிடப்படுகின்றன - வருவாய்க்குப் பொருந்தாத வகையில் சொத்து சேர்த்த வழக்கு தொடர்பாக.

இடைத்தேர்தலில் ஜெ பிரசாரங்களின்போது அவரது பண பலத்துக்கு எந்தக் குறையும் வந்துவிடவில்லை என்பதை நிதர்சனமாகப் பார்க்க முடிந்தது.

பண பலத்தால் மயக்கியும், நடிப்பு - பேச்சு பலத்தால் கவர்ந்தும், குண்டர்கள் பலத்தால் அச்சுறுத்தியும் வாக்குகளைத் தமது பக்கம் திருப்பிக் கொள்ள ஜெயலலிதா முயன்று வருகிறார் என்பது தெளிவு. 'தமது பேரில் எந்தத் தவறும் இல்லை. எல்லோருமே தமக்கு எதிராகச் சதி செய்கின்றனர்' என்று பேசும் ஒரு பெண் பெறக்கூடிய அனுதாபத்தில் அவர் குளிர் காய முயற்சி செய்வதும் தெரிகிறது.

ஆனால், ஜெ தமது முயற்சிகளில் வெற்றி பெற்று விடாமல் காப்பதே இடைத்தேர்தல் வாக்காளர்களின் கடமை.

இடைத்தேர்தல் முடிவுகள் நடப்பு சட்ட சபையின் அமைப்பையும் போக்கையும் அதிகம் பாதித்து விடப் போவதில்லைதான். ஆனால் அவை தமிழகத்தின் எதிர்காலத்தையும் தலைவிதியையும் பாதிக்கும்.

பிரசாரத்தின்போது சேரும் கூட்டத்தைக் கண்டு மயங்காமல், வன்முறைக்குத் தயங்காத ஒரு கட்சியைக் கண்டு அஞ்சாமல், 'நமக்கேன் வந்தது' என்று விட்டேற்றியாய் இல்லாமல், அறந்தாங்கி, நெல்லிக்குப்பம், திருச்சி - II வாக்காளர்கள் வோட்டுப் போட்டாக வேண்டும். ஆளுங்கட்சியிடம் ஏதேனும் அதிருப்தி இருக்குமானால் அதையும் ஒதுக்கி வைத்துவிட்டு வோட்டுப் போட்டாக வேண்டும். ●



• மணமக்களுக்கான சீர்வரிசை...

‘சத்ய’த்துக்குக் கட்டுப்பட்ட திருமணங்கள்!

ஸ்ரீ சத்ய சாய் பாபாவின் 75 ஆவது பிறந்த நாளைக் கொண்டாட, சென்னையில் மட்டும் 75 திருமணங்களை ஒரே முகூர்த்தத்தில், 7 ஆம் தேதி காலை, நடத்தி வைத்தது ஸ்ரீ சத்ய சாய் சேவா மன்றம்.

அதில் ஒரு தம்பதி தாஜுதீன் - மும்தாஜ் பேகம். தாஜுதீன் திருவல்லிக்கேணியைச் சேர்ந்தவர். பட்டு வேட்டி, ஜிப்பா, பட்டு மேல் துண்டு என்று பளபளப்பாக இருந்தார் தாஜுதீன். “இந்த மாதிரி சத்ய சாய்பாபாவின் ‘சுந்தரம்’ வளாகத்தில் மற்ற 74 இந்துக் குடும்பங்களோடு நீங்களும் ஒரு தம்பதியாகக் கல்யாணம் பண்ணிக் கொள்ள, உங்கள் சமூகத்தாரிடமிருந்து எதிர்ப்பு ஏதும் வரவில்லையா?'' என்று கேட்டோம்.

''இல்லை!'' என்றார் தாஜுதீனின் அப்பா நஸீர் உசைன். “எங்கள் காஜி வந்து, இஸ்லாமிய முறைப்படி நிக்காஹ் செய்து வைத்தார். எங்கள் உறவினா, நண்பர்கள் எல்லாருமே வந்திருந்தார்கள். மதங்கள் வேறாக இருந்தாலும் கடவுள் ஒன்றுதானே?'' என்றார், இயல்பாக.

காலை 6 முதல் 7:30 வரையிலான முகூர்த்த நேரத்தில், ‘சுந்தரம்’ வளாகத்தில், 75 திருமணத் தம்பதிகளையும் ஐந்து வரிசைகளாகப் பிரித்து உட்கார வைத்திருந்தார்கள். அவரவர் உறவினர் அவர்களைச் சுற்றி அமர்ந்திருக்க, அக்னி வளர்த்து, மந்திரங்கள் சொல்லி, சடங்குகளைச் செய்ய, ஒவ்வொரு தம்பதிக்கும் ஓர் உதவியாளர் அமர்த்தப்பட்டிருந்தார்.

மூன்று வரிசைகளுக்கும் நடுவே ஒரு மேடையில் புரோகிதர் மந்திரங்களைச் சொல்ல, உதவியாளர்களின் துணையோடு மணமகன் அவற்றை முறையாகச் சொல்லி சடங்குகளைச் செய்ய, 75 திருமணங்களும் முறைப்படி நடந்தன.

தாஜுதீன் - மும்தாஜ் நிக்காவின் போது மட்டும் இந்து திருமண மந்திரங்கள்

நிறுத்தப்பட்டு, காஜியாரின் சடங்கு, அராபிய மொழியில் திருத்தமாக ஒலிபரப் பப்பட்டது.

மணமகன்கள் எல்லோருமே சடங்குகள் செய்யும்போது, பூணூல் அணிந்து, கையில் தர்ப்பையால் செய்த பவித்ரமும் அணிந் திருந்தனர். அக்னி வளர்க்கும்போது, உதவி யாளர் சொல்லச் சொல்ல, எந்தவிதத் தடங் கலும் இன்றி நெய் வார்த்து, கூடுமானவரை அவர் சொல்வதைத் திரும்பச் சொல்லி, சிரத்தையாகச் சடங்குகளைச் செய்தனர்.

பிறகு விசாலமான மண்டபத்துக்குள் அழைத்துச் செல்லப்பட்டு, அங்கு தயாரா யிருந்த பதிவாளரிடம் திருமணத்தைப் பதிவுசெய்து



• புதுமணத் தம்பதிகள்

கொண்டனர் தம்பதிகள். புகைப் படங்களும் தனித்தனியே எடுக்கப் பட்டன.

ஒழுங்கு என்றால் அப்படி ஒரு மிலிடரி ஒழுங்கு. ஒரு கல்யாணம் என் றாலே எத்தனை பரபரப்பு, ஓட்டம், கச முசா பேச்சு, மறதி, தடுமாற்றம் என்று பார்த்துப் பழகிப் போன நமக்கு, அப்படி எதுவுமே இல்லாமல் வெகு நேர்த்தியாக, திட்டமிட்டபடி நடத்ததைப் பார்க்க, வியப்பு மட்டும் அல்ல, பிரமிப்பும் தான்!

பணிவும், விரைவும் கொண்ட சேவா தள வாலன்டியர்கள். வெள்ளை பான்ட்டும், வெள்ளைச் சட்டையுமாக நூற்றுக்கணக்கில், இத்தனை தம்பதிகளின் உறவினர் களையும், நண்பர்களையும், அவரவர்க்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் அமர வைத்து, அவர்களுக்குத் தேவையானவற்றைச் செய்து தரக் காத்திருக்கும் போது எங்கிருந்து வரும் குழப்பம்?

தாஜுதீன் - மும்தாஜ் தம்பதிக்கு ஒதுக் கப்பட்ட 'சதுர'த்தில் இஸ்லாமிய முறை யிலான அலங்காரம் பளிச்சென்று தெரிந் தது. அவர்களுக்கு உதவும் வாலன்டியர் களாக, புகாரி ஓட்டல் அதிபர் ஃபருக் புகாரியும், அவர் மனைவியும் இருந்தார்கள். "நாங்கள் பல ஆண்டுகளாகவே சத்ய சாய் சேவா தளத்தில் இருக்கிறோம்!" என்றனர் இருவரும்!

திருமணம் முடிந்து எல்லா தம்பதிகளும் புட்டபர்த்திக்கு அழைத்துச் செல்லப்பட்டு, பாபாவிடம் ஆசி பெற்றுத் திரும்புவார் களாம்.

தாம்பரத்தைச் சேர்ந்த எம். கிருஷ் ணன் - எஸ். சுகுணா தம்பதியைச் சந்தித் தோம். "பிரைவேட் கம்பெனி ஒன்றில் வேலை பார்க்கிறோம். சுகுணா கும்ப கோணத்தைச் சேர்ந்தவர். அக்கா மகள் தான்!" என்றார் கிருஷ்ணன்.

ரவிச்சந்திரன் - தமிழ்ச் செல்வி தம்பதி, மந்தை வெளியைச்



• இந்து முறைப்படி....



• இஸ்லாமிய முறைப்படி

சேர்ந்தவர்களாம். மணமகன் ஓட்டல் ஒன்றில் பணிபுரிகிறார்.

உயர்நீதிமன்ற நீதிபதிகள் சிலர், புகழ் பெற்ற தொழிலதிபர்கள் சிலர் என்று மண மக்களை அட்சதை தூவி ஆசிர்வதிக்க என்றே வந்திருந்தார்கள். பாபாவின் படத்துக்கு ஆரத்தி எடுத்து முடித்ததும், எல்லோரும் ஆசி வழங்கினர்.

பாண்டுவாத்தியம் ஒருபுறம் முழங்க, நாதஸ்வரம் இன்னொரு மேடையில் பொழிய, சந்தனமும், சர்க்கரை – கல்கண்டும், ரோஜாப் பூக்களுமாக பந்தல் ஒரு பிரம்மாண்ட வைபவத்தைப் பறைசாற்றியது.

"இவர்கள் எல்லாருமே சமுதாயத்தின் நலிந்த பிரிவைச் சேர்ந்தவர்கள். இதுபோல் தமிழ்நாடு முழுக்க மொத்தம் 210 பேருக்கு, இதே நாளில், இதே முகூர்த்தத்தில் திருமணம் நடத்தி வைக்கிறோம்!" என்றார் சத்ய சாய் சேவா அமைப்புகளின் மாநிலத் தலைவர் டி.ஜி. கிருஷ்ணமூர்த்தி.

"இவர்களுக்கு முறைப்படி மருத்துவ பரிசோதனைகள் செய்து, அதில் இவர்கள் எல்லாம் தேறிய பிறகே இந்தத் திருமணங்களை நடத்தி வருகிறோம். இவர்களில் மணமகன் யாருக்காவது வேலை இல்லை என்றால், அவருக்கு வேலை வாய்ப்புப் பயிற்சி (வொகேஷனல் ட்ரெயினிங்) கொடுக்கிறோம். தகுதி பெற்ற பின் வேலைக்கு அமர்த்துவதில் எங்களுக்குச் சிரமம் ஏதும் இல்லை!" என்றார் டி.ஜி.கே.

இந்தத் தம்பதியர் குடும்பம் நடத்துவதற்குத் தேவையான எவர்சில்வர் பாத்திரங்கள், பாய், தலையணை, எல்லாம் தவிர சீர் வரிசையில் முறுக்கும், லட்டுவும் கூடக் கொடுக்கப்பட்டன!

எல்லா மணமகன்களுக்கும் ஒரே மாதிரி அகலஜரிகை போட்ட பட்டு வேட்டியும், பட்டு மேல் துண்டும், சந்தன நிற ஜிப்பாவும் என்றால், எல்லா மணமகள்களுக்கும் ஒரே மாதிரி பட்டுப் புடைவைகள்!


"நாங்கள் கொடுத்தவை போக, ஏராளமான சாய் பக்தர்கள், மணமகனுக்கும் மணமகளுக்கும் தாங்களாகவே பரிசுகள் வழங்க முன்வந்திருக்கிறார்கள். எவர்சில்வர் குடம், புடைவை, வேட்டி என்று அது வேறு!" என்கிறார் கிருஷ்ணமூர்த்தி.

அனந்தப்பூர் மாவட்டத்தில் 750 கிராமங்களுக்குக் குடிநீர் வசதி செய்து கொடுத்ததைப் போல, தமிழ்நாட்டிலும் திருநெல்வேலி, ஈரோடு, தர்மபுரி, திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள கிராமங்களுக்குக் குடிநீர் வசதி செய்து கொடுக்க பாபா விருப்பம் தெரிவித்திருக்கிறார். அரசும் ஜி.ஓ. வெளியிட்டு விட்டதாம். முதல் கட்டமாக, திருநெல்வேலியிலுள்ள பத்துக் கிராமங்களுக்குத் தண்ணீர் வசதி கிடைக்க, பணிகள் முடிவடைந்து விட்டன. மின் இணைப்பு கிடைத்ததும், பம்புகள் இயங்கத் தொடங்கி, தண்ணீர் பாயத் தொடங்கிவிடும்!

— எஸ்.வி.என்.

புகைப்படங்கள் : **எஸ்.பி. ஹுசைனி**

ஸ்வீட் ஹோம் என்பது...



அனுராதா ரமணன்:

என் நினைவுக்குத் தெரிந்தவரை, இனிய இல்லத்தை நான் அனுபவித்து சந்தோஷப்பட்டது மேட்டூரில்தான். அப்பாவுக்கு மேட்டூர் கெமிகல்ஸில் வேலை. அங்கு குவார்டர்ஸில் அம்மா, அப்பா, தங்கை, தம்பிகளுடன் வாழ்ந்த அந்த வீட்டில் அமைதியான சூழ்நிலை. வாசலில் பாத்தி பாத்தியாக ரோஜாவும், இருவாட்சியும் சிரிக்கும். மாடத் துளசிச் செடிக்குத் தனியாக யாரும் பூப் போட வேண்டாம். பக்கத்திலிருந்த பவழமல்லி மரமே பூக்களை உதிர்க்கும்.

நாலே நாலு அறைகள்தான் என்றாலும், நறுவிசாய், சுத்தமான பராமரிப்பு. நாங்கள் வளையவந்த, ஓடிப் பிடித்து விளையாடிய வீடு. அம்மா விதம் விதமாய் டிபன் செய்து கொடுப்பாள். மாலையில் மட்டையும் கையுமாய் அப்பா ஸ்போர்ட்ஸ் கிளப்புக்குக் கிளம்பி விடுவார். ஆரோக்கியத்தில் ரொம்ப கவனம். அன்பு, அரவணைப்புக்கு அளவே கிடையாது.

'இனிய இல்லம்' பற்றி பிரபலங்கள் கூறியவற்றைத் தொகுத்தவர்:
கௌதம் ராம்



"இந்த நாட்டில் ஒரு அரசு, ஒரு சென்சார் போர்டு என்றில்லையா? ஒவ்வொரு பிரஜையும் ஒரு நடமாடும் சென்ஸாரா? இனிமேல் எல்லா படத் தயாரிப்பாளர்களையும் தங்கள் ஸ்கிரிப்டை நேஷனல் நியூஸ் பேப்பர்களில் பிரசுரித்து, கணிப்பு வாக்கெடுப்பு நடத்தி, பிறகே ஷூட்டிங்கை ஆரம்பிக்கச் சொல்லுங்கள்" என்று கொதிக்கிறார், மூன்று கோடிகளைத் 'தண்ணீரில்' போட்டிருக்கும் தீபா!

இந்த 'வாட்டரில்' நீந்த, கனடா, இங்கிலாந்து, யு.எஸ்., பங்களாதேஷ் போன்ற நாடுகளிலிருந்து மனிதர்கள் வந்து இறங்கியிருக்கிறார்கள். லோக்கல் டெக்னிஷியன்கள் வேறு; "எனக்காக, 30 மில்லியன் ஹாலிவுட் ப்ராஜக்டை தியாகித்து வந்திருக்கிறார் சினிமாடோகிராஃபர் கைல்ஸ் நட்ஜன்ஸ்; தலைமுடியை தியாகம் செய்திருக்கிறார் ஷபானா; ஒரு இன்ச் முடியை மட்டுமே விட்டு வைத்திருக்கிறார் நந்திதா; பால விதவையாய் வரும் 8 வயது சிறுமி ஸரள்வி, தன் வசனங்களுடன் ஏனையோருடையதையும் அருமையாக உருப் போட்டிருக்கிறாள்; இத்தனையும் வீணாவதா?" என்று தண்ணீரை விட்டு தரையில் எறியப்பட்ட மீனாகத் தவிக்கிறார் தீபா.

பற்றி

மஹாஸ்வேதா தேவியின் நாவல் 'ஸங்கர்ஷா'னபோதும் (காசியில் குழந்தைப் பலி பற்றிய கதை), ராஜ்கபூரின் 'ராம் தேரி கங்கா மைலி'யும் இதே வாரணாசியில் எடுக்கப்பட்ட போது, ஒரு சலசலப்பு கூட இல்லை. இப்போது பிரளயமே உருவானது ஏன் என்பது இவருக்குப் புரியவில்லை.

"ஆனால் அவற்றிலெல்லாம் தலை மழித்த விதவையர் விபசாரத்தில் ஈடுபடுத்தப்பட்டதாக காட்டப்படவில்லையே? அதுவும் புனித கங்கைக் கரையில், நூறாயிரம் கோயில்களும் தெய்வங்களும் குடிகொண்டிருக்கும் தலத்தில், கதாநாயகனும்



• எதிர்ப்பு...

முடியுமா?" என்று கண்ணீரைத் தண்ணீராய்ப் பெருக விடுகிறார் நாராயண் மிஷ்ரா – KSRSS (காசி சன்ஸ்க்ருதி ரக்ஷா சங்கர்ஷ் சமிதி) தலைவர். இவர்களும் 'ஸன்ஸ்கார் பாரதி' என்ற பி.ஜே.பியின் கலாசாரக் கிளையாக இணைந்து வெறித்தனமான



• ஷபானா, நந்திதாவுடன் தயாரிப்பாளர் ஹாமில்டன்



• எதிர்ப்பில் நொந்து போய் அமர்ந்திருக்கும் தீபா மேத்தாவும் அவரது சகாக்களும்...

வெறியும் 'வாட்டர்'!

(அக்ஷய்குமார்) அவர் தந்தையும், நாயகியான விதவை (நந்திதா தாஸ்)யுடன் உறவாடுவதாகக் கதை இல்லையே? தாயையே மனைவியாகக் கூறும் கலாசார சீர்குலைவை எப்படி சகித்துக்கொள்வது? எங்கள் 'கங்கா மையா'வை (தாயை) வெறும் 'வாட்டர்' என்கிறாரே... என்ன கொடுமை? துளசிதாசர் ராமாயணம் எழுதிய 'துளசி காட்'டில் இவர் விதவாச்ரமம் அமைத்திருக்கிறாரே... அடுக்குமா? இவர் தேர்ந்தெடுத்திருக்கும் மற்ற இரண்டு இடங்களும் மடங்களாக இருந்தவை. ஒன்றில் அனுமன் சிலை கூட இருக்கிறது; மற்றதில் காவி பெயிண்ட் கூட மறையவில்லை. இந்தப் புனிதமான இடங்களை எல்லாம் விதவைகளின் விபச்சார விடுதிகளாகக் காட்டினால் சும்மா இருக்க எதிர்ப்பில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

ஷூட்டிங் நடந்தால் 'சாகும் வரை உண்ணாவிரதம்' என்று சிலரும், 'உடனே தீக்குளித்து விடுவோம்' என்று பலரும் பயமுறுத்துகின்றனர்.

செய்தி ஒளிபரப்புத் துறை அமைச்சகமே ஒரு 'கட்' இல்லாமல் பச்சைக் கொடி காட்டிய படத்துக்கு இப்படி ஒரு எதிர்ப்பா? ஒரு உள்ளூர் அரசியல்வாதி இப் படத்தின் யு.பி. விநியோக உரிமைகளைக் கோரினார்; நான், அறிவுகெட்டதனமாயிருக்கிறதே என்றேன்; அதன் எதிரொலிதான் இது! என் படத்தின் உண்மையான ஹீரோ காந்திதான்! இது பெண் விடுதலை, விதவை மறுமலர்ச்சி பற்றிய படம். இதன் நாயகி, மீராவைப்

போன்ற ஒரு கிருஷ்ண பக்தை; அவர் விபசாரத்தை 'கர்ம' பலனாக ஏற்றிருக்கிறார். நானே ஒரு இந்துவாக இருந்துகொண்டு, இந்துக்களுக்கு எதிராகவும், காசியை அசுத்தப்படுத்தியும் படம் எடுப்பேனா? இது 'கிறிஸ்துவர்கள் சதி' என்று வேறு தூஷிக்கிறார்கள். படத்திலிருந்து தாறுமாறாக வசனங்களை எடுத்து, தவறான பொருள் வரும்படி அச்சடித்து, விநியோகிக்கிறார்கள். நானாகவே சில வாக்கியங்களை நீக்கிவிட்டேன். இன்னும் என்னதான் செய்வது? Fire ஐப் போல், லக்னோ கதையை டில்லியில் எடுக்க முடியாது; இதில் கங்கையே நடிக்கிறாள்... அவள்தான் படத்தின் ஆன்மா..." என்கிறார் கங்கையைக் கண்களில் தாங்கிய தீபா.

"கனடாவில் உட்கார்ந்திருப்பவர்களுக்கு காசியைப் பற்றி என்ன தெரியும்? இங்கேயே தால் மண்டி (சிவப்பு விளக்குப் பகுதி) இருக்கும்போது, விதவைகள் எதற்கு விபச்சாரம் செய்ய வேண்டும்? 1930ல் காந்தி இங்கே வந்திருக்கலாம்; ஆனால் அவர் எந்த விதவையையும் விலைமாதையும் இங்கிருந்து விடுவித்துச் செல்லவில்லை! இவர்களெல்லாம் இந்தியாவின் பிச்சைக்காரத்தனத்தை, பசி, பட்டினி அவலத்தைக் காசாக்க, தங்கமயில்களாக்கப் பார்க்கும் அற்பர்கள். பிரதமரே பர்மிஷன் கொடுத்தாலும், நாங்கள் அனுமதிக்க மாட்டோம்" என எதிர்தரப்பினரும் போர்க்கொடி உயர்த்தினர்.

கனடாவுக்கு மூட்டை கட்டி விடலாம் என்று, கூட வந்திருந்தவர்கள் நினைத்த நேரத்தில், எக்கச்சக்க போலீஸ் பாதுகாப்புடன் ஷூட்டிங்குக்கு அனுமதி வழங்கப்பட்டது. உடனே நாராயண் மிஷ்ரா 'அஸி காட்'டில் உண்ணாவிரதத்தைத் துவங்க, அருண்பதக் என்ற சிவசேனைக்காரர் விஷத்தையும் குடித்துவிட்டு, ஒரு பாறாங்கல்லையும் கட்டிக்கொண்டு கங்கையில் குதித்து விட்டார்.

அவரை மீட்டு ஆசுபத்திரியில் சேர்க்கவும், வீணா பாண்டே என்ற முன்னாள் பி.ஜே.பி., எம்.எல்.சி. தலைமையில் பெரிய ஊர்வலம், கோஷம், ஆர்ப்பாட்டம் துவங்கவும் சரியாகி விட்டது. முஸ்லிம்கள் வேறு ஷபானா மொட்டையடித்துக் கொண்டிருப்பதை எதிர்த்து கசமுசக்கிறார்கள். படம் முடிவதற்குள் எல்லோரும் முடியைப் பிய்த்துக்கொள்ளும் நிலை வந்து விடும் போலிருக்கிறதே எனத் தலையில் கை வைத்துக் கொண்டிருக்கிறார்கள் யூனிட்காரர்கள்.

ஒரேயடியாக எதிர்ப்பென்றில்லை; காசி விசுவநாதர் கோயிலின் 'மஹந்த்' குல்பதி திரிபாதி, ஷபானாவையும் நந்திதாவையும் ஆசிர்வதித்திருக்கிறாராம். ஹிந்து யூனிவர்ஸிடி மாணாக்கர்களெல்லாம் தீபாவுக்கு ஸப்போர்ட்டாம். "ஆனாலும் இங்குள்ள மக்களை சட்டத்தால் ஒன்றும் செய்ய முடியாது; அவர்கள் மிகவும் உணர்ச்சிவசப்படுபவர்கள்" என்கிறார் சங்கட் மோசன் சமிதியின் தலைவரான மஹந்த் வீரபத்ர மிஷ்ரா.

"முன்பொருமுறை பிரிட்டிஷார் இங்கொரு 'Water works system' அமைக்க ஒரு ராமர் கோயிலை அப்புறப்படுத்தப் பார்த்தார்கள். அப்போது பெரிய எதிர்ப்பு எழுந்து, வந்திறங்கிய இயந்திரங்களை எல்லாம் நொறுக்கித் தீர்ப்பதில் குரங்குகள் கூட சேர்ந்துகொண்டன; 'ராம்ஹல்லா' என்று ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு, இன்றும் அதை நினைவுகூர்வார்கள்; மறுபடியும் 'Water' ஐ எதிர்த்துத்தான் புதியதொரு 'ராம் ஹல்லா' உருவாகியிருக்கிறது!"

— ஜெ.ஆர்.



"ஞாபக மறதிக்காரரைக் காதலிச்சது ரொம்பவும் தப்பாப் போச்சு..."

"ஏன் என்னாச்சு?"

"ஓடிப் போயிடலாம்னு சொல்லிட்டு இப்ப அவர் மட்டும் தனியா ஓடிட்டார், அதான்!"

– எம். அருள்மூர்த்தி

கள்ளவோட்டுப் போட்டால் சுட்டுப் பொசுக்கிவிடுவாராமே பி.எச். பாண்டியன்?

● எம். பிச்சைக்கனி, திருமால்பூர் அஞ்சல்.
? *1996-ல் நரசிம்மராவ் எந்த படுகுழியில் விழக்கூடாது என்று மூப்பனார் தடுத்துப் போராடினாரோ அந்தப் படுகுழியிலேயே இப்போது மூப்பனாரை சுயநல அரசியல்வாதிகள் விழவைத்து விட்டார்கள் என்கிறாரே ஆர்.எம்.வீ?*
! அதென்னதய்யா விழ வைப்பது? கண்ணைக் கட்டிக் கொண்டு கூட அல்ல; திறந்து கொண்டேதான் விழுந்திருக்கிறார்!


• கண்ணைத் திறந்தபடி...

● க. பூங்கொடி, சித்தோடு.
? *அ.தி.மு.கவை சட்டமன்ற இடைத்தேர்தலில் ஆதரிப்பது என்று த.மா.கா. முடிவு எடுத்துள்ள இத்தருணத்தில் தேசிய ஜனநாயக மதச்சார்பற்ற கட்சிகளைக் கொண்ட மூன்றாவது மாற்று அணியை அமைக்கும் பொறுப்பு ஜனதா கட்சியின் தோள்களில் விழுந்துள்ளது என்கிறாரே சு. சுவாமி?*
! சு. சுவாமி ரொம்ப ஆபத்தான பேர்வழி. அவரை அலட்சியம் செய்வது புத்திசாலித்தனம் அல்ல. எச்சரிக்கை தேவை. அவரது உள்நோக்கங்களை உணர்ந்து எதிர் நடவடிக்கை எடுப்பது அவசியம்.


• அபாயம்!


• கண்டைக்காய்!

● வீ. வெங்கடேசன், ஏனங்குடி.
? *திருக்குறளைப் பரப்புவோம் என்று கூறிவிட்டு, தற்போது அரசுப் பேருந்துகளில் திருக்குறளை நீக்கிவிட்டு, கலைஞர் வாசகத்தையே எழுதியிருக்கிறார்களே, ஏன்?*
! இதுபோன்ற தனிநபர் துதி தலைவருக்குப் பெருமை சேர்ப்பதற்குப் பதில் அவர் மீது வெறுப்பையே தோற்றுவிக்கும் என்பதை அறியாமல் செய்கிறார்கள். கலைஞர் நலனைக் கருத்தில் கொள்வோர் கவனித்துத் திருத்தினால் நல்லது. இல்லாவிட்டால் வரலாறு கூட இவர்களுக்குப் பாடம் புகட்டவில்லை என்று அர்த்தம்.

● இரா. பார்த்திபன், சேத்துப்பட்டு.
? *கள்ள ரூபாய் நோட்டுகளைப் புழக்கத்தில் விட்டு இந்தியாவின் பொருளாதாரத்தைச் சீர்குலைக்க பாகிஸ்தான் முயற்சி செய்கிறது என்று பிரதமர் கூறியிருக்கிறாரே?*
! அதற்கென்ன, முஷரஃபுக்குப் பதில் சொல்லத் தெரியாதா? 'கள்ளநோட்டு விவகாரம் பாகிஸ்தான் மீது பழி சுமத்த இந்தியா அரங்கேற்றும் இன்னொரு நாடகம்' என்று ஜெ. ரீதியில் அறிக்கை தந்தாலும் தருவார். கொயபல்ஸ் பிரசார முறையில் போட்டி வைத்தால் ஜெயிப்பது 'ஜெ'வா? முஷரஃபா? என்று பட்டிமன்றமே நடத்தலாம்!

● ஸ்ரீவித்யா காளிதாஸ், சிதம்பரம் – 2.
? *ஜெயின் ஹவாலா வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டோரை தில்லி நீதிமன்றம் விடுதலை செய்து தீர்ப்பளித்துள்ளது பற்றி?*
! ஜெயின் ஹவாலா வழக்கு, ஜே.எம்.எம். வழக்கு ஆகியவை பிசுபிசுத்துப் போனதால் குற்றங்களே நடக்கவில்லை என்று அர்த்தம் இல்லை. குற்றங்களை நிரூபிக்க போதிய சாட்சியங்கள் கிடைக்கவில்லை என்பதே பொருள். லஞ்ச ஊழல் வழக்குகளில் ஆதாரங்களைத் திரட்டுவது எவ்வளவு கஷ்டம் என்பதையும் நிரூபிக்கிறது. இவை லஞ்ச ஊழல் பேர்வழிகளுக்கு மேலும் துணிவு தரும். நமது நீதிமுறை அமெரிக்க பாணியில் மாறினாலன்றி இங்கே லஞ்ச ஊழல் குறையாது.

❑ ரூ. 50 பரிசு பெறுபவர் : வி. லக்ஷ்மிராமன், 13, தனலக்ஷ்மி நகர் பிரதான சாலை, ஸ்ரீ ராஜராஜேஸ்வரி நகர் மேற்கு விரிவு, சேலையூர், சென்னை - 73.



● சி. மகேஷ், சென்னை – 26.

? சென்னை மேம்பாலங்களுக்குத் தலைவர்கள் பெயர் சூட்டப்படமாட்டாது என்று முதல்வர் கூறிவிட்டாரே?

! பாலம் எவ்வளவு உருப்படியான காரியமோ அவ்வளவுக்கு அறிவிப்பும் உருப்படியானது.

● இரா. புவனேஸ்வரி, சென்னை – 81.

? தர்மபுரியில் கொலை செய்யப்பட்ட மாணவிகளின் பெற்றோர் ஜெயலலிதா கொடுத்தனுப்பிய பணத்தைப் பெற மறுத்து விட்டது குறித்து?

! 'அரசிடமிருந்து பெற்றுக் கொள்வோம்; அரசியல் கட்சிகளிடமிருந்து அல்ல என்று பொதுவாகப் பேசினாலும்' சொல்லாமல் விட்டது மூலமே நிறையச் சொல்லியிருக்கிறார்கள்.

● எம். குணசேகரன்,
வேலாயுதம்பாளையம்.

? ஜெயலலிதாவுக்கு ஓராண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருப்பதைக் காரணம் காட்டி, அவரை இனி தேர்தலில் போட்டியிட முடியாமல் தடுக்க சட்டத்தில் வழி உண்டா...?

! இதிலே சட்டச் சிக்கல் நிறைய உள்ளது. அது ஒருபுறமிருக்க, ஜெ தேர்தலில் போட்டியிட்டு ஜெயிக்காவிட்டால் என்ன...? அவர் கட்சி ஜெயித்தாலே போதுமே. அவர்தானே தமிழ்நாட்டின் சர்வாதிகாரியாக விளங்குவார்!

● ந. விநாயகமூர்த்தி, சென்னை – 13.

? எதற்கு உங்கள் முதல் மார்க்? – நட்புக்கா? காதலுக்கா?

! இந்த இரண்டுக்குமே அன்புதான் அடிப்படை என்பதால் என் வோட்டு அன்புக்கே!

● ரா. சாலமோன், ஆலங்குளம்.

? "மூன்று துப்பாக்கிகள் வைத்துள்ளேன்; யாராவது கள்ள வோட்டுப் போட முயன்றால் சுட்டுப் பொசுக்கி விடுவேன்..." என பி.எச். பாண்டியன் பயமுறுத்துகிறாரே?

• உருப்படி!

! அ.தி.மு.க.வினர் என்றாலே சுடுதலும் பொசுக்குதலும்தான் என்பதற்கு, முன்னாள் சபாநாயகரின் வாக்குமூலம்!

● பி.எம். வள்ளி, அரசரடி.

? பிரிட்டிஷ் இளவரசருக்கு (சார்லஸ்) ரூ. 2137 கோடிக்குச் சொத்து உள்ளதாமே?

! 'ப்பூ! இவ்வளவுதானா ராஜ குடும்பத்தின் மகிமை?' என்று நம் அரசியல்வாதிகள் அலுத்துக் கொள்கிறார்கள்.



• போட்டா...

● ஆர். பி. ஜெயச்சந்திரன்,
பூனாம்பாளையம்.

? ஒருவேளை இன்னும் சில வழக்குகளில் தீர்ப்பு வெளியாகி ஜெயலலிதாவுக்கு இன்னும் சில ஆண்டுகள் சிறைத் தண்டனை கிடைத்தால் அ.தி.மு.க. யார் கைக்குப் போகும்?

! ஐயோ என்று போகும்!

● வி. லக்ஷ்மிராமன்,
சென்னை – 73.

? தனி நீதிமன்றத் தீர்ப்பு வெளியான பிறகு மேல் முறையீடுக்கு அனுமதி இருக்கிறதே. இந் நிலையில் இறுதித் தீர்ப்புகள் தாமதம் ஆகுமே... அப்படியானால் தனி நீதிமன்றம் அமைக்கப்பட்டது ஏன்?



• போட்டி...!

! தனி நீதிமன்றமானதால் தான் இந்த அளவுக்கேனும் வேகமாக வழக்குகள் நடந்தன. இதே வழக்குகள், வழக்கப்படி பொது நீதிமன்றங்களுக்குப் போயிருந்தால் இவை இந்நேரம் விசாரணைக்கே வந்திராது. எனினும் மேல்முறையீடுக்கு வாய்ப்புத் தராமல் வழக்கு நடத்த சட்டத்தில் இடமில்லை.



• ஒப்புதல்
வாக்குமூலம்

● கே. ரமேஷ், ஈரோடு – 10.

? ராமர் கோயில் கட்டும் பணி அயோத்தியில் விரைவில் துவங்கும் என்று விச்வ ஹிந்து பரிஷத் உறுதியாக உள்ளதே?

! அப்படித் துவங்கும் போது, மத்தியில் வாஜ்பாய் அமைத்துள்ள கூட்டணி ஆட்சி என்ற மந்திர், பப்ரி மஸ்ஜித்தின் கதியை அடையும்.

✱ ரூ. 25 பரிசு பெறுபவர் : வீ. வெங்கடேசன், மாரியம்மன் கோயில் தெரு, ஏனங்குடி - 609 701.

அதர்மபுரிகள்...

தர்மபுரி அதர்மபுரியான அகோரத்தை 'லைவ்'வில் பார்த்த 'ஷாக்'கிலிருந்தே மும்பை மக்கள் மீளவில்லை; அதற்குள் அதைப் பார்க்காமல் விட்டவர்களுக்கென்று இங்குள்ள அரசியல்வாதிகள் லைவ் டெலிகாஸ்டை ஆரம்பித்து விட்டார்கள். 1997ல் களேபரப்பட்ட 'ரமாபாய் காலனி' (காட்கோபர்)யையே தகுந்த களமாக தேர்ந்தெடுத்தார்கள். அங்கே 'அம்மா'வுக்காக எரிந்த 'பஸ்' இங்கே 'அப்பா'வுக்காக – அரசியல் அமைப்புச் சட்டத்தின் தந்தை அம்பேத்கருக்காக – எரிந்



'இளமையில் கல்'லெறி!

தது. 'அரசியல் சட்டத்தில் பி.ஜே.பி கை வைப்பதா?' என்ற ஆத்திரத்தில்தான் தலித்துக் கட்சியான RPI "அமைதிப் பேரணி" நடத்தியது; ஆனால் அமைதியைக் கெடுக்கவென்றே, வழக்கம் போல், அம்பேத்கரும் சிவாஜியும் கண்ணை, மூக்கை உடைத்துக்கொண்டார்கள் – சிலை வடிவில் தான்! உடனே ஆரம்பித்துவிட்டது கல்லெறி, கலாட்டா, பஸ்களைக் கொளுத்துதல், கதவடைப்பு, ஈஸ்டர்ன் எக்ஸ்பிரஸ் ஹைவே பந்த் என்ற தொடர் ஆர்ப்பாட்டங்கள். கல்லடிக்குப் பின் சொல்லடி தொடர்ந்தது. "புஜ்பல் வீட்டிலேயே அண்டர்வர்ல்ட் குடியிருக்கிறது; இது NCP யின் சதி" என்று தங்கள் 'ஷாகா'க்கள் பற்றி எரிந்த எரிச்சலில் சிவசேனை – பி.ஜே.பி தலைவர்கள் நாராயண் ராணேவும் முண்டேவும் கூக்குரலிட, புஜ்பல் கூலாக, இது ISI சதி என்று விட்டார். சரித்திர நாயகர்களை எல்லாம் 'செத்தும் கொடுத்தான்' என்று சொல்வதுதான் வழக்கம்! இப்படி 'செத்தும் கெடுக்க' வைத்து விட்டார்களே இந்த அரசியல்வாதிகள்!

மௌனித்த தபலா...

தனக்கு ஷண்முகானந்தாவில் நடந்த 80-வது பிறந்த நாள் விழாவில் இரண்டு வார்த்தைப் பேசச் சொன்ன போது, தபலாவை எடுத்து வாசித்தவர்; "எனக்கு தெரிந்த மொழி இதுதான்" என்று சொன்னதுடன் நில்லாது, தபலாவைப் பேசவும் பாடவும் செய்த ஞானி! காபரே நடனத்துக்கு இசை அமைக்கப் பிடிக்காமல் சினிமாவைத் துறந்த மானி! அந்த மாமேதை உஸ்தாத் அல்லா ராகாவின் தபலா ஒலிக்காது இனி! தமது 81வது வயதில், மும்பை இல்லமான 'ஷிம்லா ஹவுஸில்' எல்லோருக்கும் இனிமையானவர் அல்லாவுக்கு இனிமையான கதை, ரொம்பவும் கசப்பானது. இவரது அன்பு மகள் ரஜியா (தன் குழந்தைகளுடன் இங்கேயே வசித்து வந்தார்) அன்றுதான் காடராக்ட் ஆபரேஷனுக்குப் பின் திடீரென்று மரித்திருக்கிறார். 51 வயதில் இந்த அகால மரணச் செய்தி அல்லா ராகாவுக்கு இடியாய் இறங்கியிருக்கிறது; உணர்ச்சிப் பெருக்கில், மூச்சு விட முடியாமல் தவிக்க, அந்த அதிகாலை வேளையில் (3 மணி)



* லத்தி சார்ஜ்



* 'அல்லா ராகா'

டாக்டர்களுக்கு விட்டார் அலைய,
யாரோ ஒருவர் மட்டும் எலுமிச்சை ரசத்தில் சோடா கலந்து குடிக்கச் சொல்லிவிட்டு, ஃபோனை டிஸ்கனெக்ட் செய்திருக்கிறார். அது பயனளிக்காமல் போகவே, இவர்கள் பல டாக்டர்களை முயற்சிக்க, எல்லோர் ஃபோனும் 'என்கேஜ்ட்!' கடைசியில் ஒருவரைத் தட்டி எழுப்பி அவர் தூக்கக் கலக்கத்துடன் வந்து சேர்வதற்குள், இவரது கடைசி மூச்சு பிரிந்து விட்டது! ஜாகிர் ஹுசைன் என்ற சொத்தை விட்டுச் சென்றிருக்கிறார்தான்... ஆனால்... இசையில் டாக்டரேட்டே வாங்கக் கூடிய கலைஞர் குடும்பத்தில், டாக்டரின் உதாசினத்தால் இரண்டு உடனடி மரணங்கள் என்பதை ஜீரணிக்கத்தான் முடியவில்லை!

மெழுகு நட்சத்திரங்கள்

லண்டனின் புகழ்பெற்ற "டுஸாட்" மியூசியத்துக்காரர்கள் மும்பை வந்திருக்கிறார்கள். உலகப் பிரபலங்களின் உயிரோட்டமான மெழுகுப் படிமங்களுக்குப் பெயர் போன இந்த மியூசியத்தில் இடம் பெற்றிருக்கும் நாலே இந்தியர்கள் – காந்தி, இந்திராகாந்தி, ராஜீவ் காந்தி, சோனி...சீச்சி.. (பழக்க தோஷம்) நரசிம்மராவ்! பார்வையாளர்களுக்கு வைக்கப்பட்டிருக்கும் கருத்துக் கணிப்பு அட்டைகளில் காணும் யோசனைப்படி, வருடா வருடம் 15 புதுமுகங்கள் மியூசியத்தில் இடம் பெறுமாம்; சென்ற சில வருடங்களாக பாலிவுட் நட்சத்திரங்களின் பெயர்கள் நிறைய தலை தூக்கியிருக்கிறதாம் – பிரதானமானவை, 'அமிதாப்', 'ஷாருக்', 'ஐஸ்', 'மாதுரி', அனில் கபூர் – தேர்வு செய்வதுதான் பெரும் பிரச்னையாயிருக்கிறதாம். அதனால் மும்பை வந்து, செய்தித்தாள்கள் மூலம் பொதுமக்களை கருத்துத் தெரிவிக்கச் சொல்லியிருக்கிறார்கள்! ஒவ்வொரு சிலையும் செய்ய 30,000 பவுண்டுகளும், ஆறு மாத காலமும் ஆகுமாம்! எனவே, இன்று மட்டுமல்ல, தொடர்ந்தாற்போல் ஒரு ஐந்து வருடங்களுக்காவது பிரகாசிக்கக்கூடிய முகங்களுக்கே வோட்டளியுங்கள் என்கிறார்கள். ஹும்.. தேர்ந்தெடுக்கப்படுவர்கள் 'டு ஹாப்பி' ஆகிவிடுவார்கள்; படாதவர்கள் 'டு ஸாட்' ஆகி விட மாட்டார்களா?

மொழிப் பிரச்னைகள்

மும்பையில் ஏதாவது மொழி அலை அடிக்கிறதோ என சந்தேகமாயுள்ளது. ஸம்ஸ்கிருத மொழியை உயிர்ப்பிக்கவென்று, அதில் பேசிப் பழகக் கற்றுத் தருகிறது ஒரு கழகம். அண்மையில் முலுண்டில் ஒரு பத்துப் பதினைந்து பேருக்குப் பாடம் நடத்திக் கொண்டிருந்த ஷீதல் என்ற இளம் பெண் சொன்ன தகவல் ஆச்சரியமாயிருந்தது. கல்லூரியில் பயின்று கொண்டே, இப்படிப் பல மாணாக்கர்கள் மாலைப் பொழுதுகளில் இரண்டு மூன்று இடங்களில் வகுப்பெடுக்கிறார்களாம்; அதுவும் கௌரவ ஆசிரியர்களாக! கற்பவர்களே அன்பளித்தாலும் மறுத்து விடுகிறார்களாம் – கொடாதவர்களிடமும் எதிர்பார்க்கத் தோன்றும் என்ற அச்சத்தில்! பக்கம் பக்கமாக கிளாசுகள் நடத்திப் பணம் பண்ணும் மும்பையில் இப்படி ஒரு 'க்ளாஸா?' என்று அதிசயிக்கையில். சிவசேனைக்கு மறுபடியும் மராத்திய மோகம் தலைதூக்கியிருக்கிறது. கடைகள், தொழிற்சாலைகள், கம்பெனிகள்.. எதுவாக இருந்தாலும் பெயர்ப் பலகையில் முதலில், பெரிய எழுத்துக்களில் மராத்தியில்தான் எழுத வேண்டுமாம்; அதன் கீழே சின்னதாக ஆங்கிலத்திலோ, வேறு எந்த மொழியிலோ எழுதலாமாம். சிவசேனையைச் சார்ந்த 'ஸ்தானீய லோகாதிகார் ஸமிதி மகாசங்' இதற்கென போராடப் போவதாக பெரிய எழுத்துக்களில் அறிவிப்புச் செய்திருக்கிறது.

டெயில் பீஸ்: போரடித்தால் www.ifilm.comஐக் க்ளிக் செய்யுங்கள். விவேக் காமத் என்ற விளம்பரத் துறை இளைஞர், 'Love Sucks' என்ற 'Short film'ஐ இன்டர்நெட்டில் இணைத்திருக்கிறார். நெட் ஜாய்!

*— ஜெயஸ்ரீ ராஜ்



• மாயூரம் மிராசுதார் வீடு

ஒரு 'டிபிகல்' நாட்டுக்கோட்டைச் செட்டியார் வீட்டின் அமைப்புதான் இது. பார்க்க வேண்டுமானால் கண்டனூருக்கோ அரியக்குடிக்கோ போக வேண்டாம்! அந்த ஊர் வீடுகளிலிருந்து பகுதி பகுதியாகக் கழற்றி வந்து சென்னை ஈஞ்சம்பாக்கத்தில் ஒன்று சேர்த்திருக்கிறார்கள். பர்மா தேக்கு மரத் தூண்கள், உத்தரங்கள்.



• செட்டிநாடு வீட்டுக் கதவில் எத்தனை மரவேலைப்பாடு


'தக்ஷிண் சித்ரா' என்ற இடத்திலுள்ள இந்த நிரந்தர வீடு கண்காட்சி நமது பாரம்பரியத்தைப் பாதுகாத்துக் காட்சிப்படுத்தும் முயற்சி. செட்டிநாடு வீடு போலவே, மாயவரம் மிராசு வீடு, கேரள நாயர் இல்லம், மண்பாண்டத் தொழிலாளர் குடில், காஞ்சிபுரம் நெசவாளர் வீடு, அக்ரஹார வீடு... எல்லாம் பார்க்கலாம் இந்த 'சமத்துவபுரத்தில்'!

1840 வரை மூங்கிலும் பந்தலுமாக, ஒரு மாடிக் கட்டடமாக இருந்த செட்டிநாட்டு வீடுகள், 1875-க்குப் பிறகே இரண்டு மாடிகளும் கூரை ஓடுகளுமாக மாறின. இதற்கு





• செட்டிநாடு வீட்டுத் திண்ணையில்...



அப்புறம் வீடுகள் அகலத்திலும், உயரத்திலும் பெரிதும் வளர்ந்தன. பெரிய ஹால்களும், முற்றங்களுமாக, திருமணம் முதலிய விசேஷ நிகழ்ச்சிகளை வீட்டிலேயே நடத்தும் அளவுக்கு விஸ்தாரமாகக் கட்டப்பட்டன. ஒரு தெருவில வாசல் கதவும், கொல்லைப்புறக் கதவு, பின்னால் உள்ள தெருவைப் பார்த்தும் இருக்கிற அளவுக்கு நீண்டன!

மாயூரத்து நிலச்சுவான்தார் வீடு 1847ல் இப்படித்தான் இருந்தது. நுழைந்தவுடன் இருக்கிற அறைகளில்தான் தானிய சேமிப்பு; படுக்கை எல்லாம். பின்னால் சமையலறை, சாப்பாட்டுக்கூடம், குளியலறை என்று



• காஞ்சிபுரம் நெசவாளர் வீடு

வீடு கண்காட்சி!




• செட்டிநாடு வீட்டு முற்றத்தில் விளையாடும் குழந்தைகள்...

கட்டப்பட்டிருக்கின்றன.

செங்கல்பட்டு மாவட்ட மண்பாண்டத் தொழிலாளர்கள் வசிக்கும் கிராமிய மண் குடிசை, பார்க்க எளிமையாக இருக்கிறது. உள்ளே சமையலுக்கு, பூசைக்கு, உட்கார்ந்து பேச - புழங்க, படுத்து உறங்க என்று தனித்தனி இடங்கள்!


வீட்டைச் சுற்றிக் கொஞ்சம் இடமும் விட்டு, அதை அன்றாட உபயோகத்துக்குப் பயன்படுத்திக் கொள்வார்களாம்.



• சிரியன் கிறிஸ்துவ வீடு

காஞ்சிபுரம் நெசவாளரின் வீடு, அப்படியே பிரதியெடுத்தது போல் உருவாக்கப்பட்டுள்ளது. இதிலும் முன்னால் ஒரு ஹால், பூஜை அறை, சமையலறை என்று அமைத்திருக்கிறார்கள்.

ஆம்பூரை அடுத்துள்ள கிராமம் ஒன்றில் காணப்படும் அக்ரஹார வீடுகள், ஒன்றையொன்று தொட்டுக் கொண்டு, தெருக்கோடியில் ஒரு விஷ்ணு கோயிலோடு அமைந்தவை. அதனாலேயே இதற்கு விஷ்ணு அக்ரஹாரம் என்று பெயர் கூட....




• நாயர் வீடு...



1850ல் கட்டியது. வீட்டில் நுழைந்தாலே நேரே தானிய அறைக்குப் போய் விடலாம்! அந்த அறையின் வெளியே, கதவுக்கு மேல் இருக்கும் சிலுவைக்கு முன்னால்தான் பிரேயர் எல்லாம்!

• அக்ரஹார வீடுகள்...



• செங்கல்பட்டு மாவட்ட மண்பாண்டத் தொழிலாளர் இல்லம்....



கோழிக்கோட்டு மங்காவு வீடு, மேனன் குடும்பத்தாருடையது.

சமையலறையை ஒட்டினாற்போல் கிணறு; இரட்டை மாடியில் நெல் - தானிய அறை, பாத்திரங்கள் வைக்கும் அறை எல்லாம் தனித்தனியே இருக்கின்றன.

முன்பெல்லாம், அவர்கள் வழக்கப்படி அம்மாவின் சொத்து மகள்களுக்குக் கிடைத்து வந்தது. மூத்த மகன், சகோதரியின் நிலபுலன்களை மேற்பார்வை பார்த்து வருவார். மற்ற மகன்கள் அவரவருடைய மனைவியர் வீடுகளுக்குக் குடிபோய் விடுவார்கள். தற்போதைய சட்டப்படி, சகோதரர்களும் சகோதரிகளும் சொத்தில் சம பங்கு பெறுகிறார்கள்!

தெற்குக் கேரள -

திருவனந்தபுரம் நாயர் குடும்ப வீடுகளில் கட்டுமானப் பொருள் மரம்தான். கோட்டயத்தில் உள்ள கிறிஸ்துவக் குடும்பங்களின் வீட்டை ஒப்பிடும்போது, நாயர் குடும்ப வீடுகள், அமைப்பில் சற்றே மாறுபட்டவை. பலா மரமும், பனை மரமும்தான் இரு வீடுகளிலுமே பெரும்பாலும் உபயோகித்திருக்கிறார்கள். மரங்களை ஒன்றோடு ஒன்று இணைத்திருக்கும் முறையும் ஒரே மாதிரிதான். பணக்காரக் குடும்பங்களானாலும் சரி, மத்தியதரக் குடும்பங்களானாலும் சரி - சராசரி வீட்டமைப்பு ஒரே மாதிரிதான்!

கோட்டயம் சிரியன் கிறிஸ்தவ வீடு

— சாருகேசி

புகைப்படங்கள் உதவி :
தட்சிண் சித்ரா, சென்னை.

புகைப்படக் கலைஞர் :
பரத் ராமாமிருதம்


தெய்வ தரிசனம் – 16

நின்றகோலத்து நெடுமால்

தாமரை இதழ் போல் செவ்வரி ஓடிய கண்கள். கைகளோ இரண்டு பங்கஜ மலர்கள், மேனியோ வானத்தில் அடர்த்தியாகச் செல்லும் பெரிய மேகம் போல இருக்கிறது. அச்சோ! இவ்வளவு அழகையும் இவர் எப்படிப் பெற்றிருக்கிறார்! இவருக்கு இவ்வளவு அழகு எப்படி வந்தது? ஐயோ! ஒருவர் இவ்வளவு அழகாகக் கூட இருக்க முடியுமா?

– திருமங்கை மன்னன் சௌந்தரராஜப் பெருமாளைக் கண்டார். அவருடைய அழகு வடிவத்தில் அப்படியே சொக்கிப் போய் விட்டார். தன்னை நாயகியாகவே பாவித்துக் கொண்டு பகவானை, அவருடைய அழகு வடிவத்தைப் பார்த்துப் பார்த்து அனுபவித்து இன்பம் பொங்கிப் பொங்கி வழியப் பாடுகிறார் :

அணி கெழு தாமரை
அன்ன கண்ணும்
அங்கையும் பங்கயம்
மேனி வானத்து
அணிகெழு மா முகிலே
யும் ஒப்பார்
அச்சோ! ஒருவர்
அழகியவா!



• ஸ்ரீ சௌந்தரராஜப் பெருமாள் - உற்சவர்



• ராஜகோபுரம்...

இந்த சௌந்தரப்பெருமான் இருப்பது அலைகடல் விடங்கரை நாம் தரிசித்த நாகப்பட்டினத்தில்தான்.

நாகப்பட்டினம் பலவிதங்களில் மிகவும் சிறப்புற்று இருந்த நகரம். வாணிபம் செழிக்கும் கடற்கரைப் பட்டினமாக இருந்தது. பல்லவர் காலத்திலிருந்து நாயக்கர்கள் காலம் வரை இந்த ஊரின் வரலாறு மிகவும் சுவையானது. ஆதிசேஷனே இந்த ஊரை அமைத்ததாகப் புராணம் கூறுகிறது. முசுகுந்த சக்கரவர்த்தி தியாகவிடங்கரை ஸ்தாபித்த தலம் என்பதை முன்பே பார்த்தோம்.

பௌத்தர்களின் சூடாமணி விஹாரம் இருந்த தலம். நீலாயதாக்ஷி அம்மனும் காயாரோஹணரும் அருளாட்சி புரியும் தலம். சிவபெருமானுக்குக் கோவில் எழுப்பிய நாகராஜனான ஆதிசேடன், தாம் அல்லும் பகலும் அனவரதமும் உடல் மீது தாங்குகின்ற வைகுண்டநாதனுக்குக் கோவில் எழுப்பாமல் இருப்பாரா?

இன்னும் சில யுகங்

ஆனந்தி



• துவார....



• .... பாலகர்கள்

அச்சோ! அழகியவா!

களுக்கு முன்னால் போக லாம். நைமிசாரண்யவனத்தில் சூதமுனிவர் சௌனகாதி முனிவர்களுக்கு பிரும்மாண்ட புராணத்திலுள்ள உத்தரகாண்ட ஞான யோக பாதத்தில் வருகிற **சௌந்தர்யாரண்ய** மகிமையை எடுத்துச் சொல்கிறார்.

க்ருத யுகத்திலே துருவன் தவம் செய்யக் கிளம்புகிறான். தாய் சுநீதியின் ஆசியோடு கிளம்பி, காட்டு வழியாகப் போய்க் கொண்டிருந்த குழந்தையை நாரத முனிவர் பார்த்தார். துருவனுடைய உறுதியைக் கண்டு ஆச்சரியப்பட்டு அவன் தவம் செய்வதற்கு உரிய இடத்தைச் சொன்னார்.

"துருவா! கிழக்குக் கடற்கரையருகே **சுந்தராரண்யம்** என்ற ஒரு அடர்ந்த காடு இருக்கிறது. அங்கே போய் நீ தவம் செய். அன்புக்குக் கட்டுப்பட்டவன் திருமால். அழகுமயமான இந்தக் காட்டில் நிச்சயம் வந்து காட்சி தருவார்" என்று அஷ்டாக்ஷரத்தை உபதேசம் செய்து விட்டுப் போனார்.


துருவனும் சுந்தர ஆரண்யத்துக்கு வந்து புலன்களை அடக்கித் தவம் செய்து ஸ்ரீமந் நாராயணனுடைய அழகு வடிவத்தைக் கண்டான். பகவான் அவனுக்கு நக்ஷத்திர பதவியை அளித்தார்.

துருவனுடைய கதையைக் கேட்ட மார்க்கண்டேயர் என்ற முனிவர் சௌந்தரவனத்துக்கு வந்தார். பல காலம் திருமாலை நினைத்துத் தவம் செய்ததுடன் பகவான் எழுந்தருளிய போது அவருடன் தர்க்கம் செய்தாராம். அவருடைய சந்தேகங்களை நிவர்த்தி செய்து ஸ்ரீமந் நாராயணன் மார்க்கண்டேயரையும் ஆட்கொண்டார்.

திருமாலின் சகோதரியான பார்வதி தேவி இந்த சௌந்தர்யவனத்தில் வந்து தவம் செய்தாள். எதற்காகத் தெரியுமா? தான் பெற்றிருந்த அழகிய வடிவத்தை விட இன்னும் பேரெழில் பெற வேண்டும் என்று விரும்பினாள்!

வைகுண்டநாதன் தரிசனம் தந்து தங்கை கௌரிக்கு ஒப்பற்ற அழகு வடிவம் பெற வரம் தந்தார்!

இந்த ஊரில் சார புஷ்கரிணி என்ற ஒரு தீர்த்தம் இருந்தது. கண்டன் சுகண்டன் என்ற இரண்டு பேர் இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து பாபங்கள் நீங்கி பகவானுடைய ஸாமீப்ய பதவியடைந்தனர். (சார புஷ்கரிணி இப்போது இருக்குமிடம் தெரியவில்லை!) இன்னும் பிரும்மா, பூமிதேவி, நாகராஜன் எல்லாரும் இந்த அழகிய வனத்தில் வந்து நாராயணனைப் பூஜித்தார்கள்.



• ஜகுல் நாயக்கர் தம் மனைவி லட்சுமி அம்மாளுடன் விழுந்து நமஸ்கரிக்கிறார்

கிருதயுகத்தின் ஆரம்பத்தில் சார புஷ்கரிணிக் கரையில் சித்திரை மாதம் மக நக்ஷத்திரத்தில் சௌந்தரராஜப் பெருமானாகத் தோன்றினார் வைகுண்டநாதன். கிழக்கு நோக்கிய முகமும், புன்னகை ததும்பும் இதழ்களும், கருணை பொழியும் விழிகளுமாகத் தோன்றிய அர்ச்சாவதார மூர்த்திக்கு அழகியான் என்றும் பெயர் சூட்டி மகிழ்ந்தார்கள். பகவானுடைய திருமார்பில் உறையும் திருவுக்கும் சௌந்தரவல்லி என்ற பெயர் வந்தது. பகவான் நின்ற திருக்கோலம். பத்திரகோடி விமானம் பாஞ்ராத்ர ஆகமம். கோவில் கட்டி நகரம் அமைத்தவர் நாகராஜன். கலியுக ஆரம்பத்தில் சாலீசுக மன்னன் அழகியானைத் தொழுது வந்தார்.

நாகராஜன் மகளை சாலீசுகமன்னன் மணந்த கதைதான் நமக்குத் தெரியுமே. பங்குனி மாதம் ரோஹிணி நக்ஷத்திரத்தில் பிரும்மோத்ஸவம் தொடங்கி நடத்தி வைத்தார் இந்த சோழ மன்னர். இந்த சாலீசுகமன்னனைத் துந்துமான் என்கிறார்கள். தொண்டைமான் என்ற பெயரே துந்துமானாயிற்று என்று ஓர் உரையில் படித்தேன்.

க்ருத யுகத்தில் ஆதிசேடனும், திரேதாயுகத்தில் பூமிதேவியும், துவாபரயுகத்தில் மார்க்கண்டேயரும், கலியுகத்தில் சாலீசுகன் என்ற தொண்டைமானும் வழிபட்ட மூர்த்தி இவர்.

எட்டாம் நூற்றாண்டில் திருமங்கையாழ்வார் அழகியானைக் கண்டு பாடிய பத்து அகத்துறைப் பாடல்களும் அற்புதமானவை.

சோழ பல்லவ மன்னர்கள் அழகியானை சேவித்துப் பல நிவந்தங்கள் அளித்திருக்கிறார்கள். தஞ்சையை ஆண்ட நாயக்க மராட்டிய மன்னர்களும் அழகியானுக்குத் தொண்டு செய்திருக்கிறார்கள்.

இந்தக் காலத்தில் கடல் வாணிபம் செய்ய வந்த போர்ச்சுகிசிய, டச்சுக் கம்பெனிக்காரார்கள் நாகப்பட்டினத்தில் தங்கியிருந்தார்களாம். மசூலிப் பட்டினத்திலிருந்து பதினைந்தாம் நூற்றாண்டில் நாகமலு மாமுடி நாயக்கர் மகனான ஜகுல் நாயக்கர் டச்சுக் கம்பெனியில் உயரதிகாரியாக இருந்தாராம். அந்தக் காலத்தில் அழகியான் கோவிலுக்கு ராஜ கோபுரம் கிடையாதாம்.

சரியான கலங்கரை விளக்கம் இல்லாதிருந்ததால் டச்சுக்காரர்கள் ஜகுல் நாயக்கரை லைட் ஹௌஸ் கட்டச் சொன்னார்களாம். அவரோ சௌந்தர ராஜப் பெருமானிடம் அளவில்லாத

வெங்கடேசா போளி ஸ்டால்

பக்தி கொண்டிருந்தார். டச்சுக்காரர்கள் கொடுத்த பொருளை வைத்து ஏழு நிலை கொண்ட ராஜ கோபுரம் கட்டி அதன் மீது விளக்கேற்றி வைத்தாராம்! இது நிஜமான வரலாறா? கட்டுக்கதையா என்பது தெரியாது. ஆனாலும் சுவாரஸ்யமாக இருக்கிறது.

இந்த நாயக்கர், கோவிலுக்குப் பல திருப்பணிகள் செய்திருக்கிறார். பொன்னும் நிலமும் கொடுத்



• கருடாழ்வார்

திருக்கிறார். பிராகாரத்திலே உள்ள பெரிய மண்டபம் இவர் கட்டியதாகக் கூறப்படுகிறது. அதற்குச் சான்றாக ஜகுல் நாயக்கரும் அவருடைய மனைவியும் மண்டபத்தின் படியேறும் இடத்தில் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து கொண்டிருப்பது போன்ற சிற்பங்களைப் பார்க்கிறோம்.

மாத பக்ஷ நித்யோத்ஸவங்களை இன்றும் அழகாக நடத்தி வருகிறார்கள். மிகவும் அழகான உற்சவம். பெருமாள் கருடாழ்வார் மீது ஏறி வந்து துருவனுக்குக் காட்சி தந்ததுதான். இது சித்திரை மாதம் மக நக்ஷத்திரத்தில் நடைபெறுகிறது. ஆண்டாளுக்கு ஆடிப் பூரத்தில் பத்து நாட்கள் உற்சவம். ஆனி மாதம் சௌந்தரவல்லித் தாயாரைப் பல்லக்கிலும் வாகனங்களிலுமாக பெரிய திருச்சுற்றில் உலா வரச் செய்கிறார்கள். திருக்கல்யாண உற்சவம், தேர் எதற்கும் குறைவில்லை.

நவராத்திரி விழாவும் சிறப்பாக நடக்கும். விஜய தசமியன்று பெருமான் குதிரை நம்பிரான் மீது எழுந்தருளி அம்பு போடுவதும் கோலாகலமாக இருக்கும். சங்கராந்தியின் போது பெருமாளுக்கு நாச்சியார்கோலம் போட்டு அழகு பார்ப்பது. தாயாருக்கு ஆண் கோலம் போட்டு புறப்பாடு செய்வதும் ஒரு சம்பிரதாயம்.

புஷ்பேஷு ஜாதி புருஷேஷு விஷ்ணு என்று பாரவி என்ற கவி பாடியிருக்கிறார் அல்லவா? அதனால் பங்குனி மாதத்தில் நடக்கும் உற்சவத்தில் புருஷன் என்ற சொல்லுக்கு விளக்கமாகத் திகழும் பரந்தாமனுக்கு புஷ்பம் என்ற சொல்லுக்குத் தகுதியுடைய ஜாதிப்பூ மாலையை அணிவித்து உலாவரச் செய்வார்கள். தாமரையால் திருவாசி செய்து வைத்திருப்பார்கள். அன்று வேறு மலர் மாலைகள் சாத்துவதில்லை.

அழகியான் கோவிலில் இருந்த நிலையிலும் கிடந்த நிலையிலும் பெருமாள் ஸேவை சாதித்துக் கொண்டிருக்கிறார். ரங்கநாதப் பெருமானின் ஸந்நிதியில் உள்ள சிங்கப் பெருமாள்; உருவத்தில் சிறியவராக இருந்தபோதிலும் இரணியவதக் கோலம் திகிலூட்டுவதாக இருக்கிறது. செப்புத் திருமேனியில் இத்தனை வேலைப்பாடு! காண்பதற்கு அரியதொரு கலைப் பொக்கிஷம்.

மீண்டும் சௌந்தரராஜப் பெருமாள் ஸந்நிதியில் நிற்கிறோம். தீபாராதனை செய்து மங்கை மன்னரின் பாடல்களைச் சொல்லி, "அச்சோ! அழகியவா" என்று அந்தப் பாடல்களின் தத்துவத்தை எடுத்துச் சொல்லிக் கொண்டே தீர்த்தமும், திருத்துழாயும் தந்து சடாரி சாதித்து இறைவனின் திருவருளை நமக்குக் கிடைக்கச் செய்கிறார் பட்டர். "திருவடி சேவை" என்று சொல்லி அவர் குனிந்து குனிந்து பகவானின் பாதாரவிந்தங்களைத் தரிசனம் செய்து வைக்கிறார்.

சௌந்தரராஜப்பெருமாளின் திருமார்பில் இலங்கும் திருமகளின் அழகை எப்படிச் சொல்வது? அணிந்திருக்கும் நவரத்ன அங்கியின் அழகைச் சொல்வதா? அபயமளிக்கும்

கரத்தின் அழகைச் சொல்வதா? பெருமிதத்துடன் பகவானின் மார்பையே ஸ்வீகரித்துக் கொண்ட சாமர்த்யத்தைச் சொல்வதா? சௌந்தரராஜப் பெருமாளின் அடியார்களுக்கு அருள்பொழியும் அழகைச் சொல்வதா? சின்னஞ்சிறு வடிவத்தில் என்ன அழகு! என்ன அலங்காரம்! பார்த்துப் பார்த்துச் சலிக்கவில்லை.

'சௌந்தர ராஜம் ஆச்ரயே' என்று ஆரம்பித்து,

நந்த நந்தன ராஜம் நகபத்தன ராஜம்
சுந்தரி ரமா ராஜம் சுரவிநுத
மஹிராஜம்

என்று முத்துஸ்வாமி தீக்ஷிதர் இந்த சௌந்தரராஜபெருமாளைப் பாடியது நினைவு வருகிறது. அழகின் அரசன், பக்தர்களை ஆள்பவன், நாகபட்டினத்தின் ராஜன், சுந்தரியான திருமகளின் சௌந்தர்ய ராஜன்! 'ராஜம் ராஜம்' என்று மீண்டும் மீண்டும் அழைத்து மனோ ராஜ்யத்தை ஆளும் அந்த மன்னனின் அழகைப் பாடும் பாடல்!

சௌந்தரவல்லித் தாயாரின் தனிக்கோயிலுக்குப் போய்த் தரிசனம் செய்கிறோம். பட்டுப் பட்டாகத் தங்கமயமாக மின்னும் பாவாடைகள் புரள அவள் வீற்றிருப்பது, 'இவள் சௌந்தரவல்லி தான்' என்று நம்மை மகிழச் செய்கிறது.

"வம்பு அவிழும் துழாய் மாலை
தோள்மேல்
கையன ஆழியும் சங்கும் ஏந்தி
நம்பர் நம் இல்லம் புகுந்து நின்றார்
நாகரிகர் பெரிதும் இளையர்
செம்பவளம் இவர் வாயின் வண்ணம்
தேவர் இவரது உருவம் சொல்லில்
அம் பவளத் திரளேயும் ஒப்பர்
அச்சோ! ஒருவர் அழகியவா!"

என்று திருமங்கையாழ்வாரைப் போலவே நாமும் அழகியானைப் பார்த்து அதிசயித்து மகிழ்ந்து கொண்டே கிளம்புகிறோம்.

படங்கள் : ஸ்ரீஹரி

இப்போது எல்.ஐ.சியின் ஜீவன் மித்ரா மும்மடங்கு காப்பீட்டுடனும் கிடைக்கிறது.



எல்.ஐ.சி பல விதமான பன்மடங்கு காப்பீட்டுத் திட்டங்களை வழங்குகிறது. அந்த வரிசையில் வரும் நவீன திட்டம் இது. ஒரு சிறிய கூடுதல் தொகையின் மூலம் மும்மடங்கு காப்பீடு பெறலாம். விபத்து மரணமாயின் நான்கு மடங்கு காப்பீடும் உண்டு. குறைந்த செலவில் அதிக காப்பீடு வழங்கும் அருமையான திட்டம் ஜீவன் மித்ரா (மும்மடங்கு காப்பீடு).

அடிப்படைத் தகுதிகள்

1) **வயது வரம்பு** - 18 முதல் 50 வரை

2) **முதிர்ச்சி அடையும்போது வயது** - 70 ஆண்டுகள்

3) **பாலிசியின் காலம்** - 15 முதல் 30 ஆண்டுகள் வரை

நன்மைகள்:

- **பாலிசி முதிர்வடையும்போது** : பிரீமியங்கள் முறையாக செலுத்தப்பட்டிருந்தால் பாலிசிதாரருக்குக் காப்பீட்டுத் தொகையும், லாபத் தொகையும் வழங்கப்படும்.
- **இறப்பு நேரிட்டால்** : பாலிசி நடப்பிலிருக்கும் பட்சத்தில், பாலிசிக்காலத்திற்குள் இறப்பு நேரிட்டால், நியமனதாரருக்கு மூன்று மடங்கு காப்பீட்டுத் தொகையும், லாபத் தொகையும் வழங்கப்படும்.
- **விபத்துக் காப்பீடு** : விபத்தினால் மரணம் ஏற்பட்டால், நான்கு மடங்கு காப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டும்.

மேலும் விவரங்களுக்கு அருகில் உள்ள எல்.ஐ.சி கிளை அல்லது முகவரை அணுகுங்கள்

லைஃப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆஃப் இந்தியா

மக்களின் சேவையில்

Visit us at: www.licindia.com

daCunha/LIC/98/2000

16 முதல் மழை

அப்பா அந்தச் செய்தியைக் கொண்டு வந்தார்.

உடனடியாக அதை அவர் சொல்ல முடியவில்லை. அவர் முகம் நன்றாக, சுரத்தாக இல்லை என்பதைப் பாரதி அவதானித்தாள்.

"என்னப்பா, ஏதாவது துக்கமா?"

அவர், அவள் முகம் பார்த்தார்.

"காத்து மாதிரி எல்லா இடத்திலுமே, துக்கம், சங்கடம், துன்பம் இறைஞ்சு கிடக்கம்மா."

"என்னப்பா, வெளிப்படையா சொல்லுங்களேன்."

"நம்ம அண்ணாசாமி குருக்களோட பெண், கோமுவை உனக்குத் தெரியும் தானே?"

"ஏன், கொஞ்ச நாள் முன்னாலே, அவ, இங்க வந்தாளே. நான்கூட வெற்றிலை, பழம், மஞ்சள் வச்சுக் கொடுத்தேனேப்பா."

"அந்தப் பொண்ணு, நிறைய தூக்க மாத்திரையை முழுங்கிட்டு, ஆஸ்பத்திரியில கிடக்கா. மாமி, அழுது அழுது மயக்கம் போட்டுக் கிடக்கா. குருக்கள், அழத் தெரியாமே, தேமேன்னு, ஆகாசத்தைப் பார்த்துட்டு நிக்கறார். ராஜுன்னு ஒரு பையன். கோமு, பொண்ணு. ரெண்டே குழந்தைகள்.

"சீமான்னு ஒரு பையனைக் கட்டிக்கிட்டாளே. அவளா, பண்ணிக்கிட்டது. சொன்னாளே... என்னாச்சு?"

"புருஷன் பெண் ஜாதி ரெண்டு பேருக்குள்ளே, மனஸ்தாபமாம். இவ, இந்த முடிவுக்கு வந்திருக்கா."

மனஸ்தாபத்துக்குத் தீர்வு மரணமா? சரி, அவர்கள் காதல் என்ன ஆனது? காதல் செத்த பிறகு, கோமுவும் செத்து விட முடிவெடுத்தாளா? யார் முதலில் முடிவெடுத்தது?

"கோமு பிழைச்சுக்குவாளாப்பா?"

"நடக்கலாம். நடக்காமலும் போகலாம்னு டாக்டர் சொல்லியிருக்கார்."

மனம் அடித்துக் கொண்டது. பாரதியும் கோமுவும்தான் நெருங்கிய சிநேகிதிகளாகப் பள்ளிப் பருவத்தில் காணப்படுவார்கள். புளியத்தோப்புக்கும், வெள்ளி மணி நீரோடைக்கும் அது தெரியும். புளியந்தோப்பின் மேற்கு மூலையில், ஒரு தாத்தா மரம் இருந்தது. பெரிய வயசான மரம். மேல் எல்லாம் பட்டை உரிந்து, வெடிப்புண்டு இருக்கும் மரம். அதன் பழம் தொண்டையில் இனிச்சுக் கிடக்கும். காப்பி நிறத்தில், கொடுக்காப்புளிச் சுவையோடு, புளியம்பழம். பொறுக்கிப் பைக்குள் போட்டுக் கொண்டால், லஞ்ச் நேரம், மாலை நேரம், டிரில் நேரம் என்று எப்போதும் தின்னலாம்.


வெள்ளிமணி ஓடை நீர், பன்னீர். அரிநெல்லிக்காய் தின்று விட்டு அந்தத் தண்ணீரைக் குடிக்க வேண்டும். பானகம் போல் இருக்கும். பள்ளியில் படித்து முடித்து விட்டு, பாரதி, இசைக் கல்லூரிக்குப் போனாள். கோமு, எக்னாமிக்ஸ் படித்தாள். எதையாவது படிக்க வேண்டும். கிடைத்தது படித்தாள் கோமு. பாரதியோ, இசைதான் படிப்பது என்கிற நோக்கத்தோடு, படித்தாள்.

அப்பாவுக்குச் சமையல் பண்ணிக் கொண்டிருக்கும்போதே, மனம் கிடந்து அடித்துக் கொண்டது. கடவுளே... கோமுவுக்கு ஒன்றும் ஆகிவிடக் கூடாது...

அரசாங்க ஆஸ்பத்திரியில் கோமுவைச் சேர்த்திருந்தார்கள். பாரதியைப் பார்த்ததும், கோமுவின் அம்மா, அழத் தொடங்கினாள்.

"என்னத்துக்கு அழுகை. மாமி, கோமுவுக்கு ஒன்றும் ஆகாது" என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே, உடைந்து போனாள் பாரதி.

கொஞ்சம் கொஞ்சமாக கோமு மீண்டு கொண்டிருக்கிறாள் என்றார் டாக்டர். வம்பு வழக்கு என்று போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமே என்கிற கவலை, பாரதிக்கு இருந்தது. பல பேர் உட்கார்ந்து வழவழப்பான பெஞ்ச்சில், ஒரு கடைக்கோடியில் சீமான் அமர்ந்திருந்தான். அவன் பக்கத்தில் போய்



அமர்ந்தாள், பாரதி.

சீமான், மனைவியைப் பற்றிக் கவலையில் இருந்தான் என்பதைக் காட்டிலும் போலீசைப் பற்றிய பயத்தில் இருந்தான் என்பது தெரிந்தது.

எடுத்த எடுப்பில் அவன் சொன்னான்.

''லோக்கல் இன்ஸ்பெக்டரை எனக்குத் தெரியும். எங்களையும் அவருக்குத் தெரியும். எங்க மாமனார் மேல, அவருக்கு மரியாதை உண்டு, பாரதி. கோமு ஏதோ, கோபத்துல, இந்த முடிவுக்கு வந்துட்டாளே தவிர,

பிரபஞ்சன்




துளசி

நான் கொடுமை பண்ணலைன்னு அவருக்குத் தெரியும். பிரச்னை இல்லாமே பார்த்துக்கறேன்னு சொல்லியிருக்கார்."

"அதை விடுங்க. என்ன நடந்தது?"

அவள், சற்று அமைதியாக இருந்தாள். தலைமுடியைப் பின்னுக்குத் தள்ளி விட்டுக் கொண்டாள்.

"சின்னச் சின்னக் கருத்து வேறுபாடுகள். எனக்கு அசைவம் பிடிக்கும். அவனுக்குப் பிடிக்காது. பழகிக்கோன்னு சொன்னேன். என் நண்பர்கள் நிறையப் பேர் வீட்டுக்கு வருவாங்க. அவங்களோடு, கோமு முகம்



''நம்ம தலைவர் தங்கத் தேர் இழுக்கனும்னு சொல்லும் போதே சந்தேகப்பட்டேன்...''

''எப்படி?''

''நேரே அவர் வீட்டுக்கே இழுத்துட்டுப் போயிட்டாரு.''

– ப. குலேந்திரன்

கொடுத்துப் பேசறதில்லை. ஒரு மாதிரி, விறைப்பாவே இருப்பா. இது மாதிரி எத்தனையோ சங்கதி. திடுமென இது மாதிரி பண்ணுவான்னு நான் எதிர்பார்க்கலை, பாரதி."

பாரதி அமைதியாக இருந்தாள். இது சம்பாஷணைக்குரிய இடம் இல்லை என்பது அவள் எண்ணம். உன் அசைவத்துக்குக் கோமு மாறிக் கொள்ள வேண்டும் என்று நீ ஏன் எதிர்பார்க்கிறாய்? ஏன் நீ சைவத்துக்கு மாறிக் கொள்ளக் கூடாது? அல்லது, அவன் அவன் விருப்பப்படியும், நீ உன் விருப்பப்படியும் ஏன் வாழக் கூடாது? காதல், இந்தச் சின்ன விட்டுக் கொடுத்தலையும் உங்களுக்குக் கற்றுக் கொடுக்கவில்லையா?

குருக்கள் மாமா, வராந்தாவின் கைப்பிடிச் சுவரைப் பிடித்துக் கொண்டு நின்றிருந்தார்.

பாரதி, அவர் அருகில் போய் நின்று, 'மாமா' என்றாள்.

குருக்கள் திரும்பினார். அவர் உதடுகள் துடித்தன. சிரமப்பட்டு அடக்கிக் கொண்டார்.

"மனசைத் தேத்திக்குங்க மாமா. எல்லாம் நல்லபடியா நடக்கும்."

மாமா, தலையசைத்துக் கொண்டார்.

''அந்த விவேகம் இருக்கு, குழந்தை. அதனாலதான் நான் நின்னுண்டு இருக்கேன். என் கையில் என்ன இருக்கு? தினே தினே தொட்டுப் பூஜை பண்றவன் நான். அந்தத் தெய்வங்களுக்குத் தெரியாதா, நம்ம கவலைகளும் பிரார்த்தனைகளும்.''

"உள்ளது, மாமா."

பாரதி தொடர்ந்தாள், சற்று நேரம் கழித்து.

"இப்படி நடக்கும்னு நீங்க ஏதாவது அனுமானிச்சிங்களா, மாமா?"

அவர் தலையை இல்லை என்பது போல அசைத்தார்.

''அவங்க குடித்தனம் பண்றது பற்றி எனக்கு எதுவுமே தெரியாது. நான் அவங்க வீட்டுக்குப் போனதில்லை. மாமி போவா, வருவா. ஏதோ, சௌஜன்யமா இல்லைன்னு மாமி சொல்லியிருக்கா. அவ்வளவுதான்.''

"அந்த ஸ்டேஜ்லயே, நீங்க கூப்பிட்டுப் பேசியிருக்கலாமே, மாமா."

''ஆம்படையான் பொண்டாட்டிக்குள்ளே, இதெல்லாம் சகஜம்தானேம்மா. முரண்டுக்கிறதும், கூடிக்கிறதும் இயற்கை தானே. நாம என்ன பேச இருக்கு. அதோட, தம்பதிகள் மத்தியிலே பிரச்னைன்னா, அதை மத்தவா புரிஞ்சுக்க முடியுமோ? சரியான காரணத்தை இரண்டு பேருமே மூடி மறைப்பாளே. என்னை விடு. அவாளுக்குள்ளேயே பேசிக்கிட மாட்டாளே, மனம் திறந்து. அதுதானே பிரச்னை."

மாமா சொல்வது சரியாக இருக்கும் போல் தோன்றியது.

கோமுவை, ஒரு வாரத்துக்குப் பிறகு, வீட்டில் ஓய்வாகச் சந்தித்தாள் பாரதி. இவளைப் பார்த்தும், கோமு அழுதாள்.

அழட்டும் என்று காத்திருந்தாள். அவள் மனம் தேறியபின், பாரதி கேட்டாள்.

பாலிவுட் புதுமுகம்!

இன்னும் ஒரு தென்னிந்தியப் பெண்ணுக்கு, பாலிவுட் சிவப்புக் கம்பளம் விரித்துள்ளது. அவர் நேத்ரா ரகுராமன். தக்ஷக், போபால் எக்ஸ்பிரஸ் ஆகிய இரண்டு



படங்களுக்குப் பின் பாலிவுட் இவர் பக்கம் திரும்பியுள்ளது. "ஸ்மீதா பாட்டீல் நடித்தது போன்ற ஆழமான கேரக்டர்களில்தான் எனக்கு நடிக்க ஆசை" என்கிறார் இந்த மாடல் அழகி கம் சினிமா நட்சத்திரம். இவர் பிறந்து வளர்ந்தது எல்லாம் பரோடாவில்.

— பாரதி

"என்ன பைத்தியக்காரத்தனம், இது?"

அவள், தலையணையில் தலையைப் புதைத்தபடி படுத்திருந்தாள். தோழிகள் பேசட்டும் என்று மாமி அறையைச் சாத்திக் கொண்டு வெளியே போனாள்.

"மனம் வெறுத்துப் போச்சுடி, பாரதி."

"இருக்கட்டும். என்னதான் வெறுத்தாலும், வாழ்க்கையை விடவா இந்த மனஸ்தாபங்கள் பெரிசாயிடும். எதுவாயிருந்தாலும், மறுநாள் பொழுது விடிஞ்சா, அது பழைய சமாச்சாரம்தானே, கோமு. படிச்சவ, இப்படி உணர்ச்சிவசப்படலாமோ?" •

"இல்லை, பாரதி. என்னால தாங்க முடியலை."

பாரதி அமைதியாக இருக்க வேண்டியிருந்தது. இருவருக்கும் என்ன பிரச்னை என்று, அந்த இருவரில் ஒருவர் சொல்லாமல், தானே எப்படிக் கேட்பது? கோமு சொன்னாள்.

"எனக்கும் அவருக்கும் ஒத்துக்கலை."

"ஒத்துக்கலைன்னா?"

"எல்லாத்திலேயும் சண்டை, பிரச்னை வருது. சமையல், பேச்சு, சங்கீதம் எல்லாத்திலேயும்."

"சமையல், சுவை எல்லாம் ஒத்துப் போறது கஷ்டம்தான். நீ மாறிக்கணும். அல்லது அவர் மாறிக்கணும். அல்லது அவங்கவங்க தன் ருசியை இழக்காம இருக்கணும்."

"அவர், என்னை அசைவத்துக்கு மாறணும்கிறார்."

"ஏனாம்?"

"அப்பத்தான் அது நிஜமான காதலாகும்கிறார்."

"அப்புறம்?"

"அவர் சப்தமா வச்சு கேட்கிற பாட்டு, எனக்குப் பிடிக்கலை."

"என்ன மாதிரி பாட்டு?"

"அப்ப அப்ப, புகழப்படற பாட்டு, சினிமாவிலே வந்து 'ஹிட்'டாகிற பாட்டு... கர்மம். கர்மம். அந்த எழவை அவர் கேட்டுக்கிடட்டும். என்னையும் சேர்ந்து கேன்னு அடம்பிடிக்கிறார்."

"கேட்கிற மாதிரி பழகிக்க வேண்டியதுதானே?"

"என்னால நடிக்க முடியாதுடி."

"அப்புறம்?"

"அவர் நண்பர்கள் சில பேர் வர்றாங்க. ஒரே குடி, சிகரெட் வீடு நார்றது. என்னால தாங்க முடியல்லை."

"குடிக்கிறதுன்னா, வீட்டிலேயா?"

"ஆமாம். மதியத்துல, நடுராத்திரியில."

"பேசித் தீர்க்கலாமே."

"பேசினேன். அவர் கேட்கலை."

"என்கிட்ட சொல்லியிருக்கலாமேடி?"

"மூன்றாம் பேருக்குத் தெரியக் கூடாதுன்னு வேற நினைக்கிறார்."

பாரதி அமைதியாக இருந்தாள்.

இது தடுக்கப்பட வேண்டிய பிரச்னை.

"சரி... கவலைப்படாதே. நான் இந்த விஷயத்தை எடுத்துக்கறேன். உன் புருஷனிடம் பேசறேன்."

பேசினாள். சீமான், ஒப்புக் கொள்வதாக இல்லை.

(தொடரும்)

தவறுக்கு இடமில்லை!

— அமைச்சர் தமிழ்க்குடிமகன் மறுப்பு!

'கல்கி' இதழில் "அய்யனே! பார்த்திரா அநியாயம்?" என்ற தலைப்பில் தமிழ்நாட்டிலுள்ள ஊராட்சி மன்றங்களில் அமைக்கப்படும் அய்யன் திருவள்ளுவர் நூலகத்திற்கு நூல்கள் வாங்குவது குறித்து விரிவான செய்தியைக் கண்டேன்!

'கல்கி' இதழ், இதில் ஏதோ அநியாயம் நடப்பது போல் கற்பனை செய்துகொண்டு இல்லாததையெல்லாம் எழுதியிருப்பது கண்டு வியப்புற்றேன். ஊரக வளர்ச்சித் துறைச் செயலாளர் திரு. ஆர்.சி. பாண்டா, தெளிவான விளக்கங்களைத் தந்துள்ளார்.

என்றாலும் ஒரு கருத்தை வலியுறுத்த வேண்டியுள்ளது. 500 நூல்களைத் தேர்ந்தெடுத்து ஊராட்சி மன்றங்களுக்கு வழங்கினாலும் அந்த நூல்கள் அனைத்தையும் மன்றங்கள் வாங்கிவிட முடியாது. அவர்களுக்கு விருப்பமான நூல்களை மட்டுமே தேர்ந்தெடுப்பார். அதிலும் 25% அல்லது 20% அல்லது 15% கழிவு பெற்று வாங்கினாலும் அவர்கள் யாரும் அந்தக் கழிவுத் தொகையைக் கையில் பெற முடியாது. ஏறத்தாழ ரூ. 2,600/- பெறுமான நூல்களை வாங்கினால்தான் கழிவு நீக்கி, பட்டியலில் ரூ. 2,000/- வரும். எனவே, ரூ. 2,000/- பட்டியலில் வருமாறு நூல்கள் வாங்கப்படுவதை அரசு கடுமையாகக் கண்காணிக்கும். இதில் பதிப்பகத்துக்காரர்கள் உரிய முறையில் பட்டியல் தந்தாலே போதுமானது. அதில் தவறு நேராமல் பார்த்துக் கொள்வது 'கல்கி' போன்ற இதழ்களின் பொறுப்பாகும்.



அந்தந்த ஊராட்சி மன்ற உறுப்பினர்களும் ஊராட்சி மன்றத் தலைவரும் சேர்ந்து எடுக்கும் முடிவின்படி நூல்களை வாங்கிட ஊரக வளர்ச்சி முகமை ஏற்பாடு செய்யும். இதில் இடைத்தரகர்கள் எதுவும் செய்ய முடியாது - செய்வதற்கு இடமே இல்லை என்பதை மட்டும் உறுதியாகக் கூற முடியும்.

தமிழகத்தின் சிறந்த எழுத்தாளர்களின் நூல்களும், விண்ணப்பிக்கும் எல்லாப் பதிப்பகங்களின் நூல்களும் பரிசீலிக்கப்படும். அதற்கான குழு பற்றிச் செயலாளர் தெளிவுபடுத்தியுள்ளார்.

சில 'வியாபாரிகள்' 'தனி பேரம்' நடத்துவதாகக் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டால் கட்டாயம் அரசு கடும் நடவடிக்கை எடுக்கும். எனவே, எந்த வகையான குறைபாட்டுக்கும் முறைகேட்டுக்கும் இடமின்றி இத்திட்டம் செயற்படுத்தப்படும் என்பதை உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நிலையில் தமிழ் நூல் வெளியீட்டாளர் - விற்பனையாளர் சங்கத்திலிருந்து இரா. முத்துக்குமாரசாமி, க. சச்சிதானந்தம் ஆகியோர் ஓர் அறிக்கை தந்துள்ளனர். அதில் அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

"எந்தப் பதிப்பாளரிடம் எந்த நூலை வாங்க வேண்டுமென்று பதிப்பாளரே கூறலாமா? 2,000 ரூபாய்க்குள் அனைத்துப் பதிப்பாளரிடமும் நூல்களை வாங்க முடியுமென்பது கற்பனா வாதம். இந்த ஆண்டு வாங்கும் நூல்களை அடுத்த சில ஆண்டுகளுக்கு வாங்க வேண்டாமென்றும், பதிப்பு ஆண்டு பார்க்காமல் நல்ல நூல்களை, அதுவும் அறநூல்களை, அய்யன் திருவள்ளுவர் படிப்பகங்களுக்கு வாங்க வேண்டுமென்றும் வலியுறுத்துவதே பதிப்பாளர் அமைப்புகளின் கடனாக இருக்க வேண்டும். முறைகேடுகள் நடக்கப் போவதாகக் கற்பனை செய்வதும், அரசின் முயற்சியைத் திசை திருப்ப முயல்வதும் பதிப்பாளர்களுக்குத் தீமையைக் கொண்டு வரும்.

ஏறத்தாழ 12,000 படிப்பகங்கள் தமிழ்நாட்டில் தொடர்ந்து தமிழ் நூல்களை வாங்கும் நிலைக்கு வளர்வதை ஊக்குவிக்க நாம் கடமைப்பட்டவர்கள். நம்முள் யாரிடமும் வாங்கினாலும் பதிப்பாளருக்கும் வாசகருக்கும் அஃது ஊக்கம் தருவதேயாகும்.

இந்த விளக்கம் போதுமானது என்று கருதுகிறேன்.

அன்புடன்,
மு. தமிழ்க்குடிமகன்

முக்கூர்

பகவத் சக்தியை ஆராய நமக்கு உரிமையில்லை என்று சொன்னேன்.

ஜன்மாந்தர புண்ய - பாவத்துக்கு ஏற்ப தேக யாத்திரை கர்மாதீனம். ஆத்ம யாத்திரை இருக்கிறதே, அது பகவத் சிந்தனையை அடியொற்ற வேண்டும்.

சரீரம் நம் கர்மாதீனத்தினால் ஏற்பட்டது என்பதால் இந்த தேக யாத்திரையில் அவனை தியானம் பண்ண வேண்டும்.

கருட புராணம் என்ன சொல்கிறது என்று பாருங்கள். கருட புராணம் என்பது ரொம்ப உத்தமமான புராணம். சாதாரணமாக அதை வெளியிலே உபன்யாசம் பண்ணுவதில்லை. அதற்கு என்ன மகிமை என்றால், யாராவது மாண்டு போய்விட்டால் அந்த தசமாகம் - அதாவது பத்து நாட்களுக்குள்ளே அந்த இடத்திலே விளக்கேற்றி வைத்து அந்த இடத்திலே இந்த கருட புராணத்தைக் கேட்க வேண்டும். அப்படிக் கேட்டால், அந்த ஆத்மா உத்தம கதியை அடையும்.

ஆத்மா சஞ்சாரம் பண்ணுவது எப்படி? எங்கெங்கே அது போகிறது? நரகங்களெல்லாம் எத்தனையெத்தனை? புண்ய லோகம் எப்படியிருக்கிறது? வைகுண்டம் எப்படி இருக்கிறது? இப்படி பல விஷயங்களைச் சொல்லும் படியான உயர்ந்த புராணம். அதனால்தான் ஒரு வீட்டில் மரணம் சம்பவித்த அந்த பத்து நாளைக்குள்ளே அதைக் கேட்கச் செய்ய வேண்டும் என்ற ஆசாரத்தைப் பெரியோர்கள் வைத்துக் கொண்டிருந்தார்கள் - வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த உயர்ந்த கருட புராணத்தில் பகவான் விஷ்ணுவினுடைய பெருமை பலவாறாக வருகிறது. புண்டரீகாட்ச நாம சங்கீர்த்தனத்தின் மகிமை சொல்லப்படுகிறது. அந்த நாம சங்கீர்த்தனம் தான் நமக்குப் பெரிய மூட்டை என்று சொல்லியிருக்கிறது!

மூட்டையா? அப்படியானால்...?

அந்தக் காலத்திலெல்லாம் ஊர் விட்டு ஊர் வழி நடந்தே போவதென்பது வழக்கம். ஒரு கிராமத்திலேயிருந்து இன்னொரு கிராமம் நடந்து போகிற போது வழியிலே களைப்பு ஏற்படாதவண்ணம் கையிலே



56

கட்டுச் சாத மூட்டை எடுத்துக் கொண்டு போவார்கள். நடு வழியிலே பெரிய குளம் இருக்கும். மரம் இருக்கும். கையிலே கட்டுச் சாதம் இருந்தால் மத்தியானம் வெயில் வேளையிலே அங்கே உட்கார்ந்து கொண்டு, அந்த சாதத்தைச் சாப்பிட்டு விட்டு தீர்த்தத்தையும் பருகி விட்டு, அங்கேயிருந்து எங்கே போய்ச் சேர வேண்டுமோ அந்த இடத்தைச் சாயங்காலத்துக்குள்ளே அடைந்து விடுவார்கள்.

வழியிலே களைப்பு ஏற்படாமலிருக்க கட்டுச் சாதம் எப்படி முக்கியமோ, அதுபோன்று இந்த வாழ்க்கை என்ற பெரும் பயணத்திலே நமக்குக் களைப்பு ஏற்படாதவண்ணம் நாம் போக வேண்டிய இடத்துக்கு நல்ல முறையிலே போய்ச் சேர்வதற்கு உதவுகிற மூட்டை புண்டரீகாட்சனுடைய நாம சங்கீர்த்தனம்தான்! எந்த மூட்டையைக் கையிலே வைத்துக் கொண்டு, போகிற வழியெல்லாம் கீர்த்தனம் பண்ணிக் கொண்டே போவோமேயானால், கஷ்டம் ஏது?

இதைத்தான் கருட புராணத்திலே சொல்லியிருக்கிறது.

அதே மாதிரி, 'மங்களம் பகவான் விஷ்ணு' என்று அவன் வடிவழகை நினைக்கும்படியும் சொல்லியிருக்கிறது.

அந்த அழகை வர்ணித்துக் கொண்டே போகிறார் ராமானுஜர் :

எம்பெருமானுடைய வடிவழகு, அவன் சங்க - சக்ராதிகளை தரித்துக் கொண்டிருப்பது, கௌஸ்துபமணி, திவ்யமான நாசிகை, உயர்ந்ததான திருநேத்ரம், உயர்ந்த லலாடகம், அவனுடைய திவ்யமான குழற்கற்றைகள், கம்புக்ரீவம், விசாலமான திருமார்பு, உயர்ந்த புஜங்கள், விசேஷமான பாதம், உதர பந்தம், நாபியிலேயிருந்து உயர்ந்த பிரும்மா... இப்படி நினைத்து ஸ்மரிக்க வேண்டும் பகவானை. அந்த எம்பெருமானை ஸ்மரிக்கிறபோது மங்களமான அந்த மூர்த்தியை பரம பாவனமான மூர்த்தியை எண்ணிக் கொள்ள வேண்டும். சோபனம், சோபனம், மனத்துக்கு சோபனமானவன் அவன்!

'மனத்துக்கு இனியானைப் பாடவும் நீ வாய் திறவாய்' என்றார். கண்ணுக்கு இனியானை என்று சாதாரணமாகச் சொல்லி விடவில்லை. எல்லோருக்குமே மனத்துக்கு இனியவன் அவன். ஏனென்றால் மனத்திலே வந்து ஆனந்தத்தை உண்டு பண்ணக்கூடியவன். அதுதான் நிஜமான ஆனந்தம். கண்ணுக்கு எத்தனையோ விஷயங்கள் தோன்றும். ஆனால் அவையெல்லாம் மறைந்து விடும். மனத்திலே பதியவேண்டியது அவன் ரூபம். அதனால் அது மனத்துக்கு ஆனந்தம் தருவதாயிருக்கிறது.

'ஆடவர் அவாவும் தோளினாய்' என்றான் கம்பன் ராமனைப் பார்த்து. ராமாயணம் ராமனின் அழகை அப்படி கொண்டாடுகிறது!

'திருஷ்டி சித்தாபஹாரிணம்' என்கிறார், வால்மீகி. திருஷ்டியை - பார்வையை - மட்டும் சொல்லிவிட்டு விட்டு விடவில்லை அவர்! ராமனின் சௌந்தர்யம் நம் திருஷ்டியையும் இழுக்கிறது சித்தத்தையும் இழுக்கிறது - மனத்தை ஆட்கொள்கிறான்.

அவ்வளவு வடிவழகானவனைப் பார்த்த அத்தனை புருஷர்களும் 'பொத்து பொத்தென்று' கீழே விழுகிறார்களாம்!

இதை ஒருத்தர் உபன்யாசத்திலே எடுத்துச் சொல்லவும் அதைக் கேட்டுக் கொண்டிருந்த ஒருவர் திடீரென்று எழுந்து உபன்யாஸகரைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார் :

"ராமனைப் பார்த்த புருஷர்களெல்லாம் பொத்து பொத்தென்று கீழே விழுந்தார்கள் என்று ஒரு மணி நேரமாக உபன்யாசம் பண்ணுகிறீர்... ராமனைப் பார்த்த ஸ்த்ரீகளெல்லாம் விழ மாட்டார்களா?" என்றார்!

இப்படிக் கேட்டவுடன் உபன்யாசகர் சொன்னார்: "ஸ்த்ரீகள் விழமாட்டார்களா என்று நீர் கேட்கிறீரே... இதை நான் சொல்ல வேண்டியதே

யில்லையே! தண்டாபூபிகா நியாயேன சித்த மல்லவா அது!''

தண்டாபூபிகா நியாயமா...? அப்படி யென்றால் என்னவென்று புரியவில்லை கேள்வி கேட்டவருக்கு! "அது என்னது சுவாமி?" என்று கேட்டார்.

எத்தனையோ விதமான நியாயங்கள் சொல்லப்பட்டுள்ளன சாஸ்திரத்திலே. அதிலே ஒன்றுதான் தண்டாபூபிகா நியாயம். அதை விளக்கிச் சொல்ல வேண்டுமானால் ஒரு பெரிய கதை சொல்லியாக வேண்டும்...

ஏகாதசியன்று தேர்ந்ததான ஒரு பலகாரம் - எல்லார் கிருஹங்களிலும் பண்ணக்கூடியது - உண்டு. சுலபமாகப் பண்ணக் கூடியது; அது என்னவென்றால், அதுதான் உப்புமா! உப்புமா என்கிற தேர்ந்த பலகாரம்!

மதுராந்தகத்திலே பாடசாலையிலே அடியேன்களெல்லாம் படித்த காலத்திலே ஏகாதசி எப்போது வரும் என்று நினைத்துக் காத்திருப்போம். ஏகாதசியன்று உபவாஸ மாயிற்றே என்று கேட்கலாம். ஆனால் அன்றைக்கு மட்டும்தான் உப்புமா; மற்ற நாட்களெல்லாம் சாதம்தான் பாடசாலையிலே! அதனாலேதான் குழந்தைகளான வித்யார்த்திகளெல்லாம் அன்றைக்கு உப்புமா கிடைக்குமே என்று காத்திருப்பார்கள்! கல்யாணத்துக்கு நாள் எண்ணும் பிரும்மசாரி மாதிரி எண்ணிக் கொண்டிருப்பார்கள் குழந்தைகளெல்லாம்.!

ஏகாதசியன்று விரதமிருந்து உலகத்தையே மாற்றியவன் ருக்மாங்கதன் என்பவன்தான். பாப தேவதைக்கே உலகத்தில் இடமில்லாமல் பண்ணிவிட்டான். அந்த பாப தேவதை பிரும்மாவிடம் போயிற்று. "என்னை ஏன் படைத்தீர்?" என்று கோபித்துக் கொண்டது.

''காரணமாகத்தான் படைத்தேன்'' என்றார் அவர்.

"பிரயோஜனமில்லையே! ருக்மாங்கதன் பரிபாலனம் பண்ணுகிறான். எல்லோரும் ஏகாதசி விரதம் இருந்து பெரும்பயனை அடைகிறார்கள். நான் எங்கே போவது? எனக்கு உலகத்தில் நிற்கவே இடமில்லையே...?''

உடனே பிரும்மா சொன்னார் : "ஒரே ஒரு இடம் உனக்குச் சொல்கிறேன். முழுசாக இருக்கிற அரிசியிலே போய் உட்கார்ந்து கொள். அதுதான் உன் இடம்."

அதனால்தான் ஏகாதசியன்று முழு அரிசியைச் சாப்பிட்டால் அதிலிருக்கிற பாப தேவதை நம்மைப் பற்றும் என்று ஐதிகம் உண்டாயிற்று. அதற்கு ஓர் உபாயம் : அந்த பாப தேவதையை அரிசியிலிருந்து ஓட்ட வேண்டுமானால் அரிசியை இரண்டாக உடைக்க வேண்டும். உடைத்தால்.... உப்புமா! உப்புமாவைச் சாப்பிடு என்றது சாஸ்திரம்! அன்னத்தை உடைத்தவுடனே பாப தேவதை ஓடிப் போய் விடுகிறது.

இது ருக்மாங்கதன் காலத்துக் கதை யென்று மட்டும் நினைத்துக் கொள்ளக் கூடாது. இன்றைக்கும் பொருந்தும்!

ஏகாதசியன்று இப்படி உப்புமா சாப்பிட்டு சாப்பிட்டு ஒருத்தருக்கு அலுத்துப் போய் விட்டது. பார்த்தார்... கடைசிப் பிள்ளைக்குக் கல்யாணமாகி மருமகள் வந்திருந்தாள். அவளைக் கூப்பிட்டு, "இங்கே பாரம்மா, உன் மாமியார் ஏகாதசியானால் உப்புமாதான் பண்ணுவாள். எனக்கு உப்புமா சாப்பிட்டுச் சாப்பிட்டு வெறுத்துப் போய் விட்டது. வடை சாப்பிட வேண்டும் போலிருக்கிறது. வடை தட்டித் தருகிறாயா?" என்று கேட்டார்.

புதிதாக வந்த மருமகள் பார்த்தாள். மாமனார் தன்னைப் பார்த்து இப்படிக் கேட்டு விட்டாரே என்று இரண்டு படி

அருள்வாக்கு

கொழுகொம்பைச் சுற்றிக் கொள்கிற கொடியை நாம் சிறிது விலக்கிப் பிரித்துவிட்டால் கூட அது படாத பாடுபட்டுக் கொஞ்ச நேரத்திலேயே மறுபடியும் கொம்பை வளைத்துச் சுற்றிக் கொண்டு விடும். நம் மனசை ஈசுவர ஸ்மரணையிலிருந்து அலைக் கழிக்கிற இடைஞ்சல்கள் எத்தனை வந்தாலும் நம் லட்சியத்தைப் பிடிவாதமாகப் பிடித்திருக்க வேண்டும் என்பதை இந்தத் திருஷ்டாந்தம் உணர்த்துகிறது. கடைசியில் நதி-சமுத்திர உபமானம். இதுவே பரம அத்வைதம். கடல்தான் மழையாக விழுந்து பிறகு ஆறாகியிருக்கிறது. இரண்டும் வேறு வேறு அல்ல. ஒரு நதியானது எந்த மலை உச்சியில் பிறந்தாலும் அலுக்காமல் சளைக்காமல் ஓடி ஓடி வந்து கடைசியில் கடலில் கலந்து தன்னுடைய தனிப் பெயரையும் உருவத்தையும் இழந்து

உளுந்தை ஊறவைத்து நன்றாக அரைத்து - தானே அரைத்து, 85 வடை பெரிது பெரிதாகத் தட்டினாள்! தட்டிலே கடச்கட வைத்து ஆசாரமாக எடுத்துக் கொண்டு வந்தாள்.

த்ரிதிய வஸ்திரம் என்கிற மூன்றாவது வஸ்திரத்திலே வடை மொத்தத்தையும் வாங்கிக் கொண்டார் அவர். வாங்கி, மூட்டை கட்டி, வெள்ளிச் செம்பு வழிய வழிய வெந்நீர் வேறு எடுத்துக் கொண்டு போய் வாசல் திண்ணையிலே உட்கார்ந்து கொண்டு ஏகாதசி அன்று எதைப் பண்ணக் கூடாதோ அதைப் பண்ணினார். 85 வடைகளிலே நாற்பத்தைந்தை சிரமப்பட்டுச் சாப்பிட்டு விட்டார். மீதி நாற்பதைச் சாப்பிட முடியாமல் மூட்டை கட்டி கைத் தடியிலே கட்டி பக்கத்திலே வைத்துக் கொண்டார். நாற்பத்தைந்து வடைகளைச் சாப்பிட்டதும் நல்ல தூக்கம் வந்தது. அசந்து தூங்கினார்.

தூங்கி திடீரென்று மூன்று மணிக்கு எழுந்தால் வடையைக் காணோம். கையை வைத்துப் பார்த்தால் தடியைக் காணோம்!

'ஐயோ இப்படி நிறைய வடைகளைப் பறிகொடுத்து விட்டோமே' என்று அப்புறம் அவருக்குத் தூக்கமே வரவில்லை.

விடியற்காலை வாசல் தெளித்துக் கோலமிட மருமகள் வந்தாள். அவளைக் கூப்பிட்டு, "அம்மா உன் பேரில் தவறில்லை. நீ நிறைய வடை தட்டித் தந்தாய். மூட்டையைத் தடியோடு கட்டி வைத்தேன். தடியையே காணவில்லை..." என்றார்.


அதற்கு அவள் சொன்னாளாம் : "தடி போனால் போகிறது. மூட்டை இருக்கிறதா பாருங்கள்" என்று!

"வந்த எலியோ, பெருச்சாளியோ தடியையே இழுத்துக் கொண்டு போனபிறகு மூட்டையை விடுமா?" என்றார் அவர்!

அந்த மாதிரி, பகவானுடைய சௌந்தர்யம் இருக்கிறதே, அது புருஷர்களையே இழுக்கிறபோது ஸ்த்ரீகளை விட்டு வைக்குமா?

தண்டாபூபிகா நியாயம் என்பது இது தான். தண்டம் என்றால் தடி. அபூபம் என்றால் வடை. பகவானுடைய சௌந்தர்யத்துக்கு அத்தனை பேரும் அடிமை என்று சொல்வதற்காக இப்படியொரு வேடிக்கைக் கதை!

(தொடரும்)




கடலாகவே ஆகிவிடுகிறது. கடல் அதை எதிர்கொண்டு அழைத்துக் கொள்கிறது. இதனால் தான் நதி சங்கமங்களுக்குச் சிறிது தூரம் இப்பாலே அந்த ஆற்றின் ஜலம் உப்புக் கரிக்கிறது. இப்படியே நாமும் நிஜமான பக்தி செலுத்தினால் கருணாசமுத்திரமான பகவான் முன்னே வந்து நம்மை ஆட்கொண்டு தானாக்கிக் கொள்வான்.

முதலில் பொருள் வேண்டும், பவிஷு வேண்டும் என்று வியாபார ரீதியில் பக்தி செய்ய ஆரம்பித்தாலும், பகவானின் குண விசேஷம் காரணமாக அவனுக்காகவே அவனிடம் அன்பு செலுத்துகிற பக்குவத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பெறுவோம். கடைசியில் குண விசேஷம் எதுவும் இல்லாத பரமாத்ம ஸ்வரூபமாகவே நாமும் அவனில் கரைந்து அவனாகவே ஆவோம்.

யோக ரீதியில் நன்றாக வாழ்க்கை நடத்துவதற்கும் சரி, துவைதம் விசிஷ்டாத்வைதம் அத்வைதம் முதலிய சித்தாந்தங்களின் அனுபவத்துக்கும் சரி, பக்தி என்பது இன்றியமையாததாகிறது. மோட்சம் அடையப் பின்பற்றும் உபாயங்களில் தலைசிறந்தது பக்தியே என்கிறார் ஸ்ரீ பகவத் பாதர். ஆத்ம ஸ்வரூபத்தை உணர்வதுதான் பக்தி என்றும் அதையடுத்துச் சொல்கிறார்:

மோக்ஷஸாதன ஸாமக்ர்யாம் பக்திரேவ கரீயஸீ।
ஸ்வஸ்வரூபாநுஸந்தானம் பக்திரித்யபிதீயதே ॥

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்



ஒரு காலத்தில் திராவிட கலாசாரத்தைக் கண்டித்துப் பேசி வந்த மூப்பனார் இன்று எதிர் அணிக்குப் போய் விட்டார். திராவிட பாரம்பரியத்தில் வந்த கலைஞர் ஆர்.எஸ்.எஸ். அணிக்குப் போய்விட்டார்! நம் கற்பனை மட்டும் சும்மா இருக்கலாமா?

காட்சி – 1

நிருபர் : ஆர்.எஸ்.எஸ். அரசியல் அமைப்பா இல்லியா? அரசு ஊழியர் அதில் சேரலாமா, கூடாதா?

கலைஞர் : நேற்று ஒரு கருத்தைக் கூறிவிட்டு, இன்று அதை மாற்றிச் சொல்ல நானென்ன மூப்பனாரா?

நிருபர் : என் கேள்வி...

கலைஞர் : அரசு ஊழியர்கள் இப்போது எந்தெந்தக் கட்சிகளில் இருக்கிறார்களோ அதில் இருந்து கொள்ளலாம். ஆனால் ஆர்.எஸ்.எஸ்ஸில் சேர்ந்து அலுவலகம் வரக் கூடாது.

நிருபர் : ஆர்.எஸ்.எஸ்ஸில் சேர்ந்தால் தவறா, இல்லையா?

கலைஞர் : தவறு என்றால் சரி. சரி என்றால் தவறு.

நிருபர் : (தலையைப் பிய்த்துக் கொண்டு) யார் தவறு என்றால் சரி? யார் சரி என்றால் தவறு?

கலைஞர் : மூப்பனாரும் அவரது கூட்டணியும் தவறு என்றால் சரி. நாங்கள் சரி என்று இப்போது சொன்னால், முன்பு சொன்னது தவறு!

நிருபர் : ஐயோ, குழப்புறீங்களே? அரசு ஊழியர் ஆர்.எஸ்.எஸ்.ஸில் சேர்ந்துட்டா, திராவிட கலாசாரம் அழிஞ்சு போயிடும்கிறாரே மூப்பனார்?

கலைஞர் : திராவிட கலாசாரத்தைக் கட்டிக் காக்க அவர் புது அவதாரம் எடுத்திருக்



தலைகீழ் தமிழ்நாடு!

கிறார் போலிருக்கிறது. நன்றாகச் செய்யட்டும்! தேசிய கலாசாரத்தைக் காப்பாற்ற வேண்டியது எங்கள் கடமை. டாக்டர் ராமதாசும், வைகோவும், வாழப்பாடியாரும் எனக்குத் துணை நிற்பார்கள்.

நிருபர் : அப்போ திராவிட கலாசாரத்தை விட்டுட்டீங்களா? பெரியார், அண்ணா எல்லாரும் வருத்தப்பட மாட்டாங்களா? மூப்பனார் கேட்கிறாரே?

கலைஞர் : பெரியாரும் அண்ணாவும் நேற்று என் கனவில் வந்தார்கள். திராவிட பாரம்பரியத்தைக் காப்பாற்றப் புதிய கூட்டணி உருவாகி விட்டதால், நீ தேசிய பாரம்பரியத்தைக் காப்பாற்று என்று கண்ணீர் விட்டு வேண்டினார்கள். மூப்பனாருக்கு இந்த மாதிரி கனவு எதுவும் வந்ததா என்று கேளுங்கள்.

நிருபர் : வாஜ்பாய் ஆர்.எஸ்.எஸ். ஆதரவாளர் என்று...

கலைஞர் : வாஜ்பாய் என்றைக்கோ அரைநிஜார் போட்டு ஆர்.எஸ்.எஸ்ஸில் பங்குகொண்டிருக்கலாம். இன்று என்ன?

நிருபர் : அரை நிஜார் போட்டு...

கலைஞர் : அரைநிஜார் போட்டவர் எல்லாம் ஆர்.எஸ்.எஸ். என்றால் நாம் எல்லாருமே ஒருகாலத்தில் அரை நிஜார் போட்டவர்கள்தானே?

நிருபர் : என் கேள்வி...

கலைஞர் : உங்கள் கேள்வியிலேயே என் பதிலும் இருக்கிறது!

காட்சி – 2

நிருபர் : கலைஞர் ஆர்.எஸ்.எஸ்ஸை ஆதரிக்கிறாரே?

மூப்பனார் : ஆதரிக்கட்டும். ஆனால் அதையும் தி.க.வையும் ஒன்று என்று சொல்லி விட்டாரே! வீரமணி கேட்டால் என்ன நினைப்பார் என்று யோசித்துப் பார்த்தாரா? கலைஞர் ஆர்.எஸ்.எஸ்ஸை ஆதரிப்பது நகைப்புக்கு இடமாகி விட்டது.

நிருபர் : யாரோட நகைப்புக்கு?

மூப்பனார் : சகோதரி ஜெயலலிதா, நல்லகண்ணு, சிவப்புக்கண்ணு...

நிருபர் : சிவப்புக் கண்ணா? யாருங்க அது?

மூப்பனார் : சி.பி.எம். சங்கரய்யாதான்! தவிர த.மு.மு.க., கி.மு.மு.க....

நிருபர் : தி.மு.க. பாஜக தவிர மத்த எல்லாக் கட்சித் தலைவர்களும்னு ஒட்டுமொத்தமாச் சொல்லிடலாமா?

மூப்பனார் : அதான் சரி. தமிழ்நாட்டை திராவிட பாரம்பரியத்திலிருந்து எந்தச் சக்தியாலும் பிரிச்சுட முடியாது. திராவிடம்னா தமிழ்நாடு. தமிழ்நாடுன்னா திராவிடம்.

நிருபர் : அப்போ கர்நாடகா, ஆந்திரம், கேரளா எல்லாம் சேர்ந்தது இல்லியா?

மூப்பனார் : எங்க எல்லாம் அ.இ.அ.தி.மு.க. தொகுதி இருக்கோ, அதெல்லாம் திராவிடத்துல சேத்துக்கலாமான்னு பஞ்சாயத்து, முனிசிபாலிடி, மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள், த.மா.கா. தலைவர்கள் இவர்களைக் கலந்து ஆலோசித்து, மூன்றே மாதங்களில் முடிவு எடுத்துவிட்டு, தில்லி போய் சோனியாவைக் கேட்டு இறுதி முடிவை மக்களின் சார்பாக அறிவிப்பேன்.

நிருபர் : அப்போ காமராஜர் ஆட்சி வருமா வராதா?

மூப்பனார் : வராம எங்க போயிடும்? வந்துதான் ஆகணும். காமராஜர் ஆட்சிக் காலத்துலயே நாம்ப காமராஜர் ஆட்சி நடக்குதுன்னா சொன்னோம்? அப்ப எல்லாம் சொல்லாததை இப்ப ஏன் சொல்லணும்? இப்போ புரட்சித் தலைவி உருவத்துல காமராஜர் தெரிலைன்னு சொல்ல முடியாதே! உங்களைத் தவிர மத்தவங்க அப்படித்தான் பார்க்க ஆரம்பிச்சுட்டாங்க.

நிருபர் : அப்போ 96ல ஊழல் கட்சின்னு நீங்க அ.இ.அ.தி.மு.க.வை விளாசினீங்களே, அது தப்பா?

மூப்பனார் : ஊழல் தப்புத்தான். அதை அ.இ.அ.தி.மு.க. செஞ்சா தப்பு இல்லேன்னு இப்பத்தான் புரிஞ்சுக்கிட்டோம். 96ல 6 இருக்கு. 99ல 9 இருக்கு. ஆறுக்கும் ஒம்பதுக்கும் வித்தியாசம் இருக்கு. இதை நீங்க புரிஞ்சுக்கணும்.

நிருபர் : ஊழல் ஊழல்தானே? அதுல வருஷத்துக்கு வருஷம் மாறுதல் வருமா என்ன?

மூப்பனார் : வராதுன்னு நீங்க எப்படிச் சொல்றீங்க? அதுபோலத்தான் நானும் வரும்னு சொல்றேன்.

நிருபர் : மறுபடி ஆர்.எஸ்.எஸ்.ஸுக்கே வருவோம்...

மூப்பனார் : நான் வரல்லே. நீங்க வேணா போங்க!

நிருபர் : சிதம்பரத்தைப் பார்ப்பீங்களா?

மூப்பனார் : நெல்லிக்குப்பம் போனா சிதம்பரம் போவேன்.

நிருபர் : இல்லே. ப. சிதம்பரம் பத்திக் கேட்கறேன்.

மூப்பனார் : நானும் பரமசிவம் இருக்கற சிதம்பரத்தைப் பத்தித்தான் சொல்றேன்...

(நிருபர் ஓட்டம் பிடிக்கிறார்)

கற்பனை : **சாருகேசி**


இந்த வீட்டு மனையை வாங்கச் சரியான நேரம்

(கீழே கொடுத்துள்ள 5 காரணங்களுக்காகவே)

சிந்து நகர், சென்னை–600 056

மதுரவாயில் அருகே, பூந்தமல்லி பை-பாஸ் – CMDA அப்ரூவ்டு மனைகள். (நெ. 65/99.)

- அமைந்துள்ள இடம் ✔
- மாநகருக்கு மிக அருகில் ✔
- பாதுகாப்பு ✔
- முதலீடு செய்யும் பணத்துக்கு தகுந்த மதிப்பு ✔
- வேகமாக உயரும் நில மதிப்பு ✔



சிறப்பு அம்சங்கள்

● உடனே வீடு கட்டலாம் / சுற்றிலும் வீடுகள். ● கோயம்பேட்டிலிருந்து 10 நிமிட பயணம். ● அண்ணா நகரிலிருந்து 15 நிமிட பயணம். ● சுலபமான மூன்று வழிப் பாதைகள். கிண்டி, செயின்ட்தாமஸ் மவுண்ட் போரூர் 100 அடி சாலை. அரும்பாக்கம், கோயம்பேடு, மதுரவாயில் 100 அடி சாலை / அம்பத்தூர், ஆவடி 60 அடி சாலை. ● சென்னை-பெங்களூர் (NH4) தேசிய நெடுஞ்சாலை. ● கோயம்பேட்டில் அமைந்துவரும் பிரம்மாண்ட பஸ் நிலையம். ● தாம்பரம்-வானகரம் புறவழிச் சாலை. ● மாநகரின் அனைத்து பகுதிகளுக்கும் தாராளமான பஸ் வசதி. ● மெடிக்கல், டென்டல், இஞ்சினியரிங், கேட்டரிங் ஆர்ட்ஸ் கல்லூரிகள் மிக அருகில். ● சுவையான / மிருதுவான நிலத்தடிநீர். ● சுத்தமான பத்திரம் / நம்பகமான நிறுவனம். ● உடனடி பத்திரப் பதிவு.

BLBயின் உறுதி செய்யப்பட்ட சேவை (விற்பனைக்கு பின்)

● 5 வருடங்களுக்கு மனை பாதுகாப்பு சேவை. ● பத்திரப் பதிவுக்கு பின் தங்கள் பெயரில் தனிப் பட்டா ஏற்பாடு (பட்டா செலவு தனி) ● உடனடியாக வீடு கட்டும் பட்சத்தில் தரமான எஞ்சினியர்களை கொண்டு BLB மூலமாக கட்டுமானப் பணி ஏற்பு.

மனையை பார்வையிட இலவச வாகன வசதி தினமும் காலை 6.00 மணி, 11.00 மணி மற்றும் மாலை 3.00 மணி

PHONE : 4357721 / 4357731 ● CELL : 98400-44018 ● PAGER : 9610-103847

BLB Estates (P) Ltd.

S-3, "Ramana Flats", Rathna Nagar, Off : Anna Salai,
Teynampet, Chennai - 18. (Behind Apollo Cancer Hospital)
R. BHASKAR - Managing Director

BLB PLEDGED TO ETHICS

BLB - வர்த்தகத்தில் நேர்மை; பணியில் பொறுப்பு



கபளி குப்பார்க்கெட்

தீபா மேத்தா 'வாட்டர்' ரேஞ்சுக்கு ஒரு சர்ச்சை ஒரு ஹாலிவுட் படத் தயாரிப்புலயும் ஏற்பட்டிருக்கு. டைடானிக் புகழ் டி காப்ரியோ ஞாபகமிருக்கில்லே...? (ஐயோ! எப்படி மறக்கும்ன்றீங்களா – அதுவும் சரிதான்!) டி காப்ரியோவை வைச்சு இன்னொரு படம் தயாரிச்சுட்டிருக்காங்க – 'த பீச்'! கதாநாயகனும் ரொம்ப அழகான – அதை விட ரொம்ப ரொம்ப துணிச்சலான ஒரு கதாநாயகியும் ஸ்வர்கபுரியான ஒரு ரகசிய தீவைத் தேடிக்கிட்டுப் போறாங்க... வழியெல்லாம் அட்வெஞ்சருக்குக் குறைவேயில்லை. 120 அடி உயர நீர்வீழ்ச்சியிலேருந்து குதிக்கறது, மீன் பிடிக்கறது, நீஞ்சறது, கஞ்சா அடிக்கறது, அஃப்கோர்ஸ் காதல் பண்றது... தீவைக் கண்டுபிடிச்சப்பறம் எதிர்பாராத பயங்கர அனுபவங்கள் எல்லாம் ஏற்படுது... இதுதான் கதை. கான்டரவர்ஸி என்னன்னா, தாய்லாந்து பீச்ல படம் பிடிச்சப்போ யூனிட்காரங்க இடத்தை நாறடிச்சுட்டாங்கன்னு உள்ளூர் மக்களெல்லாம் கொதிச்சுப் போனதுதான். பயங்கரமா முகமூடி அணிஞ்சுக்கிட்டு 'ஸ்டிரைக்' பண்ணிப் பார்த்திருக்காங்க.

'முதல்ல இருந்ததைவிட ரொம்ப நீட்டாவே நாங்க அந்த பீச்சை வைச்சுட்டு வந்தோம்'னு யூனிட்காரங்க வாதாடறாங்க.

இதைவிட சூடான சர்ச்சை, கதாநாயகனும் நாயகியும் நிஜ வாழ்க்கையிலும் என்ன சொல்றது... ரொம்ப நெருங்கிட்டாங்க... அதனால நாயகி வர்ஜினி லெடோயன் கர்ப்பமாயிட்டாங்கன்னு ஒரே பரபரப்பு... இரண்டு பேருமே அதை மறுத்திருக்காங்கன்னாலும் வம்புக்கு அலையற பத்திரிகைகள் புண்ணியத்துல படத்துக்கு ஏக பப்ளிசிடி கிடைச்சுருச்சு!

இதுக்காக சந்தோஷப்படறதுக்குப் பதிலா ப்ரொட்யூசர்ஸ் ரொம்ப அரண்டு போயிருக்காங்க! படத்தைப் பத்தின எதிர்பார்ப்பு ரொம்ப அதிகமாயிருக்காம். நிச்சயமா அது இன்னொரு டைடானிக்கா இருக்காதே. அந்த ரேஞ்சுக்கு ஜனங்க எதிர்பார்த்தா 'த பீச்' ஃபெயில்யர் ஆயிடுமோன்ற கவலைதான்!


படத்தோட பட்ஜெட் எவ்வளவுன்னு கெஸ் பண்ணுங்க...?

அம்பது மில்லியன் டாலர்!

அதுல டி காப்ரியோ சம்பளம் எவ்வளவு சொல்லுங்க...?

இருபது மில்லியன் டாலர்!

• டி காப்ரியோ



அச்சச்சோ! அங்கேயும் ஒரு 'வாட்டர்!'

ரஜினிக்கும் அவருக்கும் ஜாடையிருக்கா பார்த்துக்கங்க!

●●●

லவ் மேட்டர், லௌகிக மேட்டரெல்லாம் விட்டுட்டு கொஞ்சம் ஆன்மிகம் பக்கம் வாங்க. இந்த வயசுல எதுக்கு சுமின்னு கேட்பீங்க, தெரியும். பட் அன்னிக்கு காமராஜ் ஹால்ல சுவாமி தயானந்த சரஸ்வதி லெக்சருக்கு வந்திருந்திங்கன்னா என் வயசுல எத்தனை பேர்னு அதிசயப்பட்டிருப்பீங்க. ஒரு சீட் பாக்கியில்லாம நிரம்பி தரையிலயும் இடுக்குலயும் நடைபாதையிலயும் ஜனங்க... ரொம்ப தூரத்துல, பிரும்மாண்ட மேடையில ஒத்தை ஆனா அந்த காவியுடை சாமி இத்தனை பேர் கவனத்தை என்னமாத்தான் கட்டிப் போட்டார்! 'சக்ஸஸ்ஃபுல் லிவிங்'ன்றதுதான் தலைப்பு. நான் தமிழ்ல கொஞ்சமா(!) இங்க்லிஷ் மிக்ஸ் பண்ற மாதிரி சுவாமிஜி இங்க்லிஷ்ல தமிழ் ரொம்ப இலேசா சேர்த்துப் பேசறார். சாதாரணமான குரல் – ஆனா சொல்ற விஷயத்துல இருக்கு முழு சரக்கும்.

ஒரே ஒரு எக்ஸாம்பிள் தரேன். பாஸிடிவ் திங்கிங் ரொம்ப அவசியம்னு நினைக்கிறோம். ஆனா அதுவே ஆபத்துல கொண்டு விடக் கூடும்னு ஒரு கதை சொன்னார்:

ரொம்ப தோல்வியுணர்வோட ஒருத்தன் அறிவுரை தேடிப் போனான். அறிவுரை தந்தவர் சொன்னார்:

''உனக்குக் கண் பார்வை இருக்கிறதா...?''

"இருக்கிறது."

"பவர் அஃப் ஹியரிங்?"

"யெஸ்..."

"நடக்க முடியுமா...?"

"நடந்துதானே வந்தேன்...!"

இப்படியே இருப்பதையெல்லாம் சுட்டிக் காட்டி அதெல்லாம் இல்லாதவங்க எத்தனை கஷ்டப்படுவாங்கன்னு திங் பண்ண வைச்சாராம். இதைக் கேட்டு தெம்பானவர் வெளியே வரும் போது தன்னைப் போலவே ஒருத்தர் மெர்ஸிடஸ் பென்ஸ் கார்ல வந்திறங்கறதைப் பார்த்தாராம்... தன்னிடம் இருந்த எல்லாமும் அவருக்கு இருந்தது... பிளஸ் ஒன் மெர்ஸிடஸ் பென்ஸ்! அந்த மெர்ஸிடஸ் பென்ஸ் தனக்கு இல்லையேன்று ஆதங்கம் வந்து அப்படியே துவண்டுட்டாராம் இவர்!



• வர்ஜினி லெடோயன்

கம்பேர் பண்ணிப் பார்த்து வருத்தப்படறதும் தப்பு, சந்தோஷப்படறதும் சரியில்லை... 'எது தேவை, எது நம்மால் அடையக் கூடியதுன்னு சிந்திச்சு முடிவெடுத்து, அதுக்காக முயற்சி செய்யணும்'ன்றதுதான் மாரல் அஃப் த ஸ்டோரி!

இதுல என்ன ஆன்மிகம் இருக்குன்னு கேட்பீங்களே! சுவாமிஜி சொற்பொழியறது பிராக்டிகல் ஆன்மிகம் – உனக்குள்ளே முழுமையை உணர்ந்து உன்னை எண்ணி நீயே புன்னகைக்க முடியுமானால் அதுதான் மோக்ஷம்ன்றார்...! இஸ் திஸ் நாட் பிராக்டிகல் ஆன்மிகம்? அதனால்தான் அவர் பேசும்போது காமராஜ் ஹால் நிரம்பி வழியுது. பேச்சு முடிஞ்சு, கார் பார்க் காலியாக முழுசா அரை மணி நேரம் ஆகுது...!

— சுமி

மாணவர் கூட்டமைப்பும்

"1970களில் நடந்த உதயகுமார் மரணம், கிளைவ் ஹாஸ்டல் பிரச்னை ஆகியவற்றுக்குப் பின்னர் மாணவர்கள் தங்கள் ஒற்றுமையுணர்வைக் காண்பித்திருப்பது தர்மபுரி சம்பவத்தையொட்டித்தான். ஏனென்றால் இது ஒரு உணர்வு பூர்வமான பிரச்னையாக அமைந்து விட்டது'' என்கிறார்கள் அனைத்துக் கல்லூரி மாணவர் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள்.

"இரண்டாம் தேதி சம்பவம் நடந்தவுடன், மூன்றாம் தேதியே 150 கல்லூரிகளில் தர்மபுரி சம்பவத்தைக் கண்டித்து மாணவர்கள் போராட்டம் நடத்தினார்கள். எங்கள் இந்திய மாணவர் சங்கமும் (SFI), அகில இந்திய கத்தோலிக்க ஐக்கிய மாணவர் சங்கமும் இணைந்துதான் தர்மபுரி பிரச்னைக்காக அனைத்துக் கல்லூரி மாணவர் கூட்டமைப்பு என்று ஏற்படுத்தி உள்ளோம். ஓர் அவசரம் காரணமாக உருவான அமைப்பாதலால் இதுவரை நிர்வாகிகள் என்று யாரும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. எங்கள் அமைப்பு (SFI) பரவலாக எல்லா கல்லூரிகளிலும் ஏற்கெனவே செயல்படுவதால் மாணவர்களை ஒருங்கிணைப்பது சுலபமாக இருக்கிறது'' என்கிறார் கண்ணன். இவர் சென்னை பல்கலைக் கழக மாணவர் என்பதுடன் SFIயின் தமிழ்நாடு செயலாளராகவும் இருக்கிறார்.

• கண்ணன்



''தர்மபுரி சம்பவத்திற்குப் பிறகு முதல்வரைச் சந்தித்த வேளாண்மை பல்கலைக் கழக மாணவ, மாணவிகள், 'மாணவர்களைப் பாதுகாக்க தனிச் சட்டம் போட வேண்டும்' என்று கோரிக்கை வைத்துள்ளார்களே?''

''தங்கள் சகோதரிகளுக்கு இப்படி ஆகிவிட்டதே என்ற வேதனையின் வெளிப்பாடாகத்தான் இது போன்ற சட்டம் தேவை என்று கேட்டிருக்கிறார்கள். ஆனால் உணர்ச்சிவசப்படாமல் கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தால் அது போன்று தனிச் சட்டம் அவசியமில்லை என்று தோன்றும். காரணம் சமுதாயத்தில் மாணவர்கள் ஒரு பிரிவுதான். ஒட்டு மொத்த சமுதாயத்தையும் பொதுச் சொத்துக்களையும் பாதுகாக்க வேண்டிய பெரிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. மாணவர்களுக்கு என்று ஒரு சட்டம் போடுவதாக வைத்துக் கொள்வோம். நாளைக்கு மீனவர்கள், நெசவாளர்கள் என்று பல்வேறு பிரிவினரும் இது போன்று கேட்பார்களே! இது சரியாக வருமா? சட்டம் நிறைவேற்றப்பட்டாலும் அது ஒழுங்காக அமுல்படுத்தப்படுமா? ராகிங்கை ஒழிக்க சட்டம் கொண்டு வந்தார்கள். ஈவ் டீஸிங்கை எதிர்த்து சட்டம் கொண்டு வந்தார்கள். இவையெல்லாம் இப்போது நடக்காமல் இருக்கின்றனவா?

ஸ்வீட் ஹோம் என்பது...

பாடலாசிரியர் பழனி பாரதி:

தாயின் கருவறையிலிருந்து வந்து, வாழ்ந்து கொண்டிருக்கும் இரண்டாவது கருப்பைதான் இல்லம். அந்த இனிய இல்லம் அன்பால் கட்டப்பட்டு, புன்னகையால் வெள்ளையடிக்கப்பட்டிருக்க வேண்டும். வீட்டிலே ஒரு மூலையில் சமையல் அறையும், வேறு ஒரு மூலையில் பூஜை அறையும் இருந்தாலும் கூட, அடுப்பையும், விளக்கையும் ஏற்றுகிற மனைவி, வீட்டின்





• கோவை வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர்களுடன் அமைச்சர் பொங்கலூர் பழனிச்சாமி...

தர்மபுரி சம்பவத்தில் சப்-இன்ஸ்பெக்டர் எரியும் பஸ்ஸில் இருந்த மாணவிகளைக் காப்பாற்ற எந்த உதவியும் செய்ய மறுத்த தோடு, மாணவர்களைத் திட்டி இருக்கிறார். ஆகவே நான் சொல்ல வருவது சட்டங் களை அமுல்படுத்தும் அதிகாரிகளின் கண் ணோட்டம் மாற வேண்டும். பொது சொத் துக்களை சேதப்படுத்தினால் சம்பந்தப்பட்ட இயக்கங்களிடம் இருந்து நஷ்ட ஈடு வசூல் செய்யவதை

எதிர்காலத் திட்டங்களும்!

கண்டிப் பாக அமுல்படுத்தினால் இதுபோன்ற சம்பவங்கள் குறைய வாய்ப்பிருக்கிறதே. அரசியல் கட்சிகள் அவர்கள் கட்சியைச் சேர்ந்த வன்முறை யாளர்களை தயவு தாட்சண்யம் பார்க் காமல் கட்சியை விட்டு விலக்குவார்களா? அரசியல், கிரிமினல்களின் சொர்க்கமாக மாறாமல் இருந்தால்தான் இது போன்ற சம்பவங்கள் குறையும்.''

''இந்தக் கூட்டமைப்பு தொடர்ந்து எவ்வாறு செயல்படப் போகிறது?''

''இப்போது ஏற்பட்டுள்ள ஒற்றுமையுணர்வைக் கட்டிகாப்பது சற்று சிரமம்தான். சரிகா ஷா விவகாரத்தில் கூட அவர் படித்த கல்லூரியிலேயே எங்களால் ஒரு போராட்ட உணர்வை உண்டாக்க முடியவில்லை. இப்போது அரசியல் கட்சிகள்; குறிப்பாக ஆளும் கட்சிகள், மாணவர்களிடையே ஒற்றுமையுணர்வு வரக் கூடாது என்பதில் தான் தெளிவாக இருக்கின்றன. தர்மபுரி சம்பவம் தொடர்பாக பல கோரிக்கைகளை முதல்வரிடம் வைத்துள்ளோம். குறிப்பாக் உண்மைக் குற்றவாளிகள் கைது செய்யப் பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண் டும். இதில் ஏதாவது சுணக்கம் ஏற்பட்டால் மீண்டும் தெருக்களில் இறங்கிப் போராட வேண்டியிருக்கும். இந்த உடனடி பிரச்னை தவிர நீண்ட நோக்கில் பார்க்கும்போது வேலையில்லா திண்டாட்டம் மாணவர் களை ஒருங்கிணைத்துப் போராட வைக் கும்!''

— ப்ரியன்

படங்கள்: சௌரா, ராஜன்

மையமாக இருக்க வேண்டும். வீட்டுக்குள் பூச்செடிகள் போலக் குழந்தைகளையும் வீட்டுக்கு வெளியே குழந்தைகள் போல பூச்செடிகளையும் வளர்க்க வேண்டும். வீடு என்றாலே மோட்சம் என்று பொருள். நாத்திகர்கள் பாஷையில் துன்பங்களிலிருந்து விடுதலை! அந்தச் சூழ்நிலை நிலவினால் அது இனிய இல்லம்.

காதில் விழுந்தவை !

பொங்கலூருக்கு மீண்டும் பொறுப்பு!



● நூலகங்கள் என்றால் புத்தகங்கள் கட்டாயம் தொலையும். அரசுக்குச் சொந்தமான நூலகங்களில், நூலகர்கள் ஓய்வு பெறும்போது, தொலைந்து போன புத்தகங்களுக்கான மதிப்பை, பிடித்துக் கொண்டுதான் மீதிப் பணத்தைக் கொடுப்பார்கள். இதன் காரணமாக நூலகர்கள் கணிசமான தொகையை அழ வேண்டியிருந்தது. இப்போது ஒரு மாற்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஓய்வு பெறும் எல்லா நூலகர்களிடமும், தொலைந்து போன புத்தகங்களின் மதிப்பைப் பற்றிக் கவலைப்படாமல் தலா இரண்டாயிரம் ரூபாய் பிடித்து விடுவது என்பதுதான் அது. இப்போதுகதை உல்டாவாகி விட்டது. 'எப்படியும் 2000 ரூபாய் பிடித்துக் கொள்ளப் போகிறார்கள் என்பதால் நூலகர்கள் சிலர் கலைக்களஞ்சியம், பொன்னியின் செல்வன் ஆகிய நூல்களை 'சுட' ஆரம்பித்து விட்டார்களாம்!

● அ.தி.மு.க. பிரமுகர்கள் சிலர் செல்வாக்கு மிக்க தி.மு.க. பிரமுகர்களோடு தொடர்பு வைத்துக் கொண்டு காண்ட்ராக்ட், லைசென்ஸ் என்று அனுபவிப்பதாக அம்மாவுக்கு தகவல்கள் போயிருக்கின்றன. இதில் ஆதியில் இருந்து கட்சியில் இருக்கும் ஒரு பிரமுகரைக் கூப்பிட்ட அம்மா, 'இடது – வலமாக' விளாசி விட்டாராம். "1998 பாராளுமன்றத் தேர்தலில் நாம் பா.ஜ.க.வை ஆதரித்த போது ஜனா. கிருஷ்ணமூர்த்தி 18,000 வாக்கு வித்தியாசத்தில்தான் தோற்றார். இப்போது பாலு இரண்டரை லட்சம் வோட்டு வித்தியாசத்தில் ஜெயித்திருக்கிறார். ஆளும் கட்சியிடம் பணத்தை வாங்கிக் கொண்டு நீங்களெல்லாம் பதுங்கிப் போனதால்தான் இத்தனை வித்தியாசத்தில் தி.மு.க. வென்றது" என்று சொன்னாராம் அம்மா. டி.டி.வி. தினகரனை வைத்து தென் சென்னையில் கூட்டம் போட்ட அந்தப் பிரமுகர், கே.கே. நகர் பகுதியையே அலம்பல் செய்ததும் அம்மாவின் கவனத்துக்கு போயிருக்கிறது. "நீயும் அவரும் ஒன்றாக ஜெயிலில் இருந்ததால் ரொம்ப நெருங்கி விட்டதாக நினைக்க வேண்டாம். கட்சியில் 'குழு' அரசியல் நடத்தினால் தொலைத்து விடுவேன்' என்றும் மிரட்டப்பட்டிருக்கிறாராம் அவர்.

● ஊட்டியில் இந்திப் படப்பிடிப்புக்கு இடம் கொடுக்கப்பட்ட விவகாரத்தில் மாட்டிக் கொண்டு வன இலாகாவை இழந்தார் பொங்கலூர் பழனிச்சாமி. ஏற்கெனவே 'ஹெவி' ஆக இருந்த துரைமுருகனுக்கு அந்த இலாகா கூடுதலாக ஒதுக்கப்பட்டது. ஆனால் அமைச்சரின் அடிவருடிகள் அந்த இலாகாவில் 'புகுந்து' விளையாடத் துவங்கினார்களாம். தாக்குப் பிடிக்க முடியாமல் திணறினார் நேர்மையான அந்த உயர் அதிகாரி. அவரின் ஒத்துழையாமையைப் பார்த்த உடன்பிறப்புக்கள் அமைச்சரிடம் போட்டுக் கொடுக்க, இப்போது மாற்றப்பட்டு விட்டார் அவர். இதற்கிடையில் டம்மியாக இருக்கும் பொங்கலூராருக்கு மீண்டும் வன இலாகாவையோ அல்லது வேறு நல்ல இலாகாவையோ கொடுக்க இருக்கிறார்களாம். தர்மபுரியில் நடந்த மாணவிகள் எரிப்பு விவகாரத்தில் பொங்கலூர், வேளாண்மை பல்கலைக்கழக மாணவ, மாணவிகளிடம் பேசி, பேச்சு வார்த்தைக்கு அழைத்து வந்த ராஜ தந்திரம் முதல்வருக்குப் பிடித்து விட்டதாம்.

— சஞ்சயன்

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 275/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 140/-; Overseas : Rs. 1000/- (Air Mail)


கல்கி
KALKI 20.2.2000
இலவச
இணைப்பு!
ஸ்வீட் ஹோம்
ஸ்பெஷல்!

சீமாரு பழைமை



இன்று உங்கள் வீட்டு வேலைக்காரி சமையலுக்கான கேஸை, வாஷிங் மெஷினை, மைக்ரோவேவ் அவனை உபயோகிக்கிறாள். மற்றும் ஒரு வேக்யூம் க்ளீனர்யுமா? ஒரு யூரோக்ளீன் வேக்யூம் க்ளீனரை அவளுக்குக் கொடுங்கள். எவரும் அதை உபயோகிக்கும்படி அவ்வளவு சுலபமானது மற்றும் உறுதியானது. கண்ணுக்குப் புலப்படாத தூசையும் அகற்றும் ஆற்றல் படைத்தது; அதோடு அலர்ஜி உண்டாக்கும் மைக்ரோஸ்கோபிக் தூசுக் கிருமிகளையும். கூடவே இதற்கான பரவலான இணைப்புகளைக் கொண்டு நீங்கள் உங்கள் வீட்டின் மூலை, முடுக்குகளை சுத்தம் செய்யலாம். யூரேகா ஃபோர்ப்ஸ் வழங்கும் யூரோக்ளீன். இது உங்களுடைய வேலைக்காரியிடமிருந்து அதிகபட்ச வேலைகளை செய்து வாங்கிட உங்களுக்கு உதவும்.

EUREKA FORBES LTD
YOUR FRIEND FOR LIFE

Visit us at : www.eurekaforbes.com

Euroclean
முழுமையான வீட்டுப் பராமரிப்புத் திட்டம்
சூப்பர் சுத்தத்தைப் பெற சூப்பர் சக்தி.

Open your door to health and hygiene. For a free demo in the comfort of your home, page your friend from Eureka Forbes on 9622-343434 or call **CHENNAI:** BURKIT ROAD: TEL: 4348978, 4338197. AMINJIKARAI: TEL: 6424579/5243. SAIDAPET: TEL: 2301152/53/54. T NAGAR: TEL: 8234721/4514. **COIMBATORE:** TEL: 433180, 454401. **ERODE:** TEL: 261397, 261501. **MADURAI:** TEL: 587728 / 216. **PONDICHERRY:** TEL: 372480, 372823. **SALEM:** TEL: 419422, 411235. **TIRUNELVELI:** TEL: 577363/574917. **TRICHY:** TEL: 461867, 464943, 414967. **NEYVELI:** TEL: 62379. **BANGALORE** : TEL: 222 4453 / 226 7746 / 552 2333. **HYDERABAD** : TEL : 784 0206 / 331 5451 / 756 7185. **MUMBAI** : TEL: 430 1725 /820 6060.

டெலி ஷாப்பிங்



• மைதிலி: டெலிஷாப்பிங்கிலிருந்து.

ஹலோ! சந்தேகம் தீர்ப்பீங்களா...?

சென்னை கோபாலபுரத்தில் உள்ள டி.எஸ்.என். (டெலிஷாப்பிங் நெட் ஒர்க்) என்ற இந்தியாவின் முன்னணி டெலிஷாப்பிங் நிறுவன விற்பனை நிலையத்தை நடத்தி வரும் மைதிலியுடன், டெலிபோனிலேயே டெலிஷாப்பிங் பற்றி உரையாடுகிறார் மைலாப்பூரைச் சேர்ந்த உஷா ராமகிருஷ்ணன்.

உஷா: வணக்கம். நான் அண்ணா நகரிலிருந்து உஷா பேசறேன். எனக்கு டெலிஷாப்பிங் பற்றி உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்.

மைதிலி: சொல்லுங்க. நான் தான், இந்த டெலிஷாப்பிங் ஷோரூமை கடந்த இரண்டரை வருடங்களாக நடத்திகிட்டு வரேன்.

உஷா: இந்த டெலிஷாப்பிங் என்கிற விஷயத்துக்கு, பொது மக்களிடம் எந்த அளவுக்கு வரவேற்பு இருக்கு?

மைதிலி: இந்தியாவைப் பொருத்த வரை, இந்த டெலிஷாப்பிங், மூணு வருடங்களுக்கு முன்னால்தான் அறிமுகமாச்சு. மற்ற நாடுகளில் முன்பே, இது ரொம்ப பிரபலமான ஷாப்பிங் முறை. அறிமுகமான புதுசுல, இதற்கு மிகவும் உற்சாகமான வரவேற்பு இருந்தது. மக்கள் டெலிவிஷன்ல பார்த்தவுடன், ஆச்சரியப்பட்டு, உடனே டெலிபோன் பண்ணுவார்கள். இப்போது, முன்னை விட, கொஞ்சம் குறைந்திருக்கிறது. ஆனாலும், வியாபாரம் டல் என்று சொல்ல முடியாது.



• உஷா: வீட்டிலிருந்து...

உஷா: வியாபாரம் குறைந்திருக்கிறது என்றால், அதற்கு என்ன காரணம்?

மைதிலி: முன்பு, டெலிஷாப்பிங்கின் மூலமாக மட்டுமே, ஐட்டங்களை வாங்க முடியும். வெளிக்கடைகளில் இவை விற்பனைக்குக் கிடைக்காது. எனவே, நல்ல சேல்ஸ். ஆனால் இப்போது, டெலிஷாப்பிங் நிகழ்ச்சியில் பார்க்கிற ஐட்டங்கள் ஏறத்தாழ எல்லா கடைகளிலுமே கிடைக்கின்றன. அதுவும் தவிர, இப்போது சிறு டவுன்களில் கூட, டி.எஸ்.என். பொருள்களுக்கான ஆர்டர்களைக் கொடுத்து, வாங்கிக் கொள்ளுகிற சௌகரியம் வந்து விட்டது. விரிவான நெட்ஓர்க் காரணமாக, வியாபாரம் விரிவடைந்து பரவலாகிவிட்டது.



''என்னண்ணே, மத்த கட்சிக்காரங்க எல்லாம் நல்ல வேட்பாளரை நிறுத்தியிருக்காங்க... நம்ம தலைவர் மட்டும் ஒரு கவர்ச்சி நடிகையை வேட்பாளரா அறிவிச்சிருக்காரு...?''

''கேட்டேனே, நடக்கப் போறது... 'இடைத்' தேர்தல்தானே அப்படின்றார்!''

– குடந்தை கே. சிட்ரா

உஷா: என்ன மாதிரி ஐட்டங்கள் டெலிஷாப்பிங்கில் விற்பனை செய்யப்படுகின்றன?

மைதிலி: அதற்குக் கணக்கே கிடையாது. புதிய புதிய பொருள்கள் அறிமுகமாகிக் கொண்டே இருக்கும். எந்த ஒரு சமயத்திலும் ஐம்பது, அறுபது ஐட்டங்கள் விற்பனைக்கு இருக்கும். இரண்டு விதமாக இவற்றைப் பிரிக்கலாம். முதலாவது வீட்டு உபயோகப் பொருள்கள், இரண்டாவது ஹெல்த் சம்பந்தப்பட்டவை. வீட்டு சாதனப் பொருள்களில் கிச்சன் ஐட்டங்கள் தான் பிரதானம். ஹெல்த் ஐட்டங்களில், உடல் இளைக்க வைக்கும் உடற்பயிற்சிக் கருவிகள் தொடங்கி, காந்தச் சிகிச்சை முறைக்கான கருவிகள் வரை அடங்கும்.

உஷா: இருந்தாலும், நேரில் கடைக்குப் போய், அந்தப் பொருள் எப்படி வேலை செய்கிறது என்று பார்த்து, அதுபோலவே வேறு ஏதாவது இருக்கிறதா என்று பார்த்து, விலையை ஒப்பிட்டு, எது குறைவோ அதை வாங்குவதுதானே நமது சுபாவம்?

மைதிலி: அது சரி. ஒரு ரகசியம் சொல்லட்டுமா? ஜனங்கள் சுபாவம் என்பது எல்லாம் ஒருபுறம் இருந்தாலும், ஒரு பொருளை டெலிவிஷனில் காட்டும் போது, ஒரு குடும்பத்துக்கோ, மற்றும் உபாதைகள் உள்ளவருக்கோ, அது எத்தனை மகத்தான சௌகரியம் என்று பார்த்த உடனேயே தோன்றும்படியாகத்தான் காட்டுகிறார்கள். உதாரணமாக, ஒரு உபகரணத்தைக் காட்டி மிகச் சுலபமான உடற்பயிற்சி மூலம், உடல் பருமனைக் குறைத்து விடலாம் என்று டீ.வியில் காட்டுகிறபோது, நாமும் அது போல, எடை குறைய வேண்டும் என்ற ஆர்வம் பொங்குகிறது. அதுதான் அவருடைய ஒரு பலவீனமான தருணம் என்று சொல்லலாம். அந்த தருணத்தில், அவரது விரல்கள். மற்ற எல்லா கட்டுப்பாடுகளையும் மீறி டெலிபோனைச் சுழற்றி ஆர்டர் கொடுத்து விடுகின்றன. முதல் தடவை ஒன்றை டீ.வியில் பார்க்கிறபோது ஏற்படுகிற உயர்வான நம்பிக்கை தான் எங்கள் வியாபாரத்தின் அஸ்திவாரம்.

உஷா: டீ.வியைப் பார்த்துவிட்டு என் சிநேகிதி ஒருத்தி ரொட்டி செய்கிற 'ரொட்டி மேக்கர்' வாங்கினாள். ஆனால், அதில் சரியாகவே ரொட்டி வரமாட்டேன் என்கிறது. இப்போது 'வாங்கினது வேஸ்ட்' என்று அவளது கணவர் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

மைதிலி: டீ.வியில் செய்வதைப் பார்த்துவிட்டு, வீட்டில் அதுபோலவே செய்வது என்பது சுலபமில்லை. அதற்குக் கொஞ்சம் பயிற்சி வேண்டும். ரொட்டி மாவு உருண்டையை, ரொட்டி மேக்கர் தட்டின் நடுவில் வைக்காமல், சற்றே உட்புறம் தள்ளி வைக்க வேண்டும். இரண்டு கைப் பிடிகளையும் சரியாக ஒரே நேரத்தில் அழுத்த வேண்டும். இதற்குக் கொஞ்சம் பயிற்சி வேண்டும். அது இல்லாவிட்டால், உங்கள் சிநேகிதி மாதிரி பயன்படுத்த முடியாமல் போய்விடும்.

உஷா: இந்த விவரமெல்லாம் டெலிபோனில் ஆர்டர் கொடுத்து, பொருள் வாங்குகிறவர்களுக்கு எப்படித் தெரியும்?

மைதிலி: அதனால்தான் சிலர் 'உங்

களுக்கு ஷோ ரூம் இருக்கிறதா? என்று கேட்டு, நேரில் வந்து, செயல்முறை விளக்கம் பார்த்து, திருப்தியடைந்த பின்னரே வாங்கிச் செல்கிறார்கள். டெலி ஷாப்பிங் பண்ணினவர்கள், பிரச்னை என்று டெலிபோன் செய்தால், அவர்களை அந்தப் பொருளை நேரில் எடுத்துக் கொண்டு வரச் சொல்லி, பயன் படுத்தும் முறையைச் சொல்லிக் கொடுக்கிறோம். சிலருக்கு, அதன் பின்னரும் கூட, ஒரு குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள், அதனைத் திரும்ப எடுத்துக் கொண்டு, தேவைப் படும் வேறு எதையாவது கொடுத்திருக்கிறோம். ஓரிரு கேஸ்களில், பணத்தைத் திரும்பக் கொடுத்ததும் உண்டு.

உஷா: டெலிஷாப்பிங் நிகழ்ச்சியில் காட்டப்படும் ஐட்டங்களின் விலை அதிகமாக இருக்கிறதே! அதே பொருள்கள், அதைவிட குறைந்த விலையில் வெளிக் கடைகளில் கிடைக்கின்றனவே!

மைதிலி: டெலிஷாப்பிங் நிகழ்ச்சிகளில் காட்டப்படும் பொருள்களையே வேறுபல நிறுவனங்களும் தயாரித்து விற்பனை செய்கின்றன. எனவே, ஒன்றுக்கொன்று விலை வித்தியாசம் இருக்கவே செய்யும்.

உஷா: ஒரு தடவை, ஏதோ ஒரு பொருளை, ஒரிஜினல் விலை ரூபாய்499 என்று சொல்லிவிட்டு, தள்ளுபடியில் 99 ரூபாய்க்குத் தருவதாய்க் குறிப்பிட்டார்கள். இதுபோன்ற தள்ளுபடி எப்படி சாத்தியம்?

மைதிலி: அந்த விளம்பரம் டி.எஸ்.என். நிகழ்ச்சியில் வெளிவரவில்லை. உண்மையில் அதுபோன்ற ஒரு தள்ளுபடி சாத்தியமே இல்லை. எங்களது போட்டிக் கம்பெனிதான் அப்படிச் செய்தது.

உஷா: உண்மையில் தொண்ணூற்று ஒன்பது ரூபாய்க்கு ஒரு பொருளை விற்க முடியுமானால், அதை இதற்கு முன்பு நானூற்று தொண்ணூற்று ஒன்பது ரூபாய்க்கு விற்றது அக்கிரமம் இல்லையா! இல்லையெனில், தொண்ணூற்று ஒன்பது ரூபாய்க்கு விற்கும் பொருளின் தரம் குறைவாக இருக்கும். அப்படித்தானே!

மைதிலி: மிகவும் சரி!

உஷா: டெலிஷாப்பிங்கில் பொருள்களை வாங்குபவர்கள் யார்? வசதியான குடும்பத்தினர்தானே! கையில் பணமிருந்தால் போனை எடுத்துச் சுழற்ற வேண்டியது தானே!

மைதிலி: அதுதான் இல்லை. முக்கால் வாசிப்பேர், மத்திய தரவர்க்கம்தான். அதனால்தான், டெலிபோனில் ஏகப்பட்ட கேள்விகள் கேட்பார்கள். அதிலும் குறிப்பாக, ஹெல்த் சம்பந்தப்பட்ட பொருள்கள் என்றால், அது உண்மையிலேயே நிவாரணம் அளிக்குமா? என்பதில் தொடங்கி, வாங்கி திருப்தி அடைந்த வாடிக்கையாளர் விலாசம் வரை எல்லாம் கேட்பார்கள். வாங்கும் ஆர்வத்தில்தானே கேட்கிறார்கள். நாங்களும் பொறுமையுடன் விளக்கம் தருவோம். டெலி ஷாப்பிங்கிற்கு பிரகாசமான எதிர்காலம் இருக்கிறது நம் நாட்டில் என்பது மட்டும் நிச்சயம்.

தொகுப்பு: **பாரதி மௌலி**

படங்கள்: **சௌரா**



ஸ்வீட் ஹோம் என்பது...

ரபிபெர்னார்ட் :

நான் சொந்தமாய் வீடு ஒன்று வாங்க விரும்பியபோது, முத்துக்குமாரசாமி என்ற வங்கி அதிகாரியை ஆலோசனை கேட்டேன். அவர், "வீடு என்பது ஓர் உணர்வு பூர்வமான விஷயம். பெண் பார்த்துக் கல்யாணம் செய்து கொள்வது போல! அவசரம் காட்டக் கூடாது. எந்த ஒரு இடத்தில் உங்களுக்கு வார்த்தைகளில் சொல்ல முடியாத, உணர்வுபூர்வமான, பூர்வஜென்ம பந்தம் போல ஓர் உணர்ச்சி தோன்றுகிறதோ, அந்த இடத்தையே தேர்ந்தெடுங்கள்" என ஆலோசனை கூறினார். அதன்படி நான் தேர்ந்தெடுத்து வாங்கியதுதான் தி. நகரில் உள்ள என் ஃபிளாட்.

பெயிண்ட் ஜோட்ட நீ!



வண்ணங்களுக்கும், மனித குணங்களுக்கும் ஏதேனும் தொடர்பு இருக்க முடியுமா என்று கேட்பவர்களுக்காகவே, ஏஷியன் பெயின்ட்ஸ் ஒரு குறிப்பு வெளியிட்டிருக்கிறார்கள். விளக்கங்கள் வேடிக்கையாகவும், விநோதமாகவும் இருக்கின்றன என்பது மட்டுமல்ல, சுவாரசியமாகவும் இருக்கின்றன!

சிவப்பு/ஆரஞ்சு: போர்க்குணம்; அதீத உணர்ச்சியைத் தூண்டி விடும். தடாலடியாகச் செயல்பட வைக்கும். *(பர்வேஸ் முஷரஃபுக்கு இந்தக் கலர்தான் பிடிக்கும்போல!)*

மஞ்சள்: ஜாலியான மூடு உண்டாக்கும். மகிழ்ச்சியான மன நிலை தரும். *(குஷ்வந்த் சிங்குக்குப் பிடிச்ச கலரோ?)*

பச்சை: புத்துணர்ச்சியூட்டும்; மனத்தை அமைதிப்படுத்தும். ஆனால் இதுவே அழுத்தமாய் இருந்தால் சோம்பலைத் தூண்டும். *(வாஜ்பாய் வீட்டில் அழுத்தமான பச்சை இல்லாமல் இருந்தால் சரி!)*

நீலம்: மயக்க உணர்வைத் தூண்டும். மனச் சஞ்சலத்தை மாற்றிச் சாந்தப்படுத்தும். *(பிரேமானந்தா ஆசிரமத்தில் அள்ளிக்கே அடிச்சிருக்கலாம்!)*

ஊதா: பகட்டான உணர்வை, 'என்னை விட்டா வேற ஆள் யார் இருக்கா?' என்கிற மிதப்பை ஏற்படுத்தும். *(ஜெ. வீட்டுல எல்லா ரூமுமே இந்தக் கலர்தானோ?)*

வெள்ளை: சிந்தனையைத் தூண்டும். ஆனா ரொம்பவும் அதிகமானா கண்ணுக்கு ரோதனைதான். *(மூப்பனார் வீட்டுல இருக்குமோ?)*

கறுப்பு: பெருந்தன்மை, நிதான குணம்... எல்லாம் சரி. ஆனா மனசைச் சோர்வாக்கிடும். *(கி. வீரமணிக்கு இதுதான் புடிக்கும்னா நாம என்ன பண்ண முடியும்?)*

ந்துக்குப்

ம்?



சாம்பல்: பாரபட்சமில்லாத, சரிசமமான மனநிலை. ஆனா இதுவும் மனசு தளர்ந்து போகச் செய்யும். (நாடாளுமன்ற சபாநாயகர் பாலயோகி வீட்டில் நிச்சயம் இந்தக் கலர்தான் அடிச்சிருப்பாங்க!)

● அழுத்தமான வர்ணங்கள், அறையின் நீள – அகலத்தைக் குறைத்துக் காட்டும் என்றால், வெளிறிய, மிதமான வர்ணங்கள் அதையே அதிகமாக்கிக் காண்பிக்கும்.

● வர்ண கார்டில் சின்னச் சின்னக் கட்டமாக நீங்கள் பார்க்கும் வர்ணம், சுவரில் அடித்த பிறகு பார்த்தால் வேறு மாதிரியாகத் தெரியும்! வர்ணத்தை நாலு சுவர்களுக்கும் அடித்து, ஸீலிங்கில் வெள்ளையும் அடித்து விட்டுப் பார்த்தால், கார்டில் பார்த்த மாதிரி வர்ணத்தின் அடர்த்தி இருக்காது. சுமார் 50 சதவிகித பிரகாசத்தோடுதான் இருக்கும் என்பதை, கடைக்காரர் சொல்கிறாரோ இல்லையோ, நாமாகப் புரிந்துகொண்டு விடுவது நல்லது!

● லைட் நிறங்கள்; பரப்பளவைத் தூக்கலாகக் காண்பிக்கும். உள்வாங்கிய பகுதிகளைக் குறைத்துக் காட்டும். சுவரில் வெளியே துருத்திக்கொண்டு தூண் மாதிரி தெரிகிற இடங்களைச் சமனாகக் காண்பிக்கும்.

● உள் சுவருக்கு ரொம்ப டார்க் கலர் அடித்தால் சுவரே தனியாக முந்திக்கொண்டு வருகிற மாதிரி தெரியும். ஜாக்கிரதை!

● லைட் கலர்? நீங்கள் ஏதோ ஏரோப்ளேனுக்குள் இருக்கிற மாதிரி தோன்றும்.

● சூடான கலர்கள் எவை தெரியுமா? சிவப்பு, ஆரஞ்சு, மஞ்சள். கூலான கலர்? பச்சை, நீலம் தவிர – இவை சார்ந்த வண்ணங்கள்!

— வாதூலன்

வியாபாரிகளை பயமுறுத்தும் சுபிக்ஷா!

வீட்டு உபயோகப் பொருள்களைக் குறைந்த விலையில் வாங்க வேண்டுமானால் சுபிக்ஷாவுக்குத்தான் செல்ல வேண்டும். இது மக்களுக்குத் திருப்தி என்றாலும் பிற வியாபாரிகளுக்கு அதிருப்தியையும் அதிர்ச்சியையும் தந்துள்ளது.

எல்லாப் பொருள்களுமே அதில் போட்டிருக்கிற விலையை விட குறைந்த விலையில்! அதுவும் மூன்று ரூபாயிலிருந்து பத்து ரூபாய் வரை! எங்கே? சுபிக்ஷாவில். சென்னையில் மொத்தம் 41 சுபிக்ஷாக்கள் இருக்கின்றன.



இது எப்படி சாத்தியம்?

"ஏன் சாத்தியமில்லை?'' என்று கேட்கிறார், சுபிக்ஷா சூப்பர் மார்க்கெட்டுகளின் டைரக்டர் ஆர். சுப்ரமணியன்.



• சுப்ரமணியன்

"உதாரணத்துக்கு ஒன்று சொல்கிறேன். சென்னையில் மட்டும் ஒவ்வொரு மாதமும் 80,000 ஹார்லிக்ஸ் (500 கிராம் எடை) பாட்டில்கள் விற்பனையாகின்றன. அதில் பத்தாயிரம் பாட்டில்கள் எங்கள் சுபிக்ஷாவில்தான் விற்பனையாகின்றன. மீதமுள்ள 70,000 பாட்டில்களை, சென்னையிலுள்ள சுமார் 20,000 கடைகள் மொத்தமும் சேர்ந்து விற்கின்றன!

"காரணம் என்ன? நாங்கள் எங்கள் லாபத்தைக் குறைத்து விற்பதுதான். மற்றவர்கள் சுமார் 12% லாபம் வேண்டும் என்று விற்கிறார்கள். நாங்களோ நான்கு அல்லது ஐந்து சதம் லாபம் கிடைத்தாலே போதும் என்று விற்கிறோம். அவ்வளவுதான். இதில்மூடுமந்திரம் ஏதும் இல்லை! இப்படி நாங்கள் விற்பதால் பிற கடைகளில் நூறு ரூபாய்க்குத்தான் வியாபாரம் ஆகிறது என்றால், எங்களுக்கு ஆயிரம் ரூபாய்க்கு ஆகிறது. அதனால் பிற கடைக்காரர்கள் பெறும் லாபத்தின் அளவை நாங்களும் பெற்று விடுகிறோம். இதில் எங்களுக்கும் திருப்தி; வாடிக்கையாளர்களுக்கும் திருப்தி!"

லாபம் குறைவாக வைத்து விற்கப்படுவதால் பொருள்களின் தரத்தில் ஏதாவது வித்தியாசம் இருக்குமா?

"கிடையவே கிடையாது. நாங்கள் விற்கிற பொருள்களில் எதுவுமே எங்கள் சொந்தத் தயாரிப்பு இல்லை. பெரிய பெரிய கம்பெனிகள் தயாரிக்கும் பொருள்களை – பிற கடைகளில் விற்கப்படும் பொருள்களைத்தான் நாங்களும் விற்கிறோம்."

சென்னை தவிர, தமிழகத்தின் பிற பகுதிகளில் சுபிக்ஷாவை ஆரம்பிக்கும் எண்ணம் இருக்கிறதா?

"இருக்கிறது. அதற்கான பணிகளும் நடந்து கொண்டிருக்கின்றன. இன்னும் சில மாதங்களில் மதுரை வரையிலான நகரங்களில் எங்கள் கடைகள் தொடங்கப்பட இருக்கின்றன."

சுபிக்ஷாக்களில் குறைந்த விலையில் பொருள்கள் கிடைப்பதால், பெருகும் வாடிக்கையாளர்களைக் கண்டு, பிற கடைக்காரர்கள் சுபிக்ஷாவின் மேல் எரிச்சலடைந்திருக்கிறார்களாம்!

— சார்லஸ்

ஒரு டாக்டர் பெண்ணும் ஒரு டாக்டர் பையனும் காதலிக்கிறார்கள். திருமணத்தை முடித்துக் கொண்டு ஆராய்ச்சிக்காக அமெரிக்கா போகிற திட்டத்துடன், பெற்றோருக்குக் காதலை அறிவிக்கிறார்கள்– வெறும் நாலு நாள் அவகாசத்துடன். முதலில் எதிர்ப்பு; முடிகிறபோது சுபம் என்பது ஒரு வரிச் சுருக்கம்.

ஆனால், பெண்ணின் தந்தை ஒரு இந்திராகாந்தி பக்தர்; காதலன் ஒரு சீக்கியர் – அவனது சகோதரன் ஆபரேஷன் ப்ளூ ஸ்டாரில் இறந்தவன் என்றொரு நெருக்கடி. தவிர, இருக்கவே இருக்கிறது ஜாதி (அல்ல, ஸாதி.) நடுவே, பத்தாங்கிளாஸில் உங்கள் மகளைக் காதலித்தேன் என்று சொல்லிக் கொண்டு வரும் ஒரு இனிய வில்லன். (சொந்த 'ஸாதி')



எண்ணினால் சுமார் இரண்டு டஜன் பாத்திரங்கள் தேறக்கூடிய ஒரு மெகா கிச்சனாக இருக்கிறது கதை.

கே. பாலசந்தரின் புத்தம் புதிய டெலிஃபிலிம் 'காதல் வாங்கி வந்தேன்' ராஜ் டீவியில் பிப். 25, 26 தேதிகளில் இரு பாகங்களாக ராத்திரி 8 மணிக்கு ஒளிபரப்பாகப் போகிறது.

டெலிஃபிலிம்களுக்கு மார்க்கெட்டிங் பிரச்னை இருப்பது பற்றியும் சினிமாக்களை டீவியில் பார்த்துப் பழகிவிட்ட மக்கள், பிரத்யேகச் சின்னத் திரைப்படங்களை எதிர்கொள்வதில் உள்ள சிக்கல்கள் பற்றியும் கொஞ்ச நாள் முன்பு கல்கியில் தீவிரமாகக் கவலை கொண்டு பேசிய அதே கைலாசம்தான் இதைத் தயாரித்திருக்கிறார்.

அழகான கொடைக்கானல், அதைவிட அழகான புது ஹீரோயின் தாமரை (கேபியின் 'ரயில் ஸ்நேகம்' அமுதாவையும் சிந்துபைரவி சுஹாசினியையும் காக்டெயில் செய்து உருவாக்கிய ஒரு ஹீரோயின்! அழுத்திக் கண்ணை மூடிக் கொண்டு ஒரு சிரிப்பு சிரிக்கிறார் பாருங்கள்; அத்தனை விக்கெட்டுகளையும் அப்படியே வீழ்த்தி விடுகிறார்.) மேலாக, சின்ன/பெரிய திரை சரித்திரத்தில் முதல் முறையாக ஒரு 'வெல் மெச்சூர்ட்' ஹீரோ!

அலட்டிக் கொள்ளாமல், எந்தப் பிரச்னையையும் கவனிக்கும் கணத்திலேயே ஜீரணிக்கும் லாகவத்தை முகத்தில் (அல்லது தாடியில்) காட்டுகிற அரவிந்த். ஒரு நம்பகமான அறிமுகம்.

இந்த இனிய டாக்டர் காதலர்கள் இணைவதில் 'தேவர் ஸாதி'



ஜெய்கணேஷ் அப்பாவுக்கு நான்கு மணி நேரப் படத்தின் கடைசி ஷாட் வரை எதிர்ப்பதற்கு - அந்த ஒன்றைத் தவிர வேறு காரணமே இல்லை. வேண்டுமானால் சொல்லலாம், வறட்டு கௌரவம்.

அதற்காக



கோப்பையிலே ஒரு புயல்!

ஓய்வொழிச்சல் இல்லாமல் நூறு குயர் வசனங்களைப் பேசிக் கொண்டே இருந்தால் எப்படி என்று 26ம் தேதி இரவு ரசிகர்கள் கொஞ்சம் முணுமுணுக்கப் போகிறார்கள். பாலசந்தர் என்பதாலேயே இதிலும் ஜெய் கணேஷுக்கு இரண்டு மனைவியரா என்று கேட்கப் போகிறார்கள், சீனியர் சிடிஸன்கள்.

அதெல்லாம் அவர் இஷ்டம். கேபியின் பிரத்யேக 'டச்' என்று சொல்ல, அந்தக் குழந்தை தீபிகாவின் பாத்திரவார்ப்பு தவிர வேறென்ன என்று கேட்பது - வேறு யாருமல்ல; நாமேதான்!



இரண்டு மணி நேரப் படமாக மட்டும் இருந்திருக்கலாம்; வசனங்களைக் கணிசமாகக் குறைத்திருக்கலாம் - என்பன போன்ற விமர்சனங்களும் ஒளிபரப்புக்குப் பின் பாலசந்தருக்கு வந்து சேரும்.

அதற்கு முன் நிறையப் பேர் சின்னத்திரை சினிமா எடுக்க ஆரம்பித்திருப்பார்கள்.

— ஔரங்கசீப்

ஹோமியோ, சித்தா, ஆயுர்வேத மருத்துவத்தால் குழந்தை பெறலாம்.

"மருத்துவத்தில் இன்று எத்தனையோ மருத்துவ விஞ்ஞானங்கள் வளர்ந்து இருந்தாலும் உலகில் குழந்தைச் செல்வம் இல்லாமல் இருப்பது என்பதை இறைவன் கொடுத்த வரம் என்று நினைத்து சில தம்பதிகள் முயற்சி செய்யாமலேயே காலம் கடத்தி வருகிறார்கள். அப்படியே சில தம்பதிகள் முயற்சி செய்தாலும் வெற்றிகரமாக சிகிச்சையளித்து குழந்தைப் பிறக்கச் செய்ய இந்தியாவிலோ, வெளிநாட்டிலோ சரியான டாக்டர்கள் இல்லை. ஆனால் நாங்கள் ஹோமியோ, சித்தா, ஆயுர்வேத மருத்துவத்தின் மூலம் ஆண் மலடு, பெண் மலடு கண்டறிந்து 90 சதவீதம் அளவிற்கு வெற்றிகரமாக சிகிச்சையளித்து குழந்தை பிறக்கச் செய்கிறோம்" என்று குழந்தைப் பிறக்க செய்வதில் முன்னணி டாக்டராக விளங்கி வரும் டாக்டர் அர்ஜுனா கூறுகிறார். இவரது மனைவி டாக்டர் V.A.ஆண்டாளும் சேர்ந்து மகப்பேறு உண்டாக சிகிச்சையளித்து வருகிறார். டாக்டர் அர்ஜுனா மேலும் கூறுவது:

"குழந்தைப் பெறாமைக்கு பல காரணங்கள் உண்டு. கணவனிடம் குறைபாடு இருக்கலாம். மனைவியிடமும் குறைபாடு இருக்கலாம். இதற்கு குழந்தை இல்லாத தம்பதிகள் சரியாக சிகிச்சையளிக்கும் டாக்டர்களிடம் சென்று சிகிச்சை பெற வேண்டும். ஆனால் நம் மக்களோ குழந்தை பிறப்பது கடவுள் செயல் என்று நினைத்து அரச மரத்தையும், வேப்ப மரத்தையும் சுற்றிக் கொண்டும் ஊர் ஊராகக் கோயில்களைச் சுற்றிக் கொண்டும் விரதமெல்லாம் இருந்தும் உடலை பாழாக்கிக் கொண்டு, தன் ஆஸ்திகளை ஆள தமக்கு ஒரு வாரிசு இல்லையே என்றும், கடைசி காலத்தில் நம்மை காப்பாற்றவும் பாதுகாக்கவும் மரணத்திற்கு பின் ஈமக்கிரியைகள் செய்யவும் ஒரு வாரிசு இல்லையே என்றும் ஏங்கி கொண்டும் இருக்கிறார்கள். இப்படி குழந்தையில்லாத தம்பதிகள் எங்களிடம் வந்தால் இவர்களுக்கு முக்கூட்டு மருத்துவ சிகிச்சையளித்து குழந்தைப் பிறக்கச் செய்கிறோம்.

எங்களிடம் சிகிச்சை பெற வருபவர்களில் ஆண்களில் 60 முதல் 70 சதவீதம் பேரும் பெண்களில் 30 முதல் 40 சதவீதம் வரையிலும் மலட்டு தன்மையுடையவர்களாக வருகிறார்கள். ஆண்களில் பலர் குறைப்பாடுகள் இருந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் பெண்களையே மலடி என்று சமூகத்தில் இழிவாகப் பேசுகிறார்கள். விந்து பரிசோதனை செய்வதற்குக் கூட சில ஆண்கள் முன் வருவதில்லை. இதனால் பெரும்பாலும் பெண்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள். எங்களிடம் சிகிச்சைக்கு வரும் ஆண்களிடம் உயிரணுக்கள் இருக்கிறதா என்று கண்டறிய விந்து பரிசோதனை செய்யச் சொல்கிறோம். பரிசோதனையில் சிலருக்கு உயிரணு உற்பத்தி அறவே இருக்காது. சிலருக்கு உயிரணு உற்பத்தி குறைவாக இருக்கும். இப்படிப்பட்டவர்களுக்கு எங்களுடைய ஆஸ்பத்திரியில் நாங்கள் தயார் செய்த ஹோமியோ, சித்த, ஆயுர்வேத முக்கூட்டு கலவை மருந்தை கொடுத்துச் சாப்பிடச் சொல்லி உயிரணு உற்பத்தியை அதிகரிக்கச் செய்து குழந்தை பிறக்கச் செய்கிறோம். **எங்களிடம் 4.12.99ல் செமன் டெஸ்ட் செய்து சிகிச்சைக்கு வந்த ஒரு ஆண் மகனுக்கு மொட்டிலிட்டி 5%ம், கவுண்ட் 2 மில்லியனும் இருந்தது. அதே ஆண் மகன் ஒரு மாத காலம் எங்களிடம் சிகிச்சை பெற்றதில் 26.1.2000 தேதியில் மொட்டிலிட்டி 60%, டோட்டல் கவுண்ட் 128 மில்லியனும் ரிசல்ட் உயர்ந்து இருந்தது. இந்த நபர் இதைக் கண்டு சந்தோஷமும் ஆச்சரியமும் அடைந்தார். இவர்களைப் போல் எத்தனையோ பேர் முக் கூட்டு மருத்துவத்தால் பலனடைந்து உள்ளார்கள்."**



உயிரணு உற்பத்தி ஆகியும், கருக்குழாய் அடைப்பு நீங்கியும் குழந்தை பெற்ற சென்னை மயிலாப்பூரைச் சேர்ந்த சித்ரா தம்பதிகள்

ஆண் மலடு:

ஆணுக்கு இளம் வயதில் புட்டாளம்மை வந்திருந்தாலும், அம்மை போட்டு இருந்தாலும் மஞ்சள் காமாலை நோய் வந்திருந்தாலும், டைஃபாய்டு ஜுரம் வந்திருந்தாலும் உயிரணு உற்பத்தி பாதிக்கப்பட்டு ஆண் மலட்டுத் தன்மை உண்டாகிறது. மேலும் ஆணுக்கு வாஸ் என்கிற இந்திரிய நரம்பு இல்லாமல் பிறந்து இருந்தாலும், 2 விதைக் கொட்டைகள் இல்லாமல் பிறந்திருந்தாலும் கருத்தரிக்க வாய்ப்பில்லாமல் போய் விடுகிறது. மேலும் உஷ்ணமான இடங்களில் வேலை செய்வதாலும் விதையில் அடிபட்டு இருந்தாலும், முறையற்ற செக்ஸ் பழக்க வழக்கங்களில் ஈடுபட்டு இருந்தாலும், தன்னைவிட வயதில் மூத்த பெண்களிடம் உறவு கொள்வதாலும், மது மேக நோய் என்ற நோய் வந்திருந்தாலும் ஆண் மலட்டுத் தன்மை ஏற்பட்டு விடுகிறது. இப்படி பிரச்னைகள் உள்ள ஆண் மகனுக்கு டாக்டர் அர்ஜுனா

தம்பதி முக்கூட்டு மருத்துவ சிகிச்சையின் மூலம் மேலே கண்ட குறைபாடுகளை நீக்கி குழந்தை பிறக்கச் செய்கிறோம் என்கிறார்கள்.



கருக்குழாய் அடைப்பு நீங்கி குழந்தை பெற்ற ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த சம்பூர்ணம் தம்பதிகள்

பெண் மலடு:

தன் கணவனின் விந்து மூலம் கருத்தரிக்க முடியாமல் இருந்து வரும் பெண்களைத்தான் பெண் மலடு என்கிறோம். ஒரு பெண் தக்க வயதடைந்தும் பருவம் அடையாமல் இருந்து வருவதாலும், கருப்பை சினைப்பை போன்ற உறுப்புகள் சரியான வளர்ச்சி இல்லாமல் இருந்தாலும், வெள்ளை வெட்டை போன்ற நோய்கள் இருந்தாலும் கருத்தரிக்க வாய்ப்பில்லை. மாத விடாய் 4 வாரத்திற்கு ஒருமுறை ஒழுங்காக வந்தால்தான் கருத்தரிக்க முடியும், சில பெண்கள் காலமறிந்து கணவனோடு தாம்பத்திய உறவு கொள்ளாமல் இருந்து விடுவதால் இவர்ளுக்கும் கருத்தரிக்காது. சில பெண்களின் கருப்பை ஆண்களின் உயிரணுகளை ஏற்றுக் கொள்ளாத நிலையிருந்தாலும் பெண்களுக்கு தாம்பத்திய உறவில் நாட்டமில்லாமல் இருந்தாலும் (அ) உறவில் அளவுக்கு அதிகப்படியான நாட்டம் இருந்தாலும் கருத்தரிப்பது பிரச்னையாகக் கூடும். சில பெண்களுக்கு சதா வயிற்றுவலி இருக்கும். இவர்களுக்கும் கருத்தரிப்பது பிரச்னையாகக் கூடும். சில பெண்கள் இரத்த சோகை நோயால் பாதிக்கப்பட்டு உடம்பு உருக்குலைந்து இருப்பதாலும் (அ) கொழுப்பு சத்து மிகுந்து உடலில் சதை போட்டு இருந்தாலும் (அ) காச நோயால் உடல் பாதிப்பு அடைந்திருந்தாலும் அல்லது கருப்பையின் உள் சுவர்கள் கரடு முரடு தட்டி இருந்தாலும் (அ) பிறப்பு உறுப்புகள் தொடர்பான ஹார்மோன் சுரப்பிகள் சரியாக சுரக்காமல் இருந்தாலும் (அ) பிறப்பு உறுப்புகள் சரியாக இயங்காமல் இருந்தாலும் கருத்தரிப்பது நிகழாமல் போகலாம். மேலும் கருப்பையிலும், சினைப் பையிலும் கட்டிகள் உண்டாகி இருந்தாலும் கருமுட்டை உற்பத்தி உண்டாகாமல் இருந்தாலும் அல்லது கருமுட்டை வெடிக்காமல் இருந்தாலும் கருத்தரிக்க இயலாது போகலாம்.

சில பெண்கள் திருமணமான முதலாண்டில் கருத்தரித்து விடுவதால் குழந்தை பெற வெட்கப்பட்டுக் கொண்டு கருச்சிதைவு செய்து விடுகிறார்கள். இதனால் கருக் குழாயில் உள் பாகங்கள் பாதிப்படைந்து கருக்குழாயில் சதையடைப்பு உண்டாகிறது. கருக்குழாயில் சதையடைப்பு உண்டாவதால் பெண்கள் கருத்தரிக்க முடியாமல் இருந்து விடுகிறார்கள். இந்த குறைபாடுகளை நீக்க முக்கூட்டு மருந்துகளின் மூலம் சிகிச்சையளித்து கருக்குழாய் அடைப்புகளை நீக்கி, கருத்தரித்து குழந்தைப் பிறக்கச் செய்கிறோம்.

டாக்டர் A.அர்ஜுனா, டாக்டர் V.A. ஆண்டாள் மருத்துவ மனையில் தமிழ் நாட்டில் எல்லா மாவட்டங்களிலிருந்தும் இந்தியாவில் அனைத்து மாநிலங்களிலிருந்து வந்தும், அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், கனடா, ஸ்விட்ஸர்லாந்து, நியூசிலாந்து, சவூதி அரேபியா, துபாய், குவைத், பக்ரைன், ரியாத், ஓமன், ஸ்ரீலங்கா, மலேசியா, சிங்கப்பூர், ஜெர்மனி போன்ற வெளிநாடுகளிலிருந்து வந்தும் சிகிச்சைப் பெற்று பலனடைந்து வருகிறார்கள். டாக்டர் A.அர்ஜுனாவுக்கு வைத்திய துறையில் 40 ஆண்டுகாலம் அனுபவம் உண்டு. அவரது சிகிச்சையில் தற்போது கோயம்புத்தூரில் தங்கராஜ் தம்பதிகளுக்கு டிசம்பர் '99ல் ஆண் குழந்தை பிறந்துள்ளது. கடந்த ஆண்டு துபாயில் தமிழ்நாட்டைச் சேர்ந்த நர்ஸ் ஒருவருக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது. ராமேஸ்வரத்தில் சைக்கிள் கடை உரிமையாளர் ஒருவருக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது.

நீங்களும் புத்திரபாக்கியம் அடைய டாக்டர் A. அர்ஜுனா, டாக்டர் V.A. ஆண்டாள் அவர்களை அணுகவும்.



• டாக்டர் அர்ஜுனா, டாக்டர் V.A. ஆண்டாள் அர்ஜுனா

நவீன வைத்தியாலயா ஹோமியோபதி – சித்தா – ஆயுர்வேத மலடு நீக்கும் ஆஸ்பத்திரி

சென்னையில் சனி, ஞாயிறு, திங்கள் ஆகிய தினங்களில் டாக்டரை சந்திக்குமிடம் நெ.9 நெற்குன்றம் பாதை, (மாநில தலைமை தேர்தல் அலுவலகம் எதிரில்) 100 அடி ரிங் ரோடு, வடபழனி, சென்னை – 600 026 போன் : 4833464 எஸ்டிடி. 044

செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் டாக்டரை சந்திக்குமிடம் நெ. 7 இராமய்யர் தெரு, வந்தவாசி, வீடு : நெ. 29, பிராமணர் தெரு, வந்தவாசி, திருவண்ணாமலை மாவட்டம் – 604 408 போன் : 25208 எஸ்டிடி. 04183

Advt

அழகான கண்ணாடி சாண்ட்விச்!

பழைய காலத்து சர்ச்க
ளின் ஜன்னலகளில்
பார்த்திருக்கிறோம் - வண்ணமூட்டிய
கண்ணாடி

ஜன்னல்களை...
'ஸ்டெய்ண்ட் கிளாஸ்'
என்று பெயர்.

இவை
புழக்கத்திலிருந்து மெல்ல
விடைபெற்று
விட்டன.
இப்போது



சிங்கப்பூரில் கிடைக்கும் செயற்கைச் செடி - இலைகளை, இரு ஃபைபர்கிளாஸ் துண்டுகளுக்கு இடையே (சாண்ட்விச்) வைத்து, ஒட்டி விடும்போது, மெலிதான பச்சை வண்ணத்தில், செடியோடு இணைந்த இலைகள் கண்ணாடியின் இருபுறமும் வெகு நளினமாகத் தெரிகின்றன!

"நீங்கள் எந்த மாதிரி டிசைன்கள் தந்தாலும், அதே போலச் செய்து கொடுக்க முடியும். சுவாமி படங்கள் வேணுமானால், அவற்றையும் போட்டுத் தர முடியும். வண்ணத் துணியை சாண்ட்விச் பண்ணித் தர முடியும். ஏன், சாதாரண பிரம்பைக் கூட சாண்ட்விச் பண்ணித் தயாரித்திருக்கிறோம்!" என்கிறார் சக்தி எண்டர்பிரைஸஸ் சந்திரா சேஷன். பிரம்பு வரிகள், தொட்டு விடலாம் போல் கண்ணாடிக்குள் அப்பட்டமாகத் தெரிந்தன!







ஃபைபர் கிளாசில் ஸ்டெயின்ட் கிளாஸ் போன்றே வண்ண டிசைன்களும், வண்ணத் தகடுகளும் கிடைக்கத் தொடங்கியிருக்கின்றன. நமது விருப்பத்துக்கேற்ப 'சான்ட்விச்' செய்து டிசைன்களை உருவாக்கிக் கொள்ளவும் முடிகிறது.

கண்ணாடியை விட விலை குறைவு என்பது மட்டுமல்ல, இவை உடையவும் உடையாது!

"கதவில் பாதிப் பகுதிக்கு இந்த ஃபைபர்கிளாஸ் டிசைனைப் பொருத்தி வீட்டின் அழகையே கூடுதலாக்கலாம்.





'வார்ட்ரோபு'களுக்கும் அழகாயிருக்கும். பாத்ரூம் கதவுகளுக்கு ஏற்றவை!'' என்கிறார், சந்திரா சேஷன்.

"இதன் கனம் குறைந்தபட்சம் 2 எம்.எம். அதிகபட்சம் 6 எம்.எம். பெரிய ஹால் இருந்தால் பார்ட்டிஷன் போல வைக்கலாம். வீட்டு விசேஷங்களின்போது, அப்படியே மடித்து வைத்து, முழு ஹாலைப் பயன்படுத்திக் கொள்ளலாம். செயற்கைக் கூரையாக, ஃபால்ஸ் ஸீலிங்குக்குக் கூட இதை உபயோகிக்கலாம்.''

செயற்கைக் கூரை அமைப்புக்கு, ப்ளெயின் ஃபைபர்கிளாஸ் உபயோகிக்கலாமாம். பல வண்ணங்களில் இவை கிடைக்கின்றன.

"பெரிய பங்களாக்களோ, தனி வீடுகளோ கட்டுகிறவர்கள் என்று இல்லை. சின்ன ஃப்ளாட்டுகள் கட்டுகிறவர்கள் கூட, ஒரு சின்ன இடத்தையாவது அழகுபடுத்துகிறோம் என்று எங்களைத் தேடிப் பிடித்து வாங்கிக் கொண்டு போகிறார்கள்!''



என்கிறார் சந்திரா சேஷன்.

— சாருகேசி





வட்டமேஜை

ஃபீல்டிங் இல்லாத ஆட்டம்!

✉ தலையங்கம் நெத்தியடியாக இருந்தது. அரசியல் என்றாலே சந்தர்ப்பவாதம்தான் என்று ஆகிவிட்டதே! மூப்பனாரின் அரசியல் பா.ஜ.கவைக் கவிழ்க்க வோட்டுப் போட்ட போதே தடுமாற ஆரம்பித்து விட்டது; அப்புறம் கிருஷ்ணசாமி போன்றவர்களுடன் மூன்றாவது அணி அமைத்து நாடாளுமன்றத் தேர்தலில் கிடைத்த மோசமான தோல்வியால் தடுமாற்றம், தள்ளாட்டமாகி விட்டது! இப்போதைய தடம் மாற்றம் அதன் தொடர்ச்சிதானே?
அந்தியூர், மு. தவசியப்பன்.

✉ பந்தை வீச வேண்டிய முறையில் மூப்பனார் வீசியிருந்தால் 'ஜெ' சிக்ஸர் அடித்திருக்க முடியுமா? எதிரணியைத் தோற்கடித்து வெற்றி அடைய ஃபீல்டிங் மிக மிக முக்கியம். இது இல்லாத ஆட்டம் மக்களால் எப்படி விரும்பப்படும்?
விழுப்புரம்,
வை. வெங்கடேசன்.

✉ பெங்களூர் பாலுவின் விதவிதமான வண்ணச் சேர்க்கைகள் வெளிப்படுத்தும் 'சமாதானம்' வியக்க வைக்கிறது.
புணே, ஜெ. ரஜினி ராம்கி.

✉ அடேயப்பா, டைரி எழுதுவதில் இத்தனை நல்ல பயன்களா! ஏதோ வாங்கினோம். இரண்டு மூன்று நாட்கள் எழுதினோம்; பிறகு தூக்கிப் போட்டோம் என்று இதுவரை நினைத்துக் கொண்டிருந்தவர்கள் அனைவரையும் (நான் உட்பட) சிந்திக்க வைக்கும் அருமையான கட்டுரை 'வந்தாச்சு பிப்ரவரி; என்னாச்சு டைரி?'
திருப்பரங்குன்றம், டி.கே. சுப்பிரமணியன்.

✉ ஆயுள் தண்டனைக் கைதி இரா. கண்ணனின் கதையைப் படித்ததும் நெக்குருகிப் போனேன். ஒரு மனிதன் வீறுகொண்டு எழ இடம் முக்கியமில்லை; மனம்தான் முக்கியம் என்பதைக் கண்ணன் நிரூபித்திருக்கிறார். ஆரோக்கியமான சிந்தனைகள் சிறையிலும் மலரலாம் என்பதை இவர் கதை வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கிறது.
மொரட்டுப்பாளையம்,
க.நா. இராஜேஸ்வரன்.

✉ 'ஜாஸ் – ஜூஸ்' கட்டுரை, நாங்களே அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பிரசன்னா, கென்வுட், அல்போன்சா ஆகியோருடைய அருமையான இசை நிகழ்ச்சியைக் களித்தது போன்ற உணர்வை ஏற்படுத்தி விட்டது.
சென்னை – 59, ரோஸரியோ ரவிச்சந்திரன்.

✉ பேட்டி காண்பவரிடமே கேள்வி (அதுவும் பதிலே கூற முடியாது)யா? அப்புறம் தான் யாரெனப் பார்த்தால் நெல்லை மேயர்! அல்வா நகரத் தாயல்லா? அதுதான் உங்களுக்கே தந்து விட்டார் அல்வா, நல்லாவே!
நெய்வேலி, எஸ். இந்துமதி.

✉ இங்கேதான் வாக்குறுதிகளை அள்ளி விடுகிறார்கள் என நினைத்திருந்தேன். மாஸ்கோ மேயரின் சபதத்தைப் படித்தவுடன் அவர்களும் நம் அரசியல்வாதிகளுக்குச் சளைத்தவர்களில்லை எனத் தெரிந்து கொண்டேன்!
மயிலாடுதுறை, எல். துர்காதேவி.

✉ மேலை நாடுகளின் கலாசாரமே நமது கலாசாரமாய் மாறிவரும் இக் காலத்தில் நமது பாரம்பரியப் பழக்க வழக்கங்கள் பற்றி ஆய்ந்து, ஆவணப்படுத்தி வரும் நாட்டார் வழக்காற்றியல் துறையும், அதன் இயக்குநர் ஃபாதர் ஜெயபதியும் மிக நல்ல பணி செய்து வருகிறார்கள். அரசும் இதனை ஊக்குவிக்க வேண்டும்.
சென்னை – 63, எம். ஞானசேகரன்.

அட்டையில் : ரோஜா கண்ணன், ஜனனி
வண்ணப்படம் : ப்ரவீண்குமார்

சென்னை சூழலுக்கு கார்ப்பெட் வேண்டாம்!



"சில பெரிய ஃப்ளாட்டுகளில், குறிப்பாக வெளி மாநிலத்தவர் வாங்கும் ஃப்ளாட்டுகளில் தனியாகக் குழந்தைகள் அறை ஒதுக்கு கிறார்கள். வண்ண வண்ணமாக மிக்கி மவுஸ் படங்கள் எல்லாம் வரைந்து, அவர்கள் கைக்கு எட்டுகிற உயரத்தில் ஷெல்புகள் அமைத்து அவற்றில் பொம்மைகளையும் வைத்து விடுவார்கள். ஆனால் அது மேற்கத்திய நாகரிகம். நம் ஊரில் அந்த இடத்தை அப்படி வீணாக்க விரும்புவதில்லை. அமெரிக்காவில் அவர்கள் எதிர்காலத்தைப் பற்றி நினைப்பதில்லை. நாம் எப்போதுமே எதிர்காலத்துக்கும் சேர்த்து சிந்திக்கிறோம். குழந்தைக்கென தனியாக அறை ஒதுக்குவதையும், அதற்காக அலங்காரங்கள் செய்து சிங்காரிப்பதையும் நாம் வீண் என்று கருதுகிறோம்.

"நம் சென்னை சீதோஷ்ண நிலைக்கு கார்ப்பெட் தேவையில்லை. ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட அறையாக இருந்தால் மட்டுமே கார்ப்பெட்டுகள் உகந்தவை. இல்லையென்றால் அழுக்கும் தூசியும் சேர்ந்து ஒருவித துர்நாற்றம் உண்டாகும்."

– சொன்னவர் : 'அல்ட்ரா இன்டீரியர்' நிறுவனத்தைச் சேர்ந்த ராம்கோபால்.

கேட்டவர் : எஸ்.வி.என்.

பேராசிரியர் பெரியார்தாசன்

பெரியாரைக் குறுக்கக் கூடாது!



பெரியாருடைய பார்வை என்பது எப்போதுமே தனிமனிதர்களோடு நின்று போனதல்ல. அவர் எதைப் பற்றிப் பேசினாலும் சிந்தித்தாலும் அதில் சமூகப் பார்வை தான் இருக்கும். இன்னும் சொல்லப் போனால் அவருடைய சிந்தனை முழுவதும் மானுடம் முழுமைக்குமான ஒன்றாகத்தான் இருந்தது.

மதிய வேளைகளில் வாழைப் பழத்தைத் தயிருடன் கலந்து சாப்பிடுவார் பெரியார். அப்போது கூட அவரது சிந்தனை சாப்பாட்டில் இருப்பதாகச் சொல்ல முடியாது. சமூகம் பற்றியதாகவே இருக்கும்.

அவர், உழைக்கும் மக்களைப் பாத்தார். உழைக்கும் அவர்களுக்கு உடைமைகள் ஏதும் இல்லை என்பதைப் பார்த்தார். அவர்களுக்கு சமூகத்தில் ஒரு மரியாதை இல்லாதது மட்டுமல்ல; அவர்கள் இழிவு செய்யப் படுவதையும் பார்த்தார். இது கண்டுதான் அவர் கோபப்பட்டார். அந்தக் கோபமும் தனிமனிதர்கள்பால் திரும்பியதேயில்லை. மனிதனை மனிதன் இழிவுசெய்வதற்கு என்ன காரணம், யார் காரணம் என்பதைக் கண்டார். அதைத்தான் சாடினார். அதற்குக் காரணமானவர்கள் மேல்தான் கோபப்பட்டார்.

இதற்கு, லக்ஷ்மிபுரம் யுவர் சங்கத்தில், 'பார்ப்பனத் தோழர்களே' என்கிற தலைப்பில் பெரியார் பேசிய பேச்சைச் சொல்லலாம். "உங்கள் மேல் எனக்கென்ன வெறுப்பு? சமூகத்திலுள்ள இழிநிலைகள் போக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தானே நான் விமர்சிக்கிறேன். நீங்கள் உங்களை உயர்ந்தவர்களாகச் சொல்லிக் கொள்கிறீர்கள். உங்களை 'மாடலாக' வைத்துக் கொண்டு தான் பிற ஜாதியினருக்குள்ளும் உயர்வு தாழ்வு என்கிற இழிநிலை தொத்திக் கொண்டு விட்டது. பார்ப்பனர் - பார்ப்பனர் அல்லாதார் சண்டையை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்து விட வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

நான் நாத்திகனில்லை - 6

நீங்கள் எல்லாம் தெரிந்தவர்கள். அதனால் நீங்களல்லவா சீர்திருத்தக் கருத்துக்களை முன்னின்று எடுத்துச் செல்ல வேண்டும். அப்படிச் செய்தால் இந்தத் தமிழ்நாடு முழுவதும் சுபிட்சமாக இருக்குமே! இதற்குத்தானே நான் விமர்சனம் செய்து கொண்டிருக்கிறேன். மற்றபடி உங்கள் மேல் எனக்கு தனிப்பட்ட முறையில்



என்ன வெறுப்பு இருக்க முடியும்? நான் சொல்வதைச் சிந்தித்துப் பாருங்கள்...'' என்று பேசினார் பெரியார்.

சமூக ஒற்றுமைக்கும் நன்மைக்கும் எதிராக இருந்தவர்களைத்தான் பெரியார் விமர்சித்தார். அதாவது அவர்களுடைய கருத்துக்களை விமர்சித்தாரே தவிர, தனிப்பட்ட முறையில்* அவர் அனைவரிடமும் மிகுந்த அன்பு வைத்திருந்தார் என்பதற்கு ராஜாஜிக்கும் அவருக்கும் இடையில் இருந்த நட்பைச் சொல்லலாம். வேறு யாருடைய மரணத்துக்காகவும் பெரியார் அப்படி குலுங்கிக் குலுங்கி அழுததேயில்லை. எங்கே அவரும் தீக்குளித்து விடுவாரோ என்று நினைக்கிற அளவுக்கு அவர் அழுததை நான் அருகிலிருந்து பார்த்தேன்.

'குடியரசு' பத்திரிகையை நாத்திகத்தைப் பரப்புவதற்காகவும் சுயமரியாதை உணர்ச்சியை ஊட்டுவதற்காகவும் காங்கிரஸ்காரர்களின் – இந்துமதவாதிகளின் பித்தலாட்டங்களை வெளிக்கொணர்வதற்காகவும்தான் பெரியார் ஆரம்பித்தார். அதனால் இதுபோன்ற விஷயங்களைச் செய்பவர்களில் ஒருவரை வைத்துத்தானே அதை ஆரம்பித்திருக்க வேண்டும்? ஆனால் இதில் எதிலுமே தொடர்பில்லாத, இந்து மதத்தைக் காப்பவராகவும் சைவ சித்தாந்தத்தைப் போற்றுபவராகவும் திருநீறு பூசி, உருத்திராட்சக் கொட்டை அணிந்து கொண்டிருந்தவருமான ஞானியார் சுவாமிகளைக் கொண்டுதான் குடியரசு பத்திரிகையைத் தொடங்கினார்.

இதற்கு என்ன அர்த்தம்? எதிர்க் கருத்துக் கொண்டிருந்தவர்களைப் பெரியார் தமக்கு எதிரியாகக் கருதவில்லை என்றுதான் அர்த்தம். ஞானியார் சுவாமிகளைக் கொண்டு தொடங்கி தமது பத்திரிகைக்குப் பெரியார் விளம்பரம் தேடிக் கொண்டார் என்று இதைக் கொச்சைப்படுத்தி விடக் கூடாது. தனிப்பட்ட முறையில் அனைவரிடமும் பெரியார் அன்பு வைத்திருந்தார் என்றுதான் பார்க்க வேண்டும்.

பெரியாருடைய இல்லத்தில் ஒருமுறை தங்கியிருந்த போது திரு.வி.க. குளித்து விட்டு வந்தாராம். அவர் குளித்துவிட்டு வந்த போது, திருநீற்றுப் பையுடன் பெரியார் நின்று கொண்டிருந்தாராம். திரு.வி.க.வே வியந்து போய்க் கேட்டபோது, "நான் பூசிக் கொள்ள மாட்டேன் என்றாலும் பூசிக் கொள்கிற பழக்கமுடைய உங்களுக்கு நான் உதவி செய்வதில் என்ன தவறு?'' என்று பதில் சொன்னாராம் பெரியார்.

இதே போல் குன்றக்குடி ஆதீனத்துக்குச் சென்றிருந்த போது, ஒருவர் உணர்ச்சிவசப்பட்டு பெரியாரின் நெற்றியில் திருநீறு பூசி விட்டாராம். அதற்காக குன்றக்குடி அடிகளார் பெரியாரிடம் வருத்தம் தெரிவிக்க, "அதனாலென்ன? அவர் உணர்ச்சியை நான் மதிக்கிறேன். அதனாலேயே திருநீறு பூசிக் கொள்வது சரியென்றும் நான் ஒப்புக் கொண்டு விட மாட்டேன். அவர் உணர்ச்சி அது. என் உணர்ச்சி இது!'' என்று சொன்ன பெரியார், அந்தத் திருநீறை அழிக்காமலேயே வைத்துக் கொண்டிருந்தாராம்.

ஆக, பெரியாருடைய உணர்ச்சி எது பொறுத்துக் கொள்வது. இதைத்தான் நான் பெரியாரின் வாழ்க்கையிலிருந்து முதலில் கற்றுக் கொண்டேன். இதுதான் வைத்திய ராமய்ய வாத்தியாரை இழிவுபடுத்த வேண்டும் என்கிற என் எண்ணத்தை மாற்றியது எதுவாக இருந்தாலும் அது இந்தச் சமூகத்துக்கு – மானுடத்துக்கு எந்த வகையில் பயன்படும் என்று எண்ணிப் பார்க்கும் பழக்

கத்தை ஏற்படுத்தியது.

உண்மையிலேயே பெரியாரியம் என்பது என்ன? இதற்கு ஒரே வரியில் பதில் சொல்ல வேண்டுமானால் 'மானுடத்தின்பால் அவர் கொண்டிருந்த அன்பு' என்று சொல்லி விடலாம்!

ஆனாலும் பெரியார் என்றவுடன் அனைவரின் நினைவுக்கும் சட்டென்று வருவது அவரது நாத்திகவாதமான கடவுள் மறுப்புத்தான். அதை உறுதிப்படுத்துகிற வகையில் பெரியாருக்குச் சிலை வைப்பவர்களெல்லாம், அவரது சிலைக்குக் கீழே, 'கடவுளைக் கற்பித்தவன் முட்டாள்; பரப்புகிறவன் அயோக்கியன்; வணங்குகிறவன் காட்டுமிராண்டி' என்று கல்வெட்டாக எழுதி வைத்து விடுகிறார்கள்!

இந்த வாசகங்கள் இல்லையென்றால் பெரியாரே இல்லை என்பது போலவும் இதைச் சொல்வதற்கு மட்டும்தான் – இது ஒன்றேதான் அவரது முதன்மையான கொள்கை என்பது போலவும் இப்போது சித்திரிக்கப்பட்டுக் கொண்டிருப்பதும் கோஷம் போட்டுக் கொண்டிருப்பதும் எனக்கு மிகவும் விசித்திரமாக இருக்கிறது.


கடவுள் மறுப்பு என்பதும் படைப்புக் கடவுள் என்று ஒன்று இருக்க முடியாதென்பதும் பெரியாரின் வாதங்களில் ஒன்றுதான் – அவரது போதனைகளில் ஒன்றுதான் என்றாலும் அதுவே அவரது கொள்கை அல்ல. அந்த வாசகங்கள் அவரால் சொல்லப்பட்டதுதான் என்றாலும் எந்தச் சூழ்நிலையில் அவர் அப்படிச் சொன்னார்? எதற்காகச் சொன்னார்? அப்படிச் சொன்ன பிறகு அதையே மீண்டும் மீண்டும் அவர் வலியுறுத்தினாரா?

இந்தக் கேள்விகளுக்கான விடைகளைத் தெரிந்து கொண்டால்தான் மானுடத்தின் மேல் அவர் கொண்டிருந்த அன்பு எப்படிப்பட்டதென்று புரியும். ஒப்பிட முடியாத அளவுக்கு அன்புமயமான அவரை, எத்தனை குறுகியவராகச் சித்திரித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதும் புரியும்!

சரி, கடுமையான வார்த்தைகளைக் கொண்ட அந்த வாசகங்களை எதற்காகத்தான் சொன்னார் பெரியார்?

"உடலாலும் உள்ளத்தாலும் உணர்வாலும் யாரையுமே புண்படுத்தக் கூடாது" என்று எங்களுக்கான பயிற்சி முகாம்களில் போதனை செய்த பெரியார், அப்படிச் சொன்னதற்கு ஒரு வலுவான காரணம் இருக்க வேண்டாமா?

(தொடரும்)



''ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருக்கிறாள்ங்கிறதை ஒப்புத்துக்கறேன்! அதுக்காக நான் ஆபீசிலே சம்பளம் வாங்கும் போது நீ பின்னாலே வந்து நிக்கணுமா?''



''அந்த பஸ் கண்டக்டரை கலியாணம் பண்ணிக்கிட்ட நம்ப அஞ்சலை ரொம்ப கொடுத்து வச்சவ!''

''அப்படியா?''

''பின்னே? பீச்சுக்கு போகலாமா– சினிமா போகலாமான்னு எது கேட்டாலும் உடனே 'ரைட், போகலாம்'னு சொல்லிடறாரே!''



"உங்க ஆபீஸிலே தீ பிடிச்சிருக்குன்னு எப்படி கண்டு பிடிச்சீங்க?"

"குமாஸ்தாக்களும் பியூன்களும் அதிசயமா சுறுசுறுப்பா அங்கேயும் இங்கேயும் ஓடிட்டிருந்தாங்களே!"

– மெலட்டூர் விசுவநாதன்

கிரகப்பிரவேசம்

புறாக்களில் எதுவாவது திரும்பி வந்ததா என்று போன சந்திப்பில் சௌந்தரபாண்டி கேட்டான். இப்போதும் கேட்பான். நான் என்ன பதில் சொல்வது?

என் பழைய சைக்கிளுக்கு எண்ணெயும் கிரீஸும் போட்டுத் துடைத்துக்கொண்டிருந்த என் பார்வை புறாப் பெட்டி இருந்த பக்கம் போயிற்று. அதன் பொந்துகள் வெறிச்சோடி ஒரு வருஷமாகப் போகிறது.

என் பார்வை விலகி, விரிசல் விட்டு ஓடு இறங்கி சரிந்து விழத் தயாராயிருந்த ஐந்தங்கண வீட்டின் மீது விழுந்தது. இன்னும் ஒரு வாரத்தில் அதுவும் போய் விடும். அடுத்துள்ள குழிக் கிணற்றுப் போக்கு வழி கடந்து மாட்டுத் தொழுவம்.

அங்கே அடுப்பு கட்டிக்கொண்டிருந்தார்கள். கோட்டை அடுப்பு. நாளை மறுநாள் கிரகப்பிரவேசம். சாப்பாடு ஏழெட்டுப் பந்தியாவது நடக்க வேண்டுமே!

மறுநாள் அடுப்பை அகற்றி விட்டால் இனி கட்ட அங்கே மாடுகள் இல்லை.





எல்லாம் போய்விட்டன. எப்பவோ!

புறாக்கள் மீது கூட அக்கறையுள்ள சௌந்தர பாண்டிக்கு இந்த விடுமுறையில் நிறைய கேள்விகள் இருக்கின்றன. எச்சமிட்டு எச்சமிட்டு, புது காங்கிரீட் வீட்டை அசுத்தம் செய்யும் என்று கோழிகளுக்குக் கூட விடை கொடுத்தாகி விட்டது.

சௌந்தர பாண்டி சவூதியில் இருந்து வந்திருக்கிறான். சஹாராவெல்லாம் சுற்றி விட்டு வருகிறான். கெய்ரோ, பெய்ரூட். கார்ட்டூம்... இன்னும் எங்கெங்கோ...

அவனும் நானும் மாடு மேய்ப்புத் தோழர்கள். 'படிச்சப் புள்ளைங்கன்ற கெருவம் இல்லாம காட்டுக்குக் கூளுப் பொணாயத் தூக்கிட்டு மாடு ஓட்டிக்கிட்டு டிக்காணா போட்டு ரவ்வு தங்கற புள்ளைங்க' என்ற கிராமத்து மரியாதைக்கு உரியவர்கள்.

நாங்கள் இருவரும் ஒன்றாகத் திரிவோமே தவிர ஒத்துப் போனதே இல்லை. அவன் முற்போக்கு. நான் பிற்போக்கு. அவன் நாத்திகன். நான் ஆத்திகன். அவன் ஆக்ரோஷம்... நான் அசமஞ்சம்.

அவன் முரடன். நான் சாது. அவனுக்கு சாகசம், வேகம், மாற்றம் வேண்டும். நான் எதிர்மாறு.

"ஏங்க, ஊருக்கா, போப் போறீங்க?" என் சிந்தனைச் சரட்டை என் மனைவி அறுத்தாள். திரும்பிப் பார்த்தேன்.

அவள் முகத்தில் கிரகப் பிரவேசக் களையும் சுறுசுறுப்பும் மின்னின. ஒத்திகையாக ஒரு புதுப் பட்டுப் புடைவை கட்டியிருந்தாள்.

அவள் கேட்ட ஊர் ஒரு கி.மீ தள்ளியிருக்கும்

வையவன்

எங்கள் கிராமம். ஊரை விட்டு ஒதுங்கி நிலத்தில் எங்கள் வீடு.

"ஆமாம்..." என்றேன்.


"ஒங்க இஷ்டக்காரு சவுந்தர பாண்டி வந்திருக்காராமே, அவங்க வீட்டிலேதான் கெரகப் பிரவேசத்துக்கு பசுவும் கன்னும் ஓட்டியாரச் சொல்லணும்!"

"ஏன்... சின்னப்பு கொல்லையிலே சொல்லிட்டு வந்தனே!" என்று ஆச்சரியமாகக் கேட்டேன்.

"அவங்க மாட்டுக்கு வவுத்தால போவுதாம்... சௌகரியம் இல்லேண்ணுட்டாங்க" என்றாள்.

நான் அதிர்ச்சியுற்றேன்.

இருக்க முடியாது. இது சாக்குப் போக்கு.



"ஆச்சர்யமா இருக்கே! உன் வீட்ல இப்பல்லாம் சண்டை சத்தமே கேட்கறதில்லையே!"

"அதையேன் கேட்குறே, மூப்பனாரையும், மேடத்தையும் பத்தி மாய்ந்து, மாய்ந்து பேசறதுக்கே என் மனைவிக்கும் என் அம்மாவுக்கும் நேரம் போதலே!"

– மிஸ்டர் எக்ஸ்

கிராமம் நான் கட்டிய இரண்டு மாடி வீட்டுக்கு அதிருப்தி தெரிவிக்கிறது.

'வேஸ்ட்' துணியால் கைக் கறைகளைத் துடைத்துக்கொண்டே "கேட்டுப் பாக்கறேன்" என்றேன்.

"அப்படியே இன்னொரு தபா ஒங்க தங்கச்சி வீட்டுக்காரர்கிட்டே மறக்காம வரச் சொல்லிட்டு வாங்க" என்று முத்தாய்ப்பு வைத்துவிட்டு, அவள் நகர்ந்தாள். அவரிடம் முறுக்கு தீர்ப்பது உன் பொறுப்பு என்று எச்சரிக்கை ஓடிய முக பாவம்.

என் பார்வை மீண்டும் ஓடு இறங்கி சரிந்து விழத் தயாராய் இருந்த பழைய வீட்டின் மீது திரும்பியது. உள்ளே சில பானை சட்டிகளும் பழங் கடங்களும்தான் மிச்சமிருந்தன. இறந்த காலம். அவ்வளவு மட்டும் இல்லை.

ஐந்து சகோதரிகள்... ஆறு அத்தைகள்... அண்ணன் தம்பி என்று மூன்று தலைமுறையின் சிரிப்பும் அழுகையும் குதூகலமும் கோப தாபங்களும், உல்லாசமும், உவகையும், உறைந்து போன மௌனம் அங்கே வெறிக்கிறது.

உலக்கை ஓசை, யந்திரக்கல் ஓசை, தயிர் மத்தின் ஓசை... என்னென்ன ஓசைகள்... எவ்வளவு சிரிப்பு ஒலிகள்... பாட்டோசைகள்...

சடேரென்று நகரத்தின் இழவை இரும்புக் கதவு மூடிய பிறகு, என்ன ஒரு நிசப்தம்! கிராமம் என் மாடி வீட்டு வளர்ச்சியை அன்னியமாக, அருவையாகப் பார்ப்பது போல அந்த நிசப்தத்தின் உதாசீனம் என்னை உறுத்திற்று.

கிணற்றடியில் சோப்புப் போட்டுக் கை கழுவி விட்டு வீட்டுக்குள்ளே உடை மாற்றப் போனேன். சாஸ்திரோக்தமாக கிரகப்பிரவேசம் நடக்காததால் ஒரே அறையில் எல்லாக் குடும்பச் சாமான்களும் குவிந்து கிடந்தன.

"மாடி ரூம்ல சுண்ணாம்பு அடிக்கற மேஸ்திரி ஏனோ தானோண்ணு அடிக்கிறார்! ஒரு பார்வை பாத்துட்டுப் போறீங்களா?" என்றாள் மனைவி.

மேஸ்திரி கந்தசாமி. காட்டிலே மேய்ச்சலுக்கு மாடு ஓட்டிச் செல்லும் காலத்தில் அவன் வேறு மந்தையோடு வருவான்.

"டே சொண்டிக் பைய்யா" என்றுதான் என்னை அழைப்பான். எனக்கு இடது கைப் பழக்கம்.

"போடா கோணவாயா" என்று பதிலடி கொடுப்பேன். அவனுக்கு கோணல் வாய். எல்லாம் அப்போது.

இப்போது அவனை நான் அதிகாரம் செய்து வேலை வாங்க வேண்டும்! திரும்பி என் மனைவியை முறைத்தேன். எல்லாம் இவளால்! இந்த முறைப்பு ஜம்பமெல்லாம் வேண்டாம் என்று அவள் பதிலுக்கு முறைத்தாள்.

ஒன்று தோன்றியது.

மறைமுகமாகப் பெண்கள் தான் 'மாடி வீடுகளைக் கட்டுகிறார்கள். வீடு மாடி என்று வலியுறுத்துகிறார்கள். ஆடு, மாடு, கோழி, புறா, உறவுகள் என்று எதன் அவசியத்தையும் அநாவசியத்தையும் அவர்கள்தான் நிர்ணயிக்கிறார்கள்.

"நீயே பாத்துக்க!" என்று உஷ்ணமாகச்

சொல்லிவிட்டு வெளியே வந்து சைக்கிள் எடுத்தேன்.

சாலைக்குப் போகும் பாதையில் சற்று அதைத் தள்ளிக்கொண்டு நடக்கும்போது மேஸ்திரி கந்தசாமி குரல் கேட்டது.

''வாத்தியாரே! ஊர்ப் பக்கமாப் போறியா?''

திரும்பிப் பார்த்தேன்.

இரண்டாவது மாடி அறைச் சுவரில் குச்சு மட்டையைத் தட்டிக் கொண்டு அவன் தெரிந்தான். வயசுக்கு முந்திய வயோதிகம். வழுக்கை. முகச் சுருக்கம். வறுமை.

''ஆமாம்.''

''வர்றப்போ கொமார்சாமி கடையிலே ஸ்பெஷல் மாதா பீடி ஒரு கட்டும் தீப்பெட்டியும் வாங்கியார முடியுமா?''

பழைய தோழன். இயலுமா என்று பவ்யமாகக் கேட்கிறான்.

''வாங்கிணு வர்றேன்'' என்றேன்.



சைக்கிள் ஏறி ஒரு பெடல் மிதித்த பின்னால் சாலைக் காற்றின் உரசலும் அரச மரச் சலசலப்பும் என்னைப் புதுப்பித்தன. நல்லவேளை இன்னும் அவை என்னை அந்நியப்படுத்தவில்லை.

சாலை இந்த ஆறு மணி மாலையில் நிசப்தமாக இருந்தது. மேய்ச்சல் முடிந்து வயிறு நிறைந்த மந்த கதியில் நடைபோடும் மாட்டு மந்தைகளின் குளம்போசை இல்லை. ஒரு பட்டாளம் போகும் பூட்ஸ் ஒலி போல் பத்து நிமிஷம் கேட்கும் அந்த ஓசை போய் வெகு காலமாயிற்று.

மேய்க்க மாடுகள் இல்லை. ஆட்கள் இல்லை. புல் இல்லை. காடுதானா என்று கேட்கிற அளவு காடு போய் விட்டது. மரங்கள் இல்லை. மழை இல்லை.

எதிரில் ஒன்றை ஒன்று முந்தும் வெறியில் ஒரு மொபெட்டும் ஒரு மோட்டார் பைக்கும் வந்தன சீறிக் கொண்டு.

நான் ஓரம் ஒதுங்கினேன்.

என்னென்ன நஷ்டங்கள்!

கிரகப் பிரவேசத்திற்கு ஒரு பசுவும் கன்றும் தேடி இந்த அலை அலைய வேண்டிய நஷ்டங்கள்... அதுவும் தொழுவம் நிறைய மாடு இருந்த வீட்டில்!

''பொலம்ப ஆரம்பிச்சுட்டியே'' என்றான் சௌந்தரபாண்டி. போன முறையே!

''கிராமம் காங்க்ரீட் சமாதி ஆயிட்டு வருது'' என்று சொன்னேன். அப்போது வீடு கட்டும் நச்சரிப்பை என் மனைவி தொடங்கவில்லை.

''முன்னேற்றம்'' என்றான்.

''எந்த விலையில்?'' கேட்டேன்.

''விலைகளைப் பற்றி உனக்கேன் கவலை? முடிந்தால் கலந்து கொள். இல்லை வேடிக்கை பார். அதுவும் முடியவில்லையானால் ஓரம் கட்டு. உன் ஓட்டு வீட்டில் உட்கார்ந்து மோட்டு வளையைக் கொண்டாடு'' என்றான். சமயத்தில் இப்படி சொல்லால் சுடுவான்.

''உறவுகள் சிதைந்து விட்டன'' என்று அரைக் குரலில் சொன்னேன்.

''அது உன் பார்வை. அடுத்த தலைமுறை வேறு மாதிரி நினைக்கலாம். உன் மகன் வேறுவிதமாகப் புலம்பலாம்''

''அவனும் பொலம்பத்தான் வேணுங் கறியா?'' என்று நான் கேட்டேன். சிரித்தான்.

''புலம்பல் பொது விதி. அதுதான்

ஸ்வீட் ஹோம் என்பது...

இல. கணேசன் :
வாசலில் மாக்கோலம், மாடவிளக்கு, துளசி மாடம், வழவழ திண்ணை, திண்ணையின் பக்கவாட்டில் காவிப்பட்டை, காற்றோட்டம், சுத்தமான பராமரிப்பு, பூஜை அறை; சுவரில் குறைவான, மனத்துக்கு நிறைவான படங்கள். ஆடும் ஊஞ்சல் இவையெல்லாம் இனிய இல்லத்திலே இடம்பெற்றிருக்க வேண்டும். ஆனால், இவை மட்டும் போதாது. வாசலில் மிதியடிகளை, வரிசையாகக் கழற்றி விடும் பழக்கம். எவர் வரினும் இன்முக விசாரிப்பு, உபசரிப்பு, சப்தம் போட்டுப் பேசாத நபர்கள். தன் வீட்டுக்கு மட்டும் கேட்கும்படியாக ஒலிக்கும் டி.வி., வானொலி. அதிகாலைப் பொழுதினை சப்தத்தினால் நாசம் செய்யாத அமைதி, குப்பை, எச்சிலுக்குத் தனியிடம், பொருள்கள் அதனதன் இடத்தில் வைக்கும் பழக்கம் இவையெல்லாமும் தேவை.



இனி வீடு கட்டுவதற்கு முன்பே 'வர்சுவல் ரியாலிடி' முறையில் கணிப்பொறி பிம்பங்கள் அமைத்து சௌகரிய-அசௌகரியங்களை 'அனுபவித்து'ப் பார்த்து வரைபடத்திலேயே மாற்றங்கள் செய்து விடலாம்! அஃப்கோர்ஸ், வீட்டை வாடகைக்கு விட்டால் குடித்தனக்காரர் ஒழுங்காய் வாடகை தருவாரா என்பதை மட்டும் 'வர்சுவல் ரியாலிடி' காட்டித் தராது!

— குல்லு

தேடலின் தாய் மொழி."

"எனக்குத் தேடல் இல்லை. அவசியமில்லை."

"தப்பு. நீ இழந்ததை... இருந்ததைத் தேடறே! கிராமம் இரவலை.... இல்லாததைத் தேடுது!"

"ரெண்டு பேருமே கண்டுபிடிக்கப் போறதில்லே!"

"எப்படிச் சொல்றது? ஒரு படியில் இருந்து அடுத்து இன்னொரு படி. ஒவ்வொண்ணும் கண்டுபிடிப்புதான். முன்னேயோ பின்னேயோ எறங்கியோ ஏறியோ."

"நீ மாறிட்டே சௌந்தர பாண்டி!"

"நீ கூடத்தான்."

"எப்படி?"

"என்னைப் புரிஞ்சுக்கிறயே."

அவன் அன்று சொன்னது ஆருடமா?

வெறும் மனைவி நச்சரிப்பு... சுலபமாகக் கிடைத்த சொஸைட்டிக் கடன், இடிந்து வருகிற ஓட்டு வீட்டின் எச்சரிக்கை, இவை மட்டும் இரட்டை மாடி வீடு கட்டத் தூண்டுகோல்களாய் விடுமா?

கால மாற்றத்தின் வித்துக் கருவை எந்தப் பறவையோ கொண்டு வந்து என் மனவெளியில் போட்டிருக்கக் கூடும். வித்து முளைத்து வீடாகி இருக்கிறது.

வினையும் எதிர்வினையும் விளைவும் எதிர் விளைவும் இப்போது வருத்திப் புண்ணியம் இல்லை. குடிசைகளும் ஓட்டு வீடுகளும் குறைந்து வருகிற கிராமத்தில் நானும் ஓர் அந்நியன். எனக்கு நானே அந்நியன்.

இது ஒரு குற்ற உணர்வின் அந்தரங்க சோகம். பகிரப் போனால் "நீங்களும் ஒங்க தத்துவமும்! அதான் மூணு தலமொறயா குனிஞ்ச தலை நிமிராம இந்தக் கதி" என்றாளே என் மனைவி அதுதான் பதிலடியாக வரும்.

கவலையில்லை. குறைந்த பட்சம் சௌந்தரபாண்டியிடம்.

அவனைச் சந்தித்து சௌக்கியம் விசாரித்து கிரகப்பிரவேச அழைப்பிதழ் கொடுத்து, சடங்கிற்குப் பசுவையும் கன்றையும் ஓட்டி வரச் சொல்லிவிட்டு, அவன் புதிதாக வாங்கி வந்திருந்த காமிராவைப் புகழ்ந்த பின், அவன் தோள் மேல் கை போட்டு, அவன் வீட்டுப் புழக்கடை வேப்ப மரத்தடியின் சுமைதாங்கிக் கல்லில் அமர்ந்த பின்பு சொன்னேன்.

அவனிடம் சிரிப்பு குறைந்திருந்திருந்தது. 'டாப் லைட்' வெளிச்சத்தில் மீசை தடிப்பில் இம்முறை ஒரு கடுமையின் கூடுதல். அனுபவக் கோடுகள் ஓடிய கன்னம்.

"சுய முரண்பாட்டின் போராட்டமா?" என்றான்.

"தப்பா சரியா?" கேட்டேன்.

"நீ கட்டினது சரின்னு சொல்வேன்னு தானே கேக்கறே?"

"இல்லே."

"தப்புன்னு சொன்னா என்ன பண்ணுவே?"

"கேட்டுப்பேன்."

"இடிச்சுடவா போறே?"

"இல்லே."

"அப்ப விடு. மனசுக்கு மாறுதல் வேணும். விடு... அது மறுபடியும் மாறிடும். அதுதான் சகஜம். நான் மாறி இருக்கேன் தெரியுதா?"

"சொல்லு."

"குடிசை... ஓடு போர்த்திய மண் வீடு... இயற்கை... எளிமை... அதுதான் வேணும்... காங்க்ரீட் கட்டடம் கட்டடமாப் பாத்துப் பாத்து என் கண்ணு ஏங்கிப் போச்சு... நம்ம குடிசையும் மண் வீடுகளும்..." அவன் பெருமூச்சு விட்டான்.

எனக்குள் குற்ற உணர்வு தலை உயர்த்தியது.

"அதுங்க எல்லாம் இடியும். எரியும். காத்து மழையிலே கலகலத்துடும். ஆனா மறு

படியும் கலபமா எழுந்துடும். அதுங்க கட்டடமில்லே. நம்ப கலாசாரம், கிராமப் பொருளாதாரம்... நம்ம அடையாளம். என்ன ரொம்பப் பிற்போக்காப் பேசறனோ?"

"இல்லே... நான் பண்ணினது தப்பு. வருத்தமா இருக்கு" என்றேன்.

அவன் என்னைக் கூர்ந்துப் பார்த்தான். எனக்குச் சங்கடமாக இருந்தது.

"எப்ப பழைய வீட்டை இடிக்கப் போறே?" என்று கேட்டான்.

"அடுத்த வாரம்!"

"பொறப்படு. ஒண்ணு செய்வோம்."

"என்னது?"

"காமிராவைப் பத்திரமாக வச்சுக்கிட்டுப் பின்னால கேரியர்ல உக்கார்" என்றான்.

"எங்க போறோம்?" கேட்டேன்.

"ஒங்க கொல்லைப்புற வீட்டுக்குத்தான்."

"எதுக்கு?"

என் சைக்கிளில் அவன் பின்னால் கேரியரில் உட்கார்ந்த போது "சொல்றேன்" என்று மட்டும் பதில் வந்தது.

"குமாரசாமி கடையாண்ட கொஞ்சம் நிறுத்து. நம்ம கொன்னவாய் கந்தசாமிக்கு பீடி வாங்கணும். அவந்தான் வீட்டு வேலை மேஸ்திரி" என்றேன்.

நிலத்திற்கு வந்து இரட்டை மாடி வீட்டின் பக்கத்தில் நின்ற பழைய ஓட்டு வீட்டை ஃபிளாஷ் பளிச்சிட இரண்டு கோணங்களில் சௌந்தர பாண்டி படமெடுத்தான்.

அவனுக்கு அந்த வீட்டோடு இருந்த பந்த உணர்வின் பிரதிபலிப்பு என்று எனக்குத் தோன்றியது.

விடியற்காலை மூன்று மணிக்கெல்லாம் பசுவையும் கன்றையும் எங்கள் கிரகப்பிரவேசத்திற்கு தானே ஓட்டி வந்தான் சௌந்தரபாண்டி. அவன் இடது கையில் ஒரு தினசரிப் பத்திரிகை அளவில், ஒரு பரிசுப் பார்சல். நிலைக் கண்ணாடியோ? இல்லை ஆத்திகனான என்னை மகிழ்விக்க சுவாமி படமோ?

நான் கேட்கவில்லை.

கிரகப் பிரவேசம் முடிந்து பரிசுப் பொருள்களைக் கணக்கிடும் நேரத்தில் அந்தப் பார்சலைப் பிரித்தேன். எங்கள் பழைய ஓட்டு வீட்டின் பெரிதாக்கப்பட்ட புகைப்படம். படமெடுத்து மறுநாள் முழுதும் டவுன் போட்டோக் கடையில் உட்கார்ந்து மெனக்கெட்டுப் பெரிதாக்கி வாங்கி ஃபிரேம் போட்டிருக்கிறான்.

அதன் முப்புறச் சட்டக் கொக்கிகளிலும் கம்பி கோத்து நடுக் கூடத்தில் மாட்டினேன். நிஜம் போய்விட்டாலும் நிழல் நிற்கும். நிலைத்து நிற்கும். என்றாவது எதையாவது எப்படியாவது புதுப்பித்துக் கொள்ள இது உதவலாம். கிரகப் பிரவேசம் பூர்த்தியானது போல் எனக்குள் ஓர் உணர்வு.

ஸ்வீட் ஹோம் என்பது...

திலகவதி. ஐ.பி.எஸ்.

வீடு எனக்கு இரண்டு வகைகளில் அர்த்தப்படுகிறது. முதலாவது, என் கடுமையான பணி முடிந்து ஓய்வெடுக்கும் வேளையில் உற்சாகம் தரும் குளிர்ச் சோலை. மீண்டும் என் பணியைத் தொடர, ஊக்கமும், உத்வேகமும் அளிக்கும் தயாரிப்புச் சாலை.



இன்னொருவிதத்தில், சமூகம் எனக்கென்று விதித்துள்ள பணியைச் செய்ய என்னை உருவாக்கி அனுப்பும் கருவறை. உலகின் மாபெரும் சிந்தனையாளர்கள் பலரும் புத்தக ரூபத்தில் என் வரவேற்பறையில் வந்து தங்கியிருக்கிறார்கள். இந்த இடம் இனிமையாக இல்லாமல் வேறு எப்படியிருக்கும்?

பணிமுடிந்து திரும்பும் என்னை, ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கும் அன்பு மகன், பாசமுள்ள என் அக்கா, என் வருகை கண்டதும் முகத்திலே மலர்ச்சி பொங்கும் பணிப்பெண், தொட்டியில் வளர்க்கும் பூஞ்செடிகள், ஒரு குட்டித் தோட்டம், மல்லிகைக் கொடி கவிழ, மரங்கள் சூழ, அடக்கமான ஒரு வீடு. இது இனிமையில்லாமல் வேறு என்ன?



• ஒவ்வொரு வீட்டிலும் மழைநீரை பூமிக்குள் செலுத்துவதற்கான...



• ஜெயசுதா

தண்ணீர் படும் பாடு!

சென்னைக்குக் குடிநீர் வழங்கும் ஏரிகளில் இன்னொரு ரஜினி-25 நடத்தலாம் போல் இருக்கிறது. கிருஷ்ணா நீரோ டி.வியில் வந்ததே தவிர, புழலேரியில் வந்து சேரவே இல்லை.

மழை கொட்டோ கொட்டென்று கொட்டி, ஏரிகள் நிரம்பும் போதோ நம் அதிகாரிகள் அதைக் கடலுக்கு அனுப்பி விட்டுக் கையைக் கட்டிக் கொண்டு நிற்கிறார்கள்.

இந்தப் பின்னணியில், நம் ஒவ்வொருவருடைய வீட்டைச் சுற்றிலும் கிடைக்கும் மழை நீரைச் சேமிப்பதன் மூலம் கிடைக்கும் பலன்கள் பலருக்கும் தெரிய வேண்டும் என்கிறார் ஜெயசுதா.

நிலம் மற்றும் நீர் பராமரிப்புத் துறையில் பட்டம் பெற்ற வி. ஜெயசுதா, கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் மாஸ்டர்ஸ் பட்டமும் பெற்றவர். மழை நீரைச் சேமித்து, நிலத்தடி நீரைப் பாதுகாக்கப் பல வழி வகைகள் செய்து வெற்றி கண்டவர். இவர் பணியாற்றும் கே.ஆர்.ஜி. ரெயின்வாட்டர் ஹார்வெஸ்ட்டிங் கம்பெனி, ஆந்திரப் பிரதேசத்தில் பத்து நகராட்சிகளில், கிடைக்கிற மழை நீரை வைத்து, தட்டுப்பாடே இல்லாமல் செயல்பட முடியும் என்று நிரூபித்திருக்கிறது. (ஐஏஎஸ் அதிகாரி ஹரிஹரன், இரண்டு நகராட்சிகளில் இவரது திட்டத்தைப் பார்த்துவிட்டு, முதலமைச்சர் சந்திர பாபு நாயுடுவிடம் பாராட்டிப் பேசினாராம். பிறகு எட்டு நகராட்சிகளிலும் இதே முறையைக் கையாள ஆர்டர் கொடுத்தாராம்.



''சென்னையில் மக்கள் தண்ணீரை விலைக்கு வாங்குவது ரொம்ப அவலம். இன்னும் கொஞ்ச நாளில் தண்ணீர் விலை, பாலின் விலையை விஞ்சி விடும்!'' என்கிறார் ஜெயசுதா. (அப்புறம் தண்ணீர் கலந்த பால் யாரும் விற்க முன்வர மாட்டார்கள்!)

"இன்றைய கட்டடங்கள் அனைத்துமே, மழைநீர் பூமியில் செல்வதற்கான மாதிரி அமைக்கப்படவில்லை. கட்டடத்தைச் சுற்றிலும் உள்ள மண் தரையைக் கொஞ்சம் கூட விட்டு வைக்காமல் காரைத் தரையாக மாற்றிவிடுவதால், மழை நீர் நிலத்தடியில் சேர வாய்ப்பே இல்லை. கிடைக்கும் மழை நீர் முழுதும் சாக்கடைகளின் வழியே சென்று கூவத்தையும், கடலையும்தான் அடைகின்றன. மண் பரப்பின் மேல் விழும் மழை நீர் மட்டும்தான் நிலத்தடி நீரோடு சேருகின்றது.

''களிமண்ணை மேல் மண்ணாகக்

கொண்டிருக்கும் சென்னை நுங்கம்பாக்கம், அடையாறு, ஆழ்வார்பேட்டை, மயிலாப்பூர், தாம்பரம், எழும்பூர் பகுதிகளில், மண் தரையில் விழும் மழை நீர் கூட நிலத்தினுள்ளே செல்ல வாய்ப்பே இல்லை. இந்த இடங்களில் நிலத்தடி நீர் நிறையக் கிடைத்தாலும் அதில் உப்புத் தன்மை அதிகம். மழை நீரைச் சேமித்து, அந்தந்த இடங்களில் நிலத்தடி நீரைச் சென்றடைய வழிவகை செய்து, நீரின் தன்மையில் கூட மாற்றத்தைக் கொண்டு வரலாம்'' என்கிறார்.

''இப்போது நம்மைப் பயமுறுத்தும் நிலை என்ன தெரியுமா?''

தெரிந்தால் இன்னும் பயமாய் இருக்கும் என்று தெரிந்தும், ''என்ன?'' என்று கேட்டோம்.



• ... வசதிகள் செய்யப்பட வேண்டும்

''கிணற்று நீரில் மெதுவாகக் கடல் நீர் ஊடுருவிச் சென்று கலக்கிற அபாயம்தான்! இதற்குக் காரணம், கடல் நீரைவிடக் கிணற்று நீர் தக்கையாக இருப்பதால், அது கடல் நீரின் மேல் மிதக்கிறது. நாம் அறியாமல், அதிகமாகக் கிணற்று நீரை இறைத்து விணடிக்கும்போது, கிணற்று நீர் அளவு குறைகிறது. கடல் நீரின் மட்டம் உயர்கிறது. இதனால், எஞ்சிய கிணற்று நீரும் அதிக உப்புத் தன்மை அடைகிறது. திருவான்மியூர், சாந்தோம், மைலாப்பூர் திருவல்லிக்கேணி, பெசன்ட் நகர் போன்ற கடலோரப் பகுதிகளில் உள்ள வீடுகளில் இந்த நிலைமையைக் காணலாம்!''

''அவ்வளவு மோசமாகவா இருக்கிறது?''

''இன்று இல்லாவிட்டாலும் நீர் உப்பாகும் அபாயம் வெகு தூரத்தில் இல்லை!''

''இதற்கு வழி என்ன?''

''மழை நீர் சேகரிப்பு, மற்றும் செயற்கை ஊற்றெடுப்பு முறைகளைக் கையாள வேண்டும். கிணற்று நீர்தானே என்று வீணடிக்காமல் அளவோடு பயன்படுத்த வேண்டும்.

''அமெரிக்கா, கனடா, ஜெர்மனி, இஸ்ரேல் போன்ற வெளி நாடுகளில், ஒரு குடும்பம், தான் பயன்படுத்தும் கிணற்று நீருக்குச் சமமான மழை நீரை அவசியம் சேமித்து நிலத்தடிக்கு அனுப்ப வேண்டும் என்ற சட்டமே அமுலில் உள்ளது. நாமும் நம் இடத்தில் கிடைக்கும் மழை நீரைச் சேமித்து, கிணற்று நீர் மட்டத்தை உயர்த்த, செயற்கை ஊற்றெடுப்பு முறைகளை (ஆர்டிஃபீஷியல் ரீசார்ஜ்) கையாள வேண்டும். புது கட்டடங்கள் கட்டவும், குடிநீர் வழங்குவதற்கும் அப்போதுதான் உரிமம் வழங்கப்படும் என்று சி.எம்.டி.ஏ. அமல் படுத்தியிருக்கிறது. ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள வீடுகளிலும் இது அமுலாக வேண்டும்.

''நமக்கு வருடத்திற்குக் கிடைக்கும் மழை நீரில் 97 சதவிகிதம் கடலுக்குள் செல்லுகிறது! மீதி 3 சதவிகிதத்தில் 0.61 சதவிகிதம் மட்டுமே நிலத்தடி நீரைச் சென்றடைகிறது. நாம் எல்லா இடங்களையும் காரைத் தரையாக மாற்றிக்கொண்டே வருவதால் இதுவும் குறைகிறது! இஸ்ரேலில் சராசரியாக அவர்களுக்குக் கிடைக்கும் மழை நீரின் அளவு 500 மி.மீ. மட்டுமே. ஆனால் ஒவ்வொரு மழைத்துளியையும் அவர்கள் சேமிக்கிறார்கள். தண்ணீர் பற்றாக்குறை என்பதே அங்கு இல்லை!

''நீர் ஈர்ப்புக் குழிகள் எனப்படும் பெர்கலேஷன் பிட்ஸ், செயற்கை ஊற்றெடுப்புக் கிணறுகள், கூரையில் விழும் நீர் சேமிப்பு, நீர் ஈர்ப்புக் குட்டைகள், நீர் தேக்கிகள், ஆற்றில் நிலத்தடியில் நீரைத் தேக்க-குறிப்பிட்ட தூரங்களில் தடுப்புகள் போன்றவை சில எளிய சிறந்த மழை நீர் சேகரிப்பு முறைகளாகும். இவற்றை அமைக்க மத்திய-மாநில அரசுகள் முன் வந்தால், நிலத்தடி நீர்த் தேக்கிகளை நிறைய அறிமுகப்படுத்தலாம். அதே போல, வீட்டைச் சுற்றியுள்ள இடத்தில் விழும் மழை நீர், சாக்கடைகளில் கலப்பதற்குப் பதில், நிலத்தடிக்கு அனுப்புவதன் மூலம், பரவலாக எங்கும் சுத்தமான நிலத்தடி நீர் கிடைக்குமே? நிலத்தடி மண்ணின் ஈரப்பதம் உயர்வதால், கிணற்று நீர் மட்டம் அதிகம் குறையாது. கோடை காலத்தில் கிணறு வற்றாது.

— சித்தார்த்



இருபத்து மூன்றாம் அத்தியாயம்

ஊமையும் பேசுமோ?

அநிருத்தர் சற்று நேரம் பூங்குழலியை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்து விட்டு, அவளைக் கொண்டு வந்த தாதிமார்களை அருகில் அழைத்தார்.

அவர்களிடம் மெல்லிய குரலில் ஏதோ கேட்டார். அவர்கள் மறுமொழி சொன்ன பிறகு அந்த அறையை விட்டு அப்பால் போகச் செய்தார்.

ஆழ்வார்க்கடியானைப் பார்த்து, "திருமலை! ஏதோ தவறு நேர்ந்திருப்பதாகத் தோன்றுகிறது!" என்றார்.

"ஆம், ஐயா! அப்படித்தான் எனக்கும் தோன்றுகிறது!" என்றான் சீடன்.

"இவள் இளம் பெண்; சுமார் இருபது பிராயந்தான் இருக்கலாம்."

"அவ்வளவு கூட இராது."

"நான் எதிர்பார்த்துக்கொண்டிருந்த மாதரசிக்குப் பிராயம் நாற்பது இருக்க வேண்டும்."

"அதற்கு மேலேயும் இருக்கும்."

"ஆம், ஆம்; நீ இலங்கைத் தீவில் மந்தாகினி தேவியைப் பார்த்திருக்கிறாய் அல்லவா?"

"ஆம்; ஐயா! பார்த்து, தங்கள் கட்டளைப்படி இங்கு அழைத்து வரவும் முயன்றேன். முடியவில்லை."

"இந்தப் பெண் மந்தாகினி தேவி அல்லவே?"

"இல்லை, குருதேவரே! நிச்சயமாக அந்த அம்மையார் இல்லை!"

"அப்படியானால் இவள் யாராயிருக்கும்? எப்படி இங்கு வந்து சேர்ந

தாள்?"

"இவளையே கேட்டு விட்டால் போகிறது!" என்றான் ஆழ்வார்க் கடியான்.

"ஊமையிடம் கேட்டு என்ன பயன்?"

"குருதேவரே! இவள் ஊமைதான் என்பது..."

"அதைத்தான் தாதிமார்களிடம் கேட்டேன். இங்கு வந்ததிலிருந்து இவள் ஒன்றும் பேசவில்லை என்றார்கள்."

"குருதேவரே! இவளை அடையாளங் கண்டு அழைத்து வருவதற்கு யாரை அனுப்பியிருந்தீர்கள்?"

"ஆகா! அந்த மூடன் ஏதாவது தவறு செய்து விட்டானா, என்ன?"

"எந்த மூடன், குருதேவரே! தாங்கள் இத்தகைய காரியங்களுக்கு மூடனை அனுப்பி வைத்திருப்பீர்களா?"

"புத்திசாலியாகக் காணப்பட்டான். பழையாறைக்கு நாம் சென்றிருந்த அன்று, வாணர் குலத்து வல்லவரை யனுடன் ஒரு வாலிபன் சண்டையிட் டான் அல்லவா?"

"ஆம்; பழையாறை வைத்தியர் மகன் பினாகபாணி."

"அவனேதான்! உன்னையும் வல்ல வரையனையும் கரிகாலரைச் சந்திக்க அனுப்பிய பிறகு, அந்த வைத்தியர் மகனைச் சிறையிலிருந்து விடுதலை செய்து அழைத்து வரப் பண்ணினேன். நம் ஒற்றர் படைக்குத் தகுந்தவன் என்று கண்டு, அவனைக் கோடிக்கரைக்கு அனுப்பினேன். முன்னம் அவன் கோடிக்கரைக்குப் போய்ப் பழக்கப் பட்டவனாம்..."

"அவன்தான் இந்தப் பெண்ணை இங்கு அழைத்து வந்தானா?"

"அடையாளம் எல்லாம் சரியாகச் சொல்லி அனுப்பினேன். அவனும் திருவையாற்றில் கொண்டு வந்து சேர்த்து விட்டுக் காரியம் வெற்றி என்று செய்தி அனுப்பியிருந்தான்..."

"ஐயா! நான் தோற்றுப் போன காரியத்தில் வெற்றி அடைந்த அந்தப் புத்திசாலி ஒற்றன் இப்போது எங்கே? இந்தப் பெண்ணைக் குறித்து அவனையே கேட்டு விடுவது நல்லதல்லவா?"

"நல்லதுதான்; ஆனால் நேற்றிரவு அவனுக்கு எதிர்பாராமல் ஒரு விபத்து நேர்ந்துவிட்டது..."

"அடாடா! அவனுக்கு என்ன விபத்து, எப்படி நேர்ந்தது?"

"சிவிகையின் பின்னால் அவனும் வந்துகொண்டிருந்தான். இருட்டிய பிறகு கோட்டைக்குள் வர வேண்டும் என்று நான் கட்டளையிட்டிருந்த படியால், அந்தப்படியே அந்தி மாலை நேரத்தில் திருவையாற்றிலிருந்து புறப் பட்டு, முன்னிரவு வேளையில் கோட் டையை நெருங்கிக்கொண்டிருந்தார்கள். திடீரென்று புயல் அடித்த செய்திதான் உனக்குத் தெரிந்திருக்குமே...?

"ஆம், ஐயா! நான் கூடப் புயலுக்குப் பயந்து சாலை ஓரத்து யாத்திரை மண் டபம் ஒன்றில் சிறிது நேரம் தங்கியிருக் கும்படி நேர்ந்தது."

"கோட்டைக்குச் சற்றுத் தூரத்தில் சிவிகை வந்தபோது சாலையில் பெரிய மரம் ஒன்று வேரோடு பெயர்ந்து விழுந்து விட்டது. அதிர்ஷ்ட வசமாகப் பல்லக்கின் மீது விழாமல் பின்னால் வந்தவர்கள் மீது விழுந்தது. வைத்தியர் மகன் பினாகபாணி விழுந்த மரத்தடி யில் அகப்பட்டுக்கொண்டான்.

இவ்வாறு முதன் மந்திரி கூறிய போது, ஒரு பெண் குரல், "அந்தச் சண்டாளன் தலை யில் மரம் மட்டுந்தானா விழுந்தது? இடி விழவில்லையா?" என்று ஆத்திரத்துடன் கூறியது கேட்டது.

முதன் மந்திரி அநிருத்தர் அள விலாத வியப்புடன் பூங்குழலியை நோக் கினார். அவளை உற்றுப் பார்த்துக் கொண்டே, "திருமலை! இப்போது

அமரர் கல்கி

பேசியவள் இந்தப் பெண்தானா?" என்றார்.

"ஆம், ஐயா! அப்படித்தான் தோன்றியது."

"இது என்ன விந்தை? செவிட்டுக்குக் காது கேட்குமா? ஊமையும் பேசுமா?" என்றார் அநிருத்தர்.

"செவிட்டுக்குக் காது கேட்பதும், ஊமை பேசுவதும் மிகவும் விந்தையான காரியங்கள்தான். ஆனால் சர்வ சக்தி வாய்ந்த விஷ்ணுமூர்த்தியின் பக்தராகிய தாங்கள் மனம் வைத்தால் எந்த அற்புதந்தான் நடவாது? ஆழ்வார் திருவாய் மலர்ந்தருளியிருப்பது என்னவென்றால்..."

"போதும்! ஆழ்வார்களை இப்போது இங்கே இழுத்துத் தொந்தரவு செய்யாதே! இது விஷ்ணு பகவானின் கருணையினால் நடந்தது அல்ல. ஏதோ தவறு நடந்திருக்கிறது. இந்தப் பெண் நம்மை ஏமாற்றியிருக்கிறாள். இவள் யார்? இவளுடைய நோக்கம் என்ன? எதற்காக இவள் இத்தனை நேரமும் செவிட்டு ஊமை போல நடித்தாள்?"

"குருதேவரே! இந்தப் பெண்ணையே கேட்டு விடலாமே?"

"அப்பனே! உன் முகத்தில் தவழும் புன்னகையைப் பார்த்தால், உனக்கு ஒரு வேளை தெரிந்திருக்கக் கூடுமோ என்று தோன்றுகிறது. சரி; இவளையே கேட்டு விடுகிறேன். பெண்ணே! நீ செவிடு இல்லையா? நான் பேசுவது உனக்குக் காது கேட்கிறதா...?"

"ஐயா! நான் செவிடாயிருக்கக் கூடாதா என்று சில சமயம் விரும்பியதுண்டு. ஆனால் எனக்குக் காது கேட்பது பற்றி இப்போது சந்தோஷப்படுகிறேன். அந்தச் சண்டாளன் வைத்தியர் மகன் தலையில் மரம் ஒடிந்து விழுந்த செய்தியைக் கேட்டேன் அல்லவா? சுவாமி! அவன் செத்து ஒழிந்தானா?" என்றாள் பூங்குழலி.

"ஆகா! உனக்குக் காது கேட்கிறது. பேசவும் பேசுகிறாய். நீ ஊமை அல்ல!" என்றார் அநிருத்தர்.

"நிச்சயமாய் இந்தப் பெண் ஊமை இல்லை!" என்றான் சீடன்.

"ஆகா! நான் ஊமையில்லை என்பதைக் கண்டுபிடித்து விட்டீர்களே! சோழ சாம்ராஜ்யத்திலேயே மிக்க அறிவாளி முதன்மந்திரி அநிருத்தப் பிரம்மராயர் என்று நான் கேள்விப்பட்டது சரிதான்!" என்றாள் பூங்குழலி.

"பெண்ணே! என்னைப் பரிகாசமா செய்கிறாய்? ஜாக்கிரதை! நீ ஊமையில்லா விட்டால் நேற்று இரவு இங்கு வந்ததிலிருந்து பேசாமலிருந்தது ஏன்? ஊமை போல் நடித்தது ஏன்? உண்மையைச் சொல்லு!" என்று கேட்டார் முதன் மந்திரி அநிருத்தப் பிரம்மாதிராயர்.

"ஐயா! நேற்றிரவு இங்கு நான் வந்து சேரும் வரையில் பேசத் தெரிந்தவளாகவே இருந்தேன். என்னை 'வாயாடி' என்று கூடச் சிலர் சொல்லுவதுண்டு. முதன் மந்திரியின் அரண்மனையைப் பார்த்து, இங்கு எனக்கு நடந்த இராஜோபசாரங்களைப் பார்த்ததும் பிரமித்து ஊமையாய்ப் போனேன். தங்கள் அரண்மனைப் பெண்மணிகள் என்னுடன் சமிக்ஞை மூலமாகப் பேசினார்கள். அவர்கள் எல்லாரும் ஊமை என்று எண்ணி நானும் சமிக்ஞையாக மறுமொழி சொன்னேன். தங்களுடைய பேச்சைக் கேட்ட பிறகு, எனக்கும் பேச்சு நினைவு வந்தது..."

"நீ பெரிய வாயாடி என்பதில் சந்தேகமில்லை. உன்னை எப்படித்தான் அந்த வைத்தியர் மகன் பிடித்துக் கொண்டு வந்தான் என்பதை நினைத்தால் ஆச்சரியமாயிருக்கிறது. அவன் முட்டாளாயிருந்தாலும் சாமர்த்திய சாலிதான்."

"சுவாமி! அந்தப் பாவி மகன் என்னைப் பிடித்துக்கொண்டு வரவில்லை. அதற்குப் பிரயத்தனப்பட்டிருந்தால், இத்தனை நேரம் அவன் யமலோகத்துக்கு நிச்சயமாக யாத்திரை செய்து கொண்டிருப்பான்!" என்று கூறிப் பூங்குழலி தன் இடுப்பில் செருகியிருந்த கத்தியை எடுத்துக் காட்டினாள்.

"பெண்ணே! உனக்குப் புண்ணியமாய்ப் போகட்டும். கத்தியை இடுப்பிலே செருகிக் கொள். அவன் பேரில் உனக்கு ஏன் இத்தனை கோபம்? அவன்

தான் உன்னைப் பிடித்து வரவில்லை என்றாயே?''

"என்னை அவன் பிடித்துக்கொண்டு வரவில்லை. ஆனால் என்னை அவன் ஆட்கள் படகிலே சேர்த்துக் கட்டிப் போட்டு விட்டு வந்தார்கள். என் அண்ணியை மரத்திலே சேர்த்துக் கட்டி விட்டார்கள். இத்தனைக்கும் அந்தச் சண்டாள வைத்தியர் மகன் தனக்கு இதில் ஒரு சம்பந்தமும் இல்லையென்று என்னிடம் சொன்னான்...''

"அந்தவரையில் அவன் புத்திசாலி தான். நான் சொன்னபடியே அவன் நடந்துகொண்டிருக்கிறான்...''

''ஐயா, முதன் மந்திரியே! அந்த தூர்த்தனை அனுப்பியது தாங்கள் தானா? வாயில்லாப் பேதையாகிய என் அத்தையைப் பிடித்துக்கொண்டு வரக் கட்டளையிட்டதும் தாங்கள்தானா?''

"உன் அத்தையா? கரையர் மகள் மந்தாகினி உன் அத்தையா? அப்படியானால், நீ...? கலங்கரை விளக்கத்துக் காவலர் தியாக விடங்கருக்கு நீ என்ன வேணும்?'' என்று அநிருத்தர் கேட்டார்.

''ஐயா! அவருடைய அருமைப் புதல்விதான் நான்!''

"ஆகா! தியாக விடங்கருக்கு இவ்வளவு வாயாடியான ஒரு மகள் இருக்கிறாள் என்பது எனக்கு இதுவரை தெரியாமற் போயிற்று!''

"இதை வெளியில் சொல்ல வேண்டாம், ஐயா!''

''ஏன், பெண்ணே!''

''சோழ சாம்ராஜ்யத்தின் முதன் மந்திரி பிரம்மராயருக்குத் தெரியாத விஷயம் எதுவுமே இல்லை என்று நாடெல்லாம் பிரசித்தமாயிருக்கிறது. தங்களுக்கு ஒன்று தெரியாது என்று ஏற்பட்டால், தங்களிடம் மக்களுக்குள்ள மதிப்புக்குப் பங்கம் வந்து விடாதா?''

"பெண்ணே! என் மதிப்பைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. எனக்குத் தெரியாத இன்னொரு செய்தியை மட்டும் சொல்லி விடு. உன் அத்தையைப் பிடித்துக்கொண்டு வந்தார்கள் என்றாயே? அவன் இப்போது எங்கே? நான் அனுப்பிய பல்லக்கில், நீ எப்படி ஏறிக் கொண்டாய்? எவ்விடத்தில் ஏறிக் கொண்டாய்?'' என்று அநிருத்தர் கேட்டார்.

"ஐயா! வாயில்லா ஊமையாகிய என் அத்தையைத் தாங்கள் எதற்காகக் கைப்பற்றிக் கொண்டு வர ஆட்களை அனுப்பினீர்கள்?''

"மகளே! அதை உன்னிடம் சொல்லுவதற்கில்லை. அது பெரிய இராஜாங்க சம்பந்தமான விஷயம்."

''தந்தையே! அப்படியானால், தாங்கள் கேட்ட கேள்விகளுக்கு நானும் மறுமொழி சொல்ல இயலாது."

"சொல்லும்படி செய்வதற்கு வழிகள் இருக்கின்றன.''

"என்னிடம் பலிக்காது!''

"பெண்ணே! உன்னைப் பாதாளச் சிறைக்கூடத்துக்கு அனுப்புவேன்...''

''எந்தப் பாதாளச் சிறையிலும் என்னை அடைத்து வைத்திருக்க முடியாது.''

"பாதாளச் சிறைக்கு ஒரு தடவை போனவர்கள் இரும்பி வருவதில்லை...''

"திரும்பி வந்த ஒருவனை எனக்குத் தெரியும், ஐயா! நேற்றுக் கூடச் சேந்தன் அமுதனுடன் பேசிக் கொண்டுதான் பிரயாணம் செய்தேன்...''

"அவன் யார் சேந்தன் அமுதன்...?''

''அவன் என்னுடைய இன்னொரு அத்தையின் மகன். அவனும் நானுமாகத்தான் கோடிக்கரையிலிருந்து வந்து கொண்டிருந்தோம்."

"எதற்காக, மகளே?''

''இந்தத் தஞ்சாவூரிலுள்ள மாட மாளிகை கூட கோபுரங்களைப் பார்க்க வேண்டுமென்று வெகு காலமாக ஆசை உண்டு. சக்கரவர்த்தி சுந்தர சோழரைத் தரிசிக்க வேண்டும் என்றும் ஆவல் கொண்டிருந்தேன். சக்கரவர்த்திக்கு உடல் நலமில்லையென்று சொன்னார்களே? இப்போது எப்படியிருக்கிறது, ஐயா! நான் பார்க்கலாமா?''

''அப்படியேதான் இருக்கிறது, மகளே! அபிவிருத்தி ஒன்றுமில்லை. ஆகையால் சக்கரவர்த்தியைத் தரிசிக்


கும் எண்ணத்தை மறந்து விடு...!"

"அது எப்படி மறக்க முடியும், ஐயா! சக்கரவர்த்தியை நான் பார்த்தேயாக வேண்டும். பார்த்து, அவருடைய தர்ம ராஜ்யத்தில், பெண்களைப் பலவந்த மாகப் பற்றிக்கொண்டு வரும் அக்கிர



மங்கள் நடக்கும் செய்தியைச் சொல்ல வேண்டும்...''

''பெண்ணே! உன்னோடு வெறும் விவாதம் செய்துகொண்டிருக்க எனக்கு நேரம் இல்லை. உன்னைப் பலவந்தமாகப் பற்றிக்கொண்டு வர நான்



கட்டளையிடவும் இல்லை. நான் அனுப்பிய பல்லக்கில் நீ எப்படி ஏறிக் கொண்டாய், அதைச் சொல்! யாராவது உன்னைப் பலவந்தமாகப் பிடித்துப் பல்லக்கில் ஏற்றினார்களா?''

''இல்லை, சுவாமி! அது மட்டும் இல்லை. தஞ்சைக் கோட்டைக்கு அருகில் வரும் சமயத்தில் இந்தப் பல்லக்கு வெறுமையாக இருந்தது. மழையாயிருக்கிறதே என்று நானாகவேதான் பல்லக்கில் ஏறிக்கொண்டேன்...''

முதன் மந்திரி அநிருத்தப் பிரம்மராயர் தமது சீடனாகிய ஆழ்வார்க்கடியானைப் பார்த்து, ''ஒருவாறு எனக்கு இப்போது விஷயம் விளங்குகிறது. வழியில் புயலும் மழையுமாயிருந்தபோது பல்லக்கை எங்கேயோ இறக்கியிருக்கிறார்கள். அச்சமயம் இவள் அத்தையைப் பல்லக்கிலிருந்து இறக்கி விட்டு இவள் ஏறிக்கொண்டிருக்கிறாள். வைத்தியர் மகன் பேரில் மரம் விழுந்து பிரக்ஞை இழந்து விட்டபடியால் அவனால் கவனிக்க முடியவில்லை. சிவிகை தூக்கிய மற்றவர்கள் கவனிக்கவில்லை. கோட்டை வாசலுக்குச் சமீபத்திலே தான் இது நடந்திருக்க வேண்டும். திருமலை! என்னுடைய ஊகம் சரியாயிருக்கும் என்று உனக்குத் தோன்றுகிறதா?'' என்று கேட்டார்.

''சுவாமி! தாங்கள் இப்போது ஊகித்துச் சொன்னபடியேதான் நடந்தது. நானே கண்ணால் பார்த்தேன்.''

''நீ பார்த்தாயா? அது என்ன? இத்தனை நேரம் ஏன் வாயை மூடிக்கொண்டிருந்தாய்? சீக்கிரம் சொல்லு!''

''நேற்று முன்னிரவில் மழைக்கால இருட்டில் கோட்டை வாசலை நெருங்கி வந்துகொண்டிருந்தேன். பெரும் புயலும் மழையும் அடித்தன. மரங்கள் முறிந்து விழுந்தன. சாலையோரத்து யாத்ரிகர் மண்டபம் ஒன்றில் சிறிது நேரம் தங்கியிருக்கலாம் என்று சென்றேன். அங்கே நான் ஒதுங்கிய சிறிது நேரத்துக்கெல்லாம் இந்தப் பெண்ணும் இன்னொரு வாலிபனும் வந்தார்கள். இவள் தன் அத்தை மகன் என்று சொன்னாளே, அவனாக இருக்கலாம். மின்னல் வெளிச்சத்தில் அவன் கழுத்தில் உருத்திராட்சம் கட்டியிருப்பதைப் பார்த்தேன். பிஞ்சிலே பழுத்த சைவன் என்று தெரிந்துகொண்டு அவனிடம் 'வைஷ்ணவத்தின் பெருமையைச் சொல்லலாம்; சற்றுப் பொழுது போகும்' என்று எண்ணினேன். இதற்குள் அதே மண்டபத்தின் முகப்பில் ஒரு சிவிகையைக் கொண்டு வைத்தார்கள். சிவிகையின் திரையில் பழுவேட்டரையரின் பனைச் சின்னம் தெரிந்தது. சிவிகையிலிருந்து ஒரு பெண் இறங்கி இவர்கள் அருகில் வந்தாள். மண்டபத்தின் இருள் கவிந்த இடத்தில் மூன்று பேரும் ஏதோ ஜாடைமாடையாகப் பேசிக்கொண்டார்கள். பிறகு இவள் போய்ப் பல்லக்கில் ஏறுவதைப் பார்த்தேன். மின்னல் வெளிச்சத்தில் 'பல்லக்கிலிருந்து இறங்கியவள் வேறு; மறுபடி ஏறியவள் வேறு' என்று தெரிந்துகொண்டேன். பல்லக்குத் தூக்கிகள் இதையொன்றும் கவனிக்கவில்லை. மழை சிறிது நின்றதும், பல்லக்கைத் தூக்கிக்கொண்டு புறப்பட்டுப் போய் விட்டார்கள்...!

''ஆகா! அப்படியா என்னை ஏமாற்றி விட்டார்கள்? இத்தனை நேரம் சொல்லாமல் சும்மா இருந்தாயே? அந்த இரண்டு பேரும் பிறகு என்ன செய்தார்கள்?''

''பல்லக்கு போன பிறகு அவர்களும் போய் விட்டார்கள். பின்னர் நானும் புறப்பட்டேன்...''

''திருமலை! நீ ஏன் இதையெல்லாம் பார்த்துக்கொண்டு சும்மாயிருந்தாய்? இவள் அத்தையை நீ ஏன் தடுத்து நிறுத்தவில்லை? நீயும் இவர்களுடைய சூழ்ச்சியில் கலந்து விட்டாயா, என்ன?''

''அபசாரம், குருதேவரே! அபசாரம்! அத்தகைய துரோகத்தை நான் செய்யக் கூடியவனல்ல. முதலில், இதெல்லாம் தங்கள் ஏற்பாடு என்று எனக்குத் தெரியாது. பழுவூர் அரண்மனைப் பல்லக்கு ஆனபடியால், சின்னப் பழுவேட்டரையருடைய காரியமாயிருக்கலாம் என்று எண்ணினேன். மேலும், மந்தாகினி தேவியை என்னால் தடுத்து நிறுத்த முடியுமா? புயற்காற்றை அணை போட்டு

நிறுத்தினாலும் நிறுத்தலாம்; அந்த மாதரசியை நிறுத்த முடியுமா? இலங்கையிலேயே முயன்று பார்த்துத் தோல்வி அடைந்தவன்தானே? மேலும் அந்த அம்மாளுக்கு என்னை அடையாளம் தெரியும். பார்த்ததும் மிரண்டு ஓடிப் போவார்கள். பிறகு யாராலும் அவரைப் பிடிக்க முடியாது..."

"அதை நினைத்தால், வைத்தியர் மகன் கெட்டிக்காரன் என்றே தோன்றுகிறது. இத்தனை தூரம் அழைத்துக் கொண்டு வந்து விட்டான் அல்லவா?"

"குருதேவரே! இந்த விஷயத்தில் தங்கள் ஊகம் சரியல்லவென்று தோன்றுகிறது. மந்தாகினி தேவி தாமே விரும்பித்தான் வந்திருக்க வேண்டும். தஞ்சையை நெருங்கியதும் அவருடைய மனம் மாறியிருக்க வேண்டும்..."

"இருக்கலாம்; இருக்கலாம். ஆனாலும் இதற்குள் அதிக தூரம் அந்தக் கரையர் மகள் போயிருக்க முடியாது. இரவெல்லாம் காற்றும் மழையுமாக இருந்ததல்லவா? சமீபத்திலேதான் எங்கேயாவது இருக்க வேண்டும். திருமலை! எப்படியாவது அவளைப் பிடித்தாக வேண்டும். ஒருவேளை இந்தப் பெண்ணுக்கு அவள் தங்குமிடம் தெரிந்திருக்கலாம்... மகளே! உன் பெயர் என்ன?"

"பூங்குழலி, ஐயா!"

"ஆகா! அழகான பெயர்! பெயர் வைப்பதில் தியாகவிடங்கரின் சாமர்த்தியத்துக்கு இணையே கிடையாது. பூங்குழலி! உன் அத்தை எங்கே தங்கியிருப்பாள் என்று உனக்குத் தெரிந்திருக்கும். தெரிந்தால், சொல்லு! அவளுக்கு ஒன்றும் கெடுதல் நேராது."

பூங்குழலி சிறிது யோசித்து விட்டு, "சுவாமி! என் அத்தை இப்போது இருக்கக்கூடிய இடம் எனக்குத் தெரியும். அவளை எதற்காகத் தாங்கள் பிடித்துக் கொண்டு வரச் செய்தீர்கள் என்று சொன்னால், நானும் அவள் இருக்குமிடத்தைச் சொல்லலாம்..."

"பூங்குழலி! அது பெரிய இராஜாங்க விஷயம். அரண்மனையைப் பற்றிய இரகசியம். உன்னிடம் சொல்ல முடியாது."

"நானும் சொல்ல முடியாது!"

"இந்தப் பெண்ணுடன் பேசிச் சாத்தியப்படாது..."

"ஐயா! ஒரு நிபந்தனையை நிறைவேற்றுவதாயிருந்தால்..."

"ஆகா! எனக்கு இந்தப் பெண் நிபந்தனை போடுகிறாளாம்! அது என்ன?"

"என் அத்தையைத் தஞ்சாவூர்ச் சிம்மாதனத்தில் ஏற்றி வைத்து மணி மகுடம் சூட்டுவதாயிருந்தால், அவளை நானே அழைத்து வருகிறேன்."

"திருமலை! இந்தப் பெண்ணுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது....!"

"அதை இப்போதுதானா கண்டீர்கள், குருதேவரே! இவளை ஒன்றும் கேட்கவே வேண்டாம். இவள் அத்தை இருக்குமிடம் எனக்குத் தெரியும். இவள் அத்தை மகன் சேந்தன் அமுதன் கோட்டைக்குச் சற்று தூரத்தில் பூந்தோட்டத்தில் இருக்கிறான். அவனும் அவனது அன்னையும் தளிக்குளத்தார் கோயிலுக்குப் புஷ்ப கைங்கரியம் செய்கிறவர்கள். அங்கேதான் தாங்கள் தேடும் பெண்மணி இருக்கிறாள். என்னுடன் சில ஆட்களை அனுப்பினால், அழைத்து வருகிறேன்!" என்றான் ஆழ்வார்க்கடியான். பூங்குழலி திருமலையை எரித்து விடுகிறவள் போலப் பார்த்துவிட்டு, "அப்படி ஏதாவது செய்தால், நான் இப்போதே சக்கரவர்த்தியின் அரண்மனை முன்னால் சென்று முறையிடுவேன்! நீங்கள் செய்யும் அக்கிரமம் ஊரெல்லாம் அறியும்படி செய்வேன்!" என்றாள்.

"திருமலை! இவளைப் பாதாளச் சிறைக்கு அனுப்பி வைக்க வேண்டியதுதான்; வேறு வழி இல்லை!" என்றார் அநிருத்தப் பிரம்மராயர்.

"என் அருகில் யாராவது வந்தால் கொன்று விடுவேன்!" என்று பூங்குழலி மடியில் செருகி வைத்திருந்த கத்தியை எடுத்துக்காட்டினாள்.

"ஐயா! இந்தப் பெண்ணைப் பாதாளச் சிறைக்கு அனுப்ப வேண்டியதில்லை. அதற்குப் பதிலாக இளைய பிராட்டி குந்தவை தேவியின் மாளிகைக்கு அனுப்பி வைக்கலாம். இளைய

பிராட்டி இப்போது இங்கேதானே இருக்கிறார்? அவர் இந்தப் பெண்ணின் பைத்தியத்தைத் தெளிய வைப்பார்! இளையபிராட்டிக்கும் இந்தப் பெண்ணினால் ஆக வேண்டிய காரியம் ஏதேனும் இருக்கலாம்!'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

''எதனால் சொல்லுகிறாய்? இளையபிராட்டிக்கு இந்தப் பெண்ணின் மூலமாக என்ன காரியம் ஆக வேண்டியிருக்கப் போகிறது...?''

''குருதேவரே! தங்களுக்குத் தெரியாதா? நேற்று மாலை இங்கு அடித்த புயல் சோழ நாட்டுக் கடற்கரையோரமாக அதாஹதம் செய்துவிட்டிருக்கிறதாம்! தங்கள் அரண்மனை வாசலில், நாலாபுறமிருந்தும் தூதர்கள் வந்து காத்திருக்கிறார்கள்.

''ஆம், ஆம்; அவர்களையெல்லாம் நான் இப்போது பார்க்க வேண்டும். அதற்குள் இந்தப் பெண்ணிடம் பேச்சுக் கொடுத்ததில் வெகு நேரம் வீணாகிவிட்டது. இவள் ஊமையாகவே பிறந்திருந்தால் எவ்வளவோ நன்றாயிருந்திருக்கும்...''

''கேள்வி முறையில்லாமல் கொடுமை செய்யலாம் அல்லவா?'' என்று முணுமுணுத்தாள் பூங்குழலி.

''நாகைப்பட்டினத்துக்குப் பெரிய ஆபத்து என்று கேள்விப்படுகிறேன். கடல் பொங்கி வந்து நகரையே மூழ்க அடித்து விட்டதாகச் சொல்கிறார்கள்...''

இந்த வார்த்தைகளைக் கேட்டு முதன் மந்திரி அநிருத்தர், பூங்குழலி இருவருமே திடுக்கிட்டார்கள்.

''... அதைப் பற்றித் தங்களிடம் விசாரிப்பதற்கு இளையபிராட்டியே ஒருவேளை இங்கே வந்தாலும் வரக் கூடும்!'' என்று முடித்தான் ஆழ்வார்க்கடியான்.


அவன் சொல்லி வாய் மூடுவதற்குள்ளே அரண்மனை வாசலில் ஜய கோஷத் தொனிகள் கேட்டன.


''திருமலை! நீ எப்போது ஞான திருஷ்டி பெற்றாய்? இளையபிராட்டிதான் வருகிறார் போலிருக்கிறது!'' என்று சொல்லிக்கொண்டு அநிருத்தர் எழுந்து வாசலை நோக்கி நடந்தார்.

அதற்குள் அதே வாசல் வழியாக குந்தவை தேவியும் வானதியும் உள்ளே பிரவேசித்தார்கள்.

பூங்குழலி அங்கே நின்று கொண்டிருப்பதைப் பார்த்ததும் இளையபிராட்டியின் திருமுகத்தில் குடி கொண்டிருந்த கவலைக் குறி மறைந்து, வியப்பும் உவகையும் ஒருங்கே பிரதிபலித்தன.

(தொடரும்)





அம்மாவுக்கு அட்ஜெஸ்

ஜெயஸ்ரீராஜ்

மது தன் சூட்கேஸில், நாலைந்து சுடிதார்களையும் மாக்ஸியையும் திணித்துக் கொண்டிருந்தாள் – "ஒரு நாலு நாள் அம்மா வாத்துல இருந்துட்டு வரேனே..."

முரளிக்கு தூக்கிவாரிப் போட்டது. ஏதோ இதுநாள்வரை, 'அம்மாவுக்கு மூட்டு வலி', 'அம்மாவுக்கு வயிற்றுவலி', 'அம்மாவுக்கு தலைசுற்றல்' இன்னபிற காரணங்களுக்காக அம்மாவை 'கவனித்து'க் கொள்வதற்காகப் போய் வந்து கொண்டிருந்தாள். இப்போதுதான் இவளின் ஒரே தம்பிக்கு திருமணமுமாகி, அந்தப் பெண் 'சேவை' செய்ய வந்து விட்டாளே? இவளுக்கு அங்கு என்ன வேலை? ஒரு சமயம் அந்தப் பெண்ணுக்கும் இவளுடைய அம்மாவுக்கும் 'ஒத்து' வராமல்... மனசு விபரீதக் கற்பனைகளில் சஞ்சரித்தது.

''ஒண்ணுமில்லை.... அம்மா அந்தக் காலத்து மனுஷி; ஏதான அது சரியில்ல, இது சரியில்லன்னு தொண தொணத்திண்டிருப்பா; ஷோபா இந்தக் காலத்துப் பொண்ணு; வேலைக்கு வேற போறா.... அவளோட எப்பிடி அட்ஜஸ்ட் பண்ணிக்கறதுன்னு அம்மாவுக்கு அட்வைஸ் பண்ணிட்டு வரலாமேன்னுதான்... இருக்கறது ஒரு பிள்ளை; அனாவசியமா குத்தம் குறைசொல்லிண்டு, ரிலேஷன்ஷிப்பை ஸ்பாயில் பண்ணிக்காம இருக்கறது நல்லதில்லையா?'' தன் மாமியார் காதில் விழுகிறதா என்று சரிபார்த்து, சற்றே உரத்த குரலில் சொன்னாள் மது.

முரளி நமுட்டுச் சிரிப்பு சிரித்தான். ''பெஸ்ட் நாத்தனார் ஆஃப் த மிலெனியம்''னு அவார்டு ஏதான அறிவிச்சிருக்காளா என்ன? ஒரு பெண் இன்னொரு பெண்ணுக்கு நல்லது நினைப்பதென்பது, அவனைப் பொறுத்தவரை Y2k சமாசாரம்தான்.

''ஹு^ம்... உங்க வீட்டு ஸ்டாண்டர்டை வைச்சு என்னை எடை போடாதீங்க'' காட்டமாக வந்தது பதில். அவனுடைய மூன்று தமக்கைகளைப் பற்றியும் அவள் பேச ஆரம்பித்தால், அவனுக்கு வேர்த்து விறுவிறுத்து விடும்; அவ்வளவு கனல் பறக்கும்!

"எத்தனை நாள் காம்ப்?" பேச்சை திசைமாற்றினான்.

"ஜஸ்ட் ஒன் வீக்..."

உள்ளூரிலேயே அம்மா வீடு இருந்தது முரளிக்கு தலைவலியாயிருந்தது. டிக்கெட், ரிசர்வேஷன் என்ற தொல்லை எதுவுமில்லாமல், நினைத்த நேரத்தில் 'பஸ்'ஸில் பறந்து விடுவாள். இவனுக்கு சமைத்துப் போடத்தான் இவனுடைய அம்மா இருக்கிறாளே?


''வீஸை எக்ஸ்டெண்ட் பண்ணாதே'' என்றவாறே அவளை வழி அனுப்பினான்.

திடீரென்று வந்திறங்கிய மதுவைக் கண்டு, அவளுடைய அம்மாவுக்கு ஏக ஆச்சர்யம்; "வாங்கக்கா..." என முகமலர்ந்து வரவேற்றாள் ஷோபா. தம்பியின் மனைவி. காஞ்சி காட்டனில் 'பனிச்'சென்று ஆபீசுக்கு செல்லத் தயார் நிலையிலிருந்தாள். இவளைக் கண்டதும்

தயங்கி நின்றாள்.

“அக்கா வந்திருக்கா பாரு; இன்னிக்கு ஆபீசுக்கு லீவ் போட்டுடு” என்று அம்மா சொல்வாள் என எதிர்பார்த்தாள் மது; அப்படித்தானே முதன் முதலாக முரளியின் பெரியக்கா இவர்கள் வீட்டுக்கு வந்தபோது இவளுடைய மாமியார் தடுத்தாள்? இப்படியே ஒவ்வொரு அக்காவும் மாறி மாறி வந்து போகும்போதெல்லாம், லீவு எடுத்து எடுத்தே கடைசியில் வேலையிலிருந்து ஒரேயடியாக லீவு போடும்படி ஆகிவிட்டது... ப்ச்... அது ஒரு சோகமான கிளைக்கதை....

“அவ பாட்டுக்கு ஆபீஸ் கிளம்பட்டும்” என பச்சைக் கொடி காட்ட, தயாராக குரலைச் செருமிக் கொண்ட போது... இதென்ன... “ஒண்ணுமில்லாததுக்கெல்லாம் லீவு எடுத்தா அப்புறம் அவசியமானபோது கிடைக்காமப் போயிடும்; நீ கிளம்பு; அக்காவை நான் கவனிச்சுக்கறேன்...” என்று அம்மாவே சொல்கிறாளே? இவள் வந்தது “ஒன்றுமில்லாத” விஷயமா? மதுவுக்கு கருக்கென்றது.



“அவ போகட்டும்; நாம பேசிண்டிருக்கலாம்” என்று அம்மா சொன்னதும்தான் சற்று ஆறுதலாயிருந்தது. சரிதான்.... மருமகளைப் பற்றிய கிசுகிசு மூட்டைகளை முடிச்சவிழ்க்கத்தானே அவளை அப்புறப்படுத்துகிறாள் என நினைத்துக் கொண்டாள்.

குளித்து முடித்து, சாப்பிட்டு, டி.வி. பார்த்தபின்னும், அம்மா இவளைப் பற்றி ஏதேதோ விசாரித்துக்கொண்டிருந்தாளே தவிர, மருமகளைப் பற்றி வாய் திறக்கவில்லை. அதற்குள், காலனி மாமிகளெல்லாம் இவளைக் குசலம் விசாரிக்க வந்ததில் நேரம் போனதே தெரியவில்லை. மாலை ஏழு மணி ஆகியும் ஷோபா திரும்பாதது அப்போதுதான் உறைக்க, “என்னம்மா, உன் மாட்டுப் பெண்ணை இன்னும் காணோம்?” என்றாள்.

“ஏதான பஸ் தகராறா இருக்கும்; இல்லேன்னா ‘டாண்’னு ஆறே காலுக்கே வந்துடுவா”

என்று பதில் வந்தது. ஹூ·ம்... ஐந்து நிமிடம் லேட்டாக வந்தாலும், ''எங்கேடி ஊர் சுத்திட்டு வரே?'' என்று மிரட்டிய அம்மாவா இவள்? மதுவுக்கு ஆச்சர்யமாக இருந்தது.

ஏதோ பேரணி, டைவர்ஷன் என்று சொல்லிக்கொண்டு ஒருவழியாக ஏழரைக்கு வந்து சேர்ந்தாள் ஷோபா. அதற்குள் அம்மாவே பாதி சமையலை முடித்து விட்டிருந்தாள். ஷோபா ஏதோ ஒப்புக்கு ஏற்றி இறக்கியது போலிருந்தது.

இவளுடைய மாமியாராயிருந்தால், பெண்களுடன் பேச உட்கார்ந்து விடுவார். இவளேதான், 'என்ன பிடிக்கும்? எது சமைக்கட்டும்?' என்றெல்லாம் கேட்டுக் கேட்டுச் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் முகம் பூசணியாய் மாறியிருக்கும்!

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை; ஷோபாவை முழு நேர சமையல்காரியாகப் பார்க்கலாம் என்று நினைத்தவளுக்கு, ஏமாற்றம் காத்திருந்தது.

அவள் ஆற அமர, தலைக்கு எண்ணெய் தேய்த்துக் குளிக்கவென்று ஊறிக் கொண்டிருந்தாள். அம்மாதான் சமையல்கட்டில் ஏதோ செய்துகொண்டிருந்தாள்.

''ஏம்மா... இன்னிக்காவது ஷோபாவை சமைக்க விட்டிருக்கக்கூடாதோ? அவ கைச் சமையலை நான் எப்ப டேஸ்ட் பண்றது?'' மெதுவாக ஆரம்பித்தாள் மது.

''தினமும் அவதானேடீ சமைக்கறா? இன்னிக்கொருநாளாவது லீவு நாள்ல கொஞ்சம் ஹெல்ப் பண்ணலாமேன்னுதான்; காய் கறி கூட அவதான் நறுக்கித் தந்தா...'' அம்மா அனாவசியமாக ஷோபாவுக்கு வக்காலத்து வாங்குவது போலிருந்தது.

''இதோ நான் குளிச்சுட்டு வந்து சமைக்கிறேன்'' என்று ஷோபா சொன்ன பிறகுதான் மதுவுக்கு சமாதானமாயிற்று.

டைனிங் டேபிளில் அமர்ந்த உடன் ஷோபா பரிமாறத் துவங்கினாள். கத்தரிக்காய் கறியுடன் சேர்த்து நூறு கிராம் எண்ணெயையும் ஒவ்வொருவர் இலையில் இட்டதும், அம்மா அலறுவாள் என நினைத்தாள். அவள் ஒரு வாரத்துக்கு உபயோகிக்கும் எண்ணெயை இவள் ஒரே நாளில் தீர்த்திருப்பாள் போலிருந்தது. இப்படிச் சொதசொதவென்று கறி செய்தால் அம்மாவுக்கு ஆகவே ஆகாது. ஆனால் ஊஹூ·ம்... வாயே திறக்கவில்லையே?

பொறுக்காமல் மதுதான், ''நான்-ஸ்டிக் 'பான்'ல வதக்கினா எண்ணெய் அவ்வளவு தேவைப்படாதே?'' என்று சொல்லி வைத்தாள்.

''அதுவா.... அது ரொம்ப டைம் ஆறது அக்கா...'' என்ற பதில் வந்தது 'பளிச்' சென்று.

அடுத்து, சாதத்தைப் பார்த்ததும், அம்மா முணுமுணுக்கவாவது செய்வாள் என எதிர்பார்த்தாள். அவளுக்கு குழைந்த சாதம்தான் பிடிக்கும். இதுவோ ஆணி ஆணியாக, விறைத்து முறைத்துக்கொண்டிருந்தது. ஒருவருமே ஒன்றும் சொல்லாததால், மதுவேதான் மறுபடியும், ''சாதத்தை இன்னும் கொஞ்சம் நேரம் குக்கர்ல வச்சிருக்கலாமோ?'' என்று ஆரம்பித்தாள்.

அவள் முடிப்பதற்குள், ''உங்க தம்பிக்கு, இப்படி ஒண்ணோட ஒண்ணு ஒட்டாம இருந்தாத்தான் பிடிக்கறது அக்கா'' என்று இடைவெட்டினாள் ஷோபா. அதன் பிறகு, சாம்பாரா ரசமா என இனம்பிரிக்க முடியாத ஒரு பதார்த்தத்தையும், சுள்ளென்று காரம் தலைக்கேறிய பூசணிக்காய் கூட்டையும், திப்பி திப்பியான தயிருடன், ஒட்டாமல் தனியே நின்ற தக்காளிப் பச்சடியையும், நமுத்துப் போன இலை வடாத்தையும் மௌனமாகச் சாப்பிட்டு எழுந்தாள்.

வாஷ்பேஸினுக்குப் பக்கத்தில், அடைசலான ஒட்டடை கண்ணை உறுத்தியது. ''க்ளீன் பண்ணணும் போலிருக்கே'' என்ற இவளது 'கமெண்டை' யாரும் காதில் போட்டுக் கொள்ளவே இல்லை!

பெட்ரூமில் போய், பாயை விரித்துப் படுக்கலாம் என நினைத்தவளுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. அங்கே, வாய்பிளந்து கொண்டு ஒரு கப்போர்ட், கருட்டித் திணிக்கப்பட்ட ஒரு நூறு புடைவைகளுடன் பயமுறுத்தியது.

''என்னம்மா இது....'' என்றாள் மது,



''உங்க பையனுக்கு குசும்பு அதிகம்...''

''ஏன் சார்?''

''காட்டின் பயன் கேட்டா, 'வீரப்பன் ஒளிந்து கொள்ளவும், அதிரடிப்படை காலம் தள்ளவும்'னு எழுதி வெச்சிருக்கான்!''

— சித்தோடு கே. சதீஷ்குமார்

விக்கித்துப் போய்.

"பளிச்சுனு ஒரு பத்து ட்ரெஸ் இருந்தாப் போதும்; அதை ஒழுங்கா மெய்ன்டெய்ன் பண்ணு" என்று தனக்கு நொடிக்கொருதரம் போதித்த அம்மா, எப்படி இதைச் சகித்துக் கொண்டிருக்கிறாள்?

"பேசாம படு" கப்போர்டின் கதவைச் சாத்தி விட்டு. "அவ அதையெல்லாம் அயர்ன் பண்ணி வெச்சுடுவா" என்றவாறே படுத்து விட்டாள் அம்மா! "மத்தியான டிஃபனுக்கு என்னக்கா பண்ணட்டும்?" என்றவாறே ஷோபா வேறு நுழைந்து விட்டாள்.

"அக்காவுக்கு சேவை பிடிக்கும்" என்று தம்பியே சிபாரிசு செய்தான். அது வேறு அரைத்துப் பிழிந்து, கஷ்டப்படப் போகி றானே என்று இவள் எண்ணுகையில், "ரெண்டு டிபர் சேவை பாக்கெட்டை போட் டுப் பண்ணிடு... நிமிஷமா ஆயிடும்" என அம்மாவே முந்திக்கொண்டு விட்டாளே?

மாலை ஏதோ சினிமாவுக்குச் சென்று, வெளியில் எதையோ கொறித்து விட்டுப் படுத்து விட்டார்கள்; அம்மாவைத் தனிமை யில் விசாரிக்க நேரமே வாய்க்கவில்லை.

மறுநாள் இவள் எழ நேரமாகி விட்டது. ஷோபா, "ஆபீசுக்கு நேரமாச்சு; அந்த ஆட் டோவைக் கூப்பிடுங்களேன்" என கத்திக் கொண்டிருந்தாள். "பொடிநடையாப் போனா அஞ்சு நிமிஷத்துல ஸ்டேஷன் வந்துடும்" என்று மது சொன்னது அவள் காதில் விழா வண்ணம், டீ.வி.யை அம்மா பெரிசாக்கியது போலிருந்தது.

ஷோபா விடைபெற்றதுதான் தாமதம்; அம்மா பிடித்துக்கொண்டு விட்டாள்.

"ஏண்டி., உனக்கிருக்கிறது ஒரே தம்பி; அவன் பொண்டாட்டியை அனாவசியமா குத் தம் குறை சொல்லி எதுக்கு ரிலேஷனைக் கெடுத்துக்கற? அவ சின்னப் பொண்ணு; பக்கு வமா எடுத்துச் சொல்லி நான் சமாளிக்க மாட் டேனா? நீ ஏன் கெட்ட பெயர் எடுத்துக்கற?"

மது வாயடைத்து நின்றாள்; இதே டய லாக்கைத்தானே அவள் பேசுவதாக இருந் தாள்? இனி பேச என்ன இருக்கிறது? கிளம்பி விட்டாள்.

திடுமென்று வந்து நின்ற மனைவியைப் பார்த்து, "என்ன... நாத்தனார் ஆஃப் த மிலெ னியம் அவார்டை இவ்வளோ சீக்கிரமா குடுத் துட்டாளா?" என்று கிண்டலடித்தான் முரளி.

"ஊஹூம்... மாமியார் ஆஃப் த மிலெ னியும் அவார்டை எங்கம்மாவுக்குக் குடுத்துட்டு வரேன்" என்றாள் மது, நறுக் கென்று. ●

ரமாமணி சுந்தர்

மீண்டும் வீடு தேடும் படலம். அதுவும் அறிவு ஜீவிகளும், அந்தஸ்து உள்ளவர்களும் வாழும் தெற்கு தில்லியில். இது இலேசுப் பட்ட காரியமில்லை என்பது அனுபவப் பட்டவர்களுக்கு மட்டுமே புரியும். மதராசி கள் இளிச்சவாயர்கள், ஒரு அதட்டுப் போட் டால், அலறிப் புடைத்துக் கொண்டு வீட் டைக் காலி பண்ணிவிடுவார்கள் என்று தில்லிவாழ் தமிழர்கள், நல்ல பெயர் வாங்கிய காலம் மலையேறிப் போய் விட் டது! என்னடா செய்வது என்று நானும், என் கணவரும் மண்டையை, அதாவது, ஒருவர் மண்டையை மற்றவர் உடைத்துக் கொண்டிருந்த சமயத்தில் ஆபத்பாந்தவனாக அவதரித்தான் என் கணவனின் நண்பர்(?) வெங்கடாஜலம். தனக்குத் தெரிந்த ஒருவரின் வீடு காலியாகப் போவதா கவும், தான் ஒரு வார்த்தை சொன்னால் டாணென்று வீடு கொடுத்து விடுவார் என்றும் அவன் பெரு மையடித்துக் கொண் டான். வழக்கம் போல் இதுவும் ஒரு வேளை வெங்கடாஜலத்தின் ஜாலமாக இருக்குமோ என்று எங்களுக்கு உள்ளூர சந்தேகம் தான். இருந்தாலும் நப்பாசை யாரை விட் டது?

அடுத்த ஞாயிறன்று வீடு பார்க்கப் போனோம். இரண்டு படுக்கை அறைகள் கொண்ட அந்த முதல் மாடி வீடு, நடுவில் திறந்த இடைவெளி வைத்து ஹைதர் காலத்து வீடாகக் காட்சியளித்தாலும், காற் றோட்டமாகவும், வெளிச்சமாகவும் இருந் தது.


திறந்த வெளியில் ஆங்காங்கே புறாக்கள் வளைய வந்து கொண்டிருந்தன.

"அடாடா! வீடு கிளி கொஞ்சறது என் பதா? புறா கொஞ்சறது என்பதா?" என்று வெங்கடாஜாலம் அநாவசியமாக வீட்டுக் காரருக்கு ஐஸ் வைத்தான்.

"தில்லி நகரில் அவனவன் வாடகை கொடுக்க முடியாமல் புறாக் கூண்டு போன்ற வீட்டில் குடியிருக்கிறான். எங்கள் வீட்டிலோ, புறாக்கள் கொஞ்சி விளையாடுகின்றன" என்று ஏகமாக பெரு மையடித்துக் கொண்டார், வீட்டின் சொந் தக்காரர்.

"முகலாய மன்னர்களின் அரண்மனை களின் அந்தப்புரத்தில், இப்படித்தான் புறாக் கள் ஓடியாடி, பறந்து விளையாடிக் கொண்





கொஞ்சும் புறாவே!

டிருக்கும்'' என்று முகலாய அரண்மனைகளில் தாம் பல காலம் வாழ்ந்தவர் போன்று வர்ணித்தார் என் கணவர்.

''லண்டனில் உள்ள டிரஃபால்கர் சதுக்கத்தை நினைவூட்டுகிறது'' என்றேன், நான். சமீபத்தில் லண்டனுக்கு போய் வந்த பெருமை எனக்கு.

''வீட்டின் உள் வராந்தாவில் நின்றால், கீழ் வீட்டில் நடப்பதையெல்லாம் வேடிக்கை பார்க்கலாம்'' என்று நாக்கை சப்புக்கொட்டிக் கொண்டு வம்புக்கு அலைந்தார், என் கணவர்.


''அப்பாவுக்கு கேபிள் டீ.வியின் தொண்ணூறு சானல்கள் போதாமல், தொண்ணூற்று ஒன்றாவது சானல் ஒன்று கிடைத்து விட்ட குஷி'' என்று என் மகள் அவரைச் சீண்டினாள்.

வீட்டைச் சுற்றிக் காட்டிய, வீட்டின் சொந்தக்காரர், ''நன்றாக யோசித்துக் கொள்ளுங்கள். இந்த வீட்டில் குச்குச் பிராப்ளங்கள் ஹை. அப்புறம் தொண தொண

வென்று கம்ப்ளைண்ட் பண்ணக் கூடாது" என்று நெல்லைத் தமிழர்களுக்கே உரிய கலவை பாஷையில் முணுமுணுத்தார்.

அடாடா! இந்த கலியுகத்தில் இப்படி ஒரு அரிச்சந்திரனா என்று என் கணவர் மயங்கியே போய் விட்டார். மேற்கொண்டு யோசனையே பண்ணாமல் "சல்தா ஹை" என்று அட்வான்ஸ் பணத்தை அவர் கைகளில் திணித்து விட்டார்.

புது வீட்டிற்குக் குடிபுகும் நாளன்று, சும்மா இல்லாமல் நல்லார் ஒருவர் உளரவே, அவர் பொருட்டு பெய்த மழை "சோ" என்று கொட்டித் தீர்த்து விட்டது. திறந்த இண்டவெளியின் வழியே அடித்த சாரல், ஒரு அறையையும் விட்டு வைக்காமல், வரவேற்பறை, சமையல் அறை, படுக்கையறை என்று எல்லா அறைகளிலும் புகுந்து விளையாடியது. வந்திறங்கிய சாமான்களை பிளாஸ்டிக் ஷீட்டினால் மூடுவதும், வீட்டிற்குள்ளேயே மழைக் கோட்டு, குடை சகிதம் ஆறாக ஓடும் நீரில் வழுக்கி விழாமல், நாங்கள் தத்தளிப்பதும் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. வீட்டுக்காரர் முணுமுணுத்த பிராப்ளங்களில், இது பிராப்ளம் நெ.1 போலிருக்கிறது என்று என்னுடைய 'கவுண்ட் அப்'பை ஆரம்பித்தேன்.



"இந்த இடைத்தேர்தலுக்கும் தலைவர் மேடையில ஆடிப்பாடி ஜனங்களைக் கவர ஒரு பாட்டு தயார் பண்ணி இருக்காராமே..?"

"ஆமா, ஏமாத்திப் போட்டிங்களே, ஜட்ஜ் ஐயா, ஏமாத்திப் போட்டிங்களே!' அப்படின்னு!"

– கோவை கே. அனிதா

"ஒரிசா புயலில் சிக்கியவர்களுடன் ஒப்பிடுகையில், இது ஒன்றுமே இல்லை" என்று 'இடுக்கண் வருங்கால் நகுக' என்ற அறிவுரையைப் பின்பற்றி, என் கணவர் அசடுவழியச் சிரித்து நிலைமையை சமாளித்துக் கொண்டிருந்தார்.

சுமார் இரண்டு மணி நேரங்களுக்குப் பிறகு மழை ஒருவழியாக நின்றது. அத்தனை நேரம் புறாக்கள் எங்குதான் ஒளிந்து கொண்டிருந்தனவோ, படபடவென்று சிறகுகளை அடித்தவாறு பறந்து வந்து ஜோடி ஜோடியாக வராண்டா கைப்பிடி சுவர்களிலும், ஜன்னல் தடுப்புகளிலும் உட்கார்ந்தன. என் கணவரோ, புதிய உற்சாகம் பெற்று காதல் மன்னனாக தன்னைக் கற்பனை செய்து கொண்டு "மணிப்புறாவும், மாடப்புறாவும் மனதில் பேசிய பேச்சல்லோ!" என்று பாடியவாறு சாமான்களை எடுத்து வைக்க ஆரம்பித்தார்.

வீட்டை ஓரளவு சரிசெய்த பிறகு முதலில் குளிக்க இறங்கியவள் எனது டீன் ஏஜ் மகள். வழக்கம் போல் 'பாத்ரூம் கச்சேரியுடன்' குளிக்க ஆரம்பித்தவள், திடீரென்று குய்யோ, முறையோ என்று கத்த ஆரம்பித்தாள். அவள் போடும் கூச்சலைக் கேட்டு கீழ் வீட்டு, மாடி வீட்டு குடித்தனக்காரர்கள் என்னவோ, ஏதோ என்று எட்டிப் பார்த்தார்கள். (கீழ் மாடி வீடுகளுக்குத் தெரியாமல் நம் வீட்டில் ஒரு துரும்பு கூட அசைய முடியாது என்பது புரிந்தது. இது பிராப்ளம் நெ. 2. என்று எண்ணிக் கொண்டேன்.)

இரண்டு புறாக்கள் குளியலறையில் உட்கார்ந்து சல்லாபித்துக் கொண்டிருந்தது தெரியாமல் குளிக்க ஆரம்பித்த என் மகள், திடீரென்று புறாக்களை கவனித்த உடன் பயந்து போய் அலற ஆரம்பித்திருக்கிறாள். அவள் அலறுவதைக் கேட்டு புறாக்கள் அரண்டு போய் அவள் தலைமேல் வட்டமடிக்க, பிறந்த மேனியாக கதவைத் திறந்து கொண்டு வெளியேயும் வர முடியாமல், புறாக்களின் மேல் கையில் கிடைத்த தண்ணீர் குவளை, சோப்புப் பெட்டி என்று சாமான்களை விட்டெறிய, ஒருசில நிமிடங்களுக்குக் குளியலறை அமளிதுமளிப்பட்டது. என் மகள் செய்த கலாட்டாவில் குளியலறையில் இருந்த வாஷ்பேசின் வேறு உடைந்து விட்டது. வீட்டுக்காரருக்குத் தெரிந்தால் எங்கள் மண்டையை உடைத்து விடுவாரோ என்று பயந்து போய், இரவோடு இரவாக, கீழ் மாடி குடித்தனக்காரர்களுக்குத் தெரியாமல் ரகசியமாக புது வாஷ்பேசினை வாங்கி மாட்டுவதற்குள் எம்பாடு, ஒம்பாடு என்றாகி விட்டது. குடிவந்த அன்றைக்கே 500 ரூபாய் வரை தண்டச் செலவு!

இதிலிருந்து நாங்கள் கற்றுக் கொண்ட

பாடம், குளியலறைக்குள் நுழையும் முன் புறாக்கள் உள்ளே இல்லை என்று ஊர்ஜிதம் செய்து கொள்ள வேண்டும் என்பது. (பிராப்ளம் நெ. 3). ஆனால் குளியலறையிலிருந்து புறாக்களை விரட்டுவது அவ்வளவு சுலபமாக இல்லை. "ஷூ ஷூ", "சீ போ" என்று என்ன சொல்லி விரட்டினாலும் 'நகருவேனா' என்று புறாக்கள் அடம்பிடித்தன. தில்லியில் பிறந்து வளர்ந்த இந்த புறாக்களுக்கு ஒருவேளை ஹிந்தியில் சொன்னால் தான் புரியும் போலிருக்கிறது என்று, குளியலறை வாசலில் நின்று கொண்டு நானும் என் கணவரும், லதா மங்கேஷ்கராகவும், எஸ்.பி.பியாகவும் மாறி "கபூத்தர் ஜா ஜா" (புறாக்களே போ, போ) என்று டூயட் பாடி, புறாக்களை விரட்ட வேண்டியதாயிற்று.

வீட்டிற்குக் குடிவந்து இரண்டு வாரங்கள் ஆகியிருக்கும். நானும் என் கணவரும் அலுவலகத்திலிருந்து களைத்துப் போய் வீடு திரும்பினோம். எங்கள் வீட்டில் வேலை செய்யும் அம்மாள், பெரிய கழி, இரும்புக் கம்பி, துடைப்பக்கட்டை சகிதம் கீழ் வீட்டை நோக்கி ராமாயணத்தின் பரசுராமன் படலத்தை நினைவூட்டுவது போல் படையெடுத்துக் கொண்டிருந்தாள். எங்கள் வீட்டு வேலைக்கார அம்மாள் பரம சாது இல்லை என்பது என்னவோ உண்மை. ஆனால், இதுவரை வாய்ச் சொல்லில் மட்டுமே வீரராகத் திகழ்ந்த இவர், இன்றைக்கு இவ்வளவு தூரத்திற்குத் துணிந்து விட்டாரா என்று எங்களுக்கு வயிற்றைக் கலக்கியது. கீழ் வீட்டு அம்மாளோ உச்சஸ் தாயியில் பொரிந்து தள்ளிக் கொண்டிருந்தார்.

"பாத்ரூம் கதவைச் சாத்தி வைக்கணும் என்று தெரிய வேண்டாமா? புறாக்கள் கூடு கட்டுகிறேன் பேர்வழி என்று உங்க டாய்லெட்டில் குச்சி, இலை எல்லாம் போட்டு எங்கள் வீட்டு சாக்கடை அடைத்துக் கொண்டு விட்டது."

அவர் போடும் கூச்சலுக்குப் பயந்து, கீழே போய் சாக்கடையைக் குத்தி, சுத்தம் செய்து விட்டு மாடியேறிய எங்கள் வீட்டு வேலைக்கார அம்மாள், "எல்லார் வீட்டு சாக்கடையையும் குத்த வேண்டும் என்று எனக்கென்ன தலையெழுத்தா?" என்று எங்களை குத்துகுத்தென்று குத்தினாள். இப்படி சாக்கடை அடைத்துக் கொள்வது, பிராப்ளம் நெ.4 என்று எண்ணிக் கொள்ளுங்கள். இப்படியே போனால், எண்ணுவதற்கு என் இரண்டு கை விரல்கள் போதாமல், அடுத்தவர் கைவிரல்களை கடன் வாங்க வேண்டிய நிலைமை வந்து விடும் போலிருந்தது!

சாக்கடைச் சண்டைகளைத் தவிர்க்க அன்றிலிருந்து குளியலறை, கழிவறை கதவுகளை மூடி வைக்க ஆரம்பித்தோம். விளைவு, மூக்கைப் பிடித்துக் கொண்டுதான் கழிவறைக்குள் நுழைய முடிந்தது. இந்த பிராப்ளம் நெ.5ஐ மட்டும் நிச்சயமாக சகித்துக் கொள்ள முடியவில்லை. குடும்ப அங்கத்தினர்கள் பிளஸ் வேலைக்கார அம்மாள் அனைவரும் ஒன்றுகூடி, சட்டமன்ற விவாதங்கள் போல் ஏக வாக்குவாதங்கள், அடிதடி சண்டைகளுக்குப் பிறகு மசோதா ஒன்றை நிறைவேற்றினோம். அதாவது, அந்த வீட்டில் ஒன்று நாம் குடியிருக்க வேண்டும், அல்லது புறாக்கள் இருக்க வேண்டும்.

ஸ்வீட் ஹோம் என்பது...



எஸ்.வி.சேகர் :
இனிய இல்லம் எப்படியிருக்க வேண்டும்? ஒரே வரியில் சொல்லுவதானால், எங்கள் வீடு போல இருக்க வேண்டும். ஆசையான அப்பா, அம்மா, மனைவி, குழந்தைகள் என்று எல்லோருக்கும் அமைந்து விடாது!
எந்தப் பிரச்னை, டென்ஷன் என்றாலும், வீட்டுக்குள் நுழைந்து விட்டால், மனதுக்கு நிம்மதி கிடைத்து விடும். கோபம், கத்தல் எதுவும் இல்லாமல், கலகலப்பான சூழ்நிலை மட்டுமே இங்கு நிலவும்.

காற்று, கறுப்புக்கு பயந்து வீடு காலி பண்ணலாம். ஆனால் யாராவது, போயும் போயும் புறாக்களுக்கு பயந்து வீட்டை விட்டு ஓடுவார்களோ? அதனால் இதை ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டு, புறாக்களை எப்படித் துரத்துவது என்று யோசிக்க ஆரம்பித்தோம்.

பட்டாசுகளை கொளுத்திப் போட்டால், தங்களைத்தான் சுடுகிறார்கள் என்று பயந்து

போய் புறாக்கள் பறந்தோடி விடும் என்று யாரோ ஒருவர் யோசனை சொன்னார். அது தீபாவளி சீசன் இல்லாததால், ஊரெல்லாம் தேடியலைந்து கட்டுக்கட்டாக் பட்டாசுகளை வாங்கி வந்து தோட்டத்தில் வெடித்தோம். வேளைகெட்ட வேளையில் வெடிச் சப்தம் கேட்டு அக்கம் பக்கத்தில் குடியிருப்பவர்கள் அரண்டு போனார்களே தவிர, புறாக்கள் அசையவே இல்லை.

குதிரைப் பந்தய சங்கங்கள் போன்று, பம்பாய், பெங்களூர், தில்லி போன்ற ஊர்களில் புறா பந்தய சங்கங்கள் இருக்கின்றன என்று செய்தித்தாளில் படித்தோம். எவ்வளவு செலவானாலும் சரி, புறாக்களுக்குப் பயிற்சி அளித்து துரத்தி விட வேண்டும் என்ற எண்ணத்தில், உடனே போய் விசாரித்ததில் செல்லப் புறாக்களுக்கு மட்டுமே பந்தயத்தில் பறக்க பயிற்சியளிக்கப்படும் என்று தெரிந்தது. நாங்கள் புறா விரட்டுபவர்கள் என்று தெரிந்ததும், எங்களை விரட்டியடித்து விட்டார்கள்!

இப்படியாக, நாங்கள் தீட்டிய எல்லா திட்டங்களும் நமது நாட்டின் திட்டங்களைப் போல் பலிக்காமல் போகவே, கடைசி முயற்சியாக அமலாவுக்கும் மேனகா காந்திக்கும் அந்த 'வாயில்லா ஜீவன்களை" கொடூர மனம் படைத்த மனிதர்களிடமிருந்து காப்பாற்றுமாறு 'வாட்டர்' ஷபானா ஆஸ்மி தோற்றம் கொண்ட கடிதம் ஒன்று எழுதிப் போட்டோம்.

அவ்வளவுதான். வேனில் வலையோடு வந்து லபக்கிக் கொண்டு போய் விட்டார்கள் பறவைப் பாதுகாவலர்கள்.

அதற்கொருமுறை பட்டாசு வெடித்துக் கொண்டாடி விட்டு, புறாக்கள் கூடு கட்டியிருந்த குப்பையையெல்லாம் கூட்ட ஆரம்பித்தோம்.

அதைக் கொண்டு போய் வராண்டாவிலிருந்த குப்பைக் கூடையில் கொட்டுவதற்குக் குனிந்த போதுதான் அதைக் கவனித்தேன்... ஒரு மூலையில் சாய்த்து வைத்த பழைய பிளைவுட் பலகையின் மறைப்பில் சுள்ளிகளைக் கோத்து கோத்து ஒரு கூடு? அதில் கழுத்தை வளைத்து நீட்டிக் கொண்டு... ஒரு ஜோடி குஞ்சுப் புறா!


"அச்சச்சோ! இங்க பாருங்க...!"

குடும்பமே அங்கே கூடியது. "பாவம்மா! நாமதான் இதுங்களை எடுத்து வளர்க்கணும்" என்றாள் என் மகள். பிராப்ளம் நம்பர்.... ●

வீட்டுக்குப் போடுங்க கூலிங் கிளாஸ்!

பெரிய வீடுகளில், வெராந்தாவில் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்குச் செல்லும் இடம் திறந்த வெளியாக இருந்தால், சிலர் மூங்கில் பந்தல் இட்டு, செடி கொடிகளைப் படர விடுகிறார்கள். இல்லையா?

இதற்கு மாற்றாக, இத்தாலிய கண்ணாடிச் சதுரக் கற்கள் சந்தைக்கு வந்துவிட்டன. பெங்களூரிலுள்ள உட்வில் நிறுவனம்



இவற்றை அறிமுகப்படுத்தி வருகிறது. பலவித வண்ணங்களிலும், டிசைன்களிலும் அமைந்திருக்கும் இந்தக் கண்ணாடிக் கற்கள், அறைத் தடுப்புகளாகவும் பயன்படும். இவை பிரதிபலிக்கும் ஒளி கண்களுக்கு இதமாக இருப்பதோடு, பார்வைக்கும் கவர்ச்சியாக இருக்கின்றது.

இவற்றுடன் செங்கல்-கான்க்ரீட் இணைக்கும்போது 'லோட் பேரிங்' சக்தி கிடைக்கிறது என்கிறார்கள். இவற்றை ஸ்பெஷாலிடி கிளாஸ் பிளாக்ஸ் என்கிறார்கள், இதன் தயாரிப்பாளர்கள்.

சுவரில் பதித்தால்கூட, ஏதோ ஓர் ஓவியம் மாட்டியிருப்பது போல் இதன் அழகு தனித்துத் தெரிகிறது. (ஏஷியா நியூஸ் செய்தி வாசிப்பாளரின் பின்னே இந்தக் கண்ணாடி ஓவிய வடிவம் தெரிவதைப் பார்த்திருப்பீர்களே?)


– எஸ்.வி.என்.

எங்களிடம் ராசிக்கல் மோதிரம் வாங்கி பயன்பெறும்
அனைவருக்கும் எங்களது வாழ்த்துக்கள்

ராசிக்கல் மோதிரம் வாங்க ராசியான கடை P.R. ஜுவல்லரி

P.R. JEWELLERY

GOLD, SILVER, DIAMOND & BIRTH STONES
102, USMAN ROAD, T. NAGAR, CHENNAI - 600 017.
PH: 434 4442, 432 7764 TUESDAY HOLIDAY



P.R. ஜுவல்லரியில் ராசிக்கல் மோதிரம் வாங்கி அணிந்துபயன்பெறுங்கள். ஒவ்வொரு ராசிக்கும் மோதிரம் ரூ. 400/-

(10.00 AM to 1.30 — 3.30 PM to 8.00 PM)

குறிப்பு: எங்கு ஜோதிடம் பார்த்தாலும் எங்களிடம் வந்து ரூ. 400/-க்கு ராசிக்கல் மோதிரம் வாங்கி பயன்பெறுங்கள். ஒரிஜினல் கல் என முழு உத்திரவாதம் தருகிறோம்.

நகைக் கடைக்கு நிறைய அனுபவம் தேவை. எனக்கு 20 வருட அனுபவம் உள்ளது. P.R. ஜுவல்லரி நிறுவனம் தொடங்கி 13 ஆண்டுகள் ஆகிறது. எங்கள் கடைக்கு நிறைய வாடிக்கையாளர்கள் உள்ளனர். ஆர்டரின் பேரில் வைர நகைகள், தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள், ராசிக்கல் மோதிரங்கள் சிறந்த முறையில் செய்து தருகிறோம். பரிசுப் பொருட்கள் ரூ. 50 முதல் ரூ. 10,000 வரை கிடைக்கும். அனைத்து ராசிக் கற்களும், ஸ்படிக மாலைகள், ஸ்படிக விநாயகர், ஸ்படிக லிங்கம், பவழ விநாயகர், பவழ மாலைகள், முத்து மாலைகள் அனைத்தும் கிடைக்கும்.

ராஜாக்கள் காலத்தில் இருந்தே வைரங்கள், வைடூரியங்கள், இரத்தினங்கள், நவரத்தினங்கள் உபயோகத்தில் உள்ளன. தற்போது 5 வருடமாக அனைவரும் ராசிக்கற்களை விரும்பி வாங்குகிறார்கள். எந்த ஜோதிடராக இருந்தாலும் ஒருவருக்கு இராசிக்கல் தேர்ந்தெடுக்க அவரது ராசிப்படியும், நடப்பு திசைப்படியும், என் படியும்தான் எழுதித் தருகிறார்கள். இதில் ராசிப்படி அணிவதுதான் மிகச் சிறந்தது. உதாரணமாக, நாம் கோவிலுக்குச் சென்று அர்ச்சனை செய்யும் பொழுதும், வீட்டில் நடைபெறும் ஹோமங்களின் போதும் ஜென்ம நட்சத்திரம், இராசி சொல்லித்தான் அர்ச்சனை செய்கிறோம். அதனால், அதன்படி அணிவதுதான் மிகச் சிறந்தது. அனைவரும் நவரத்தின மோதிரம் அணியலாம். மிகவும் நல்லது. இது 9 கிரகங்களின் பலனைத் தரும். 6 கிராம் தங்கத்தில் 5 CENT வைரம் வைத்து நவரத்தின மோதிரம் ரூ. 6,250/-

ராசி	ராசி மோதிரம்	விலை விவரம்
மேஷ ராசி, விருச்சிக ராசி	2 CARAT பவழம் வைத்து வெள்ளி மோதிரம்	ரூ. 400/-
ரிஷப ராசி, துலாம் ராசி	5 CENT வைரம் வைத்து 4 கிராம் தங்கத்தில்	ரூ. 4250/-
ரிஷப ராசி, துலாம் ராசி	5 CENT வைரம் வைத்து வெள்ளி மோதிரம்	ரூ. 2250/-
மிதுன ராசி, கன்னி ராசி	20 CENT மரகதப் பச்சை வெள்ளி மோதிரம்	ரூ. 400/-
கடக ராசி	2 CARAT முத்து வைத்து வெள்ளி மோதிரம்	ரூ. 400/-
சிம்ம ராசி	20 CENT மாணிக்கம் வைத்து வெள்ளி மோதிரம்	ரூ. 400/-
தனுசு ராசி, மீனராசி	1 CARAT புஷ்பராகம் வைத்து 4 கிராம் தங்கத்தில்	ரூ. 2300/-
தனுசு ராசி, மீனராசி	½ CARAT கனக புஷ்பராகம் வைத்து 4 கிராம் தங்கத்தில்	ரூ. 3000/-
தனுசு ராசி, மீனராசி	1 CARAT புஷ்பராகம் வைத்து வெள்ளியில்	ரூ. 400/-
தனுசு ராசி, மீனராசி	25 CENT கனக புஷ்பராகம் வைத்து	ரூ. 500/-
மகர ராசி, கும்ப ராசி	20 CENT நீலம் வைத்து வெள்ளி மோதிரம்	ரூ. 400/-

அனைவரும் அணியக் கூடியது கார்னெட் வெள்ளி மோதிரம். விலை ரூ. 400/- இதை அணிவதால் படிப்பு, ஞாபகசக்தி, வேலை வாய்ப்பு, வியாபாரம், செல்வ வளம் பெருகும். நம்பிக்கை, உழைப்பு, முயற்சி செய்தால் ராசிக்கல் மோதிரம் அணிந்து 100 சதவீத வெற்றி பெறலாம். எங்களிடம் ஜாதகம் கொண்டு வந்தால் என்ன கல் போட வேண்டும் எனச் சொல்கிறோம். கட்டணம் கிடையாது. ஜாதகம் இல்லாதவர்கள் பிறந்த தேதி, நேரம், ஸ்டார் ஆகியவற்றைக் கொண்டு வந்தால் கம்ப்யூட்டர் மூலம் ஜாதகம் கணித்து தருகிறோம். கட்டணம் ரூ. 50/- தபால் மூலம் ஜாதகம் பெற பதிவுத் தபால் கட்டணம் ரூ. 20/- சேர்த்து ரூ. 70/-க்கு D.D. (OR) M.O. அனுப்பவும். தபால் மூலம் ராசிக்கல் மோதிரம் பெற மோதிரம் ரூ. 400/- இன்சூர் பதிவுத் தபால் ரூ. 50/- சேர்த்து ரூ. 450/-க்கு D.D. (OR) M.O. அனுப்பவும். மெலிதான கம்பியில் அளவு அனுப்பவும். முகவரி தெளிவாக பின் கோடுடன் எழுதவும்.

எங்கு ஜோதிடம் பார்த்தாலும் எங்களிடம் வந்து ரூ. 400/-க்கு ராசிக் கல் மோதிரம் வாங்கிப் பயன்பெறுங்கள். நாங்கள் தரும் கல் ஒரிஜினல் என முழு உத்திரவாதம் தருகிறோம். தபால் எழுதினால் முழு விவர பாம்லெட் இலவசமாக அனுப்புகிறோம்.

எமது சிறப்புப் பேட்டியை விஜய் டிவியில் திங்கள், புதன், சனி காலை 8.30 மணிக்கும் வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கும் காணத் தவறாதீர்கள்.

பல வாடிக்கையாளர்கள் பணம் அனுப்பிவிட்டு முகவரி எழுதுவது இல்லை. முகவரி இல்லாமல் எங்களால் தொடர்பு கொள்ள முடியாது. முகவரி தெளிவாக எழுதவும்.

ADVT.

WE ACCEPT MASTER CARD/VISA CARDS



மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

ஆத்துத் தண்ணி மாதிரிதாங்க வாழ்க்கை. ஒரு நிமிஷம் போல அடுத்த நிமிஷம் இருக்கறதில்லை. போன வாரம் ரொம்ப ஜாலியா இருந்திருப்பீங்க. இப்ப கொஞ்சம் சிக்கல் வரும். குறிப்பா உடல்நலத்துல கூடுதல் கவனம் முக்கியம். அதிக அலைச்சல், தூக்கமின்மைன்னு அவஸ்தைப்படுவீங்க. உறவுக் காரங்களோட உரசல் இருக்கும். விரிசலாகாம பார்த்துக்கங்க. பொருளாதார நிலைமையும் சொல்லிக்கற மாதிரி இருக்காது. வீண் செலவு களைத் தவிர்ப்பது அவசியம். புதிய முயற்சி களை ஒத்திப் போடுங்க. பயணத்துல எச்சரிக்கையா இருங்க.



ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

நிறைய கிரகங்கள் இப்ப உங் களுக்குச் சாதகமா இருக்குது. நினைச்ச காரி யத்தை முடிக்கறதுல தடை இருக்காது. எதிரிகள் காணாம போயிடுவாங்க. குறிப்பா, பத்திரிகை – எழுத்துத் துறையினருக்குத் தடையில்லாத வளர்ச்சி உறுதி. வீட்டுலயும் சூழ்நிலை உங் களுக்கு சாதகமா இருக்கும். பணப் பிரச்னை இருக்காது. கோர்ட் விவகாரங்கள் சுமுகமா தீர் வாகும். நீண்ட தூரப் பயணங்கள் ஆதாயமா அமையும். சிலருக்கு வெளிநாடு போற சான்ஸ் கூட இருக்கும். பிற மொழி, மதத்தார் மூலம் சில எதிர்பாராத அனுகூலங்கள் நடக்கும்.




மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

ரொம்ப நாளா வழக்கு ஏதாவது நிலுவைல இருந்தா, இப்ப அது பைசலாயிடும். தன்னம்பிக்கை ஏற் படற மாதிரி பொரு ளாதார நிலை உயரும். வங்கிப் பணியாளர்களுக்கு ப்ரமோஷன் வாய்ப்பு இருக்கு. கலைத்துறையினருக்கும் ஆதாயமான காலகட்டம்தான். வீட்டு உப யோகப் பொருள்கள் சில வாங்குவீங்க. குடும் பத்துல ஒரு சுபகாரியம் நடக்கறதுக்குக் காலம் கனியும். சிலருக்குக் குழந்தை பாக்கியம் உண்டா கும். துணிச்சலுடன் ஈடுபடும் காரியங்கள்ல, கண்டிப்பா வெற்றி உண்டாகும். சிறு கஷ்டங் கள் அப்பப்ப எட்டிப் பார்க்கும். நண்பர்கள் விஷயத்துல எச்சரிக்கையா இருங்க.



கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

நீங்க எல்லா விஷயத்துலேயும் எச்சரிக்கையா இருக்க வேண்டிய நேரம் இது. புதிய முயற்சிகள், எதிலும் அகலக்கால் வைக் கறது – இப்ப வேணாம். ஆபீஸ்ல மேலதிகாரி களோட கோபத்துக்கு ஆளாகற மாதிரி இசகு பிசகா சில சம்பவங்கள் நடக்கலாம். வர்த்தகத் துறையினருக்கு எதிர்பாராத நஷ்டம் வரலாம். வழக்கறிஞர்களுக்கும் இது போதாத காலம். மறைமுக எதிரிகள் கை ஓங்கி இருக்கும். பய ணம், இடமாறுதல், கணிசமான முதலீடு – இந்த எதுவும் இப்ப வேண்டாம். மாணவர்களுக்கு ஞாபகமறதித் தொல்லை இருக்கும். சட்டம், காவல் துறையினருக்கு இது ரொம்பக் கஷ்ட மான காலகட்டம்.



சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

கல்யாணம், காதுகுத்தல்னு இந்த வாரம் நிறைய விசேஷங்கள் இருக்கு. பர்ஸ் பத்திரம்! கூடவே சாப்பாட்டு விஷயத் திலும் எச்சரிக்கையா இருங்க. சிலருக்கு ப்ரமோஷனோடு கூடிய இடமாறுதல் இருக்கும். வர்த்தகத் துறையினருக்கு செழிப்பான நேரம். புதிய ஒப்பந்தங்கள் சில கைகூடும். பக்திமார்க் கத்துல மனம் ஈடுபடும். சிலர் புண்ணிய யாத்தி ரைகள் போகலாம். பெண்களுக்கு திடீர் பண வரவோ, பூர்வீக சொத்தோ கிடைக்கலாம். விளையாட்டுத் துறையினருக்கும் கணித வல்லு நர்களுக்கும் புகழ்கூடும் வாரம் இது!



கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித் திரை 2-ம் பாதம் வரை)*




குழப்பமே, ஏன் என்னை இப்படி இம்சை பண்ணு றேன்னு புலம்பற அளவுக்கு முடிவுகள் எடுக்க முடியாம அவஸ்தைப்படுவீங்க. டைம் அப்படி. எதையும் சிறப்பா செய்யற உங்களுக்கு இந்த வாரம் தடைகளும் சங்கடங்களும் ஏராளம். குறிப்பா, முதலாளிகளுக்குத் தொழிலாளர்கள் மூலம் சில பிரச்னைகள் உண்டாகும். அது சண்டை வரைக்கும் கூடப் போகலாம்! இப்ப உங்க முதல் எதிரி வாய்தான். பேச்சைக் குறைக் கறது மூலம் கணிசமான இழப்புகளைத் தவிர்க்கலாம்.



துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம், 3-ம் பாதம் வரை)*

திறமை வெளிப்படும் வாரம். நீண்ட நாள் கனவு ஒண்ணு இப்ப நனவாகப் போகுது. வெளிநாடு போகும் வாய்ப்பு - இளைஞர்களுக்கு வரும். பெண்களுக்குத் திருமணம் அல்லது வளைகாப்பு யோகம் இருக்கும். விருந்துகள்ல கலந்துக்கற வாய்ப்பும் உண்டு. நீண்ட நாள் அரியர்ஸ் ஏதாவது இருந்தா, இப்ப வந்து சேரும். எழுத்தாளர்களுக்கும் குதூகலமான வாரமா இருக்கும். புதிய வாய்ப்புகள், பிரகாசமான எதிர்காலம் தென்படும். தாய்வழிச் சொத்து ஏதாவது கிடைக்கலாம். காதல் அனுபவங்கள் இனிமையா அமையும். சிலருக்கு வியாபாரத்துல திடீர் உயர்வுகள் வரவும் சான்ஸ் இருக்கு.



விருச்சிகம் : *(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

பேச்சாற்றல் மூலமே ஜெயிக்கிற ஆளு நீங்க. அதுவும் பேச்சாளராகவே இருந்திங்கன்னா, இந்த வாரம் உங்க காட்டுல மழை! புகழ் கூரையைப் பிச்சிக்கிட்டுக் கொட்டப் போகுது. குடும்பத்துலேயும் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் சில நடக்கும். வியாபாரிகளுக்கு நல்ல லாபம் உறுதி. கலைத் துறையினருக்குப்

ஓஹோ!




விருச்சிக ராசிக்காரரான சத்யராஜ் குடும்பத்தில் மகிழ்ச்சியான சம்பவங்கள் நடக்குமாம்!

புகழோட பணமும் நிறைய சேரப் போகுதுன்னா கேட்கணுமா? சிலருக்கு வீடு அல்லது அலுவலக மாறுதல் இருக்கும். பணப் பிரச்னை அறவே கிடையாது.




தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

கவனமா திட்டமிட்டுச் செயல்படுங்க. உங்களோட ஒவ்வொரு நடவடிக்கையையும் பலர் கவனிச்சிக்கிட்டே இருக்காங்கன்றதை மறந்துடாதீங்க. இந்த வாரம் நீங்க தொடங்கற புதுமுயற்சிகள் எதுவும் சுலபமா வெற்றியடையும். வங்கிக் கடன் எதிர்பார்த்துட்டிருந்தீங்கன்னா, இப்ப கிடைச்சிடும். ஆனா, பெரியவங்களை கன்ஸல்ட் பண்ணாம எந்த வேலையையும் தொடங்காதீங்க. வெளியூர்ப் பயணங்களையும் லாட்டரி மாதிரியான சமாசாரங்களையும் தவிர்த்துடறது ரொம்ப நல்லது.




மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

எதிர்ப்புகளை முறியடிச்சி வெற்றிக் கொடி கட்டப் போற மகர ராசிக்கார நண்பரே! உங்க தந்தை உடல்நலனைக் கொஞ்சம் கவனிச்சிங்களா? வீட்டுல சில சங்கடமான சூழ்நிலைகள் ஏற்பட எப்படியோ நீங்க காரணமாயிருக்கீங்க. பொறுமையா சிக்கல்களை விடுவிக்க வேண்டியதும் உங்க பொறுப்புதான்! தொழில் பிரச்னைகளை எப்படியும் சமாளிச்சிடுவீங்க. இனி வீட்டை கவனிங்க. அக்கம்பக்கத்துக்காரங்க கிட்ட கெட்ட பேர் ஏற்படறாப்பல ஏதாவது லூஸ் டாக் விடுவீங்க. கவனம்! பணம் போதுமான அளவு இருக்காதுதான். அதுக்காகக் கடன் வாங்காதீங்க.



கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

உற்சாகமான வாரம். ஜாலியா உளர் கத்தற யோகம் கூடி வந்திருக்கு. கொஞ்சம் உடம்பையும் பார்த்துக்கங்க. உறவினர்களால சில சங்கடங்கள் வரலாம். சிலருக்குக் கடன் கொடுத்துட்டு, திருப்பி வாங்கப் படாதபாடுபடுவீங்க. பெண்களுக்குப் புது டிரெஸ், நகை ஏதாவது வாங்கும் யோகம் இருக்கு. சிலர் வீட்டு உபயோகப் பொருள்களா வாங்கித் தள்ளுவாங்க. அரசியல்வாதிகள், எழுத்தாளர்கள், கலைத்துறையினருக்கு சவாலான காரியங்களும் கடினமான போட்டிகளும் காத்திருக்கு. பயணத்துல எல்லாருமே எச்சரிக்கையா இருக்க வேண்டியது அவசியம்.



மீனம் : *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

எல்லா பிரச்னைகளையும் ஊதித் தள்ளிடுவீங்க. அலுவலகத்துல நீங்கதான் இப்ப ஹீரோ(யின்)! வர்த்தகத் துறையினருக்குக் கணிசமான லாபம் வர்ற நேரம் இது. பணத்தை ஜாக்கிரதையா கையாளுங்க. முன்பின் தெரியாதவங்களை நம்பி பெரிய பொறுப்புகளை ஒப்படைக்க வேண்டாம். சிலருக்கு ஆன்மிக யாத்திரை போகும் வாய்ப்பு இருக்கு. இளைஞர்களுக்குத் திருமண யோகம் கூடி வருது. வெளிநாட்டுத் தொடர்புகள் பயனுள்ளதா அமையும். உடல்நலத்துல அதிக எச்சரிக்கை காட்டறது மிக அவசியம்.


காக்கைகளும், கழுகுகளும் முறையே அடுத்த பிண்டத்திற்கும், பிரேதத்திற்குமாக நோட்டமிட்டபடி ஒற்றர்களுக்கே உரிய லாகவத்தோடும் எதிர்பார்ப்புடனும் பறந்து கொண்டிருந்தன.

சற்றே தள்ளியிருந்த ஹரிச்சந்த்ரா காட்டில் நிதி செய்யவென்றே இரு கட்டடங்கள். சுவாதி அமர்ந்திருந்த அஸ்வமேத காட்டில் ஜேஜே என்று (கொஞ்சம் வியாபாரப் பின்னணி கலந்திருக்க) பஜனை சத்தம் பலமாகக் கேட்டது. பிணங்கள் வரிசைக் கிரமத்தில் படிக்கு ஒன்றாக வைக்கப்பட்டிருந்தன. 'இதெல்லாம் எனக்கு சகஜம்' என்ற உணர்வோடு கங்கை சலனமில்லாமல்(!) ஓடிக் கொண்டிருந்தது.

சந்திரமோகனின் உயிர் பிரிந்து சில மணி நேரங்கள் ஆகிவிட்டிருந்தன. 'இந்தக் காக்கைகள் மற்றும் கழுகுகளைத் தாண்டி அப்பாவின் உயிர் காற்று வெளியில் மேல் உலகத்துக்குப் போய்விட வேண்டுமே' என்ற பரிதவிப்பு ஏற்பட்டது சுவாதிக்கு. முன்னா பிரமை பிடித்தவன் போலக் காட்சி தந்தான்.

பக்கத்து வீட்டு பிமலா நீதி வற்புறுத்திக் கொடுத்திருந்த தேநீரை மட்டுமே குடித்துவிட்டு இருவரும் கொட்டு கொட்டென்று படித் துறையில் உட்கார்ந்திருந்





தனர். அங்கிருந்து நகர சுவாதி மறுத்ததைத் தொடர்ந்து, ''இன்னும் அரைமணிக்குள்ளே வீட்டுக்கு வந்துடும்மா. முன்னா உனக்குத் துணையாக இருக்கட்டும்'' என்றபடி அவளும் கேஷவும் கிளம்பி விட்டிருந்தனர்.

'இனி தனக்கு ஜுரமென்றால் கழுத்தில் கைவைத்துப் பார்க்க யாருமில்லை. இனி தனக்கு பலூன் வேண்டுமென்றால் கொஞ்சம் எரிச்சலுடனாவது அதை வாங்கித் தர ஆளில்லை. இனி நள்ளிரவில் காய்ச்சலில் அனத்தினால் தலையைக் கோதிவிட யாருமில்லை. இப்படியெல்லாம் யோசித்த போதே 'இனி துளசி மானஸ் மந்திரி'ன் புல்வெளியில் மாலை கொஞ்ச நேரம் உட்கார்ந்து விட்டு வந்தால் அதற்காகத் திட்டவும் யாருமில்லை' என்ற எண்ணமும் வந்தது.

வங்கி லாக்கரைத் திறந்த சமயம் ஏற்பட்ட கிறுகிறுப்பில் அப்பா மயக்கமடைந்ததும், விஷயமறிந்து சுவாதி அங்கு சென்றபோது லாக்கரின் சாவியை வங்கி மானேஜர் அவளிடம் கொடுத்ததும்... 'இவ்வளவு வித்தியாசமான முறையில் யாரும் தனது சொத்துக்களைத் தன் வாரிசுக்கு ஒப்படைத்திருக்க மாட்டார்கள்' எனும்படி சம்பவங்கள் நடந்தேறின.

சிவா நர்சிங்ஹோமுக்கு அழைத்துச் செல்லும்போதே அப்பாவுக்கு நினைவு திரும்பி விட்டது என்றாலும் கடைசி வரை அவரால் பேச முடியவில்லை. எதையோ சொல்ல நினைக்கிறார்

அருண் சரண்யா

என்பது அவர் கண்களிலேயே தெரிந்தது. என்றாலும் அவை ஆயாசத்துடன் அடிக்கடி மூடிக் கொண்டன. அரிதாக அவை திறந்து கொண்ட போது பளபளப்பு தென்பட்டது. பிறகு அக் கண்கள் நிரந்தரமாக மூடிக் கொண்டன.

அப்பாவின் முடிவைப் பற்றி அறிவித்து விட்டு டாக்டர், சுவாதியின் தோளைத் தட்டி விட்டுச் சென்ற போதும், அப்பாவின் முகத்தை வெள்ளைத் துணியால் மூடிய போதும் கூட சுவாதிக்கு அடிவயிறு கலங்க வில்லை. யாருக்கோ ஏதோ அந்நிய தேசத்தில் நடப்பது போல்தான் இருந்தது.

'ஐயோ, உன் ஒரே சொந்தமும் போயிடுச்சா' என்று பீமலா நிதி பதறியபடி ஓடி வந்து கட்டிக் கொண்ட போது கூட உடலில் ஓர் அசாத்திய இறுக்கம் தோன்றியதோடு சரி.

"பண்டிட்ஜி, இந்தச் சின்ன வயசிலா உங்களுக்குச் சாவு?" என்று கண்கலங்கிக் கூறிய அக்கம்பக்கத்தினர் மறக்காமல் வேறு இரு விஷயங்களை சுட்டிக் காட்டினர்.

அப்பா மாபெரும் புண்ணியவான் என்பது அவற்றில் ஒன்று. இல்லாவிட்டால் நினைத்தாலே முக்தி தரும் தலத்தில் உயிரை விட்டிருப்பாரா? ஏதோ உள்ளுணர்வு காரணமாகத்தான் வருடக்கணக்கில் தான் வாழ்ந்த டேராடூனை விட்டு விட்டு அவர் தமது கடைசி வருடங்களைக் காசியில் கழிக்க முடிவு செய்திருக்க வேண்டும். பல வருடங்களுக்கு முன்பே பூவும் பொட்டுமாகப் போய்ச் சேர்ந்து விட்ட இவர் மனைவியும் புண்ணியவதிதான். என்ன பாவம், பதினெட்டு வயது மகளைத் தனியே விட்டு விட்டார்கள்!

"வேறே யாருமே உங்களுக்கு உறவுக்காரங்க இல்லையா?" என்ற கேள்வி மீண்டும் மீண்டும் சுவாதியிடம் கேட்கப்பட்டது. இல்லையென்று அவள் மீண்டும் மீண்டும் தலையசைக்க, "சரி, அப்போ ருத்ர தகனம் செய்திடலாம்" என்று முடிவெடுத்தனர்.

வந்தவர்களெல்லோரும் தன் தலையையும், தோளையும் தடவிக் கொடுத்து விட்டு விம்மலோடு நகர, வேறெந்த உணர்வையும் விடக் குழப்பமே அவளிடம் வழக்கம் போல் மிஞ்சி நின்றது. "கவலைப்படாதே மகளே", "பகவான் காப்பாற்றுவார்", "காசி விஸ்வநாதர் கைவிட மாட்டார்" என்றெல்லாம் அவர்கள் சொன்ன போதுதான் சுவாதியின் குழப்பம் பயமாக மாறியது. அப்படியானால் இவர்களில் யாரும் நம்மைக் காப்பாற்றப் போவதில்லை. இவர்கள் எல்லோரும் கைவிட்டு விட்டார்கள். பீமலா நிதி உடைந்து அழுதாலும், "நாங்கள் இருக்கிறோம் உனக்கு" என்ற வாக்கியத்தைக் கூறவில்லை என்பது உறைத்தது.

அன்றிரவு தன்னிடமிருந்த மஞ்சள் துணிப்பையிலிருந்து ஒரு சின்னத் துண்டை முகம் துடைத்துக் கொள்வதற்காக அவள் எடுத்தபோது, அந்தக் கடிதம் கீழே விழுந்தது. வங்கி லாக்கர் அறையில் அப்பாவின் லாக்கர் அறையிலிருந்து அவள் பத்திரப் படுத்தியிருந்த கடிதம். பிரித்துப் படித்தாள்.

என்ன! என்ன! திரிவேணி சங்கமத்தில் தொபீரென்று விழ நேரிட்டு, எங்கிருந்தோ வந்த முதலை ஒன்று கடல் ஆழத்துக்கு இழுத்துச் சென்றால் ஏற்படும் அதிர்வு ஏற்பட்டது.

"என்னுடைய அம்மா உயிரோடு இருக்கிறாளா?"

கூடத்தில் மாட்டப்பட்டிருந்த அம்மாவின் புகைப்படம் அவளைப் பார்த்து புன்னகைப்பது போல் பட்டது. காசிக்கு வந்த பிறகு மட்டுமே அப்பா அவள் பார்வைக்கு வைத்த புகைப்படம். "நீ தினமும் என் படத்துக்கு ஏற்றி வைத்த ஊதுவத்தியும், மலர்களும் மாயை. நான் உனக்காகக் காத்திருக்கிறேன். வா" என்பது போலிருந்தது இப்போது. புகைப்படத்துக்கு மரியாதை செய்த போது ஏற்பட்ட அப்பாவின் முக மாறுதலை வருத்தம் என்றல்லவா அவள் அர்த்தப்படுத்திக் கொண்டிருந்தாள்.

அப்பாவின் இறப்பு ஏற்படுத்தாத அதிர்ச்சியை அம்மாவின் உயிர்ப்பு உண்டாக்கியிருந்தது. இப்போதும் கூட மனத்தில் ஆனந்த நீரூற்று கிளம்பி நடனமாடவில்லை. என்றாலும் 'இனி காசியில் என்ன செய்யப் போகிறோம்?' என்ற கேள்வியே, அவளை முகம் பார்க்காத அம்மா இருக்கும் தென்திசை நோக்கி உந்தித் தள்ளியது.

ஒருவழியாக வியப்பு அடங்கிய பிறகு பீமலா நிதி வாழ்த்தினாள். "போன தீபாவளியின் போது அன்னபூரணித் தாயார் லட்டுத் தேரில் நம் தெருவில் வந்தபோதே வேண்டிக்கிட்டேன். "நம்ம சுவாதிக்கு ஒரு நல்ல வாழ்க்கையைக் காட்டு தாயே"ன்னு. உலகத்துக்கே படியளப்பவள் உனக்குத்தானா ஒரு கவளம் கொடுக்க மாட்டாள்? தாராளமாக உன் அம்மாவிடம் போயிட்டு வா. ஒரு

கதவை மூடும்போதே பகவான் இன்னொரு கதவைத் திறப்பான்னு கேஷவ் அடிக்கடி சொல்வது உன் விஷயத்திலே சரியாய் போச்சு."

"தீதி, எனக்கு எவ்வளவோ உபகாரம் செய்திருக்கிறீர்கள். இப்போ இன்னொரு உதவி செய்யணுமே."

புரிந்து கொண்டது போல் தலையாட்டினாள் பீமலா. "என்ன அங்கே உன் அம்மாவைப் பிடிக்கலேன்னா இங்கேயே வந்திடப் போறியா? உன் இஷ்டம். தவிர கோயிலிலிருந்து உங்கப்பாவுக்கு வரவேண்டிய பணமெல்லாம் கைக்குக் கிடைக்கக் கொஞ்ச நாள் ஆகுமில்லையா? வீட்டைப் பூட்டி சாவியை என்னிடம் கொடுத்து விட்டுப் போ. நான் வச்சுக்கறேன். அப்புறமாகக் காலி செய்தா போச்சு."

"அதில்லே தீதி, எப்படியிருந்தாலும் நான் ஒரு பத்து நாளிலே திரும்பி வரலாம்னு இருக்கேன். அதுவரை முன்னாவைக் கொஞ்சம் பார்த்துக்க முடியுமா?"

பீமலாவின் முகம் மாறியது. பக்கத்தில் யாருமில்லை என்பதை நிச்சயித்துக் கொண்டு குரலைத் தழைத்துக் கொண்டாள்.

"தூர தேசத்துக்குப் போகும் போது யாராவது பாறாங்கல்லையும் சுமப்பார்களா என்ன? முன்னா யார்? யாரோ வேலைக்காரப் பையன். தவிர மூளைக் கோளாறு வேறே. அவனை இங்கேயிருக்கிற அனாதை ஆசிரமம் எதிலேயாவது சேர்த்து விடு. நான் வேணா கேஷவிடம் சிபாரிசுக் கடிதம் வாங்கித் தரட்டுமா?"

மனத்தின் வலி சுவாதியின் முகத்திலும் தெரிந்தது. "வேண்டாம். நீங்கள் சாவியை வைத்துக் கொண்டிருப்பதே பெரிய உதவி தான்" என்றபடி தன் வீட்டுக்குத் திரும்பினாள்.

கால்களை மடித்தவாறு உட்கார்ந்து கொண்டே தூங்கிக் கொண்டிருந்தான் முன்னா. அவனைப் படுக்க வைத்து விட்டு இரவு உணவுக்காக அரிசி களையத் தொடங்கினாள் சுவாதி.

இரு நாட்கள் கழித்து முன்னாவுடன் வாரணாசி எக்ஸ்பிரஸில் ஏறிக் கொண்டாள் சுவாதி. தனிமை உணர்வு பூதாகரமாக எழுந்தது. "நானிருக்கும் போது உனக்கென்ன தனிமை?" என்றபடி அவளது பெட்டிக்குள் படபடத்தது அந்தக் கடிதம்.

(தொடரும்)

“நல்ல பிசினஸ் நடந்து நிறைய பணம் வந்தாலும், கையில் தங்க வில்லை. வாஸ்து நிபுணரை அணுகி, ஆலோசனை செய்தேன். என் வீட்டில் சில மாற்றங்களைச் செய்யச் சொன்னார். அலுவலகத் திலும் அவர் கூறியபடியே முன்பு கதவு இருந்த இடத்தை மூடிவிட்டு, புதிய இடத்தில் கதவு வைத்தேன். கிரில் கேட்டையும் இடம் மாற்றி னேன். ஆபீசில் என் சீட்டையும் திசை மாற்றினேன். கடந்த பதி னைந்து வருடங்களாக இல்லாத நிம்மதி எனக்கு இப்போது கிடைக் கிறது. புதிய காண்டிராக்ட்கள் கிடைத்திருக்கின்றன என்பதை விட, பணம், விரயமாகாமல், கையில் தங்குகிறது” என்கிறார் மாத வன்.

குரோம்பேட்டையைச் சேர்ந் தவர்கள் சங்கரன் - சபீதா தம்பதி. இவர்களுக்கு ஏகப்பட்ட பிரச்னை கள். கணவன் மனைவிக்குள்ளேயே மிஸ்அண்டர்ஸ்டாண்டிங். அச் சரப்பாக்கத்தில் வசிக்கும் பால்ய நண்பரிடம் ஒரு நாள் குடும்பப் பிரச்னைகளை மனம் விட்டுப் பேசிக் கொண்டிருந்தபோது, வாஸ்து அறிந்த அவர், வீட்டைப் பார்த்துவிட்டு, சில வாஸ்து குறைபாடுகளை நீக்கும்படி சொன் னார். அதன்படி, இவரது முதல் மாடி ஃபிளாட்டில், பூஜை அறை யாக இருந்த இடத்துக்குக் கட்டில் களை மாற்றினார். படுக்கை



இருக்கு மாழக்கு வாஸ்து பொருந்துமா?

அறையை பூஜை அறையாக்கி விட்டார். புதி தாக, ஜன்னலை ஒட்டிய ஒரு இடத்தில் ஒரு வாஷ்பேசின் பொருத்தச் சொன்னார் வாஸ்து நண்பர்.

“இதெல்லாம் செய்து முடித்த சில வாரங் களிலேயே நல்ல மாற்றங்களை உணர முடிந் தது. இரவில் மாத்திரை ஏதுமின்றி நிம்மதி யாக உறங்க முடிகிறது” என்கிறார் சங்கரன். “பணம் வைக்கும் பீரோ முன் மேற்குப் பார்த்து இருந்தது. இப்போது, கிழக்குப் பார்த்து மாற்றி வைத்து விட்டோம். தவிர, பிரமிட் ஒன்றையும் வீட்டில் வைத்திருக்






கிறோம்" என்கிறார் சபீதா சங்கரன்.

"ஒரு அச்சக உரிமையாளர், பிரச்னைகள் அதிகமாகி, தற்கொலை செய்யலாமா என்று கூட நினைத்தார். ஆனால், ஒரு நண்பர் அவரை என்னிடம் அழைத்து வந்தார். அவரது அச்சகத்தை நான் சென்று பார்த்தேன். அவரது ஆபீஸ் ரூமில், அவரது இருக்கை போடப்பட்டிருந்த இடமும், திசையும் வாஸ்துப்படி சரியில்லை. மாற்றிப் போட ஆலோசனை கூறினேன். அவரது அச்சகத்தில் சில மெஷின்களின் தலைக்கு மேலே உத்திரம் (பீம்) இருந்தது. அப்படி இருக்கக்கூடாது. மெஷினை இடம்மாற்றச் செய்தேன். சில மாதங்களிலேயே நல்ல மாற்றம். புதிதாக இரண்டரை லட்சம் ரூபாயில் ஒரு மெஷினை வாங்கிப் போட்டிருக்கிறார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்'' என்கிறார் வாஸ்து ஆலோசகர் ராகவன்.

"**நா**ம் டீ.வி. பார்க்கிறோம். அதில் ஏராளமான உதிரிபாகங்கள் உள்ளன. அவற்றையெல்லாம் ஒரு குறிப்பிட்ட டெக்னிக்படி வடிவமைத்தால்தானே, டெலிவிஷன் முழுமை பெற்று, அதில் நிகழ்ச்சிகளைப் பார்க்க முடியும்! அப்படியில்லாமல், அந்தப் பொருள்களையெல்லாம் நம் இஷ்டப்படி பொருத்திக் கொண்டால் அது டீ.வி. ஆகிவிடுமா? அதில் நிகழ்ச்சிகள் தெரியுமா? அப்படித்தான் நமது வீடும். யாரோ ஒருவர் போட்டுத் தருகிற பிளான்படியோ, நம் விருப்பப்படியோ வீட்டைக் கட்டிக்கொண்டு விடுகிறோம். அல்லது, யாரோ போட்ட பிளான்படி கட்டப்பட்ட ஃப்ளாட்டை விலைக்கு வாங்கி விடுகிறோம். ஆனால் அது வாஸ்து சாஸ்திரப்படி அமைந்தால் சரி! இல்லையெனில், அங்கே வசிப்பவர்களுக்குப் பிரச்னைதான்" என்கிறார் என்ஜினியரும் வாஸ்து ஆலோசகருமான அழகர் விஜய்.

வாஸ்து என்பது என்ன...?

"பழங்காலத்தில், மனையடி சாஸ்திரம் என்று குறிப்பிடப்பட்டதுதான் இன்று வாஸ்து என்று பிரபலமாக உள்ளது. நம்



• சங்கரன் - சபீதா

நாட்டில் வாஸ்து சாஸ்திரம் போல, மலேசியா, சிங்கப்பூர், சீனா போன்ற நாடுகளில் ஃபெங்-சூய் என்ற பெயரில் ஒரு சாஸ்திரம் பார்க்கிறார்கள். இரண்டுக்கும் பல வேறுபாடுகள் இருந்தாலும், அடிப்படை ஒன்றுதான். தூர கிழக்கு நாடுகளில் கட்டப்படும் வானுயர்ந்த கட்டடங்கள் ஃபெங்-சூய் முறைப்படிதான் கட்டப்படுகின்றன. அமெரிக்காவில் வாஸ்து சாஸ்திரம் கல்லூரிகளில் பாடமாகச் சொல்லித் தரப்படுகிறது" என்கிறார்.


"ராமாயணத்திலும், மகாபாரதத்திலும் கூட வாஸ்து பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. ராமாயணத்தில், கிஷ்கிந்தா காண்டத்தில், ராமனும், லட்சுமணனும் சீதையைத் தேடிச் சென்றபோது, சுக்ரீவன் வசிக்கும் மலைப்பகுதிக்கு வருகிறார்கள். அங்கு ஆஸ்ரமம் அமைத்தவுடன் ராமர், லட்சுமணனிடம், "தம்பி! நாம் அமைத்திருக்கும் இந்தக் குடில், வாஸ்து அமைப்பின்படி, மிக பலமாக உள்ளது. எனவே, நாம், நமது காரியத்தில் வெற்றி பெறுவது உறுதி" என்று கூறுகிறார். அதன்படியே ராம, லட்சுமணர்களுக்கு சுக்ரீவனின் நட்பும், ஆஞ்சநேயரின் சேவையும் கிடைக்கிறது. இலங்கையிலிருந்து, சீதையை வெற்றிகரமாக மீட்கிறார்கள். "யஜுர்வேதத்திலும், வாஸ்து பற்றி விளக்கப்பட்டுள்ளது. பண்டைக் காலம் தொட்டே, நமது கோவில்கள், அரண்மனைகள், சத்திரங்கள், வீடுகள் கட்டுகிறபோது, நமது முன்னோர்கள் இதைக் கடைப்பிடித்திருக்கின்றனர்" என்கிறார் அழகர் விஜய்.

சமீப காலமாக வாஸ்து பிரபலமாக என்ன காரணம்? இந்தக் கேள்வியை வாஸ்து ஆலோசகர் ராகவனிடம் கேட்டபோது, அவர் அளித்த விளக்கம் : "முன்னேயெல்லாம், வீடு கட்டுகிறபோது, 'முற்றம்' என்று ஒன்று இருக்கும். அதன் மூலம், நேரடியாக வெளிச்சம் வரும். வீட்டுக்கு அந்த திறந்த முற்றம் (பாதுகாப்பு கருதி கம்பிகள் இருக்கும்) மிக முக்கியமானது. அங்கே தண்ணீர்க் குடம் வைத்திருப்பார்கள். விளக்கு ஏற்றி வைப்பார்கள். அந்த வீட்டுவாசிகளுக்கு, இந்த முற்றம் மூலமாக, பஞ்ச பூதங்களுடனும் நேரடித் தொடர்பு இருக்கும். ஆனால், இன்று மொட்டை மாடிக்குப் போனால்தான் ஆகாயத்தையே பார்க்க முடியும் என்கிற நிலைமை. தவிர, முன்பெல்லாம் வீடுகளில், நிறைய ஹோமங்கள் நடக்கும். இப்போது அப்படியில்லை. இதனால் எல்லாம் ஏகப்பட்ட பிரச்னைகள். வாஸ்து சாஸ்திரம் மூலம் பரிகாரம் கிடைக்கும் என்பது சமீப காலமாகத்தான் மக்களுக்குத் தெரிந்திருக்கிறது."

வாஸ்து ஆலோசகர்கள் இரண்டு விதமான ஆலோசனைகளைக் கூறுகிறார்கள். ஒன்று அதிகம் செலவில்லாத வழி. அதாவது, இருக்கிற வீட்டுக்குள்ளேயே, சில மாற்றங்களைச் செய்து விடுவது. இரண்டாவது நுழைவு கேட் முதல் வீட்டுப் படுக்கையறை வரை எதையாவது இடித்துக் கட்டுவது. இது அதிகம் செலவு பிடிக்கிற வழி. சிலர், முன்னெச்சரிக்கையுடன் வீட்டைக் கட்டுகிறபோதே, வாஸ்து நிபுணர்களையும் கலந்து ஆலோசித்து, வீட்டின் பிளானைத் தயாரித்து விடுகிறார்கள். வாஸ்து ஆலோசனைகள் வழங்குபவர்கள் இன்னார்தான் என்று இல்லை. ஜோதிடர்கள் தொடங்கி, இன்ஜினியர்கள், சார்டர்டு அக்கவுண்டன்ட்கள் வரை பலரும் இதில் அடக்கம்.

ஒரு மனையில் கட்டப்படும் ஒரு வீடு என்றால் வாஸ்து சாஸ்திரம் பார்க்கலாம். ஆனால் ஒரு இடத்தில் கட்டப்படும் அடுக்குமாடிக் கட்டடங்களுக்கு வாஸ்து எப்படிப் பொருந்தும்? தவிர, ஒரு அடுக்குமாடிக் கட்டடத்தில், பலதரப்பட்ட குடும்பங்களும் வசிக்கிறபோது, அந்த மனைக்குரிய வாஸ்து பலன்கள் எப்படி ஒரே மாதிரியாக அமையும்? என்ற கேள்வியை வாஸ்து ஆலோசகரான ஸ்ரீனிவாசராவிடம் கேட்டபோது, அவர் அளித்த பதில் இது: "ஒரு வீட்டு மனையில் கட்டப்படும் தனி வீட்டுக்குத்தான் வாஸ்து சாஸ்திரம் முழுமையான தாக்கத்தை ஏற்படுத்தும். அதில் குறைபாடுகள் இருந்தால், நிவாரணங்கள் சாத்தியம். ஆனால் அடுக்குமாடிக் கட்டடங்களுக்கு, நூற்றுக்கு நூறு சதவீதம் வாஸ்து பொருந்தும் என்று உறுதியளிக்க முடியாது. வாஸ்துவின் பவர், அங்கு வசிக்கும் அனைத்து ஃபிளாட்களுக்குமாகப் பிரிந்து விடும். ஆனாலும், இன்று, பரவலாக, ஃபிளாட்களுக்கும் வாஸ்து நிபுணர்கள் ஆலோசனை வழங்கிக்கொண்டுதான் இருக்கிறார்கள். அங்கே வசிப்பவர்களும், அதன் நற்பலனை அனுபவிப்பதாய்க் கூறுகிறார்கள்."

— எஸ். சந்திரமௌலி



கிளின்டன் வருகைக்குத் தயாராகும் நாயுடு!

● ஆஸ்கார் விருது விஷயத்தில் இந்தத் தடவை ஒரு சாதனை நடந்திருக்கிறது. ஹாலிவுட் அல்லாத படங்களுக்கான பிரிவில் மிக அதிக பட்சமாக நாற்பத்து ஏழு நாடுகளிலிருந்து படங்கள் அனுப்பப்பட்டுள்ளன. இதில் இந்தியா, நேபாளம், பூடான் இவையும் அடக்கம். இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்டுள்ள படம் 'காண்ட்ரவர்சி' புகழ் தீபா மேத்தாவின் எர்த்.

● மத்திய அரசு, அண்மையில், பப்ளிக் பிராவிடண்ட் ஃபண்டு நிதியில் சேமிக்கப்படும் முதலீடுகளுக்கு, ஒரு சதவீதம் வட்டியை வெட்டியிருக்கிறது. இதனால் அரசுக்கு எவ்வளவு லாபம் தெரியுமா? ஆண்டுதோறும், சேமிப்புகளுக்காக வழங்கப்படும் வட்டி மட்டும் பனிரெண்டாயிரம் கோடி ரூபாய். ஒரு சதவீதம் வட்டியைக் குறைத்தாலும்கூட, அதனால் ஆயிரம் கோடி ரூபாய் அரசாங்கத்துக்கு லாபம்! இதில், இன்னொரு விஷயமும் இருக்கிறது. சேமிப்புக்கு வட்டியைக் குறைத்தால், பொது மக்கள், தேசிய சேமிப்புப் பத்திரம், பிராவிடண்ட்ஃபண்டு போன்றவற்றிலிருந்து சற்று விலகி, ஷேர்மார்க்கெட்டில் முதலீடு செய்ய முன்வருவார்கள். இதனால் ஷேர் மார்க்கெட் சூடுபிடிக்கும்!




● பெட்டி, படுக்கையுடன் சென்னை வந்து செட்டிலானபின், இரண்டு பெண் குழந்தைகள் சகிதம் பதினைந்து வருட இடை

வெளிக்குப் பின் அவரைப் பார்த்தவர்களுக்கு அட! அம்மாவும் பெண்ணும் அக்கா, தங்கை போல இருக்கிறார்களே என்றுதான் ஆச்சரியம்! அம்மா : சரிகா கமல். உடனிருந்தவர்கள் மகள் ஸ்ருதியும் அவரை விட ஐந்து வயது இளைய பெண் அக்ஷராவும். ஹேராம் இந்தி இசை ஆல்பம் வெளியீட்டையொட்டி மும்பையில் நடந்த கோலாகல பார்ட்டியில்தான் இந்தக் காட்சி. விழாவுக்கு வராமல், கிசுகிசுக்களுக்குக் காரணமானவர், படத்தில் காந்தியாகத் தோன்றும் நசருதீன் ஷா!

● ஒரு பள்ளிக்கூடத்தில், ஒரு பையன், தனது புல்லாங்குழலை கீழே வைத்துவிட்டு, குழாயில் தண்ணீர் குடித்துக் கொண்டிருந்தபோது, அதைப் பார்த்துக் கொண்டிருந்த இன்னொரு மாணவன், அந்தப் புல்லாங்குழலைத் திருடிக் கொண்டு போய்விட்டான். புல்லாங்குழல் மீது அந்தப் பையனுக்கு இருந்த அபார ஆர்வமே அவனை இப்படி திருடத் தூண்டியதாம். அந்தச் சிறுவன் யார் தெரியுமா? உலகப் புகழ்பெற்ற புல்லாங்குழல் வித்வான் ஹரி பிரசாத் சௌராசியா தான்! அண்மையில் ஸ்டார் டீவி. பேட்டியில் அவரே சொன்ன தகவல் இது!



● மார்ச் மாதம இந்தியா வருகையின் போது, அமெரிக்க அதிபர் கிளின்டன், ஹைதராபாத் வருவது உறுதியாகி விட்டது. 'ஐந்து நட்சத்திர ஓட்டல் அறைகள் ஆயிரம் தேவை. ஏற்பாடு செய்ய முடியுமா?' என்று தகவல் வர, ஹைதராபாத்தில் உள்ள அனைத்து ஐந்து நட்சத்திர



ஒட்டல்களையும் மடக்கிப் போட்டு, 'ஆயிரம் என்ன ஆயிரத்து முந்நூறு அறைகள் தயார்' என்று நாயுடு தகவல் அனுப்பியிருக்கிறாராம்! கிளின்டன் வருகைக்கு முன், ஒரு சிறப்புக் குழு, இந்தியா வந்து முக்கிய இடங்களுக்கு விசிட் அடித்து, திருப்திப்பட்டால்தான் அந்த இடம், கிளின்டன் டூர் புரோகிராமில் இடம் பெறுமாம். ஆனாலும் தென்பாகவே இருக்கிறது நாயுடு அரசு.

● சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் 'வாட்டர்' படத்தில் தபுவை, நடிக்க வைக்க விரும்பினார். தேதி ஒத்து வரவில்லை. பின், மனிஷா கொய்ராலாவைக் கேட்க, அவரும் ஒப்புக் கொண்டு விட்டாராம். ஆனால், தீபா மேத்தா, மனிஷாவிடம் விதவை பாத்திரத்துக்கு ஏற்ற படி தலையை மொட்டையடித்துக் கொள்ள வேண்டும் என்றபோது, அதற்கு மனிஷா ஒப்புக் கொள்ளவில்லையாம். பிரத்யேகமாக தலைக்கு ஒரு 'விக்' பயன்படுத்தலாம் என்ற மனிஷாவின் ஐடியாவை தீபா மேத்தா ஏற்றுக் கொள்ளவில்லையாம். கடைசியில் ஷபனா ஆஸ்மியும், நந்திதா தாஸும் நடிக்கிறார்கள். ஜம்மென்று ஷபனா மொட்டை போட்டுக் கொண்டு விட்டார்!

● அசாருதீன் பாதையில் போகிறார் ராகுல் திராவிட் என்று ஒரு பரபரப்பான கிசுகிசு. ஆம்! பத்மினி கோலாபுரியின் தங்கை தேஜஸ்வினியுடன், ஷாப்பிங், டிஸ்கோ, பப் என்று சுற்றிக் கொண்டிருக்கிறாராம் ராகுல் திராவிட்!

● இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும் உள்ள உயர்நீதிமன்றங்கள் குறித்த வேதனையான தகவல் இது! மிக அதிக அளவில் தீர்க்கப்பட வேண்டிய வழக்குகள் இருப்பது கல்கத்தா உயர்நீதிமன்றத்தில். மூன்று லட்சத்து ஆறாயிரம் வழக்குகள். மத்தியப் பிரதேசத்தின் உயர்நீதிமன்றத்துக்குரிய பெருமை, மிகப் பழமையான கேஸ் இன்னும் தீர்ந்தபாடில்லை. ஆம்! 1950-ம் வருடத்து கேஸ் இன்னமும் நடந்து கொண்டிருக்கிறது. சரி! தமிழ்நாட்டு நிலவரம் எப்படி? நிலுவையில் உள்ள வழக்குகள் எண்ணிக்கை இரண்டு லட்சத்து எண்பத்து இரண்டாயிரத்து இரு நூற்றுப் பதினெட்டு. 1973ல் போட்ட கேஸ் இன்னும் தீர்ந்தபாடில்லை!

● பல்வேறு கம்பெனிகளின் வங்கிக் கடன் பாக்கி விவரத்தை கர்நாடக மாநில வங்கி ஊழியர் சங்கம் வெளியிட்டுள்ளது. லிஸ்ட்டில் டாப் யார் தெரியுமா? ஹர்ஷத் மேத்தா! இவர் ஸ்டேட் பாங்கிற்கு வைத்துள்ள பாக்கி எண்ணூற்றுப் பனிரெண்டு கோடி! நம் ஊர்க்காரர்களும் இந்தப் பட்டியலில் இடம்பெற்றிருக்கிறார்கள். மத்திய அமைச்சர் டி.ஆர். பாலு சம்பந்தப்பட்ட ரசாயனத் தொழிற்சாலை, இந்தியன் வங்கிக்கு பத்துக் கோடிக்கு மேல் பாக்கி!

● டெல்லியில் நடைபெற்ற குடியரசு தின விழா பற்றிய புகைப்படங்களைப் பார்த்திருப்பீர்கள். அவை வழக்கமான படங்கள்தான். ஆனால் டெலிகிராப் பத்திரிகையில் வெளியான மேலேயுள்ள வித்தியாசமான படத்தை ரசியுங்களேன்!

— நியூஸ்வாலா



எஸ்.வி.சேகர் எப்போதும் தம் நாடகத்துக்குக் கதை தேடி வீணாக டயம் வேஸ்ட் பண்ணுவதில்லை. நேற்றைய த.மா.கா – அ.தி.மு.க. கூட்டு வரை, வசனத்திலேயே லேட்டஸ்ட் அரசியலைக் கொடுத்துச் சிரிக்க அடிக்கிறார். தமது சமீபத்திய 'பெரியப்பா'வில் கலைஞர், ரஜினி, மூப்பனார், 'சின்னம்மா', சுப்பிரமணிய சுவாமி எல்லாரும் இருக்கிறார்கள், நாடக காரக்டர்களாக. ரசிகர்கள் எளிதாக ஊகித்துக்கொண்டு வெடிச் சிரிப்புச் சிரித்து அரங்கத்தை ஒரு வழி பண்ணி விடுகிறார்கள். சில சாம்பிள்ஸ்:

வக்கீல்: அடடே, வாங்க சைக்கிள் சங்கரலிங்கம்! எப்படி இருக்கீங்க? நல்லா இருக்கீங்களா?



சைக்கிள்: நல்லா இல்லேன்னு சொல்ல முடியாது. நல்லாத்தான் இருக்கேன். நல்லா இல்லேன்னா, நல்லா இருந்தாலும் சொல்ல முடியாது. டெல்லியைக் கேட்டு சொல்றேன்.

வக்கீல்: என்னங்க சொல்றாரு? தமிழ்தானே பேசறாரு?

சைக்கிள்: தமிழ்னு நினைச்சா தமிழ். இங்கிலீஷ்னு நினைச்சா தமிழ் ஆயிடுமா? தமிழ்னு நினைச்சா அது இங்கிலீஷ் இல்லே.

வக்கீல்: என்னங்க இது! இது மாதிரி தமிழே நான் கேட்டது இல்லியே!

சின்னம்மா: இப்படித்தான்...தனக்கும் புரியாம, மத்தவங்களுக்கும் புரியாம பேசுவாரு!

✣

சூர்யபிரகாசம்: சட்டப்படி இந்த 'தமிழ்' வீட்டோட அதிகாரம் அஞ்சு வருஷத்துக்கு என்கிட்டத்தான் இருக்கு. அப்புறமும் இருக்கும்கிற நம்பிக்கை எனக்கு இருக்கு.

வக்கீல்: நான் சொல்றேன், வர அக்டோபர் 30க்குள்ள தமிழ் வீடு சின்னம்மா கட்டுப்பாட்டுல வந்துரும்!

சூரிய: யோவ் வக்கீல், நீயா பேசறே? நீ போட்ட கேஸை வாபஸ் வாங்கலே!

வக்கீல்: இப்பல்லாம் நம்ம பேர்ல ரெண்டு கேஸ் இருந்தாத்தானே நாலு பேர் மதிப்பாங்க? அதுக்குத்தான் கேஸ் போட்டேன். நீங்க ஏன் கவலைப்படறீங்க? நான் தான் உங்க பக்கத்துல இருக்கேனே?

சின்ன: அதான்யா பயமா இருக்கு!

சூரிய: கூடிய சீக்கிரத்துல பெரியப்பா வருவாரு. அவரை வச்சு சின்னம்மாவை இந்த வீட்டை விட்டே விரட்டலை, என் பேரு சூரியபிரகாசம் இல்லே!

✣

தாமரை: ரொம்ப தாங்க்ஸ். ஒரு மதம் புடிச்ச யானைகிட்ட இருந்து என்னைக் காப்பாத்திட்டீங்க.

அழகப்பன்: நான் ஒரு மதச் சார்பற்ற மனுஷன். அதான்!

தாமரை: என் பேரு தாமரை.

அழகப்பன்: அதான் உங்களை மதம் புடிச்ச யானை துரத்துது!

✣

அழகப்பன்: ஒருத்தன் கம்ப்யூடர்ல – இன்டர்நெட்டுல காதலிச்சு, கல்யாணம் பண்ணிக்கிட்டார். இந்த ஒண்ணாம் தேதியில இருந்து நீ என் புருஷன் இல்லேன்னு அந்தப் பொண்ணு சொல்லிட்டா!

மதிவாணன்: ஏன்?

அழகப்பன்: Y2K பிரச்னை!

✣

மதிவாணன்: நோ என்ட்ரியில போனேன் போலீஸ்காரங்க புடிக்கறாங்க.

அழகப்பன்: அதுல தப்பு இல்லையே?

மதிவாணன்: நான் தமிழன். நோ என்ட்ரி



இங்கிலீஷ்னு நினைச்சா தமிழாயிடுமா?

இங்கிலீஷ் வார்த்தை. எப்படி எனக்குப் புரியும்? அதனால, No Entryல எந்தத் தமிழன் போனாலும் புடிக்கக் கூடாது! இது விஷயமா ஜனாதிபதிக்கு ஒரு மனு தரப் போறேன்.

❖

சூர்யபிரகாசம்: இவர்தான் சைக்கிள் சங்கரலிங்கம்.

அழகப்பன்: சைக்கிள் கடை வச்சிருக்கிறாரா?

தாமரை: டூரிஸ்ட் கார் ஆபரேடர். விருதுநகர்ல ஹெட் ஆபீஸ். ஆனா டெல்லில அடிக்கடி போய் கன்சல்ட் பண்ணுவாரு. எங்க ஃபேமிலி ஃப்ரெண்டு. பெரியப்பாவுக்கு ஃப்ரெண்டு. சூர்யபிரகாசத்துக்கும் ஃப்ரெண்டு.

அழகப்பன்: சின்னம்மாவுக்கு? இன்னும் முடிவு பண்ணலியா?

சின்னம்மா: என்னோட அருமை இனிமேதான் அவருக்குப் புரியும்!

சைக்கிள்: அது 2001லதான் தெரியும்!

❖

மதிவாணன்: பாலம் கட்டின இஞ்சினியர் மேல கிரிமினல் கேஸ் போட்டுட்டாங்க.

அழகப்பன்: பாலம் இடிஞ்சிருக்கும். கிரிமினல் கேஸ் போட்டிருப்பாங்க.

மதி: அவர் சிவில் இஞ்சினியர் ஆச்சே? எப்படி கிரிமினல் கேஸ் போடலாம்?

❖

அழகப்பன்: என்னடா இவ்வளவு லேட்டா வரே?

மதிவாணன்: நாலு பேரு கிட்ட கையெழுத்து வாங்கிட்டு வரேன். வீரப்பனுக்குப் பொது மன்னிப்பு வழங்கணும்னு ஜனாதிபதிக்கு மனு கொடுக்கப் போறேன்.

அழகப்பன்: சந்தன மரம் வெட்டிக் கடத்தறவனுக்குப் பொது மன்னிப்பா?

மதி: எதுவா இருந்தாலும் அவன் காட்டுல இருக்கற மரத்தைத்தானே வெட்டினான்? ரோட்டுல இருக்கற மரத்தை வெட்டலையே?

அழகப்பன்: ரோட்டுல இருக்கற மரத்தை வெட்டத்தான் வேற ஆளுங்க இருக்காங்களே!

மதி: அவன் ஒரு தமிழன்!

அழகப்பன்: முதல்ல உன்னை வெட்டணும்! ஏன்டா வில்லனை எல்லாம் ஹீரோ ஆக்கறீங்க?

❖

தாமரை: கண்டிப்பா என்னைக் கல்யாணம் செஞ்சுப்பீங்களா?

அழகப்பன்: அவசரப்படாதே! முதல்ல ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சுப்போம். அப்புறம் கல்யாணம் பண்ணிப்போம்.

தாமரை: அதுவரை?

அழகப்பன்: தாமரைக்கு வெளியில இருந்து ஆதரவு தரேன்!

தொகுப்பு: **சாருகேசி**

படங்கள்: **ஈ.வெ.ரா. மோகன்**



சுகந்தம் மனோகரம்!

பூக்கள் ஏன் வாசமாயிருக்கின்றன?
தன் குகை ஒரு கனியாக
மாறுவது பற்றியும்; அதுவே பின்னொரு
தாவரமாவது பற்றியும்
பிரக்ஞை கொள்ளாமல்
மகரந்தத்தைக் கூவி அளிக்கின்றன.

பூக்களின் இதழ்களுக்கும்
தும்பிகளின் இதழ்களுக்கும் – தங்கள்
கைங்கர்யம் புரிவதேயில்லை.

கூந்தல் அல்லது கற்சிலை என
கரியநிறம் சேரும் மலர்களும்
வருத்தமொன்றும் கொள்வதில்லை
மென்மையின் குறியீடென நாம்
கொண்டாடியபோதும் உதிர்ந்தபின்
ஒட்டாதது அதன் வைராக்கியம்.

'உயிரி'யைத் தேக்கி வைத்திருப்பது
பற்றிக் கவலுறாது தொடர்ந்து
பூப்பதில் மட்டுமே அவை
நம்பிக்கை கொண்டிருக்கின்றன.

ஒளிசிந்திய வண்ணம்
மௌனமாயிருப்பதால்... இயற்கை
அவற்றுக்கு 'செண்ட்' அடிக்கிறது.

— க.சீ. சிவகுமார்



புத்திசாலி
ஜலதோஷம், ஃப்ளூவுக்கு பக்க விளைவற்ற சமஹன் எடுத்துக்கொள்வார்
சாமர்த்தியசாலி
ஜலதோஷம், ஃப்ளூவின் முதல் அறிகுறியிலேயே சமஹன் எடுத்துக்கொள்வார்
அறிமுகம்
உடனடி ஆயுர்வேத பாதுகாப்பு
லிங்க்
சமஹன்
14 மூலிகைகளின் சாரம்.
Samahan
தும்மல், மூக்கில் நீர்வடிதல், கண்களில் நீர் வடிதல், தொண்டை கரகரப்பு, உடல் அலுப்பு போன்றவை ஜலதோஷம், ஃப்ளூ வருவதற்கான முதல் அறிகுறிகள். இந்த ஆரம்ப நிலையிலேயே சமஹன் எடுத்துக் கொள்வது உங்கள் சாமர்த்தியம். அதனால், ஜலதோஷம், ஃப்ளூவை ஆரம்ப நிலையிலேயே தடுத்து நிறுத்தலாம். இத்தருணத்தை தவறவிட்டால், நாள் ஒன்றுக்கு 3-4 முறை சமஹன் எடுத்துக்கொள்ளுங்கள். ஆயுர்வேத முறையில் 5000 ஆண்டுகள் நிரூபணமான 14 மூலிகைகளின் சாரம் சமஹன். சளியை இளக்கி வெளியேற்றுகிறது. சமஹன் உடலின் நோய் எதிர்ப்பு தன்மையை தூண்டி, அதிகப்படுத்தி, ஜலதோஷத்தையும், ஃப்ளூவையும் போக்குகிறது.
அடுத்த முறை நீங்கள் அதிகமாக தும்மும்பொழுது, நீங்க புத்திசாலியா, சாமர்த்தியசாலியா என்பதை காண்பிக்கும் தருணம் வந்துவிட்டது என நினைவில் கொள்ளுங்கள் !
நொடிகளில் தயார்
100% உடனே நீரில் கரைகிறது. தேனிலும், காஃபியிலும் கூட கலந்து அருந்தலாம்
நொடிகளில் செயலாற்றும்
திரிகடுகம் எனும் சுக்கு, மிளகு, திப்பிலி சமஹனில் உள்ள மூலிகைகளின் சாரத்தை ரத்தத்தில் உடனே சேர்த்து, நொடிகளில் செயலாற்ற வைக்கிறது. சாமர்த்தியசாலி முதல் அறிகுறியிலேயே சமஹனை எடுத்து முழு பயனை பெறுவார்
சிறுவர்களுக்கு
சிறுவர்கள் வருடத்திற்கு 6-8 முறை, 10 முறை கூட ஜலதோஷத்தால் பாதிக்கப்படுகின்றனர் அவர்களுக்கு, சமஹன் கொடுத்து பாதுகாப்பு அளியுங்கள்.
சைனஸைடிஸ், ஆஸ்த்துமா இருந்தால்
உங்களுக்கு ஏற்கனவே ப்ராங்கைடிஸ் சைனஸைடிஸ், ஆஸ்த்துமா இருந்தால் ஜலதோஷத்தின் முதல் அறிகுறிகளை புறக்கணிக்க வேண்டாம் !
100% இயற்கை 0% பக்கவிளைவு

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2000 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka
Supplement to the Kalki issue Dated 20.2.2000

"யூலிப் மட்டுமே உங்களுக்கு மிக அதிகமாக வழங்குகிறது!"



- வரி சேமிப்பு
- குறைந்த செலவில் காப்பீட்டு பாதுகாப்பு
- விபத்து காப்பீடு
- வரிச் சிக்கனமுள்ள கவர்ச்சிமிகு ஆதாயங்கள்

யூலிப்

யூனிட் லிங்க்ட் இன்ஷ்யூரன்ஸ் பிளான்

எல்லோராலும் விரும்பப்படுவது!

பலவிதமான வித்தியாசமான திட்டங்கள் ஒரு முதலீட்டின் நோக்கங்களில் ஒன்றையோ அல்லது மற்றொன்றையோ திருப்தி படுத்தலாம். ஆனால் யூலிப் அனைத்து அம்சங்களையும் வழங்குகிறது - அதோடு மிக அதிகமாக, எப்படி என பாருங்கள்.

வரி சேமிப்பு : உங்கள் பெயரில் செய்யப்படும் முதலீடு ஆயினும், அல்லது உங்கள் மனைவி, குழந்தைகள் பெயர்களில் செய்யப்படும் முதலீடுகள் ஆயினும் வருமான வரிச் சட்டத்தின் பிரிவு 88-ன் கீழ், நீங்கள் 20% வரிச்சலுகை பெற யூலிப் தகுதியாக்குகிறது.

ஆயுள் காப்பீட்டு பாதுகாப்பு எந்தவிதமான மருத்துவ சோதனையும் மேற்கொள்ளாமல் நீங்கள் தேர்வு செய்யும் இலக்கு தொகைக்கு வழங்கப்படுகிறது. மேலும் தனிப்பட்ட விபத்து காப்பீடு ரூ. 30,000 வரையில்.

வரிச்சிக்கனமுள்ள ஆதாயங்கள் : இத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் வருமானம் இப்போது அதிகரித்த விற்பனை மற்றும் மறுகொள்முதல் விலைகளின் மூலமாக முதலீட்டாளருக்கு மறுகொள்முதல் / முதிர்வின் போது நல்லதொரு ஆதாயமாக கிடைக்கிறது. மேலும், வரிச்சுமை ஏதுமில்லை.

- இரு திட்டங்களுக்கான தேர்வு-10 ஆண்டுகள் / 15 ஆண்டுகள்
- இலக்குத் தொகை : குறைந்தபட்சம் ரூ. 6,000/- அதிகபட்சம் ரூ. 75,000/-
- செலுத்துதல்-ஆண்டுக்கு 1/10 அல்லது 1/15 பாகம் மற்றும் அரை -ஆண்டு 1/20 அல்லது 1/30 பாகம் இலக்கின்படி.
- போனஸ் 5% / 7.5% முதிர்வின்போது.

யூனிட் ட்ரஸ்ட் ஆஃப் இந்தியா

13, சர்விதல்தாஸ் டாக்கர்ஸே மார்க், நியூ மெரீன் லைன்ஸ், மும்பை - 400 020, தொ.பேசி.: 2031818.

வருகை தருக **www.unittrustofindia.com**

16 லட்சத்துக்கும் அதிகமான முதலீட்டாளர்கள் யூலிப் மூலம் அதிக அனுகூலம் பெறுகின்றனர். நீங்களும் இப்பயனைப் பெற இதுதானே தகுந்த நேரம்!

அனைத்து மியூச்சுவல் ஃபண்டுகள் மற்றும் செக்யூரிட்டிகளில் செய்யும் முதலீடுகள் மார்க்கெட் ரிஸ்கிற்கு உட்பட்டவையாகும் மற்றும் செக்யூரிட்டிகள் மார்க்கெட்டைப் பாதிக்கும் அம்சங்கள் மற்றும் சக்திகளைப் பொறுத்து ஃபண்டின் என்ஏவி ஏறிடவும் / இறங்கிடவும் செய்யும். கடந்தகால சாதனை வருங்கால முடிவுகளைச் சுட்டிக்காட்டுவதாகாது. யூலிப் என்பது ஃபண்டின் பெயர் மட்டுமே தவிர, இது எவ்விதத்திலும் ஃபண்டின் தரத்தை, அதன் வருங்கால வளர்ச்சியை அல்லது வருமானத்தை சுட்டிக்காட்டுவதாகாது. ஃபண்டின் குறிக்கோள்கள் நிறைவேற்றப்படும் என்பதற்கு உறுதியளிக்க முடியாது. முதலீடு செய்யுமுன் ஆஃபர் பத்திரத்தைப் படிக்கவும்.

மண்டல அலுவலகம் : 29 இராஜாஜி சாலை, சென்னை 600 001. போன் : 5210335, 5210347.
கிளை அலுவலகங்கள் கோயம்புத்தூர் போன் : 214973. சென்னை போன் : 5210335, 5210347.
மதுரை போன் : 738186. திருச்சி போன் : 760060.

9/2000 C TAM A